The sancitity of the Mantapam memorialising the self immolation of the seventy noble saivites for the sake of honesty and truth can not be expressed in words. It must be sensed and visualised to be properly grasped. The Shrine of Saatchinathaswami should stay in everyone's mind as the wordly expression of the ommnipresence of God, We cannot adequately dedicate or consecate this spot which transcends all human understanding. Let us therefore draw an inspiration that, by following the righteous path of our ancients, we can make our lives sublime. Let the youth and growing generation contemplate the goodness and honesty of these ancient Vellala patriarchs and be reminded of it from time to time and the world is bound to grow richer and nobler and life will be free from wants of all kinds.

People who are not touched by the inspiration that comes from faith, whose lives are entirely tied to things of the earth, who are not attuned to the tradition of their country and their countrymen cannot endure for long. A brief conversation with the alumni of our educational institutions will reveal how spirtually empty their minds are. We will find that it is not honest agnosticism that animates them. It is something bordering on contempt for faith and reverence. I would remind the members of the younger generation of what Lord Tennyson has said:-
"Let knowledge grow from more to more
But more of reverence in us dwell".

Search for Truth and After

By, A. R. Jagadeesan, B.A., B L.



The spokes of the Dharma Chakra are the rules of pure conduct; justice is the uniformity of their length: wisdom is the tyre of the chakra modesty and thoughtfulness are the hubs in which the immovable axle is fixed.

He who has overcome all selfishness is happy. He who has attained peace and found the truth is happy. Truth is noble; it is sweet; it can deliver us from evil. There is no saviour in the world except Truth.

Although we may not be able to comprehend it; although we may suppose its sweetness is bitter and although we may shrink from it at first, we should have confidenee in truth, we should have faith in truth. we should speak truth and live it. since truth is sublime and everlasting. There is no immortality except in truth as truth alone does abide for ever.

2

Human nature is to aspire to possess a thing that is not near at hand; to search for a thing that has become scarce or has disappeared or ceased to exists The search for truth that commenced three thousand years ago continued till the 30th of January 1948. The search was abandoned on that eventful day. There was a ray of hope till that day that our endeavours would bring out truth to the surface in all its splendour and infinite glory. That fond hope was dashed to the ground by the dastardly act of a fanatic.

3

Both religions and governments will disappear if they lose their contact with the masses. Hinduism is a very ancient religion. Its hoary past is established by the Vedas, Vedangas, Upanishads, Agamas, Ithihasas and Puranas. It cannot be asserted that Hinduism of today existed as such some three thousand years ago. Religion is there to show the right path; to make the man a moral being, a righteous person. If the religion provides for the pardoning of the delinquents, may be with the laudable purpose of affording opportunities to the wrong doer to correet himself, intelligent and selfish people avail themselves of such opportunities and escape the sanctions of the religion.

When Hinduism lost its contact with the masses, when it became the religion of the priestly class only, when the language of the religion became unintelligible for the masses; when many of the rites and rituals became meaningless, when Hindusim failed to deliver the goods, Prince Siddhartha sacrificed his princely life and thought of the ways and means of salvaging the humanity from depravity. He found out that Hinduism of his days lacked truth and kindness, that human beings became slaves to their desires

and wants, jealousy and avarice. He thought that people could be happy again if they followed the paths of truth and ahimsa (Kindness)eschewing all desires. He exhorted the people to have right thought, word and deed. He himself headed the mission to salvage the souls sinking fast into the quicksands of desires, jealousy and avarice. It is no wonder that such a religion founded on truth and kindness attracted the ruling monarchs like Bindusara, Asoka and Kanishka and with their help and patronaage spread fast, not only in India but also in the far eastern countries.

In course of time, Jainism and Buddhism attained the status of religions by themselves. They were considered new orders as opposed to the contemporary Hinduism. Any religion, as a matter of fact is not static; it is dynamic and susceptible of changes. What was religion till the sixteenth century in the European continent gave place to a new order altogether as a result of the revolution led by Martin Luther and his followers. What was the cause for the religious ferment that necessitated the emergence of a totally new religion? Was it because that their religion contained untruths or half truth warranting such revolution?

But for their inherent dynamism religions could not have existed for several centuries to gether. The dynamism of Hinduism did not allow Buddhism and Jainism to exist for long. The tenets of these new religions were slowly absorbed in Hinduism andthus they were extinguished. Buddhism is now the religion in the far Eastern Countries. The many political upheavals and the mark of communism in those countries proclaim the helplessness of the religion founded on truth and kindness.

Religion is the quintessence of the experiences of our fore-fathers. Great seers of old and bygone days have expounded many truths after long quests, sacrifice and privations. Their sayings are the formulae for application by posterity in times of need. But human nature being what it is, these formulae are not taken for granted. A few have belief in and respect for them while a few have genuine doubts regarding their veracity.

4

Jainism which was the chief religion of the Rulers and the ruled in the South, lost its hold when the Nayanmars and the Azhwars spread their cult of Bakthi in the language of masses for the salvation of their souls. Bakthi ennobles the soul. Noble thoughts orginate from noble souls. Very many saivite Mutts were founded in the south to counter the influence of the Samanas and their religion by spreading Saiva Siddhantha philosophy. The mutts are still there endowed with extensive lands and enormous. other riches for the propagation of Saivism. As for as I know, all these mutts with the exception of Thiruppananthal mutt, are not keen on spreading Saiva Siddhantha. It is Srilasri. Arul Nandhi Thambiran of Thiruppandhal Mutt who takes an abiding interest in spreading this philosophy. The many Sankaracharyas, Jeers and others are vying with one another in restoring Hiduism to its glorious position of the "golden period" of the Guptas. But what about Saiva Madathipathies and their Adheenams? My humble wish and prayer is that these Adheenams of Tamilagam should wake up from their long slumber, shed their inactivity and seclusion, and organise Missions like the Ramakrishna Mission for spreading the message of Saiva Siddhantham throughout the length and breadth of our Country. They have the capacity, both physical and fiscal, to take up this stupendous task.

5

It is common knowledge that human memory is rather weak. Only a few incidents leave indelible impressions in the mind. When passions run high we refuse to accept the view of the opponents. Time alone can erase or correct the impression in our mind. The appointments of such commission orCommittee serve adequately the purpose of quenching the thirst for enquiry. They also afford the necessary time lag for the mind to efface the impression of a particular incident. Our government is fully aware of this: otherwise where is the need for such Commisions and Committees? Notwithstanding the many opinions expressed by the thinking public on the usefulness or uselessness of such commissions and Committiees, governments appoint them in order to gain the advantage of the time lag

between the incident and the report on it. And again some of the reports do not see the daylight at all; they are consigned to the sanctuary of records.

6

All the accused persons brought before the magistrates do not plead guilty. A few may plead guilty for various reasons. A fair majority do not accept their guilt. Theyseek the help of the members of the legal profession for their escape from punishment. The onus of briging home the guilt to the accused lies on the prosecution with the help of material and oral evidences. The guilt of the accused has also to be proved beyond all reasonable doubts,else the benefit of any doubt will be conferred on the accused person. The witnesses who come to the courts profess to speak the truth. Notwithstanding the examination and cross - examination of the witnesses on oath, it is the duty of the magistrates to believe or disbeblive the statements of the witnesses and pronouce their judgements applying their judicial mind. If truth comes out of the mouths of every individual, there may not be any necessity for so many courts.

And again there are certain professions depending on untruths for their existence. There can be no merchant without being motivated by personal gain in his transactions. There is no enterprise without any profit motive. Can it be asserted that there is no profit motive in the mixing of small stones and river sand in the rice, making capital of the leakage in the FoodAdulteration Act? without any scruple the merchant community exploits the scaicrity condition in food grains and the resultant controlled (rationed) distribution. The merchant Community are perhaps adding to the tonnage of food grains produced by the farmers by mixing small stones & riversand.

The principle of *quid pro quo* is evident in all actions. Thanksgiving to God is no exception. We offer certain things to God either in the expectation of a favour from Him or in return for a favour already got from Him. A true Christian thanks his God before bedtime every night for the bread and water given him that day and while so offering his thanks he does not fail to add his request for similar kindness from Him on the suceeding day. Sometimes we even doubt whether we would think of God but for the? favours we receive or expect from Him now and then. The word tribute and retribution have no place in the dictionary if nothing is retributed or offered in return,

"He who does his duty without expecting the fruit of actions, is a Sanyasi (Sankhyayogi) and a yogi (Karmayogi) both. He is no sanyasi (renouncer) who has merely renounced the sacred fire; even so he is no yogi who has merely given up all activity."

—(Verse 1., Chapter VI. of Bhagavath Gita)

"The yogi, who has subdued his mind and body, and who is free from desire and bereft of possesions,—living in seclusion all by himself alone, should constantly engage his mind in meditation''.—(Verse 10—Chapter VI of Bhavat Gita.

"As a light does not shake in a place sheltered from the wind, analogous is stated to be the case of the subdued mind of the yogi practising meditation on God"—(Verse 19-Chapter VI of Bhagavath gita.

"For to the yogi, whose mind is perfectly calm, who is sinless, whose passion is subdued and who is identified with Bramma, Supreme happiness comes (as a matter of course)"

"The sinless yogi thus uniting his self constantly with God easily enjoys eternal bliss of oneness with Bramma."

—(Verses 27 and 28, Chapter VI of Bhagavath Gita)

"The yogi is superior to the ascetics" he is deemed superior even to those versed in saered lore- The yogi is superior even to those who perform action with some motive. Therefore, Arjuna, do you become a yogi."

(Verse 46, Chapter VI of Bhagavath Gita)

Have we produced any such true yogi by practising and preaching our religions for several centuries? Have we atleast produced a true devotee who does not expect anything from the God he worships?If a devotee does not crave for any material prosperity he would

atleast desire or pray for the salvation of his soul, or for the eternal bliss in heaven. There are many on this earth who pray for the expiation of their sins. There are other who are capable of converting such exhibitions of devotion or piety into excellent media of advertisements for themselves and their wares and also as sereens for hiding their past present and future sins.

Life has two parts-the early and later halves. If we sow the wind in the early half of our life we should reap the whirl wind in the later half. The whirl wind is the tribute; it is retribution; it is nemises action. Shakespeare's famous tragedy "Macbeth" is an example for nemises action. Mr Chambers has beautifully said "It is a drama of man at odds with fate, driven from sin to sin and its retribution by external invisible forces."

How many are there in this world who would proclaim with equanimity that they are treading on the righteous paths dictated by their religions? There are some people who even think like Edmund Burke and say that not with standing the preaching and practising of religions for several centuries, we have not produced a true moral person. If that is the postion, I have to conclude this with the words "Oh God!"



"முத்தமிழ்" ஆசிரியர்,
பண்டித நடேசனார், B.A., அவர்கள்
(திருப்பணிக்கழகப் பொதுச் செயலாளர்)



கோல்டன்,
ஸ்ரீ N. சண்முக முதலியார்,
தருமகர்த்தர், திருத்தணிகை.



திருத்தணிகை
ஸ்ரீ க. சொ. சண்முக முதலியார்
தலைமை தர்ம கர்த்தர்,



ஸ்ரீ துரைக்கண்ணு,
Ex. M.L.A.
தருமகர்த்தர்,
திருத்தணிகை.



கைவண்டூர்.
K. ராஜு முதலியார்.



V. M. பொன்னுசாமி ரெட்டியார்
திருப்பணிக் கமிட்டி மெம்பர்

★ பழையனூர்ப் பெருமை ★

முத்தமிழ் ஆசிரியர், பண்டித நடேசனுர், B.A.,

"வஞ்சப்படுத்தி ஒருத்தி வாணுள்
கொள்ளும் வகை கேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு
எம் அடிகளே"

—சம்பந்தர்.

"கள்ளமே வினைகளெல்லாம்
கரி சறுத்திடுவா போலும்
அள்ளலார் பழனை மேய
ஆலங்காட்டு அடிகளாரே"

—அப்பர்.

"பாண்டாழ் வினைகள் அவைதீர்க்கும்
பரமா! பழையனூர் மேய
ஆண்டா! ஆலங்காடா! உன்
அடியார்க்கு அடியேனுவேனே"

—சுந்தரர்.

திருத் தொண்டே பெருந் தொண்டாகக் கொண்ட சமயகுரவர்களால் பாடப்பட்டது திருவாலங்காடு. இத்தலம் தொண்டை நாட்டின் முப்பத்திரண்டு திருப்பதிகளில் ஒன்று; ஒப்பற்றது. 'வடவனம்,' 'வடாரணியம்' எனும் பெயர்களும் இதற்கு உண்டு. இங்குக் கூத்தப் பெருமானின் மணி மன்று (இரத்தின சபை) இருக்கிறது. நம் பெருமான் இன்றும் இங்கு ஊர்த்துவ தாண்டவம் புரிகின்ருன். இக் கூத்து தனிச் சிறப்புடையது. இங்குள்ள நடராஜா வைப்போல் உலகில் வேறெரு இடத்தில் காண்பதரிது.

காரைக்காலம்மையார் திருக்கயிலைக்குச் சென்று அங்கிருந்து தலையால் நடந்து வந்து ஆடவல்லானின் ஆணைப்படி அவன் அடியின் கீழ் அல்லும் பகலும் வீற்றிருக்கின்ற பெரு வாழ்வுக்குரிய பெருந்தலம் இத் திருவாலங்காடே.

"ஆடினுர் காளி காண ஆலங்காட்டடிகளாரே"
—அப்பர்.

"அண்டம் புழைபட இடத்தாள் நீட்டி
அற்புதன் காளிதோற்க ஆடியதிது"
—பரஞ்சோதிமுனிவர்.

"அவள் செருக்கு அழிவுற அழியாக்
கடவுள் ஆடலால் வென்றதோர்
வடவனங் கண்டான்" —கச்சியப்பர்.

திருவாலங்காட்டில், 'அண்டமுற நிமிர்ந்தருளிய நாயனுர்' காளியோடு ஆடி, காளியின் அகந்தைக் கிழங்கை அவள் அகத்திலிருந்து அப்புறப்படுத்தினுர் என்ப. முஞ்சிகேச முனிவர்க்கும், கார்கோடக முனிவர்க்கும் இறைவன் காட்சி கொடுத்த தலமும் இதுவேயாகும். காரைக்காலம்மையார் அருளிய மூத்த திருப்பதிகம் கொண்ட முதிய தலமும் இதுவே.

திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சி, அங்கு வாராது நின்ற காலத்து, 'நம்மை அயர்த்தனையோ பாடுதற்கு' என்று கூறிப் பழையனூர் வரலாற்றைச் சிவ பெருமானே அவருக்கு உணர்த்தியருளினுர் என்ப. ஞானசம்பந்தர் இறைவன் உணர்த்திய வரலாற்றினைத் தம் தேவாரத்தில் வைத்துப் பாடினுர். "துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய் நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பாரும்" என வருவது அவர் திருவாக்கு.

"இம்மையிலே புவியுள்ளோர் யாரும் காண
ஏழுலகம் போற்றிசைப்ப எம்மை ஆளும்
அம்மைத்திருத் தலையாலே நடந்து போற்றும்
அம்மையப்பர் திருவாலங்காடாம் என்று,
தம்மையுடையவர் மூதூர் மிதிக்க அஞ்சிச்
சன்மைவரும் சிகாமணியார் சாரச்சென்று
செம்மை நெறி வழுவாத பதியின் மாடோர்
செழும்பதியில் அன்றிரவு பள்ளி சேர்ந்தார்!"

என வரும் பெரிய புராணத் திருவாக்கும் இங்கே கருதத் தக்கதாகும்.

உலகில் எங்கும் நடைபெறாத ஒன்றை நினைவுபடுத்தவே நம் சமய குரவர்கள் 'பழையனூர் ஆலங்காடு' என்றும், 'பழனைமேய ஆலங்காடு' என்றும், 'பழையனூர்மேய அண்டா' என்றும் கூறியுள்ளனர். இத்தகைய 'பழையனூர்' வரலாற்று விவரங்களைத் திருவாலங்காட்டுத் தல புராணத்தில் அறியலாம். அவற்றில் ஒன்றைச் சிறப்பு வகையில் இங்கு நினைவு கூறலாம்.

நீலிப்பேய் பெண் வடிவமெடுத்து மகவொன்றை இடுப்பில் வைத்துக்கொண்டு தன்னைத் தொடர்ந்து வருவதைக் கண்டு அஞ்சி, அலறி வணிகன் ஒருவன் பழையனூர் வேளாளர்கள் இடம் தஞ்சம் புகுந்தான். அந்தப் பேய்ப் பெண் அப் பெருமக்களிடம் 'இவ் வணிகன் என் கணவன்; என்னைப் புறக்கணித்துச் செல்கின்றான்' என்று முறையிட்டாள், கூடியிருந்த எழுபது வேளாளர்களும் நீலியின் பாசாங்கை மெய்யென நம்பினர். பெண்ணெனின் பேயுமிரங்குமல்லவா! வணிகன் உயிர்க்கு ஒன்றும் கேடு நேராமல் பாதுகாப்பதாக உறுதி கூறினர் அவ்வுத்தமர்கள். அப்படி அவ்வுயிர்க்கு யாதேனும் நேரிடின் தாங்கள் 70 பேர்களும் தங்கள் உயிரை விடுவதாகவும், ஒரு சேரத் தீப்பாய்வதாகவும் சத்தியம் செய்தார்கள்.

வணிகனும் பேய்ப்பெண்ணும் இராத் தங்க ஓரிடத்தைக் காட்டினர் வேளாளர். நடுநிசியில் நீலி பெரிய பேயுருக்கொண்டு வணிகன் உடலைக் கிழித்துக் கொன்றது. தன் கைப் பிள்ளையையும் காலில் அரைத்து அழித்தது. (இன்னும் அவ்விடத்தைக் காணலாம்). மறு நாள் காலை செஞ்ஞாயிறு உதித்தது. உண்மையை உணர்ந்தார்கள் வேளாளர்கள். சொல்லிய வண்ணம் செய்யும் பிரான் முன்பாகத் தீக்குழி வெட்டி, எழுபது வேளாளர்களில் அறுபத்து ஒன்பதுபேர் தாம் சொல்லியவண்ணம் செய்ய வந்து தீக்குழியில் பாய்ந்து உயிர் விட்டனர். எஞ்சிய ஒருவர், தாம் கொடுத்திருந்த வாக்கை மறந்து விடியற்காலையே தம் வயலைக் காணச் சென்றிருந்தார். தமது மனைவியார் வந்து நினைப்பூட்டினர். உடனே தம் கையிலிருந்த தார்க்கோலால் தம்மைக் குத்திக் கொண்டிறந்தார்.

இப்படிச் சொல்காத்த பெருமக்களின் சந்ததியார் இன்றும் பழையனூரில் இருக்கின்றனர். இவர்களையே 'கூழாண்டார் கோத்திரமுடையார்' என்ப. இந்த அரிய செயல் நடந்த இடம் திருவாலங்காட்டிற்கும் பழையனூர்க்கும் இடைவெளியில் இருக்கிறது. இங்கே பாறைகளில் அமைத்த ஞாபகச்சின்னத்தோடு கூடிய தீக்குளமுள்ளது. அதற்கு எதிரில் உள்ள திருக்கோயிலில் இவர்கள் சத்தியம் காக்க உயிர் விட்டமைக்குச் சாட்சியாக இருந்த 'சாட்சி பூதேஸ்வரர்' திருவுருவமும் உள்ளது. இவற்றை நாம் இன்றும் காணலாம்.

"கூறிய சொல் பிழையாது துணிந்து
  செந்தீக் குழியெழுபது பேரு மூழ்கி"
"மெய்ம்மை வேலை வழுவ த வேளாய விழுக்
  குடியைச் செம்மையினா பழையனூர்"

என வரும் பாடற்பகுதிகளும் பார்க்கத் தக்கவையாம்.

கல் வெட்டுகள், இத்தலத்தை "மணவிற் கோட்டத்து மேல் மாலை பழையனூர் நாட்டுத் திருவாலங்காடு" என்றும், "ஜயங்கொண்ட சோழமண்டலத்து மேல் மாலையாகிய பழையனூர் நாட்டுத் திருவாலங்காடு" என்றும் குறிக்கின்றன. திருவாலங்காடு, திருத்தலையாலங்காடு (குறடாச்சேரியருகு), திருவாலம்பொழில் (தஞ்சாவூரருகு) எனப்படும் தலங்கள் தென்னாட்டில் உள்ளன. ஆனால்: "பழையனூர்" திருவாலங்காடு என்பது இத்தலமே. இவ்வூர் இத்தலத்திலிருந்து ஒரு கல் தூரமேயாம். இப்பெயர், பழைய ஊர் என்றும் பழனம் பல பெற்ற ஊர் என்றும் பொருள்படினும், பழையன் ஊர் என்பதே சாலப் பொருத்தமாம். இவ்வூரைச் சொந்தமாகப் பெற்ற ஒருவன் முற்காலத்தில் இருந்தான் அவன் பெயர் 'பழையன்' என்பது. அதிலிருந்தே 'பழையனூர்' என்றும் பெயர் உண்டானது என்று சொல்லலாம்.

காரைக்காலம்மையாரால் பாடப் பெற்றதும் அவர் தலையால் நடந்து தரிசித்ததுமாகிய திருவாலங்காடு என்னும் தலம் இவ்வூரைச் சார்ந்தது. அத்தலத்தை மிதிக்க அஞ்சி, அப்பர், சுந்தரர், சம்பந்தராகிய மூவர் முதலிகளும் பழையனூரில் தங்கியே தேவாரம் பாடினர் என்ப. தமிழ்நாட்டு மூவேந்தரும் போற்றியதும் இப் பழையனூரையே என்று பெருந்தொகை நூல் கூறுகிறது. இவ்வூராலேயே முத்தமிழ் நாட்டில் தொண்டைநாடு தனிச் சிறப்புற்றது என்று தெய்வச் சேக்கிழார் பாடியருளியுள்ளார்.

நற்றிறம்புரி பழையனூர்ச்
  சிறுத்தொண்டர் நனவவந்து
உற்ற போது தம் உயிரையும்
  வணிகனுக்கு ஒரு கால்
சொற்ற மெய்ம்மையும் தூக்கி
  அச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையின் நிகழ்ந்தது
  பெருந் தொண்டை நாடு"

என வருவது அப்பாட்டு. [சிறுத் தொண்டர்-தேவர் சிங்கப் பெருமானுக்கும் வண்டார் குழலியம்மைக்கும் அடிமை பூண்டொழுகிய சிறிய தொண்டர்களாகிய வேளாளர்கள். நவை-பழி. சொற்ற-சொல்லிய. தூக்கி-சீர் தூக்கிப் பார்த்து]

"மாறு கொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனை
  யால் வணிகனுயிர் இழப்பத் தாங்கள்
கூறிய சொல் பிழையாது துணிந்து செந்தீக்
  குழியில் எழுபதுபேரும் முழுகிக் கங்கை

ஆறணிசெஞ்சடைத் திருவாலங்காட்டு அப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ் மெய்ப்
பேறு பெறும் வேளாளர் பெருமை எமபால்
பிரித்த அள்விட்டு இவ்வளவு எனப்
பேசலாமோ?''

[மாறு-சூழ்ச்சி; நீலி-பேய்ப்பெண்; சொல்-சூளுரை.]

பழையனூரில் குடியிருந்த வேளாளர் இறைவனது நன்செய்களைப் பயிரிட்டு, நெல்லை நடராஜருக்குக் கொடுத்துவிட்டுப் புற்பயிரைத் தாம் உண்டு வாழ்ந்ததால், அவரைக் கூழாண்டார் என்றனர் மக்கள். பழையனூர் வேளாளரின் தரும சபை (பஞ்சாயத்துக் கூடுமிடம்) 'கன்னிக் குட்டை'யில் இருந்தது. இங்கு ஒரு கோயில் அறிகுறி இன்னும் உளது. இக்கோயிலையே 'சாட்சி பூத ஈஸ்வரர் ஆலயம்' என்றும், 'சாட்சி நாதேஸ்வரர் கோயில்' என்றும் குறிக்கின்றார்கள். இது இப்போது சிதைந்த நிலையில் உள்ளது. இக்கோயிற் சிவலிங்கத்தின் முன்னிலையிலே கூழாண்டார் மரபினர் வணிகனுக்குச் சத்தியம் செய்தனர் என்றும், இந்தக் கோயில் முன்னேயே தீ வளர்த்து வேளாளர்கள் உயிரை விட்டனர் என்றும் அறிய, குளக்கரைமீது சாட்சிபூத ஈஸ்வரர் எதிரில் எழுபது வேளாளர்களுடைய உருவங்களும் கற் பாறைகளில் சாட்சியாகக் காணப்படுகின்றன. பழையனூர் சுடுகாட்டில் இருபது அடி அகலமும் பத்தடி உயரமும் கொண்ட பாறை ஒன்று ஒரு முனையில் அந்தரமாக நிற்கிறது. அதன்மேல் வீசும் கற்கள் கீழே விழுவதில்லையாம். அதை நீலிக் கல் என்று இன்னும் கூறுகின்றனர்.

இறைவன் ஆணைப்படியே 'காரைக்காற் பேய்' திருவாலங்காட்டிற்கு வருகையில், அதற்கு மூன்று மைல் தூரத்திலே உள்ளதோர் ஊரில் இருந்தே கோபுரம் தெரிய அதைக் கண்டு கை தொழுதார் அம்மையார். அந்த மேட்டூரே இன்று 'தொழுதாவூர்' என வழங்குகிறது. 'தொழு தாய் ஊர்' (தொழு தாய்= காரைக்கால் அம்மையார்) என்பதாகி 'தொழுத ஊர்' என்ருகி இன்று தொழுதாவூர் என மருவியுள்ளது எனலாம்.

காட்டு மேட்டூர் என்று கூறும் தலமே, பழைய 'களக் காட்டூர்' என்றும் 'காட்டிக் கும்பிட்ட ஊர்' என்றும் சொல்லுவர் பெரியோர். இவையெல்லாம் காரைக்காலம்மையார் காலத்து நன்னிலையில் இருந்த ஊர்களாம். அம்மையார் காலத்திலேயே 'சொல் காத்தோரூர்' பழையனூர் என வழக்கிலிருந்தது.

பழையனூரார் புரிதீர்த்த தீக்குழி அவியாது பலநாள் எரிய, அதைக் கேள்வியுற்ற தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்து பார்த்து, வியந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாப் பாடினர். அப்பாட்டுக்கள் பின் வருமாறு:

சேரன்

''யாவரேம் காராளர்! யாவர் இணை-
யாவார்!
நாவலோ! நாவலோ! நாவலோ!
—கோவைப்
பொருப்பால் அளித்தார்க்குப்
போதுமே உண்மை
நெருப்பால் அளித்தார்க்குநேர்!''

சோழன்


''எல்லை பலகடந்திட் (டு), எங்கும் புகழ்
பூத்துத்,
தொல்லை மனுக்காகத் தோன்றிற்றே-
கொல்லை
வழியில் ஒரு பேய் நின்று வஞ்சனையாற்
செய்த
குழியில் எழு செந்தீக் கொழுந்தே.''

பாண்டியன்

''பிழைத்தாரோ காராளர் பேய்மகள்
சொற்கேட்டு
பிழைத்தார்கள் அல்லர்; பிழைதீர்ந்தார்
—பிழைத்தார்கள்
எல்லோரும் காண எரியகத்தே
மூழ்கினர்
எல்லோரும் இன்றும் உளர்.''
—பெருந்தொகை.

விண்ணப்பம்

சற்றேறக் குறைய 2500 ஆண்டுகட்கு முனபு நிகழ்ந்த மாண்பு மிக்க இந்த அபூர்வ சம்பவத்தின் நினைவு இன்றளவும் மறக்கப்படவில்லை. இப்போது நாம் காணும் சில மிகப் பழைய குறிகளும் அடையாளங்களும் இதற்குத் துணை புரிவனவாய் உள்ளன.



ஸ்ரீ சாக்ஷிபூதேசுவரர் கோவிலின் ஒரு தோற்றம்



ஸ்ரீ சாக்ஷிபூதேசுவரர் சன்னதியின் முன்புற வாயில்

திருவாலங்காடு

தி. மு. சுபாபதி தேசிகர்

ஊர் அமைப்பு: இவ்வூர் செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி வட்டத்தில் சென்னையிலிருந்து மேற்கே பெங்களூர் புகை வண்டித் தொடரில் 36-வது கல் திருவாலங்காடு இரயிலடியிலிருந்து வடக்கே 3 கல் துலைவிலும் திருத்தணி போகும் பெருவழிச் சாலையில் 37 கல்லிலிருந்து மேற்கே 3 கல் துலைவிலும் உள்ளது. முன்னர்சித்தூர் மாவட்டத்திலிருந்து 1960 ஏப்ரல் 1 உ யிலிருந்து தமிழ்த் தாயகத்தோடு இணைந்து சீரும், சிறப்பும், அடைந்து வளர்ந்து வருகிறது. ஊர் கிழக்கு மேற்காக மூன்று வீதிகளைக் கொண்டு ஒவ்வோர் வீதியும் 2½ பர்லாங்கு நீளத் தோடு ஒழுங்காய் அமைந்துள்ளது. வீடுகள் 360 ஜனத்தொகை 2800 ஊரின் மேல் பாகத்தே நடுவணேகிழக்கு மேற்காக தோற்றப் பொலிவோடு ஆலயம் விளங்குகின்றது. ஆலயம் 6 ஏகர் 22 சென்டு.

இவ்வாலயம் இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளதற்கு முன்பு ஒவ்வொரு சன்னதியும் தனித் தனியாக சுமார் 1500 வருடங்களின் முன் கட்டப்பட்ட தாயும், 2-வது திருமதில் சின்ன கோபுரம் சுமார் 1200 வருடங்களின் முன் கட்டப் பட்டதாயும், வெளி பெரிய திருமதில் அழகமைந்த கட்டுக் கற்களால் பொலிவோடு கட்டி பழுதுபட்டிருப்பது சுமார் 800 வருடங்களில் கட்டப் பட்டுள்ளதாயும் ஆராய்ச்சியாளர்களால் கருதப்படுகிறது.

திருக்குளம்:- இவ்வாலயத்திற்கு மேற்கே வடக்கு தெற்காக அமைத்துள்ள திருக்குளம் தூயதாய் தண்ணீர் சுத்தமாய் நான்கு பக்கங்களும் படித்துறை அழகாய் "சென்றுடு தீர்த் தங்களானூர் தாமே" என நாவுக்கரசரால் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. அளவு 8 ஏகர் 26 சென்டு இக்குளக்கரையினிடம் தாண்டவமாடிய காளி கோயில் உள்ளது.

தலத்தின் சிறப்பு:-தமிழகத்தில் உள்ள நாடுகளில் "தீயயென்பன கனவினும் நினைவிலாச் சிந்தை தூய மாந்தர் வாழ்" என்ற படி சான்றோரைத் தன்னகத்தே கொண்ட தொண்டை நாட்டின் கண் சைவ சமயாசாரியர்களால் பதிகம் பெற்ற 32 திருத்தலங்களில் ஒன்றாயும், ஊழிக்காலத்தும் அழியாது நிலைத்துள்ள திருப்பதிகள் சிலவற்றுள் இஃதொன்றாய் தமிழகத்தில் கூத்தப்பிரான் நடித்த ஐம்பெரும் நடன சபையில் (இரத்தின சபை: திருவாலங்காடு, கனக சபை:- சிதம்பரம்; இரஜித சபை;– மதுரை; தாம்பிரசபை;-திருநெல்வேலி; சித்திர சபை;– திருக்குற்றாலம் முறையே இரத்தினம், பொன், வெள்ளி, செப்பு, ஓவியம்.) ஆகிய ஐந்தில் இத்திருவாலங்காடு முதற் சபை தொண்டை நாட்டிற்கே சிறப்பீந்தது இத் தலம் இதனை "நற் நிறம்புரி பழையனூர்ச் சிறுத் தொண்டர் நவை வந்து, உற்றபோது தம் உயிரையும் வணிகனுக்கு ஒருகால் சொற்ற மெய்ம்மையும் தூக்கி அச்சொல்லையே காக்கப் பெற்ற மேன்மையின் நிகழ்ந்தது பெருந் தொண்டை நாடு" எனச் சிறப்பித்துள்ளார் சேக்கிழார் பெருமான். தமிழ் மொழியின் சிறப்பைக் கூறவந்த பரஞ்சோதியார் திருவிளையாடலில் "கடுக்கவின் பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி. அடுக்க வந்து வந்தாடு வானுடலினிலைப்பு, விடுக்க வாரமென் கால் திரு முகத்திடை வீசி, மடுக்கவுந் தமிழ் திருச் செவி மாந்தவு மன்றோ" சயிலாயத்துச்சியிள்ள நீல கண்டன் தமிழ் மொழியின் இனிமையைச் செவியாரப்பருக என்னுட்டவர்க்கும் இறைவனுய்த் தென்னுட்டவர்க்குச் சிவனுய்" பிறவா யாக்கைப் பெரியோன் "பிறப்பிலி இறப்பிலி பிறங்கலரசன் நன்மக்களார் நாதன்" 'தாயுமிலிதந்தையிலி தான் தனியன்' "தோற்றமில் பரஞ்சோதி" யாய கூத்தப்பிரான் தமிழகத்தின் எல்லையாய இத் திருத்தலத்தே இரத்தின சபையில் முதன் முதல் நடித்துவரும் போது அகத்திய முனிவர் தமிழ் வளர்க்கும் பொதியமலை தூரத்தே உள்ளதென இரத்தின சபையிலிருந்து பொற் சபைக்குப் போய் பொற் சபையிலிருந்து வெள்ளிச் சபைக்குப் போய் வெள்ளிச் சபையிலிருந்து தாம்பிர சபைக்குப் போய் தாம்பிர சபையையும் விட்டு சித்திர சபைக்குப் போய் தமிழினிமையைச் செவி வழிப் பருகினதாக அடுக்க வந்து வந்தாடுவார் என்ற வரியில் தொக்கியுள்ளது.

அஷ்ட்ட வீரட்டத் தலங்கள்	8
சப்த மோக்ஷஸ்தலங்கள்	7
சப்த விடங்கம் (தியாக) ஸ்தலங்கள்	7
சப்த ஸ்தானங்கள்	5
பஞ்சாரணியஸ்தலங்கள்	5
பஞ்ச நாதஸ்தலங்கள்	5
பஞ்ச பூதஸ்தலங்கள்	7
பஞ்ச நடன சபைகள்	5

என்பதைப் போல் பஞ்ச நடன சபைகள் 5-ல் முதலாய் இரத்தினசபையை உடையது இத் திருவாலங்காடு.

நடராஜ தத்துவம்:—சைவ சமய தத்துவத் தின்படி இறைவனுக்குரிய மூன்று வடிவங்க ளில், அருவம், அலகில் சோதி அருவுருவம் (சதாசிவம்) லிங்கம் உருவங்கள், 25 இதில் நடராஜ மூர்த்தம் முதன்மையானது. இது தான் எல்லாத் தலங்களிலும் அநுக்கிரஹத் துக்கு எழுந்தருளுதல் எல்லாச் சிவன் கோயி லும் எந்த மூர்த்தி இல்லாவிடினும் ' நடராஜ மூர்த்தம் இல்லாத சிவஸ்தலமே கிடையாது. "அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகள் அணுக்க ளெல்லாம் ஏகதாளத்தில் ஆடிக் கொண்டிருக் கின்றன, என்று முடிவு கட்டினர்கள் அணுக் கள் இயங்க அண்டங்கள் இயங்கும், அண்டங் கள் இயங்க ஆண்டவனும் நடன மூர்த்தியா யிருக்க வேண்டும். இத்திருவுருவம் பஞ்ச கிருத்தியத்தை உள்ளடக்கி "ஓங்காரமே நற்றிருவாகி" என பிரணவருபியாய் நடிக் கின்ருர். "நாத வெளியின் மேலொளி மன்றங் குக் காதலான் மடவாள் காணக் கருத்துற நிருத்தஞ் செய்வார்" "னடமே தென்னினேந் தொழில் நிகழ்த்தலாகும் பந்த மதகற்று மிந்தப்படி வழுமதுவே யாகும் வந்துலகத்தில் யாருங்காண்பரேல் வழுவாமூர்த்தி தந்தருள ளிக்குந்தெய்வம்.

"நண்ணும் பிறவியொழித்துயிர்க்கு நலஞ் சேர் முத்தி கொடுப்பதற்கிங், சென்னிஞ் சம யக் கடவுளரில் யானேவல்ல னெனப்பதமேல், வண்ணந்திகழ் பொற்கழலணிந்து மதுகைக் கொடியுங்கட்டியருட் பெண்ணம் பிகை கண் காண நடஞ் செய்வானந்தப் பெருந்தக்கால்" காட்டவனல் போலுடல் கலந்துயிரை யெல் லாம் ஆட்டுமொரு நட்டுவனனெம் மண்ண லென வெண்ணுப், "நற்றவத்தோர் தாம் காண நாதாந்தத்து அஞ்செழுத்தால் உற்றுருவாய் நின்றுடல்" இன்னம் பலவுள விரிக்கிற் பெரு கும். -இத்தலத்தில் உள்ள நடராஜப் பெரு மான் எட்டுத் திருக் கரங்களுடன் அண்டமுற நிமிர்ந்து இடது திருவடியைத் தூக்கியாடுகின் ருர். இத் தாண்டவத்திற்கு பாண்டங்க நட னம் சண்ட தாண்டவம், திருக்கரங்களில் உள்ள ஒவ்வோர் ஆயுதமும் தத்துவக் கருத் தும் பொதிந்துள்ளவைகள். உடுக்கை சத்தத் தைக் குறிக்கும் இது படைத்தல் அபயம், காத் தலைக் குறிக்கும் தீ அழித்தலைக் குறிக்கும் ஊன்றிய திருவடி மறைத்தலையும், உயரத் தூக்கிய திருவடி அருளலைக் குறிக்கும், பாம் புள்ள திருக்கரம் (சுவாசம்) மூச்சு, சத்தம், தீ ஒவ்வொர் உயிரிலும் ஊக்கத்திலும் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. இம் மூன்று தொழிற் படாவிடில் உறங்கினவன் உறங்கிய வனே கரத்திலுள்ள தீ ஒன்று கடல் மத்தியில் உள்ள வடவாமு காக்கினி ஒன்று, உயிர்வருக் கங்களில் உள்ள உதர அக்னி ஒன்று, ஆக முத்தீ சூலம் முப்பெருங் கடவுளர்க்கு முதலாந் தன்மை துடி (பாக்கு வெடி) பாசங்களை வெட்டுந் தன்மை நீட்டிய கரம் முன்னுள்ள வனும் பின்னுள்ளவனும் மூப்பினும் இளையா னும் யானே யென்பதை கை தூக்கி உறுதிப் படுத்துந்தன்மையும் அபய கரம், அஞ்சேல் என்றதையும் வரதகரம், அழியாத இன்பந்தந் தருளுவதையும் குறிக்கும். இத் திருவுருவம் இத்தலத்தன்றி இந்திய நாட்டில் வேறெங்கு மில்லை. இச்சிறப்பை நாவுக்கரசர் "ஒன்று யுலகனைத்து மானுர் தாமே, என்றருளியுள் ளார் பாவ, இராக, தாளம் அடக்கிய ப,ர,தம், இசையின்பத்தில் உலகை மகிழ்விக்கும் திரு வுருவம் காலஞ் சென்ற திரு. மேயர் எஸ். இராமசாமி நாயுடு எனும் பெரியார் ஜப்பா னுக்குப் போயிருந்த போது பல் கலைக்கழகத்தில் நடராஜ உருவத்தை முதலிடம் பெற அமைந் துள்ளதைக் கண்டு நம் நாட்டு தத்துவ விளக் கம் இங்கும் பரவியுள்ளதை கட்டுரையில் வெளியிட்டுள்ளார். பணமும், பலமு முள்ள நாடுகள் அழிக்குந்தன்மையுடைய ஆயுதங்களை தோற்றுவித்து உலகம் அழிய பயன்படுத்தப் படுகிறது. நம் நாடோ ஆன்மீகம் வரை அன்பு பரவ மதக் கோட்பாடுகளையும், தத்துவங்களை யும், அயல் நாடுகளுக்கு, அன்றும் காஞ்சிபுரத் திலிருந்து தரும பாலரை நளந்தா பல்கலைக் கழகத்திற்கும் இன்று நம் வட்டம் தணிகைத் தோன்றல் மேன்மை தங்கிய சர் எஸ். இராதா கிருஷ்ணன் அவர்களையும் தமிழகத்திருந்தே வழங்கியுள்ளது. மற்றைய பகுதிகளிலிருந்து தவமுதல்வர் விவேகாநந்த அடிகள் போன்ருே ரும் சத்தியத்தை விளக்க சுதந்திர தந்தை மஹாத்மா காந்தியடிகள் போன்ருேரையும் அனுப்பி அழியாப் புகழ் படைத்துள்ளது.

புராணச் சுருக்கம்:— இவ்வனத்தே நிம் பன், சும்பன், எனும் இரு அசுரர் இன்னல் பல செய்து கொண்டிருந்ததை பார்வதி பிராட்டி

யார் அழித்துவிட இவர்கள் உடன் பிறந்தாள் விகுருதியின் மகன் இரத்த பீசன் (உதிரம் பூமியிற்படின் துளிக்கு ஒரு உருவமாக தோன்றுதல்) அம்பிகையை எதிர்க்க அம்பிகை காளியைத் தோற்றுவித்து இரத்தத்தை பூமியில் விழா வண்ணம் அழிக்கும்படி உத்திரவிட்டாள். அவ்விதம் காளி செய்து அழித்தாள். இந்த இரத்தபான வெறியால் காளியும் அசுர வேலைகளைச் செய்துகொண்டு அல்லல்படுத்தி வந்தாள். இறைவன் உருவத் திருமேனி கொண்டு தாண்டவமாடக் காணும் காட்சியைக் கொண்டு தரிசிக்க வேணும். இனித்த முடைய நடன பொற்பாதமும் எடுத்து ஆடப்பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டுவதே, என அனந்த முனிவரென்பார் கையிலையில் தவமிருக்க அம்முனிவர்க்கும், கரத்தில் கங்கணமாயிருந்த கார்கோடனெனும் நாகன் ஓர் நாள் விஷத்தைக் கரத்தே கக்கிவிட இறைவன் சுத்த நிலைக்கு வந்தும் நீ அசுத்தம் செய்தமையால் கீழ் நிலைக்குப்போ என உத்திரவிட கார்கோடன் மன்னிப்புக் கோர திருவாலங்காட்டிற்குப்போ சுனந்தருக்கும் உனக்கும் நடன தரிசனம் அருளுவோமென கார்கோடன் நாகமானதில் கருடனுக்குப் பயப்பட இறைவன் சடைக் கங்கையில் மூழ்கச் செய்து இத் திருவாலங் காட்டிற்குப் போகென இத் திருக்குளத்தில் வந்து எழுந்து தவம் செய்திருக்க இறைவன் காளியின் கொட்டத்தை அடக்கவும் இம்முனிவர்களுக்கும் நடனக் காட்சி வழங்கவும் திருவுளங்கருதி காளியோடு வாது செய்து பல வகைத் தாண்டவங்கள் செய்து முடிவில் சண்டதாண்டவமான ஊர்த்துவ தாண்டவமாடி ஜெயித்து, அம்முனிவர்களுக்கும், பிரம்ம, விஷ்ணுவாதி, தேவர்களுக்கும் காட்சி தந்தருளினர். இத்திருக்குளத்தில் இன்றுவரை துப்புரவாக தண்ணீரின்றி வடிந்து உலர்ந்ததே கிடையாது. உருத்திர சாமி, சோமசுவாமி கிராதன் முதலியோர் முத்தி பெற்றுள்ளார்கள். பழையனூர் திருவாலங்காடென்னும் இத்தல புராணம் வடமொழி பதினெட்டு புராணத்துள் மார்க்கண்டேய புராணத்தில் அகத்திய முனிவருக்கு அருளியதாயும், அதை வியாசர் தொகுத்து சூதருக்குச் சொல்ல, சூதர் சௌனக முனிவருக்குக் கூறியதாய் உள்ளது. தமிழ் மொழியில் 97 வருஷத்திற்கு முன் அச்சிடப்பட்ட 726 பாடல்கள் கொண்ட புராணம் ஒன்றுள்ளது. நூல் செய்தோர் பெயர் தெரியவில்லை. ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே ஊரிலான் குணங்குறியிலான் ஒரு பேரிலான் என்ற இறைவன் புகழைக் கூற வந்த நூல் செய்த பெரியார் நான் கேட்ட வாயாடித் தெள்ளேணங் கொட்டாமோ என்றபடி, தம் பெயரையே குறிக்கவில்லை போலும்.

தலத்தின் புகழ்:— பழையனூர் நீலியின் சரிதப்படி ஓர் வணிகனுக்காக நீலியின் பழி வாங்கும் செயலுக்கு உன் உயிருக்கு ஊறு நேரின் நாங்கள் 70 வேளாளர்களும் 'அவ்வணிகன் உயிரிழக்கத் தாங்கள் கூறிய சொல் பிழையாது துணிந்து செந்தீ குழியில் எழுபது பேரும் மூழ்கி, என்றபடி சத்தியச் சொல்லைக் காத்த செயலை திருஞான சம்பந்தப் பெருமான் இத் தலப்பதிகத்தில் 'வஞ்சப்படுத தொருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு அஞ்சும் பழையனூர்' எனப் போற்றியுள்ளார். இவ்வரிய செயலை நிரூபிக்க சாக்ஷி நாதேசுவரர், தீப்பாய்ந்த குட்டை 70 வேளாளப் பெருமக்கள் உருவம் செதுக்கிய நினைவு மண்டபம் இன்றும் குறிகளும் அடையாளமுங் கோயிலும், பழுதுபட்டு இருந்து வருவதை அரசினர் அறநிலைய பாதுகாப்புத்துறையார் உதவியோடு பல அன்பர்கள் நன்கொடையால் திருப்பணி நடந்து முடிந்த இச்சரித்திரத்தை ஞானசம்பந்தப் பெருமான் தேவாரத்தில் பாடியுள்ளதால் இந் நிகழ்ச்சி சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருத இடமுள்ளது. இவ்வரலாற்றை தேவாரம், பெரிய புராணம், சேக்கிழார் புராணம், சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள், பிற்காலப்பாடல்கள், சதகங்களால் போற்றப்பட்டுள்ளது. இவ்விரிவை இதற்கடுத்த பகுதியில் பழையனூர் பெருமை எனும் கட்டுரையில் பரக்கக் காண்க.

அறுபான்மும்மை நாயன்மாருள் காரைக்காலம்மையார் இறைவன் அருளிய அதிசய மாங்கனியை கணவன் கண்டு தெய்வ அணங்கெண நினைத்து நீங்கியபின் உடலின் வனப்பையெல்லாம் உதறி என்புடம்பு கொண்டு கயிலைக்கேகி இறவாத இன்ப முதலாம் வரங்களில் நீ யாடும் போது உன்னடியின்கீழ் இருக்கவென்று வேண்டியதற்கு 'நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங்காட்டில் ஆடுமா நடமும் நீ கண்டானந்தம் நேர்ந்தெப்போதும் பாடுவாய், எனப்பணிந்தபடி செப்பரும் பெருமையன்பால் திகழ் திருவாலங்காடாம் நற்பதி தலையினுலே நடந்து புக்கடைந்து, 'குலவிய தாண்டவத்தில் அவர் எடுத்தருளுஞ் சேவடிக்கீழ்' என்று மிருந்து கொண்டு மூத்த நற்பதிகம் 22 பாடிக்கொண்டிருக்கின்றுர். சமயாசாரியர்களுக்கு முன் பண்ணேடு இசை பாடலை பாடியதினுல் மூத்த திருப்பதிகமென 11-ம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

காரைக்காலம்மையார் இத்தலத்திற்குத் தலையால் வந்தடைந்த காரணத்தால், திருஞானசம்பந்தப் பெருமான் காலினுள் மிதிக்க அஞ்சி 'இம்மையிலே புவியுள்ளோர் யாருங்காண ஏழுலகும் போற்றிசைப் பசும்மையாளும் அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாம் என்று தம்மையடைவர் மூதூர்மிதிக்க அஞ்சி' என்று அடுத்த பதியில் பழையனூரில் அன்றிரவு துயிலுங்கால் 'மாலையிடையாமத்துப் பள்ளிகொள்ளும் மறையவனார் தம்முன்பு கனவிலே வந்து ஆலவனத் தமர்ந்தருளும் அப்பர் தம்மை அயர்த்தனையோ பாடுதற்கென்றும்' திருநாவுக்கரசு நாயனர் 'மெய்ம்மைநிலை வழுவாத வேளாள விழுக்குடிமைச் செம்மையினர் பழையனூர்த் திருவாலவனம் பணிந்து திருவாலங்காடுறை யுஞ்செல்வர் தாமெனச்சிறப்பின்' திருத்தாண்டகம் பாடியருளினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பழையனூருழை யெய்தித் தங்குவார் அம்மை திருத்தலையாலே வலங்கொள்ளுந்திங்கள் முடியாராடுந் திருவாலங்காட்டினில் முன்னின்று தொழுதேத்தி முத்தாவென்றெடுத் தருளி, பாடியருளினர். சிவபராக்கிரமம் 64 இவையிரண்டிலும் இத்தலம் இடம் பெற்றுள்ளது.

தலத்தின் பெயர் வடமொழியில் வடாரணியம். தமிழில் திருவாலங்காடு. சுவாமியின் பெயர் வடமொழியில் வடராணியேசுவரர். தமிழில் ஆலங்காட்டப்பர். அம்பாள் பெயர் வட மொழியில் பிரமராளகாம்பா. தமிழில் வண்டார் குழலி. நடராஜப் பெருமானுக்கு இரத்தினசபாபதி ஊர்த்துவதாண்டவ மூர்த்தி எனப் பெயர். அம்பாள் பெயர் சமீசீனம்பாள் (அண்மையிலேயே இருப்பவள்). காளியின் பெயர் வட வனக்காளி. தாண்டவக்காளி.

ஸ்தல விருக்ஷம் ஆலமரம் தீர்த்தத்தின் பெயர் சென்ருடு தீர்த்தம்

பதிகங்கள் :—

காரைக்காலம்மையார் மூத்த திருப்பதிகம் 2-க்கு பாடல்	22
திருஞானசம்பந்தர் பதிகம் 1-க்கு பாடல்	12
திருநாவுக்கரசர் தாண்டகம், நேரிசை பதிகம் 2-க்கு பாடல்	20
சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் 1-க்கு பாடல்	10
பட்டினத்தடிகள் பாட்டு	1
அருணகிரி நாதர் திருப்புகழ் பாடல்	3
'மிக்கதிரு ஆலங்காட்டிற் நிகழ்வண்டார்குழலி போற்ற நின்று சால் நடிக்கும் ஊர்த்துவ பாடல் தாண்டவா, 'உமாபதிசிவம்'	1
காளி அவள் செருக்கு அழிவுற்ற அழியாக் கடவுள் ஆடலால் வென்றதோர் வடவனங் கண்டான், – கந்தபுராணம் பாடல்	1

ஆட்சி முறை :— சோழ அரசர்கள், பல்லவ அரசர்கள், குறு நில மன்னர்கள் ஆட்சிக்குட்பட்டு பரிபாலிக்கப்பட்டு பின்னர் சாளுவ ரெட்டி ஆளுகைக்குட்படடது. அதன் பின்னர் நான்கு கால ஆலய பூசைக்கு காலசந்திக்கு கார்கோடக மடம் உச்சிக் காலத்திற்கு காரைக்காலம்மையார் மடம் சாயரக்ஷைக்கு தர்மசிவாசாரியார் மடம், அர்த்த ஜாமத்திற்கு நாட்டு மடமுமாக 4 சைவ மடங்கள் பரிபாலித்து வந்தார்கள். இன்றும் இங்குள்ள நஞ்சை நிலங்களுக்கு மடத்துக் கழனி யென்றே வழங்கி வருகிறது. அதன் பின்னர் கார்வேட்டி அரச குடும்பம் பரிபாலித்து வந்து பின்னர் அறநிலையப் பாதுகாப்புத் துறையால் பரிபாலிக்கப்பட்டு 11 வருஷத்தின் முன் கிராமம் மாத்திரம் அரசாங்க ஒப்படைத்துக் கொண்டு பரிபாலித்து வருகிறது. 11 வருஷத்தின் முன்னர் இக்கிராம நன் செய் நில கண்டு முதலில் மேல் வாரம் சரிபாதி தேவாலயத்துக்கு சேர்ந்து வந்தது.

திருப்பணிகள் :— சோழர்கள், பல்லவர்கள், குறுநில மன்னர்கள் திருப்பணிக்குப் பின்னர் 1904 ஆண்டில் கோட்டையூர் ஸ்ரீமான் பெ. மு. அ. அவர்கள் குடும்பத்தினர் ரூபாய் 10 லக்ஷம் செலவில் உள் ஆலயம் வரை நல்ல திருப்பணி செய்துள்ளார்கள். 1947–ம் ஆண்டில் தேவக்கோட்டை ஸ்ரீமான் அரு. அரு. ராம அரு அவர்கள் திருப்பணி தரும நிதியிலிருந்து டாக்டர் குருசாமி முதலியார் அவர்கள் கமிட்டியின் மூலம் ரூபாய் 35 ஆயிரத்துக்கு ஆலயத்தில் சில திருப்பணிகளும், திருக்குளப்படித் துறை நான்கு பக்கமும் கைப்பிடிச்சுவர் உள்பட நடத்தியுள்ளார்.

புதைப்பொருளாராய்ச்சி :— இத்துறையார் 15 ஆண்டின் முன் இவ்வூர் வடகிழக்குப் பகுதியில் பெட்டிபோல் கற்கள் வைத்தும் சுட்டமட்பாண்டம் வைத்தும் சவ அடக்கம் செய்துள்ளதில், நீண்ட நீண்ட எலும்புகள் இருப்பதைக் கண்டு பிடித்தார்கள். இதைக் கொண்டு அவர்கள் சுமார் 5000 வருடங்களுக்கு முந்திய தென்றும் அக்கால முறை இவ்விதந்தானென்றும். மெசபெடோமியா தேசத்தில் அரசகுடும்பத்தார் செயலும் இஃதும் ஒன்ருயுள்ளது என்றும் இப்பகுதி அக்காலத்தில் பெரும் பண்டினமாக இருந்திருக்க வேண்டும், இதைச் சுற்றியுள்ள இயற்கை மண்மேட்டை கோட்டை என்றும் அண்மையில் உள்ள சிற்ருறுகளை

அகழிகள் என்றும் கூறியதிர்க்கிணங்க இன்றும் இம்மேட்டை கோட்டைக்கரைமேடு என்றே வழங்கி வருகின்றார்கள்.

கல் வெட்டுக்கள் செப்பேடுகளின் ஆராய்ச்சி: இக்கோயில் 46 கல் வெட்டுகள் 31 செப்பேடுகள் கல் வெட்டுக்களிலிருந்து அறிவன காரைக் காலம்மையார் காலம்கி.பி. 5 நூற்றாண்டு நிருப துங்க பல்லவன் காலம் முதல் கி. பி. 14-ம் நூற்றாண்டு விஜயநகர அரசர் காலம் வரை உள்ளது. இவ்வாலயம் கி. பி. 5-ம் நூற்றாண்டியிலிருந்து 15-ம் நூற்றாண்டு வரை உச்சநிலையில் சிறப்பாக இருந்தது. சோழர் காலத்தில் கோயில்களில் சைவ தருமத்தையும் பக்தி மார்க்கத்தையும் பரப்ப முக்கியத்துவம் கொடுத்தார்கள். அரசர்கள், ஜமீன்தாரி அரச நிர்வாக அதிகாரிகள், விவசாயிகள் வணிகர்கள் தேவதாசிகள் இதர தொண்டுக்குடையவர்களை இக்கோயில் பணி விடை செய்ய வழி செய்துள்ளார்கள். இவ்வூர் தொண்டை நாட்டு 24 கோட்டத்துள் மணவிற் கோட்டத்து மென்மலை பழையனூர் நாட்டுத் திருவாலங்காடென வழங்கி வந்தது. தொண்டை நாட்டை, வட பகுதி தென்பகுதியாக பிரித்து குறும்பர்கள் ஆண்டனர். அதன் பின்னர் திரையன் கூடூர் பகுதி ரெட்டி பாளையத்திலிருந்து வடபகுதியை ஆண்டான். இளந்திரையன் காஞ்சீபுரத்திலிருந்து தென் பகுதியை ஆண்டான். பின்னர் கரிகால் சோழன் தொண்டை நாட்டை கைப்பற்றி காடழித்து நாடாக்கினன். இவ்வரலாறு பட்டினப்பாலை முதலிய நூல்களாலும் அறியப்படுவன. நிருபதுங்கபல்லவன் கி. பி. 50 முதல் இராஜ இராஜசோழன் 1 இராஜேந்திர சோழன் 1 இராஜாதி ராஜன் 1 குலோத்துங்கன் விக்கிரமசோழன் 2 இராஜாதிராஜன் 3 குலோத்துங்கன் 3 இராஜராஜன் சடையவர்மன் சுந்தரபாண்டியன் 2 தேவராயர் மல்லிகார்ஜுன மகாராயர் சாளுவதிப்பைய தேவமகாராயர். கிருஷ்ணதேவராயர் சதாசிவராயர் திருமலை தேவமஹாராயர் கி.பி. 1571 வரை குறிக்கப்பட்டுள்ளது. கி.பி. 13-ம் நூற்றாண்டில் பழியஞ்சிய பல்லவராயன் அரச செல்வாக்குடைய பெரியதனக்காரரால் வெளித் திருமதில் கட்டப் பட்டுள்ளது. சாளுவதிப்பைய தேவமகாராயர் காலத்தில் 1441–ல் துவஜஸ்தம்பத்திற்கு செப்பேடு போட்டது. கோயிலில் தீபம் எரிவதை முக்கியமாய்க்கருதி சாதாரண விளக்குக்கு 12 ஆடும் சந்தி விளக்குக்கு 16 பசுமாடும், நந்தா விளக்குக்கு நிலவரியில் சில பகுதியும் வழங்கினர்கள். மணவூரில் சில நிலம் அளித்துள்ளார்கள். நிருபதுங்க பல்லவன் மனைவி காடவன் மாதேவி 108 கழஞ்சு பொன்னை தானமளித்துள்ளார். மூன்றாம் குலோத்துங்கன் 70 பொற்காசுகளை வழங்கியுள்ளான். சாதசிவ ராயர் 1534 விசேஷ உத்ஸவங்களுக்கு பொன் வழங்கி வந்துள்ளார்.

சோழர் காலத்தில் திருவாலங்காடுடைய அண்டமுறநின்றருளிய நாயனாருக்கு பல கிராமங்களை தானமாக இறையிலியாக அளித்தும் ஆண்டு ஒன்றுக்கு 400 சொச்சம் கலம் நெல்லும் 1200க்கு மேல் கழஞ்சு பொன் சுமார் (800 சவரன்) வழங்கி வந்துள்ளதாகத் தெரிய வருகிறது. பல்லவர் காலத்தில் ஆலயத்தில் விளக்கெரிக்க ஆடுகளைப் பிடித்துக் கொடுத்து வன்னியகுலமரபினரைக் குடி ஏற்றியது குறித்திருக்கிறது. மூன்றாவது குலோத்துங்கன் காலத்தில் குன்றவர்த்தன கோட்டத்தைச் சேர்ந்த இல்லத்தூர் அரும்பாக்கத்திலிருந்த திரைலோக்கியமல்லன் வத்ஸராஜன் நடராஜ சபைக்கு விளக்கு எரிய தானம் அளித்துள்ளான்.

செப்பேடுகள் 31-ல் 10 வடமொழி–21 தமிழ் மொழியில் சங்கலாகம் துவங்கி முதலாவது இராஜேந்திரசோழன் காலம் வரையுள்ளது. குறிக்கப்பட்ட பெயர்கள்: பெருநற்கிள்ளி. கரிகாலன், கோச்செங்கணன், இவன் மகன் நல்லடிகோன் இவர்கள் போரில் வெற்றி கண்டதை விரிவாக எழுதியுள்ளது. நில அளவுக்கு பரவைக்கால் போன்றகுறியும் இப்பெருமானுக்கு அளித்த நிலங்களின் செக்குபந்தி. அளந்தோர், எழுதியோர், பெருதனக்காரர். பஞ்சாயத்தோர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. பழையனூரை திருவாலங்காடுடையாருக்கு தானமாக வழங்கியதிலிருந்து துவங்கி சோழ சகாப்தத்தை விரிவாக எழுதியுள்ளது. திருவாலங்காட்டுச் செப்பேடு, சிலாசாசனம் மிகப் பிரசித்தி வாய்ந்தவைகள். இன்னம் பல அரிய செய்திகளும் இருக்கின்றன. முழுக்க உணர வேண்டின் அவ்வெளியீட்டை வாங்கிப் பார்க்கலாம்.

நடந்து வருவன :— 1960 ஏப்பிரல் 1உ இப்பகுதி ஆந்திரத்திலிருந்து தமிழகத்தோடு இணைந்த அன்றே மதிப்பிற்குரிய கனம் உள்துறை அமைச்சர் பெருமான் வந்தருளி இங்குள்ள அவநிலையைக் கண்ணுற்று ஆவன செய்ய திருவுளங் கொண்டார்கள். உடன் உடனுக மதிப்பிற்குரிய ஏழைபங்காளராகிய கனம் முதலமைச்சர்பெருமான், கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் பெருமான், கனம் வருவாய்த்துறை யமைச்சர் பெருமான், மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் முதலிய பெருங் கருணையாளர்கள் வந்தருளியதின்பயனாய் இவ்

வூருக்கு மின்னொளி விளக்கும், பெருவழித் துறையில் திருவள்ளூரையும் அரக்கோணத்தையும் இணைக்கும் முதல் தகுதிரோடும், உழுது வயிரார உண்டு வாழ ஏரிகள் செப்பனிடவும், உயர்நிலைப் பள்ளியும், கால்நடை மருத்துவ நிலையமும், ஆலயத் திருப்பணிக்கு ஓரிலக்கத்து இருபதாயிரம் ரூபாயுமாக பல லக்ஷங்களை அள்ளி வழங்கி அருள் செய்துள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் (**Collector**) அவர்கள் இப்பணிகள் துரிதமாய் நடக்க கண்ணுங் கருத்துமாய் ஊக்குவித்தலோடு இங்கு தான் வட்டார அபிவிருத்தி அலுவலகத்தை நிறுவ வேண்டுமென்று இன்று இவ்வட்டம் முன்னேற்ற படைய பணியாற்ற அருளியுள்ளார்கள்.

திருவள்ளூர் கோட்ட ஆட்சி முதல்வர் (**Sub Collector**) பன்முறை இவ்வூர் வந்து புரியவேண்டிய பணிகளுக்கு மக்களிடம் இன்முகத்தோடு நன்மொழியால் விளக்கங் கூறி கட்டிடங்களுக்குரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து ஊக்கத்தோடு கண்காணித்து வருகின்றார்.

இப்பணிகளுக்கு உழைப்பால் உயர்வைத்தர வட்டார அதிகாரி திட்ட **B.P.O** அதிகாரிகள் போல, வந்த சின்னாட்களில் இவ்வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்து தலைவர்களிடம் சென்று பார்த்துக்கூட்டி இன்முகத்தோடு நன்மொழி கூறி ஊக்குவிக்குந் தன்மையாளராய் வட்டார அலுவலக ஆட்சி முதல்வர் **B.D.O.** அரும்பாடு படுவது கண்கூடு.\

இத்தலமுடைய ஊர் கருணைமிகு அரசினர் கண்ணருளால் இவ்வளவுமுன்னேற்றமடைந்து வருவதற்கு நாங்கள் முற்செய் நல்வினைப் பயனே.

அறம் வளர்க. அரசு வாழ்க.
அன்பர் தழைக்க. ஆண்டவன் அருளுவாராக.



"தென்னுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா ! போற்றி !!"

இன்பம் எங்கே?

சி. மெய்கண்டார்
(வளவனூர், தென்னற்காடு ஜில்லா)
கூடுதல் ஆணையாளர், பஞ்சாயத்து யூனியன், திருவள்ளூர், ஈக்காடு.

இன்பம் எங்கே? எங்கே? இக் கேள்விக்கு விடை பகர்வதவ்வளவு எளிதல்ல வென்பதை எளிதில் அறியக் கிடக்கவாம்.

இவ்வுலகில் எல்லா உயிர்களும் இன்ப நுகர்ச்சி ஒன்றையே தத்தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. செல்வர் ஈருக வறியர் முதல் இடையருத இன்பம் துய்க்கவேண்டியே துடிக்கின்றனர்.

ஆனல் இவ்வின்பம் அனைவர்க்கும் கிட்டுகின்றதா ? அல்லது எளிதில்தான் வந்தடைகின்றதா? அநேகமாக இல்லை என்றே பகரலாம். எவ்வளவுக்கதிகமாக விரும்பில் பெற விழைகின்ருேமோ அவ்வளவுக்கு அதிக தூரத்தே செல்லுகின்ற வாறு போலும் !

இன்பத்தின் பெற்றியெல்லாம் அது எளிதில் துய்க்கப்பெருமையினல் அன்ருே என்று கூட எண்ணத் தோன்றுகிறது. இனி இன்பமாவதென்னை என்று ஆராய்வோம்?

இன்பமாவதென்னை ?

புலன்களின் மூலமாக நுகரப்படும் ஒரு சில உணர்ச்சிகளை இன்பமென்றும் இதந் தருவதென்றும் எண்ணும் எண்ணமேயாம். ஈண்டுத்துன்பமென்று கருதப்படுவதற்கும் இவ்வுணர்ச்சிகளே காரணமாகும். இன்பமென்று எண்ணும் உணர்ச்சிகளின் முடிவையே ஆனந்தமென்றும், துக்கமென்றும் கருதப்படும். உணர்ச்சிகளின் முடிவையே ஊறுபாடென்றும் இன்னலென்றும் எண்ணுகின்ருேம். ஆகவே இன்ப துன்ப உணர்ச்சிகளெல்லாம் மனிதனது எண்ணும் மனே நிலையைப் பொறுத்தது என்றே கூறிவிடலாம். மும்மலங்கள்களினுல், (ஆணவம், கண்யம், மாயை) பாதிக்கப்படாத எவரும் இன்ப துன்பங்களை ஒருங்கே எண்ணும் மனத்தான் பேரின்பமாகிய சலனமற்ற தன்மையை அடைகின்ருர்கள் என்பது சாலப் பொருந்துமன்ருே ?

எத்துணை இன்பங்கள் ?

உடலால் வரும் இன்பம்; மற்றவர்களால் போற்றப்படுதலின் வரும் இன்பம், எதிர்பாராத நிகழ்ச்சிகளின் வரும் இன்பம், குறிக்கோள் நிரம்பப் பெறுவதலால் வரும் இன்பம், பதவிகளினுல் வரும் இன்பம், செல்வ நிலைகளினுல் வரும் இன்பம், சுற்றுப்புறச் சூழ்நிலைகளினுல் வரும் இன்பம், இவ்வாறு எண்ணற்ற நிலைகளினுல் வரும் இன்பம் இவைகளின் நிமித்தமே பாரதியார் "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என்று கூறுகின்ருர். இதுவன்றி இயற்கையின் இன்பங்களை நுகர்ந்து அனுபவிப்பாருமுண்டு. உலகியற்கைப் பொருள்களிற் காணப்படும் பல திற அழகினை ஆழ்ந்து ஆராய்ந்து வரும் சான்ருேர்களுக்கும் மனித வாழ்க்கையில் மூலை முடுக்குகளில் ஒதுங்கி மறைந்து கிடக்கும் நுண் பொருள்களை நுனித்தறிய முயலும் அறிஞர்களுக்கும் சமயத் துறையிலும், தத்துவ நெறியிலும் உயர்ந்துயர்ந்து சென்று ஈடுபட்டுத் திளைக்கும் மெய்யுணர்வாளர்களுக்கும்

ஒழுக்கத் தூய்மையிலும், இறையருளுணர் விலும் சிறந்து அவற்றின் அமைதியின்ப நலத்தினையே விழைந்து நிற்கும் அருளா ளர்களுக்கும் நிலத்த அழகுடையதாய்த் திறம்பட நெஞ்சங்கவர்வதாய்த் திண்ணிய பயனுடையதாய்த் திகழ்வது சிறந்த தொரு கவிதையினைப் படித்துச் சுவைத்து மகிழ்வதும் ஒன்இன்பமே !

"அரிய நல் இயற்கை அழகினை ஆராய்ந்
தகங்களித்தின்புறுவோர்க்கும்
மருவுமிவ்வாழ்க்கை மறைபொருள் யாவும்
மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்
விரிவுறு சமய மெய்யுணர்வொளியில்
விரும்பி மேன்படர்பவர்க்கும்
திருவருள் ஒழுக்கம் செறிந்த
தூயவர்க்கும்
சிறந்தநற் கவிதையே இன்பமாம்."

என்று கூறுகின்றார்.

இன்பம் கிட்டாததேன் ?

மனம் ஒரு அமைதியில்லாத பறவை போலும் ? தேவைக்கு அதிகமாகக் கிடைக் கக் கிடைக்க அது இன்னும் மேலே மேலே சென்று கிட்டாததையே பெற முயல்கின்றது! கிட்டின இன்பத்தையெல் லாம் அம்மனம் இன்பமென்று எண்ணுவ தில்லை. அப்படியே எண்ணினாலும் அது சலிப்படைந்து விடுகின்றது சின்னாளில். ஆகவே மனம் எதையெல்லாம் இன்ப மென்று எண்ணுகின்றதோ அவையெல் லாம் கிட்டின பின்பும் கிட்டினவற்றில் பழகப் பழக வெறுப்பும், கிட்டாதனவற்றில் பற்றும் உண்டாகுமாறு வேட்கை அதி கரிக்கவே செய்கின்றது. கிட்டாதாயின் வெட்டென மற என்பது சொல்லளவேயாம்.

ஈண்டுக் கூறியவற்றான் சிற்றின்ப நிலை களை ஒருவாறு ஆராய்ந்தோம்.

இனி பேரின்ப நிலையாவதுஎன்னை?

சிற்றின்ப நிலையின் மேம்பட்டது பேரின்ப நிலை எனலாம். முக் குணங் களுக்கு மேற்பட்டதாய் இறைவனது அருளுக்குப் பாத்திரமாகி சதா ஆனந்த நிலையை இடையீடின்றி அனுபவிப்பதுவே பேரின்ப நிலை எனலாம். ஆகவேதான் இந் நிலையை எனக்கருள்வாய் என்று புனிதவதியார் ஆண்டவனை நேருக்கு நேர் தரிசித்தபோது வேண்டுகின்றார்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உம்மை
மறவாமை வேண்டும் இன்றும் வேண்டும்
நன் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போதுன் அடியின் கீழ்
இருக்கவென்றார்"

நிலையான இன்பம் அன்பு ஒன்றுதான் என்பது மேற்கூறிய அம்மையின் பாசுரத் தினால் விளங்கும். எல்லாம் வல்ல ஆண்டவன் ஒருவனை நாடுவதினால்தான் நிலையான இன்பம் துய்க்குமென்று அம்மை யார் உணர்ந்திருக்கின்றார். மற்றும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று செயலில் காட்டிய பெருமான் நாவுக்கரச ரும் நிலையான இன்பமும் மேலும் பெற வேண்டில் செய்யத்தக்கது யாது என்று கூறுகின்றார்.

"நிலை பெறுமாறு எண்ணுதிபோல்
நெஞ்சே நீவா!
நித்தனும் எம்பிரானுடைய கோயில்புக்கு
புலவர்தன்முன் அலகிட்டு மெழுக்கும்
இட்டு
பூமாலை புனைந்தேத்தி தலையாரக்கும்பிட்டுக்
கூடத்தும் ஆடி சங்கரா! சய போற்றி
போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை எம்ஆதி
என்றும் ஆரூரா என்றும்
அலறாநில்லே !

நிலையான இன்பம் பெற விழைகின்றமேற் கூறிய பெரியவர்கள் அந்த இன்பம் பெறு தற்கு உரிய வழிகளையும் கூறியுள்ளார்கள் அன்றோ! ஆகவே இதுகாறும் கூறி வந்த வற்றால் இன்ப நிலைகளையும் நிலைத்த இன் பங்களையும் ஒருவாறு தெரிந்தோம். இனி

(32-ம் பக்கம் பார்க்க)

பூங்கா!

உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு இவை மூன்றும் மாந்தர்க்கு இன்றியமையாத தேவைகள். உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் இம்மூன்று தேவைகளை முதலில் கவனித்த பிறகுதான் மற்ற திட்டங்களை தீட்டுகின்றன. முக்கியமாக அதிக மக்கள் தொகை உள்ள நாடுகளில் இந்தப் பிரச்சனைகள் தலைதூக்கி நிற்கின்றன.

மக்கள் நெருக்கடி உள்ள நம் நாட்டிலும் இந்தத் தேவைகளை பூர்த்திசெய்ய நம் சர்க்கார் முக்யத்துவம் கொடுத்துத்தான் வருகிறது. அநேக பெரும் நகரங்களும் சிறு பட்டணங்களும் ஆயிரக்கணக்கான சிற்றூர்களும் லக்ஷக்கணக்கான கிராமங்களும் உள்ள நம் நாட்டில் மக்கள் வசிக்க போதுமான வீடுகள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.

வசிக்க போதுமான இன்றியமையாத அளவில் சிறு வீடுகள் கட்டி வாழ வகை செய்யும் நோக்கத்தோடு 6-4-1964-ல் ஆரம்பிக்கப்பட்ட "பூங்கா" அண்டு கம்பெனி, தன் நோக்கத்தில் பெரும் வெற்றி கண்டு மக்களுக்கு ஆயிரக்கணக்கான வீட்டு மனைகளை கம்பெனி சிறு லாபத்தோடு கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் விற்பனை செய்துள்ளது.

திருவள்ளூரை அடுத்துள்ள காக்களூர் என்னும் ஊர் எல்லையில் மேடான செம்மண் நிலத்தில் சுமார் 800 வீட்டு மனைகளை முதன் முதலில் விற்பனை செய்தது. இந்த நகர்ப்புறத்திற்கு 'பூங்கா நகர்' என்று பெயரிடப்பட்டது. இந்த நகர்ப்புறம் திருவள்ளூர் நகரத்திற்கும் ரயில் நிலையத்திற்கும் அண்மையில், நல்ல குடி தண்ணீர், காற்றோட்டம், மின்சாரவசதி இவைகள் உள்ள வசிக்க உகந்ததோர் நிலப்பரப்பு.

அடுத்தாற்போல் தென்னாட்டில் உள்ள தொழிற்பேட்டைகளில் முக்கியமான ஆவடிக்கு அண்மையில் கோயில்பதாகை என்னும் ஊர் எல்லையில் டாங்க் தொழிற்சாலை ரேடியோ நிலையம், பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகள் முதலான எத்தனை எத்தனையோ தொழிற் கூடங்கள் உள்ள வட்டாரத்தில் "பூம்பொழில்" என்னும் நகர்ப்புறம் அமைக்கப்பட்டது. இதில் சுமார் 700 வீட்டு மனைகள் விற்பனை செய்யப்பட்டது.

சென்னை நகரத்திற்கு மேற்கில் நகர எல்லையின் ஓரமாக வில்லிவாக்கம் நகரத்திற்கு அடுத்தாற்போல் கொளத்தூர் என்னும் ஊர் எல்லையில் சுமார் 1000 மனைகள் கொண்ட நகர்ப்புறம் 'பூம்புகார்' என்றும் தமிழ்க் காவியப் பெயரில் உருவாக்கப்பட்டது.

சென்னை—அரக்கோணம் ரயில் மார்க்கத்தில் 36 மைல் தொலைவில் உள்ள சிவஸ்தலம் திருவாலங்காட்டிற்கு அண்மையில் அந்த ஊர் ரயில் நிலையத்தின் இரு பக்கங்களிலும் சுமார் 400 ஏக்கர் நிலப்பரப்பில் 2000 வீட்டுமனைகள் கொண்ட இரு நகர்ப்புறங்கள் உருவாக்கப்பட்டன. தென்திசையில் உள்ள நகர்ப்புறத்திற்கு 'பூமாலை' என்றும், வடதிசையிலுள்ள நகர்ப்புறத்திற்கு பூஞ்சோலை என்றும் பெயர் சூடப்பட்டது.

அடுத்து சென்னைக்கு வடக்கில் 12 மைல் தொலைவில் அநேக தொழிற்கூடங்கள் உருவாகும் எண்ணூர், திருவொற்றியூர் வட்டாரங்களுக்கு அடுத்தாற்போல் எண்ணெ சுத்திகரிப்பு நிலையத்திற்குப் பக்கத்தில் அத்திப்பட்டு என்னும் ஊர் எல்லையில் சுமார் 1500 மனைகள் கொண்ட 'பூங்கோவில்' நகர்ப்புறம் உருவாக்கப்பட்டது.

வீட்டு மனைகளை விற்பனை செய்வது மட்டுமல்ல, 'பூங்கா'வின் நோக்கம். இந்த மனைகளில் மக்கள் தங்கள் பண வசதிக்கேற்ப வீடுகள் அமைத்துக்கொண்டு சுகமாக வாழவேண்டும் என்ற எண்ணத்

தோடு, அந்தந்த மனைகளில் அவரவர் களுக்கு தேவையான அளவில் வீடுகள் கட்டிக் கொடுக்க "பூங்கா – கன்ஸ்ட்ரக் ஷன்ஸ்" என்னும் தனித்துறை ஒன்று ஆரம்பித்து இந்த நகர்ப்புறங்களில் வீடுகள் கட்ட ஏற்பாடு செய்துள்ளன. பூம்புகார்— வில்லிவாக்கத்தில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

குறைந்த செலவில் ரூபாய் 3000/–க்கும் குறைவான தொகையில் சிறு வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றை வகுத்து, தொகையை மாதத் தவணையில் செலுத்தும் அளவிலும் சலுகை தந்து திருவள்ளூரை அடுத்துள்ள பூங்கா நகரில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்த திட்டத்தில் பெரும் பாலானவர் சேர்ந்து பலன் அடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் பல நகர்ப்புறங்களை அமைத்து அவைகளில் பல வீடுகள் கட்டிக் கொடுத்து, வீட்டு வசதியில்லாமல் துன் புறும் பலரில் சிலருக்கு தொண்டு செய்ய இறைவன் அருள் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

K. P. அப்பாசாமி முதலியார்

பூரன உரிமையாளர்

பூங்கா கம்பெனி,

14, கொண்டி செட்டித் தெரு,

சென்னை 1.

*

இன்பம் எங்கே ?

(30ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிலைத்த இன்பம் பெறற்குரிய வழி களையும் பார்ப்போம்.

இன்பம் பெறும் வழிகள்

இன்பம் என்று காட்டி துன்பத்தில் செலுத்தும் இன்பங்களை எல்லாம் சிற்றின்ப மென்றும் ஆண்டவனைச் சார்ந்திருக்கும் இன்பங்களைப் பேரின்பமென்றும் பார்த் தோம். ஆகவே அவ்வின்பம் அடைய வழி அன்பினாலும், அருளினாலும், நல்ல ஆசா னினாலும் இடையறாத இறைவழிபாட்டினா லும், தவத்தினாலும். தியானத்தினாலும் தூயோரது நட்பினாலும் செம்மை யான மனத்தினரது கூட்டுறவாலும், ஏந்திய கொள்கையரது நற்போதத்தினாலும், திட சித்தத்தினாலும் முயன்று முயன்று பெறப் படுவதாகும். எளிதில் மேற்கூறிய வழி கள் கிட்டுவதாகாது. வைராக்கிய நெறி யானும் கொண்ட கொள்கையில் பற்று டைத்தன்மையேயே பெறப்படுவதாகும் நிலைத்த இன்பம்.

இந்த இன்பம் யாரிடம் இருக்கின்றது !


அமைதியுற்றோன் உள்ளத்திலே ! இவ் வின்பம் அமிழ்ந்து கிடப்பதாகும். நெஞ் சமே எந்நாளும் இன்பமே ! துன்பமறிய என்று அப்பர் பாடுகின்றார்.

இன்ப துன்பங்களினால் உலப்பப்படாத வனும் ஆழ்ந்த கடலிலும் அமைதியுடைய வனது உள்ளம் எந்நாளும் இன்பத்தையே நுகர்ந்திருப்பதாகும். அங்கே துன்பத்திற்கு இடமே இல்லை. அத்தகைய இன்பத்தை அடைய நீ முயலுவாயா ? முயன்று பார், முயற்சி திருவினையாக்கும்.

திருச்சிற்றம்பலம்.



சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. ஜஸ்டிஸ்,
சதாசிவம் அவர்கள், பி.ஏ., எம்.எல்.,



சைவப் பெரியார்
திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T.
(திருப்பணிக் கழகத் தலைவர்)

கோவில்களின் வளர்ச்சியும் ஆட்சியும்

டாக்டர். மா. இராசமாணிக்கனர், M.A., L.T., M.O.L., Ph.D.

கோவில்களின் வளர்ச்சி

கி. பி. 9 ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து ஆதித்தசோழனும் அவன் மரபினரும் பழைய செங்கற் கோவில்களைக் கற்றளிகளாக்க முற்பட்டனர். பாடல் பெற்ற கோவில்களிற் பல, பாறையே இல்லாத தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவை என்பது நினைவில் இருப்பின், அவற்றைக் கற்றளிகளாக்க அவர்கள் எவ்வளவு பாடுபட்டிருத்தல் வேண்டும் என்பது நன்கு புலனாகும். மலைகள் உள்ள மாவட்டங்களிலிருந்து பாறைகளை வெட்டிக் கொணர்ந்து பழைய கோவில்கள் அனைத்தையும் குறிப்பிட்ட காலத்திற்குள் கற்றளிகளாக்க முடியவில்லை; ஒவ்வொரு கோவிலின் எல்லாப் பகுதிகளையும் கற்களால் அமைப்பதாயின், கற்கள் மிகுதியாகச் செலவாகும். இவை அனைத்தையும் உளங்கொண்டே சோழரும் சிற்றரசரும் பிறரும் பழைய கோவிலின் கருவறையையும் விமானத்தையுமே முதலிற் கற்களால் அமைக்கத் தொடங்கினர். அவர்கள், பாடல்பெற்ற கோவில்களைக் கற்றளிகள் ஆக்குவதிலேயே பெருங்கவனத்தைச் செலுத்தினர். திருவிடைமருதூர், ஆமாத்தூர், செந்துறை, ஆவடுதுறை, விசயமங்கை, ஆலந்துறை, அரிசிற்கரைப்புத்தூர், மழபாடி, ஒற்றியூர், வைகாவூர், நீடூர், பழுவூர், பெருந்துறை, அறையணி நல்லூர், வக்கரை, திருப்பாலைவனம், மாகறல், வேள்விக்குடி[1] முதலிய பல கோவில்கள் இங்ஙனம் **கற்றளிகளாக** மாறின.

ஒவ்வொரு சிவன் கோவிலின் சொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அதிகாரி **சண்டேசுவரர்**. அவர் பெயராலேயே கோவில் வரவு-செலவுக் கணக்குகள் எழுதுவதும், விலை கொள்வதும், விற்பதும் நடைபெற்று வந்தன. ஆதலால் முதல் திருச்சுற்றில் அவருக்கு மட்டும் இறைவன் கருவறையை அடுத்துக் கோவில் கட்டுவது வழக்கம். அக்கோவிலும் சோழர் காலத்தில் கற்றளியாக்கப்பட்டது.[2]

ஒரு கோவில் கற்றளியாவதற்கு முன்பு அதன் அடிப்படைக் கற்களிலோ, மண்டபத் தூண்களிலோ, பிற இடங்களிலோ, **முற்பட்ட கல்வெட்டுக்கள்** இருக்குமாயின், அவற்றைப் படியெடுத்துக்கொண்டு, திருப்பணி முடிந்த பின்பு, புதிய கற்சுவர்களில் அவற்றைப் பொறித்து, முன்னோர் அறத்தைப் பாதுகாக்கும் முறை சோழர் காலத்தில் இருந்தது.[3]

சாதாரணமாக ஒவ்வொரு கோவிலும் **கருவறை, நடுமண்டபம்** இவற்றைப் பெற்றிருக்கும். பின்னர் **முகமண்டபம்** அமைந்தது. கோவிலைச் சுற்றிலும் முதல் திருச்சுற்றும் மதிலும் அமைந்தன.[4] முன்பு சொன்னபடி முதல் திருச்சுற்றில் சண்டீசர்க்குத் தனிக் கோவில் அமைந்தது. அத்திருச்சுற்றில் வலம் வரும் முறையில் தென்கிழக்கில் சூரியன், தென் மேற்கில் கணேசர், சப்தகன்னியர், மேற்கில் சுப்பிரமணியர், வடமேற்கில் ஜேஷ்டர், வடக்கே சண்டேசுவரர், வடகிழக்கில் சந்திரன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இத்திருச்சுற்றுக் கோவில்கள், சில கோவில்களில் தனித்தும், மதிலை ஒட்டி அமைந்த கட்டத்திற்குள்ளும் இருந்தன. மதிலில் ஒன்று முதல் நான்கு வாயில்கள் வரையில் கோவிலுக்கேற்றவாறு அமைந்தன. வாயில்மீது சிறிய கோபுரங்கள் அமைந்தன. இராஜராஜன், இராஜேந்திரன் காலம் வரையில் கருவறைக்குமேல் உள்ள விமானமே வானளாவக் கட்டப்பட்டது. ஆயின், பிற்காலங்களில் விமானம் தாழ்த்தப்பட்டுக் கோபுரங்கள் உயர்த்தப்பட்டன. கோவிலைச் சுற்றிலும் சில இடங்களில் கோவி

---

1 199 of 1907, 413 of 1903, 316 of 1903, 126, 143 1925, 165 of 1929, 358 of 1903, 282 of 1908, 92 of 1195, 126 of 1912, 51 of 1914, 534 of 1921, 393 of 1924, 134 of 1932, 387 of 1902, 200 of 1904, 313 of 1929, 224 of 1901, 139 of 1926.

2 658 of 1909.

3 199 of 1907, A.R.E. 1911, p. 72 ; 1913, p. 111 and 1922-23, p. 106.

4 357 of 1907 ; 314, 355 of 1908 ; 224 of 1901.

ஙுக்குள்ளும் நந்தவனங்கள் ஏற்பட்டன.[5] அவ்வாறே திருக்குளங்களும்[6], கவனிப்பு மிகுந்த கோவில்களில் இரண்டாம் திருச்சுற்றும் மூன்றும் திருச்சுற்றும் கட்டப்பட்டன.[7] அச்சுற்றுக்களில் அரசர் சிற்றரசர் முதலியோர் எடுப்பித்த சிறிய கோவில்கள் நாளடைவில் இடம் பெற்றன.[8] திருவிரட்டான முடையார் கோவிலுள் காலகாலதேவர், கூத்தாடுந்தேவர், குலோத்துங்க சோழீச்சுரமுடையார், விக்கிரம சோழீச்சுரமுடையார் கோவில்கள் இருந்தன என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது.[9]

பல்லவர் காலத்தும் முற்காலச் சோழர் காலத்தும் அம்மனுக்குச் சிவன் கோவிலில் தனிக்கோவில் ஏற்படவில்லை; அம்மன் இறைவன் சந்நிதியிலே **'போக சக்தி அம்மன்'** எனத் தனி இடம் பெற்றிருந்தாள், இராசராசன் இப் போக சக்தி அம்மனை 'உமாபரமேசுவரி' என்று குறிப்பிட்டான். கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் முதல் இராசேந்திரனது எண்ணாயிரம் கல்வெட்டே முதல் முதலாக அம்மன் தனிக்கோவிலைப் பற்றித் திருச்சுற்றுலையில் உள்ள பரிவார ஆலயங்களைப் பற்றிக் கூறுமிடத்துக் குறிக்கிறது. அதன் பின்பே **அம்மனுக்குத் தனிக்கோவில்கள்** எடுக்கப்பட்டன.[10] சோழர் ஆட்சி முடியப் பல கோவில்களில் அம்மன் கோவில்கள் புதியனவாக ஏற்பட்டன என்பதைப் பல கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.[11]

கோவில்கள் செல்வாக்கிற் பெருகப் பெருக, அவற்றுள் **பல மண்டபங்கள்** ஏற்பட்டன. செங்காட்டங்குடியில் சிறுத்தொண்ட நம்பி மண்டபம்,[12] திருவொற்றியூரில் இருந்த வக்காணிக்கும் மண்டபம் 'மண்ணைக்கொண்ட சோழன்,' 'இராஜராஜன்,' 'இராசேந்திரன்' என்ற பெயர்களைக் கொண்ட மண்டபங்கள், வியாகர்ணதான வியாக்யான மண்டபம்[13] என்பன குறிக்கத் தக்கன. பின்னது இலக்கணம் கற்பிக்க ஏற்பட்ட மண்டபமாகும். நடன மண்டபம்,[14] நாடக மண்டபம்,[15] திருப்பதியம் பாடவும் எழுதவும் பயன்பட்ட திருக்கைக்கோட்டி மண்டபம்[16] நூற்றுக்கால்மண்டபம்,[17] யாகசாலை[18] என்பனவும் குறிக்கத்தக்கன. சாதாரண மண்டபங்களைப் பெற்ற கோவில்களும் பல.[19] திருவக்கரையில் **ஆயிரக்கால் மண்படம்** இருந்தது.[20] இம்மண்டபங்களைக் குறைவின்றிக் கட்டி முடிக்க, அவசியம் நேருமாயின், தம் தலையை அறுத்துப் பலியிடவும் மக்கள் தயாராயிருந்தனர் என்பது தெரிகிறது.[21] சில கோவில்களில் மாளிகைகள் இருந்தன.[22] நீடூர்க் கோவிலில் இருந்த மாளிகை **'புராணநூல் விரிக்கும்** புரிசைமாளிகை'[23] எனப் பெயர் பெற்றது. 'திரு **மாளிகைத் தேவர்,' மாளிகை** மடத்து முதலியார்' என்னும் பெயர்களைக் காண, இம்மாளிகைகள் சைவ சமயப் பெரியோர்கள் தங்கியிருக்கவும் மக்கட்குச் சமயபோதனை வழங்கவும் பயன்பட்டவை

---

5 222 of 1911 ; 149 of 1928 ; 144 of 1937 ; 216, 260 of 1907 ; 94, 135 of 1925 ; 319 of 1903 ; 218 of 1926; 69 of 1897; 249 of 1907; 49 of 1890; 120 of 1926; 18 of 1922; 155 of 1912, 45 of 1925 etc.

6 475 of 1912; 393 of 1925.

7 516 of 1920; 72 of 1913.

8 தமிழ்ப் பொழில் தொகுதி 23, பக். 155; 325 of 1902; 200 of 1904; A.R.E. 1913, p. 86.

9 40 of 1906.

10 சோழர் கோயிற் பணிகள், பக். 13-14.

11 429 of 1912; 701 of 1909; 226 of 1901; 28 of 1914; 400 of 1913; 182 of 1926; 504 of 1912; 184 of 1928; 351 of 1911.

12 57 of 1913.

13 A.R.E. 1913, p. 86.

14 152 of 1925; 154 of 1895.

15 199 of 1907; 157 of 1905; 398 of 1921; 152 of 1925; 253, 254 of 1914.

16 203 of 1908; 414, 454 of 1909; 10 and 381 of 1918; 350 of 1929.

17 S.I.I. IV 225; 369 of 1921.

18 369 of 1921.

19 400 of 1939; 254 of 1922; 119 of 1906; 429 of 1922; 645 of 1902.

20 190 of 1904. 21 119 of 1906. 22 429 of 1922; 535 of 1921. 23 535 of 1921.

எனக் கருதுதல் பொருத்தமாகும். பல பெரிய கோவில்களில மடங்கள் இருந்தன. அவற்றில் சைவ சாத்திரங்களில் வல்ல துறவி களும் சாத்திர மாணவர்களும் இருந்தனர். கோவில்களில் **'சரசுவதி பண்டாரம்'**[24] என்ற நூல் நிலையம் இருந்தது என்பதும் தெரிகிறது.

பல்லவர் காலத்தில் செங்கற் கோவில் களாகவும் சிறிய உருவினவாகவும் இருந்த பல கோவில்கள், சோழர் காலத்தில் இங்ஙனம் கற்றளிகளாகவும் பெரிய உருவினவாகவும் மாறியதற்குச் சோழர்காலச் சைவசமய வளர்ச் சியே காரணமாகும். அவற்றைக் கற்றளி களாக மாற்றிய கல்தச்சர்களின் பக்தியும் தொழில் திறமையும் பாராட்டத்தக்கன அல்லவா? சோழர்கள் அத் தச்சர்களைப் பாராட் டினர்; நிலங்களை மானியமாக வழங்கினர்.[25] திருவாவடுதுறைக் கோவிலைக் கட்டிய **கற்றளிப் பிச்சன்** உருவம் அக்கோவிலில் இன்றும் இருக்கக் காணலாம்.[26]

கோவில்களின் ஆட்சி

அரசர் முதல் சாதாரண குடிமகன் ஈறாக அனைவருமே கோவிலைத் தம் உயிராகக் கருதி, அதில் திருநந்தா விளக்கு முதலிய விளக்குகளை எரிக்கவும் பூசை செய்யவும், விழாச் செய்யவும் மிகுதியான நிலங்களையும் தோட்டங்களையும் பொன்னையும் நகைகளையும் பொன்–வெள்ளிப் பாத்திரங்களையும் பூசை முதலியவற்றுக்குரிய செப்பு முதலிய உலோகப் பாத்திரங்களையும் கால் நடைகளையும் பிறவற்றையும் மிகுதியாக வழங்கினர். இவற்றைக் கவனித்துப் பாதுகாக் கவும், நிலங்கள் முதலியவற்றைக் குத்தகைக்கு விட்டு வசூலிக்கவும், கோவில் பரிவாரத்தார் அனைவர் வேலைகளையும் மேற்பார்க்கவும் உயர் அலுவலர் இருக்கவேண்டும் அல்லவா?

செய்யூர் பெரியபாளையம், அகத்தியான் பள்ளிக்கோவில் போன்ற சிறிய கோவில்கள் அர்ச்சகர் பொறுப்பிலேயே விடப்பட்டிருந் தன.[27] **மாகேசுவரர்** என்ற சைவத் துறவிகள் ஆட்சியில் சில கோவில்கள் இருந்தன.[28] திருக்களர் கோவில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் **ஆண்டார்கள்** ஆட்சியில் இருந்தது. மூன்றாம் இராஜராஜன் காலத்தில் மாகேசுவரர் ஆட்சிக்கு மாற்றப்பட்டது.[29] சில கோவில் கள், கோவிலைச் சார்ந்த **மடத்துத் தலைவர்கள்** ஆட்சியில் இருந்தன.[30] சில கோவில்கள், **ஊரவையார்** மேற்பார்வையில் இருந்தன.[31] நடுத்தர வருவாயுள்ள பெரிய கோவில் கோவி லுக்கென்றே தனி ஆட்சிக் குழு இருந்தது. அக்குழுவினர் 'ஸ்ரீகாரியம் செய்வர்,' 'கோவில் கணப்பெருமக்கள்; 'பாத மூலத்தார்''[32] எனப் பலவாறு பெயர் பெற்றிருந்தனர். அக்குழு வினருள் ஊரவையார், மாகேசுவரர், மடம் (இருப்பின் அதன்) தலைவர் என்பவர் இடம் பெற்றிருந்தனர்.[33] சில கோவில்களின் ஆட்சி ஊரவையார், கோவில் ஆட்சிக் குழுவினர், உருத்ரமாகேசுவரர் ஆகிய மூவரிடமும் இருந்தது.[34] சில பெரிய கோவில்கள் தனிப் பட்ட அதிகாரிகள் மேற்பார்வையில் இருந்தன. அவர்கள் ஊரவையார்க்குக் கட்டுப்பட்டிருந் தனர்.[35] வேறு சில பெரிய கோவில்களில் இருந்த அதிகாரிகள் கோவில் ஆட்சிக் குழு வினர், ஊரவையார் இவருடன் சேர்ந்து கோவில் காரியங்களைக் கவனித்தனர்.[36] கோ வில் ஆட்சி ஒரு குழுவினரிடம் அல்லது ஊர வையாரிடம் இருந்தாற் போலவே கோவிலி லுள்ள நடுக்கோவில் (சிறப்புடைக் கோவில்) ஒரு குழுவினர் ஆட்சியில் இருத்தலும் உண்டு. அக் குழுவினர் கோவிற் பணத்திலிருந்து கடன் தருவர்; கடன் பெறுவர்; கோவிற் பணிகளைக் கவனிப்பர்.[37] கோவிலைப் பற்றிய மிக முக்கிய மான செய்திகள் அரசன் பார்வைக்குக் கொண்டு செல்லப்படுதலும் உண்டு.[38] கோவி லில் இருந்த பொக்கிஷசாலை 'ஸ்ரீ பண்டாரம்' எனப்பட்டது. அதுபற்றிய கணக்குப் புத்தகம்

---

24 277 of 1913; திருமுக்கூடல், எண்ணாயிரம், திரிபுவனை, திருவொற்றியூர், வேம்பற்றூர், திரு ஆவடு துறை, ஆகிய இடங்களில் கல்லூரிகள் இருந்தமையால் அங்குப் பலவகை சாத்திர நூல்களைக் கொண்ட நூல் நிலையங்கள் இருந்திருக்கலாம.

25 357 of 1904; 70 of 1913; 403 of 1908; S.I.I. II 66.

26 132 of 1925.

27 449 of 1902; 309 of 1908; 505 of 1904.

28 486 of 1922.

29 S.I.I. III 260.

30 101, 121 of 1925.

31 362 of 1917; 160 of 1929; 332 of 1910.

32 S.I.I. VI 323; 206 of 1915; S.I.I. V 686.

33 47 of 1910; 100 of 1906.

34 152, 210 of 1929.

35 160 of 1929; 605 of 1920; 210 of 1921; 21 of 1922; 271 of 1927.

36 152, 154 of 1895.

37 A.R.E. 1922, p. 117.

38 201, 206 of 1919.

ஸ்ரீ பண்டாரப் பொத்தகம்' எனப்பட்டது.[39] அப்பண்டார அதிகாரிகள் 'சிவ பண்டாரிகள்' எனப்பட்டனர்.[40] நடுக்கோவில் ஆட்சி போலவே முழுக்கோவில் ஆட்சி நடத்துவோரும் இருந்தனர். அவர்கள் கோவில் நிலங்களை விற்கவும் நிலங்களை வாங்கவும் உரிமை பெற்றிருந்தனர்.[41] கோவிலுக்கு அவரவர் செய்த தானப் பத்திரங்கள் (மூல ஓலைகள்) சிவ பண்டாரத்தில் வைத்துப் பாது காக்கப்பட்டன. அதே சமயத்தில் அவை கோவிற் சுவரிலும் வெட்டுவிக்கப்பட்டன.[42] கோவிலைச் சேர்ந்த தேவரடியார் முதலிய மக்கட்கும், பசுக்கள் முதலிய கால்நடைகட்கும் சூலப் பொறி பொறிக்கப்பட்டிருந்தது.[43]

எல்லாக் கோவில்களின் வரவு-செலவுக் கணக்குகளும் அரசாங்க அதிகாரிகளால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டன. மதுராந்தகன் கண்டராதித்தன், காழி ஆதித்தன், அருமொழி மூவேந்த வேளார் முதலிய அரசாங்க அலுவலர் பலருடைய பெயர்கள் கல்வெட்டுக்களிற் காண்கின்றன.[44] இந்த அதிகாரிகள் கோவில் கணப்பெருமக்கள், ஊரவையார் என்பவர் முன்னிலையில் கோவில் நகைகளைக் கணக்கிட்டு, மதிப்பிட்டுக் குறித்துக் கொண்டனர்.[45] கோவில் கணக்குகளைப் பார்வையிட்டனர். கோவில் பணத்தைக் கையாண்டவர், சொன்னபடி கோவிலுக்கு நெல் முதலியவற்றைக் கொடுக்கத் தவறிய குத்தகையாளர், இவர்தம் நிலங்களையோ வீடுகளையோ பறிமுதல் செய்தனர். குற்றவாளிகள் 'சிவத் துரோகிகள்,' 'ஊர்த் துரோகிகள்' என்று ஏசப்பட்டனர்.[46]

எளிய கோவில்கள் கவனிக்கப்பட்ட முறை

திருக்கண்ணபுரத்து இராமநதீச்சுரம் என்னும் சிவன் கோவில் கருங்கல் திருப்பணியற்றது. அது, முதற்குலோத்துங்கன் காலத்திலும் செங்கற்களாலேயே புதுப்பிக்கப்பட்டது. அதனால் அதற்குரிய பத்திரங்கள் திருச்செங்காட்டங்குடிக் கோவிற் சுவரில் வெட்டப்பட்டன.[47] பின்பு பூசை முதலியன நடைபெற இரண்டாம் குலோத்துங்கன் நிலமளித்தான்.[48] பின்னர் மூன்றும் இராசராசன் காலத்தில் கோவில் பூசைக்கு முட்டுப்பாடு ஏற்பட்டதால், கோவில் மாகேசுவரரும் தானத்தாரும் சிதம்பரம் கோவில் ஆட்சியாளரை (மாகேசுவரரைச்) சந்தித்து உதவி கேட்டனர். அவர்கள் அவையைக் கூட்டி, சேர, சோழ, பாண்டிய, சயங்கொண்ட சோழமண்டலங்களில் உள்ள குறிப்பிட்ட கோவிற் பணியாட்கள், முன்போலவே ஆளுக்கு ஆண்டுக்கு 20 காசு விதம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தனர், சூலப் பொறி பொறிக்கப் பெற்றவரும் 20 காசு ஆண்டுக்குச் செலுத்த வேண்டும்; பிற சிற்றூர்களில் உள்ள மாகேசுவரரும் பிராமணரும் (பொதுவாக) பத்துக் காசு செலுத்த வேண்டும். இங்ஙனம் செலுத்தப் பெறும் பணம் கொண்டு கோவிலைப் பழுது பார்க்கக் கடவர் என்று முடிவு செய்தனர்.[49]

இத்தீர்மானத்திலிருந்து நாம் அறியத்தகுவன இரண்டு: (1) எளிய கோவில்கள் பொருள் உதவி பெற்ற முறை, (2) தில்லை மாகேசுவரர்க்கு அக்காலத் தமிழகக் கோவில்களில் இருந்த செல்வாக்கு.[50]

முன் சொன்ன திட்டமான கோவில் ஆட்சி[51] யில் பொதுமக்கட்கு நம்பிக்கை ஏற்பட ஏற்பட, அவர்கள் கோவில்கட்கு மிகுதியாக நிபந்தங்கள் விடுத்தனர். கோவில்கள் செல்வ வளத்திற் பெருகின. பக்தர்களின் அறங்கள் குறைவின்றி நடந்தன. கோவில் பரிவாரத்தார் தந்தம் கடமையான தொழில்களைச் செவ்வனே செய்தனர். கோவில்களில் சமயத் தொடர்பான ஆடல்-பாடல்-நாடகம், திருமுறை முதலியன ஓதல், சமயச் சொற்பொழிவு செய்தல் என்பன காலந்தவறாது நடை பெற்றன.

---

39 327 of 1921. 40 S.I.I. I 46. 41 A.R.E. 1922, p. 117. 42 299, 326, of 1913.

43 543 of 1921; 537 of 1922. 44 282 of 1906; 109 of 1914; 28 of 1891; 240 of 1931.

45 210 of 1929; S.I.I. III 211. 46 189 of 1929; 57 of 1914.

47 65 of 1918; A.R.E.1913, p. 111. 48 533 of 1922. 49 537 of 1922; A.R.E.1923, p. 107.

50 கோச்சோழன் காலமுதல், தில்லை சைவ சமயத்தின் உயிர் நாடித்தலமாக வளர்ந்து வந்தது என்பது அறியத்தகும். தில்லைக் கோவிலில் மட்டும் திருமுறை'ள் அடக்கம் செய்யப்பட்டதிலிருந்து அஃது ஏனைய கோவில்கட்கு நடுநாயகமானது என்பதை நன்கறியலாம். எல்லாக் கோவில் கடவுளரும் நடுயாமப் பூசையின்போது தில்லையில் ஒடுக்கமாகின்றனர். ஆதலின் எல்லாக் கோவில்களிலும் இரவு பத்து மணிக்குள் நடுயாமப் பூசை முடித்துவிட வேண்டும் என்பதும், சரியாகப் பத்து மணிக்கே தில்லையில் அர்த்தயாமப் பூசை தொடக்கப் பெறுதலும் தில்லையின் முதன்மையை வலியுறுத்தும் சான்றுகளாகும். தமிழகத்துச் செங்குந்தருள் — அவர்கள் எங்கு இருப்பினும் - பந்தியில் தாம்பூலம் தரும்பொழுது, சிதம்பரத்தைச் சேர்ந்தவருக்கு முதல் தாம்பூலம் கொடுக்கும் வழக்கமும் இன்ன பிறவும் இங்கு நினைவுகூர்தற்குரியன.

51 Vide A.R.E. 1918, p. 145; A.R.E. 1922, pp. 116-7 for more information on Temple—Administration.

காரைக்காலம்மையார்

முத்தமிழ் ஆசிரியர் : பண்டித திரு வி. நடேசனர், B.A.

தங்கு புகழ்க் காரைக் கால்
வணிகன் மிக்க தனதத்தன்
தரும் புனித வதியார் மாவின்
செங்கனிகள் திருவருளால்
அழைப்பக் கண்டு திகழ்
கண்வன் அதிசயித்துத் தேச நீங்க
அங்க உடல் இழந்து முடிநடையால்ஏறி
''அம்மையே'' என நாதன்,
''அப்பா'' என்று,
பொங்கு வடகயிலை பணிந்து, ஆலங்காட்டில்
புனிதநடம் அனவரதம் போற்றினரே

—உமாபதி சிவ சாரியார்

திருவும் கலையும் திகழுங் காரைக்காற் பட்டினத்தில் சொல்லிலும் லாபங்காணும் பெரு வணிகர் குடியில் தனதத்த செட்டியார் செய் தவப் பயனல் பேரழகு மிக்க புனிதவதியார் பிறந்தார். வணிகர் பெருங்குலவிளக்காம் அம்மையைச் சிறு காலையே ஆட்கொண்டார் சிவனர் ; பெரு மனக்காதல் ததும்ப வருமொழி பயின்றார்; விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்து எழுவதென வளர்ந்தார். இல்லிகவாப்பருவமுமுற்றார். திருமணம் பேசத் தொடங்கினர் பெற்றார்.

வங்கமலிகடற் காரைக்காலருகுள்ள நீடு சீர் சுடல் நாகப்பட்டினத்தில் வாழ் நீதிபதிமகனும் பரமதத்தனுக்குச் சேயிழையை மகட்பேசி முடித்தனர் மூதறிஞர். இரு பெருவாணிக மக்களும் வதுவை வினைத் தொழில் பூண்டார்; மணவோலை செலவிட்டார். நல்லோரையில் மணமகனை முரசார்ப்பக் காரைக்காற்பதி புகுவித்தார் செட்டிமார்.

தளிரடி மென்னகை மயிலைத் தாது
அவிழ்த்தார்க் காளைக்குக்
களிமகிழ் சுற்றம் போற்றக்
கலியாணம் செய்தார்கள்.

ஒரு குலத்திற்கு ஒரு பெண்ணுகையால் புனிதவதியாரையும் பரமதத்தனையும் நாகைப் பட்டினம் போய் குடித்தனம் செய்யாமல் காரைக்காலிலே இல்லறம் நடத்த ஏற்பாடு செய்தான் தனதத்தன். இல்வாழ்க்கை அருந் துணையானர் பூங்குழலார்; பெருவிடையார் திருவடிக்குப் பெருங்காதலுற்றார் புனிதவதியார்; மனையறத்தின் பண்பு வழாமையிற் பயின்றார்; பசிப்பிணிக்கு மருத்துவருமானர் அம்மையார்.

நடமாடும் சிவனுகவுள்ள சிவனடியார்களுக்கு நல்ல திருவமுதும் செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் பரிவோடு வேண்டுவகொடுத்து தவி வாழ்ந்தார். மக்கட்சேவை மாதேவன் பூசை அல்லவா? கலைபயிலாக் காளையாம் பரமதத்தன் கடையிலிருக்குங்கால் வந்தணைந்தோர் ஓரிரண்டு மாங்கனிகள் கொடுத்தனர். 'இவற்றை இல்லத்துக் கொடுக்க' என இயம்பினன். கணவன்தான் வரவிடுத்த கனியிரண்டும் கைக்கொண்டு வைத்தார் அம்மையார்.

சிவனடியார் ஒருவர் உணர்வின் மிகு வேட்கையினல் புனிதவதியார் மனையுட் புகுந்தார். மெய்த்தொண்டர் நிலைகண்டு, 'அடியாரைப் பசி தீர்ப்பேன்' என்றார் செட்டியாரம்மா. விடையவன் தன் அடியாரே பெறலரிய விருந்தானல் பேறிதன் மேல் இல்லை அல்லவா? கறியமுது யாதும் இல்லாமல் திருவமுது கைகூட தம்மிடமுள்ள மாங்கனிகளில் ஒன்றைப் படைத்து, அல்லல் தீர்ப்பவரடியாரை அமுது செய்வித்தார். சிவனடியாரும் பூங்குழல் மடவார் செயல் உவந்து சென்றார்.

போயின பின்னர் பரமதத்தன் பகலுணை விரும்பி தன் இல்லம் போந்தான், நீராடினன்; அடிசில் அயில அமர்ந்தான். கற்புடைய மடவாரும் கடப்பாட்டில் ஊட்டலானர். மாங்கனி ஒன்றினைக் கொண்டுவந்து கலத்திலளித்தார் புனிதவதியார் மனைவியார் படைத்த மாம்பழம் மிக மதுரமாயிருந்ததால் வணிகன் மற்றக் கனியையும் தனக்கே படைக்க மொழிந்தான். அனையது தாம் கொண்டுவர அணைவார் போல் அங்கு அகன்றார். நினைந்துஉற்றஇடத்து உதவும் விடையவர் தாளைத் தம் மனத்தே உணர்ந்தார் அம்மையார். அவனருளால் அதி மதுரக்கனி ஒன்று அம்மையார் அருங்கரத்தில் வந்து இருந்தது. உடல் பூரிக்க உண்டவணிகன் உளம் பூரிக்க நின்ற மனையாரை நோக்கி

மூவுலகினும் பெறற்கரியது போன்றுள்ள பெறவருங்கனி பெற்றவாறு புகல் எனக் கேட்டான் காளையனைய கணவன். செய்தபடி சொல்லுவதே செந்நெறியும் கடனுமாகும் என்று புகுந்தபடி புகன்றார். 'ஈசனருளால் இனிய கனி வந்தது' என்று கேட்ட இல்லி றைவன், "இன்னமும் ஓர் ஆசில் கனி அவனரு ளால் அழைத்து அளிப்பாய்" என மொழிந் தான்.

அவனருளால் அருங்கனி ஒன்று பெற்று, அவன் கைக் கொடுத்தார் அம்மையார். ஏறனை யான் அதிசயித்தான். வாங்கினான், பின்னர் காணான். பயந்து மனம் மாற்றங் கொண்டான். அணிகுழலாரை அணங்கெனக் கருதினான். தொடர்பு அற்று வாழ்ந்தான்; இல்லிகவவும் துணிந்தான். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதைத் துணையாய்க் கொண்டு வணிகன் வங்கமேற் சென்று வாணிபம் செய்து நெடுநிதி கொணர்வதாகக் கூறித் தன் வீட்டை விட்டான். கன்னி நாட்டோர் பட்டின மருங்கு சேர்ந்தான். அப்பதியில் அளவற்ற செல் வந்தனாய் வாழ்ந்தான். அவ்வூரில் யாவரும் விரும்ப .செட்டிக்குலச் செல்வியை வதுவை செய்தான். ஓராண்டு முடிந்ததும் ஓர் பெண் மகவும் பெற்றான். தான் முன்பு உடனுறைதல் அஞ்சி நீத்த புனிதவதியாரைத் தொடர்வற நினைந்து, தெய்வத் தொழுகுலம் என்றே கொண்டு அவர்தம் பெயரைத் தன் பெண் மகவுக் கிட்டான்.

இன்னிலை இவன் இங்கு எய்தி இருந்தாலும் தனதத்தன் மகளார் மன்னிய கற்பினோடு மனையறம் புரிந்து வசித்தார். பாண்டி நாட்டில் பரமதத்தன் செல்வத்தில் சீமானாய்ச் சீரும் சிறப்புமுடன் வாழ்வதைக் கேட்டுத் தெரிந் தனர் வணிக மாக்கள்: மம்மர் கொள் மனத்த ராகி, "மற்றவன் இருந்த பாங்கர்க் கொம்மை வெம் முலையினாளைக் கொண்டுபோய் விடுவது" என்றார். மயிலன்னாரை மாமணிச் சிவிகை ஏற்றிப் பரமதத்தன் வாழும் மாநகர் மருங்கு வந்தார். விலாசம் கேட்டறிந்து அம்மையார் வரவினை உணர்த்தினர். அச்சமெய்திய பரமதத் தன் செழுமணம் பின்பு செய்த செல்வியையும் மகவையும் கைக்கொண்டு முந்துறச்சென்றான். மானிளம் பிணைபோல் நின்ற மனைவியார் அடியில் தாழ்ந்தான்.

கணவன் தான் வணங்கக் கண்ட புனிதவதி யார் சுற்றத்தார் பால் ஒதுங்கி நின்றார். "பரமதத்தனே! உன் மனைவியை வணங்குவது என்கொல்" என்றார் கிளைஞர். "மானிடம் இவர் தாம் அல்லர்: நற்பெருந் தெய்வமாதல் அறிந்தேன் : அகன்றேன் ; பின்பு நான் பெற்ற இம்மகவுக்கும் அவர் பெயரே சூட்டினேன்; ஆதலால் பொற்பதம் பணிந்தேன்; நீரும் போற்றுதல் செய்மின்" என்று பதிலளித்தான் பண்பில் செட்டி.

என்றபின் சுற்றத்தாரும் •இது என் கொல் என்று நின்றார். மன்றலங்குழலினாரும் வணி கனது மாற்றங் கேட்டு மெய்ம்மறந்தார்; மன்று ளாரடியே மனத்திற் கொண்டார். மணவாளன் குறிப்பறிந்த புனிதவதியார் "இனி இவருக் காகத் தாங்கிய அழகிய என்னுடலின் தசை யைக் கழிப்பேன்: புருஷனுக்குதவா தசைப் பொதி எற்றுக்கு" என்று எண்ணி "பேய்வடிவு அடியேனுக்கு நல்குக" என்று பரமனைப் பரவினர். மன்றுளாடுவார் அருளினாலே மேனியின் வனப்பை எல்லாம் உதறி, எலும்பு டலேயாகி, வானமும் மண்ணும் வணங்கும் பேய்வடிவமானார். தொலைவில் பல் சுற்றத் தாரும் தொழுது, அஞ்சி, அகன்று போனார். "சிவகணத்துள் ஒன்றாயினேன்" என்று எழிலாய்க் கூறி 'அற்புதத் திருவந்தாதி, திரு வாய்மலர்ந்தார். முக்கண்பெருமான் எழுந்தரு ளியுள்ள வெள்ளி மால் கைலை வரையை நண்ண நாடினர். வடதிசைத் தேயமெல்லாம் மனத்தினுங் கடிதிற் சென்றார். கைலையை அடைந்து, காலால் நடத்தல் விட்டு, மலைமேல் தலையால் நடந்து சென்றார். பார்வதியும் பரம சிவனும் பார்த்தனர். "எற்பின்யாக்கை அன்பு என்னே" என்று கூறிய நாயகிக்கு "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்; உமையே! இப்பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள் இவள் காண்," என்றான் நம்பன்.

பின்பு அருகு வந்தனைய நோக்கி "அம்மையே வருக" என்று செம்மொழி உலகெலாம் உய்யவே அருளிச் செய்தார். அருள் செயும வனை "அப்பா" என்று கூறி மேலும் அரு கணைந்தார். இறைவன் 'இனி நம்மால் வேண்டு வதென்னே' என்று கேட்டார்.


"இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி,
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழ்இருக்க"

என்றார் காரைக்காலம்மையார்.

"கூறுமாறருள் கொடுத்துக் குலவு
தென் திசையில் என்றும்
நீடுவாழ் பழனமூதூர் நிலவிய ஆலங்காட்டில்
ஆடுமா நடமும் நீ கண்டானந்தஞ்
சேர்ந் தெப்போதும்
பாடுவாய் நம்மை" என்றான் பரவுவார்
பற்றாய் நின்றான்"


வேத மெய்ப்பொருளானார் தம்மை விடை கொண்டு வணங்கிப் போந்து, அன்பும் மனமும் முன் சொல்ல அம்மையார் அணி திருவாலங் காடாம் நற்பதியைத் தலையாலே நடந்து, அடைந்தார். ஆலங்காட்டப்பர் அண்டமுற நிமிர்ந்தாடுங் கோலங் கொண்டு "கொங்கைத் திரங்கி" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி யருளினார்.


ஆதியோடு அந்தம் இல்லா
அருள் நடனம் ஆடும்
போது கீத முன் பாடும் அம்மை கிளர்
ஒளி மலர்த்தாள் போற்றி.



திருவாலங்காடு
ஸ்ரீ நடராஜர் சன்னிதி
கோபுரம்.

திருவாலங்காட்டிலுள்ள
முத்தி தீர்த்தம் உலகி
லுள்ள புண்ணிய தீர்த்
தங்களில் தலைசிறந்தது.





எழுபது வேளாளர் மணிமண்டபமும், அடியார் திருக்கூட்டமும்.

பிறவி வேண்டும்

வித்துவான் கா. வா. சச்சிதானந்தம்

காணப்படும் உலகம் பொய்; உலகத்துப் பொருள்களும் அழிவன ஆதலின் பொய்; அப்பொருள்களால அனுபவிக்கும் இன்பமும் பொய்யாம். ஆகவே அழியாப் பொருளாகிய மெய்ப்பொருளை அனுபவிக்கும் இன்பமே மெய். பொய்யின்பம் அனுபவிக்கும் இந்த உடம்பைக் கொண்டு அம்மெய்யின்பத்தை அடைய முடியாது. இந்த உடம்பும் அழியக் கூடியதே, இந்த உடம்பை யெடுக்கும் பிறவியும் தேவையில்லாததாகும். அதனுல் மெய்யின்பம் அடைய நினைப்பவர்க்கு இந்தப் பிறவி வேண்டுவதில்லை. இப்பிறவியை விட்டால்தான் அந்த இன்பத்தை அடையலாம். அதனுல் தான் காரைக்காலம்மையார் முதலோர் இறைவனிடத்தில் "பிறவாமை வேண்டும்" என்று வேண்டினுர்.

முன்பு முதலில் உற்ற பிறப்புக்குக் காரணம் ஆணவச் சார்பும் அதன் விளைவாய புகழவாவும் பொருளவாவும் அவற்றின் காரியமான கான்மியமும் ஆம். எடுத்த பிறவியில் செய்யும் வினைகளுக் கேற்பவே அடுத்த பிறப்பு வருகிறது. ஆதலின் வினை செய்யாதவர்கள் தாம் பிறக்க மாட்டார்கள். வினை செய்பவர்கள் பிறந்தே ஆகவேண்டும். நாம் மீண்டும் பிறக்கத்தான் நேருமோ என்ற சந்தேகம் காரைக்காலம்மையாருக்கு வந்தது. அதனுல் இறைவனைப் பார்த்து "இறைவனே நான் பிறந்துதான் ஆகவேண்டுமென்ருல் உன்னை மறவாமை வேண்டும்" என்று வேண்டினுர். எனவே காரைக்காலம்மையாருக்கு இறைவனை மறவாதிருந்தால் பிறவி இருக்கலாம் என்பது கருத்து.

அப்பரடிகளும் பிறவாமையை வேண்டும் எனக் கருதினுர்கள். அவர்கட்கும் பிறவி வேண்டுவதில்லை என்பதே எண்ணமானுலும் இப்படியிருக்கும் வாய்ப்பைப் பெற்ருல் பிறவி வேண்டுவதே என்ருர்கள். சிவபிரானுடைய குனித்த புருவமும், செவ்வாயும் அதன்சிரிப்பும் சடைமுடியும் பவளம் போல் விளங்கும் செம் மேனியில் பால் போலும் வெண்ணீறும், குனித்த புருவமும், தூக்கிய திருவடியும் கண் முன்தோன்றக் கண்டுகொண்டே இருக்கப் பெற்ருல் இந்த மனித்தப் பிறவியும் வேண்டுவதே என்ருர். அவர்க்கு அக்காட்சி சிவலோகத்திற் கிடைத்ததாதலின் அச்சிவலோகமாகிய தில்லைப் பொன்னம்பலத்தை இந்த மாநிலத்தே என்று அண்மைச் சுட்டாற் குறித்தருளினுர்

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமுங் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தே இந்த மாநிலத்தே."

அப்பரடிகளும் அவரைப் போன்றவர்களும் பிறவி வேண்டுவதில்லை என்ருலும் இப்படிப் பட்ட பிறவியிருந்தால் வேண்டுவதே என்ருர்கள். இவர்கட்கு மாருகக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளியதைப் பார்ப்போம் "இறைவனே! உன்னிடம் எங்கட்குப் பிறவி வேண்டியதில்லை என்று வேண்டுவோர்கள் வேண்டிக் கொள்ளட்டும். நானே பிறவியே வேண்டுவேன்! அந்தப் பிறவி எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்ருல்—

"நினக்குத் தமிழ்ச் சொல்
மலர் அணியும் பிறவியாக இருத்தல்
வேண்டும்."

இப்படி வேண்டினுர்—அவர்.

"விரைவிடை யிவரும் நினைப்பிற வாமை
வேண்டுநர் வேண்டுக மதுரம்
பெருகுறு தமிழ்ச் சொல் மலர்நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்"

(சோணசைல மாலை)

என்பது அவர் வாக்கு தமிழைப் பற்றிச் சொல்லும் போது "மதுரம் பெருகுறு தமிழ்" என்ருர். தமிழில் மதுரம் உண்டா? அதைப் படிப்பார்க்கே பயில்வார்க்கே புலப்படும் அது.

மொழிக்கும் கடவுளுக்கும் தொடர்பு படுத்திப் பேசுபவர்கள் தமிழர்களே. மற்றவர்கள் மொழியை சிறப்பாகக் கொண்டார்களே தவிரக் கடவுளொடு தொடர்பு படுத்தவில்லே. சிவபிரானைத் தமிழன் என்ருர் அப்பரடிகள் அவரே ஆரியன் என்றும் சொன்ஞர். ஆரியனும் சொல்லாத நிலையில், "வடமொழியும் தென் தமிழும் ஆனன்" என்றும் சொன்ஞர் அவர்.

தமிழின் மதுகரத்தைக் கொள்ளையாக அனுபவிக்க வேண்டியே உமையம்மை தடாதகைப் பிராட்டியாகவும், இறைவன் சோம சுந்தரபாண்டியனுகவும், முருகன் உக்கிர குமாரபாண்டியனுகவும் வந்தனராம். இப்படிக் குமரகுருபர அடிகள் கூறியுள்ளார்கள்.

"தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்ருள்
தடாதகா தேவியென் ெருருபேர்
தரிக்கவுந் ததுவும் தனிமுதல் ஒரு நீ
சவுந்தர மாறனு னதுவும்
குமர வேள் வழுதி யுக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்தமிழ் மதுரம்
கூட்டுரை எழுந்த வேட்கையால் எனில் இக்
கொழி தமிழ்ப் பெருமை யார் அறிவார்?

(மதுரைக்கலம் பகம். 93)

என்ற வாக்கினைக்காண்க.

இதனுல் தான் இத்தமிழின் மதுரத்தை அறிந்ததனுல் தான் சிவப்பிரகாசர் "தமிழ்ச் சொல்மலர் அணியும் பிறவியே வேண்டுவன்" என்ருர். சிவப்பிரகாசர் வடமொழி பயின்றவர். என்ருலும் தமிழினிடத்து அவர்க்கிருந்தபற்று தமிழில் கண்ட சுவை—தமிழில் இறைவனை யடைய முடியும் என்று கண்ட உண்மை ஆகியவை அப்படியாக வேண்டச் செய்தன.

சிவப்பிரகாச சுவாமிகளைப் போல நாமும் இறைவனை நினைக்கத் "தமிழ்ச் சொல்மலர் அணியும் பிறவியே வேண்டும்" என வேண்டுவோமாக.

செந்தில் முருகன்

பேராசிரியர் அ. திருமலை முத்துசுவாமி, M.A., M.Litt., B.T., D.Lib.

கண்ணைவிட்டு நீங்காவே!

தமிழ் நாட்டின் தனிப் பெருங் கடவுள், முழு முதற் கடவுளாகிய முக்கண்ணனின் அருளால் தோன்றிய முருகப் பெருமான் ஆவார். இப் பெருமான் இனிது அமர்ந்து விளங்கும் ஆறு படை வீடுகளில் ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செந்தூராகும். தீந் தமிழால் இத் திருக்குமரனைப் பாடிப் பரவிய பைந்தமிழ்ப் புலவர் நக்கீரர் இப் பதியினைத் 'திருச்சீரலைவாய்' என்று தமது திருமுருகாற்றுப் படையிலே குறித்துள்ளார். இது, சிறந்தார் பரவும் திருச்செந்தூர், கடற்கரையிலே கவினுற விளங்கும் தலை சிறந்த முருகன் பதியாகும். இங்குள்ள கடல், மழை போல் முழங்கும்; அலைகளாகிய தனது கையால் சிப்பிகள் ஈன்ற வெண்முத்துக்களை எங்கும் வீசும். குளர்ச்சி பொருந்திய அவ்வெண் முத்துக்கள் தண்மதியினைப் போன்று ஒளியினைச் சிந்தும். இத்தகைய முத்து வளத்தைக் கொண்ட செந்தில் நகரில் தான் மான் மாளை மணம் புரிந்தவரும், உமை பாலரும் பிழையாத தொண்டர் சிறிது அன்பு செலுத்தினும் அதனைப் பெரிதாக ஏற்று நெஞ்சம் மகிழ்கின்றவருமாகிய செந்தில் முருகன் ஏற்றமுடன் எழுந்தருளி உள்ளார்.

ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய செந்திற்பதியில் அழகுடன் வீற்றிருக்கும் முருகன் அடியவர்களால் ஆறுமுகன் என்றே அழைக்கப்படுகின்றான். அடியவர் துயர் துடைக்கும் இவ்வாறுமுகனுக்கு ஆறு முகங்கள் உண்டு. பன்னிரண்டு மணிக் குழைகள் அவனது காதுகளை அழகு செய்யும். அவனது பன்னிரண்டு கண் மலர்களும் கருணையுடன் விளங்கும். உமை அன்னையின் திருவமுதத்தினை உண்ட காரணத்தால் அவனது சிவந்த வாய் மணம் பொருந்திச் சிறப்புடன் காணப்பெறும். அவனது கழுத்தைக் கடப்பமாலை அணி செய்யும். அவனது கரம் வாகைவேலினைக் கொண்டிருக்கும். தண்டையணிந்த அவனது தாளினை மறை அதாவது, வேதம் தனது தலையினால் வணங்கும். மேலும் அவன் படத்துடன் விளங்கும் பாம்பிற்குப் பகையாகிய மயில்மீது மனம் மகிழ்ந்து வீற்றிருப்பான். இத் திருக்காட்சி அடியவர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். இக் காட்சியினை ஒரு முறை தான் நாம் கண்டு களித்தாலும் அது என்றும் நம் கண்ணை விட்டு நீங்காது நிலைத்து நிற்கும். கோலமாமயில் மீது குமரன் கொலுவீற்றிருப்பதைக் கண்டுகளித்த தமிழ்ப் புலவரொருவர் தமது இறையநுபவத்தை,

"வரங்கொண்டவுமை முலைப்பால் மணங்
கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட ளிமயிலும் பன்னிரண்டு
கண்மலருஞ்
சிரங்கொண்ட மறையிறைஞ்சுஞ் சேவடி
யுஞ் செந்தூரன்
கரங்கொண்ட வேலுமென்றன் கண்ணை
விட்டு நீங்காவே"

என்று இனிமை பொருந்தப் பாடியுள்ளார்.

அவன் அடி பணிந்தால்......?

தன்னை வந்தடைந்தபோது குளிர்ந்தும் அன்பினர் தீர்ந்த போது கனன்றும் அருள்பாலிக்கும் கந்தனது கழல் பணிகின்றவர்கள் அவனது சிறந்த அடியார்கள் ஆவார்கள். அவர்கள் எப்பொழுதும் தங்களைப் போன்ற அடியவர்களது நட்பையே நாடுவார்கள். அவர்களது துணையினையே பெரிதாகக் கருதுவார்கள். அவர்களுக்கு இனிப் பிறவிப்பிணி இருக்காது. அவர்கள் உயிர் பறிக்கும் கூற்றுவனுக்குச் சிறிதும் அஞ்சார். எந்தப் பிணியும் அவர்களை வாட்டி வதைக்க முடியாது. தித்திக்கும் தேனும் மனத்தை மயக்கும் மணமும் பொருந்திய மலர் வளையத்தை அணிந்த அவனது தாள்களை வணங்குகின்ற பேற்றினைப் பெற்ற அவ்வடியவர்கள் அவனையே என்றும் எப்பொழுதும் தம் சிந்தையிலே கொண்டிருப்பர்; வேறெதனையும் அவர்கள் கொள்ளமாட்டார்கள். மேலும் குறத்தி மணாளனாகிய அக்குகனை அடியவர்கள், "மெய்யு நீஇ பொய்யுநீஇ விண்ணுநீஇ மண்ணுநீஇ, ஐயைநீஇ, செய்யைநீஇ, யாதிநீஇ சோதிநீஇ"

என்று வாயாரப் புகழ்ந்து பாடுவதோடு அமையாது, "எழுதாமறையின் திறத்துள்ளாய்! செவ்வான் அனையான் திருப்பிள்ளையாய்! எவ்வாறேனும் எனை நீ உய்யக்கொள்வாய்!" என்று உளம் உருகக் கூறினால் அவன் உவந்து அவர்களுக்கு எல்லா நலங்களையும் அருள் புரிவான். இதனை,

"கொள்ளார் பவப்பிணி கூற்றுக்கஞ்
சாரன்பர் கூட்டமல்லா
ளள்ளார் பிணியினலிவு படார்தெம்வ
நாளுமற்றேன்
றுள்ளார் முருகன் செந்தூர்பிரி
யாத ஞெண்கமலக்
கள்ளார் விரைமலர்த் தன்டையந்
தாடொழக் கற்றவரே"

என்ற பாடலால் நாம் அறியலாம்.

அவனை வாழ்த்தாதிருப்பின்...?

ஒளி வீசும் மணிகளைப் பெய்திரைக்கும் கடலின் கரையில் அமைந்து விளங்கும் செந்திற்பதியின் தலைவனை வாழ்த்தாதவர் வினையில் வீழ்ந்தோராவர். அவர்கள் பிறரைத் தொழுது இரந்து வாழ்வர். பசியென்னும் நோய் அவர்களைப் பெரிதும் அலைக்கழிக்கும். அதனால் சோர்ந்து, பிறரது தயவை நாடி, ஒன்றும் கிடையாதுபோகவே, அழுது, அலமந்து, ஏங்கி, அலைந்து திரிவர். சுருங்கக் கூறின் இறையுணர்ச்சி இல்லாதவர்கள் இவ்வுலகில் இன்பமாக வாழ முடியாது. இறையுணர்ச்சி ஒன்றே நமக்கு மன நிறைவினை, மன அமைதியினை, அளிக்க இயலும். செல்வத்தால், அன்றி செல்வாக்கால் பெற முடியாத மன நிறைவினை இறை வழிபாட்டால் ஒருவன் அவசியம் பெற இயலும் என்பதே இதன் உட்பொருளாகும். மன நிறைவினை ஒருவன் பெறுவானாயின், அவன் அமைதியுடன் இவ்வுலகில் வாழ முடியும். அவ்வாறு வாழ்ந்தால் எல்லா இன்பங்களும், நலன்களும் அவனை வந்தடையும். இறுதியில், வாழ்வாங்கு வாழ்ந்த காரணத்தால் அவன் நிலைத்த பேற்றைப் பெற இயலும். இல்லையேல் அவன் இறந்து உயிர் வாழவேண்டியிருக்கும். இதனை அப்புலவர் பெருமான்,

"தொழுதிரந்து வெம் பசியாற் சோர்ந்திடு
வார் கைபார்த் தழுதலமந் தேங்கி யலை
வார்—முழுதும்
பெருகுகனை வாரிமணி பெய்திரைக்குஞ்
செந்தில் பெருகுகனை வாழ்த்தா தவர்'

என்று படிப்போர் மனத்தில் நன்கு பதியும் வண்ணம் பாடியுள்ளார். மேலும் அவன் அருளை எண்ணி வியந்து பாடாத நாவினையும், அவன் தாள்களைப் பணியாத சென்னியினையும், அன்பினை நாடாத உள்ளத்தினையும் நாம் கொண்டிருப்போமாகில் நமக்கு உயர்கதி ஒரு நாளும் இல்லை. மாறாக நரகேழுஞ் சென்று நாம் நலிய வேண்டியிருக்கும். எனவே, ஒலிக்கின்ற வண்டுகள் எழுப்புகின்ற இசையினைப் பொருந்திய பொழில் சூழ்ந்த திருசெந்தூர்க்கு நாம் அன்புடன் சென்று எழில் முருகனைத் தொழுது, மயிலும் வேலுமெனக் கூறினால் எழுமையினும் பிறப்பென்பது இல்லாது நிலைத்த வாழ்வினைப் பெறலாம்.

மறவரின் பெருமிதம் :

மறவர்கள் வீரம் செறிந்தவர்கள். எனினும் அவர்கள் தூய உள்ளத்துடன் செந்தில் முருகனைப் போற்றிப் பரவி அவனது அருளைப் பெற்ற காரணத்தால், அவர்கள் கூற்றவனுக்குக் கூடச் சிறிதும் அஞ்சாது, வீரத்திலே மேலும் விளக்க முற்று விளங்கினர். இத்தகைய மறக்குடியைச் சேர்ந்த வீரமறவன் ஒருவனின் மகளை மணம் பேசி மற்றொரு குடியைச் சேர்ந்தோர் வந்தனர். தலைவன் சார்பில் மணம் பேச வந்தோரில் தலைமை சென்ற ஒருவனை நோக்கி, மணமகளின் தந்தை, "கூற்றவன் கூட எங்களைக் கண்டால் நடுங்குவான். அதற்குக் காரணம், வண்டுகள் ஆரவாரித்து மொய்க்கும் பூங்கொத்துக்களுடன் விளங்கும் கடப்ப மரத்தின் மலரைச் சூடிப் பொலிவுடன் செந்தில் வீற்றிருக்கும் குமரனை நாங்கள் நாள்தோறும் வணங்கி அவனது அன்பையும் அருளையும் பெற்றமையாகும். அதனால் நாங்கள் இயற்கையாகவே பெற்றிருந்த வீரம் மேலும் விளக்க முற்று விளங்குகின்றது. சுருங்கக் கூறின் நாங்கள் செந்தில் முருகனின் மலர்ச் சரணத்தை மறவாத மறவர்கள் ஆவோம். இதனை மறந்து ஒருவன் உன்னை மணம் பேச அனுப்பி உள்ளான். பெண்ணாசையால் உளம் மயங்கி உன்னைத் தூதனுப்பியவன் தன் உயிரை விடத்துணிந்து விட்டனன் போலும்! அவன் பொருட்டுத் தூதாக வந்திருக்கின்ற நீ அவனுக்கே இயம தூதனுவாய்" என்று கூறினன். இந் நிகழ்ச்சியினைப் புலவர் சிறந்ததொரு ஓவியமாகப் பின்வருமாறு தீட்டியுள்ளார்.

"கண்டாலு மனம் பதைக்குங் கடுங்கூற்று
நடுங்கியெமைக் கட்ல் சூழ் செந்தில்
வண்டாலுந் துணர்க் கடம்பன் மலர்ச்
சரண மறவாத மறவ ரேயாம்

பெண்டாலின் றுளமயங்கி யுயிரைவிடத்
தூதுவிடும் பெருமான் றன்பாற்
றெண்டாலெங் களுக்குரைக்க வருந்தாத
வவற்கியம தூதனியே."

இப்பாடல் மறம் என்னும் துறையைச் சார்ந்ததாகும்.

வெற்றி வேல்! வீர வேல்!!

கொடுக்கும் கடவுளாகிய குமரனின் திருக்கையில் காணும் வீர வேலினை நாம் நினைந்து போற்றினல் அது நமக்கு எல்லா வெற்றிகளையும் அளிக்கும் என்ற நம்பிக்கை பண்டு தொட்டு நமக்கு இருந்து வருகின்றது. எனவே தான் முருகனை வழிபடுகின்ற அடியவர்கள் அவனது வேலினையும் நினைந்து "வெற்றிவேல். வீரவேல்!" என முழங்குகின்றனர். அடியவர் தம் துயர்களையும் அவனது அழகிய வேல் பன்னிரண்டு புயங்களுக்கும் பொன்னணியாகத் திகழ்கின்றது. அவனது, புள்ளிமான்மகளாகிய வள்ளிக்கும், கயமான்மகளாகிய தெய்வயானைக்கும் அது கண்ணியாக விளங்குகின்றது! உயிர் பறிக்கும் கூற்றுவன் செந்தில் நன்னகர் வேவிய முருகனது அடியவர்களது முன் தோன்றினல் அவ்வீரவேல் அவர்களுக்கு நற்றுணையாக நின்று நன்மை பல புரியும். இத்தகைய வேலின் சிறப்பை,

"புயமாறிரண்டுக்கும் பொன்னணி
யாம்புள்ளி மான்மகட்குங்
கயமான் மகளுக்குங் கண்ணிணை
யாங்கடுங் கூற்று வந்தா
னயமாய தொண்டர்க்கு நற்றுணை
யாஞ்செந்தி னன்னகர்மே
வியமான் மருகன் றிருக்கரத்
தேந்திய வேற்படையே"

என்று புலவர் சித்திரித்துள்ளார்.

மால்மருகனும் மங்கையரும்

குமரனுக்கு நமது முந்தையோர் தந்த பெயர் முருகன் ஆகும். அச்சொல்லில் பகுதியாகிய 'முருகு' என்பது இளமை, அழகு, மணம், கடவுட்டன்மை ஆகிய வற்றைக் குறிக்கும் என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனர் தமது 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலிலே குறிப்பிட்டுள்ளார்கள். மால், மருகன் மாருத இளமை பொருந்தியவன், குன்ருத அழகுடையவன்; மனத்தை மயக்கும் மணமுடையவன்; இவற்றிற்கெல்லாம் மேலாக தன்மீது அன்பு செலுத்துகின்றவரிடத்து அருள் சொரிபவன். அதுவே கடவுட்டன்மை என்னும் குணமாகும். சுருங்கக்கூறின் குமரன் குன்ரு அழகுடையவன், எனவே மடமங்கையரது மனத்திலே மாலினை அதாவது மயக்கத்தினை அவ்வழகு ஏற்படுத்துவது இயற்கையே. செந்தில் சென்று குன்ரு அழகுடைய அக்குகனைக் கண்டு களித்த மயிலின் சாயலைக் கொண்ட மடமங்கையார் எவ்வளவோ உறுதியோடிருந்தாலும், அவனழகில் தங்கள் மனத்தைப் பறிகொடுத்தே தீருவர். மேலும் அவர்கள் அவன்மீது கொண்ட நாட்டத்தின் காரணமாய்த் தங்கள் நாணினை இழப்பர், அவனிடத்து மனத்தைக் கொடுத்து மயங்கிய காரணத்தால் அமைதியை இழந்து அவதி உறுவர்; உள்ளத்திலே அவனுக்குஇடம் கொடுத்த காரணத்தால் அவன் நினைவால் வாடி மெலிவர், இவற்றிற்கெல்லாம் மேலாக பசலை நோய் அப்பாவையர்மீது படரும். எனவே இளம் பெண்கள், தங்களது நாணினை இழக்காது, மனத்துன்பத்தைப் பெருது, பசலை நோயால் துன்புருது, மயக்கத்தால் மனந்தடுமாருது இருக்க வேண்டுமெனின் அவர்கள் குறிஞ்சிக் கிழவனும் குன்ரு அழகுடையவனுமாகிய அக்குகனை நேரில் காணுதிருத்தலே நல்லது; மாருக, அவன் மயக்கும் தன்மையினைக் கொண்ட இளமையும் அழகும் உடையவன் என்பதை எண்ணிப் பாராது, அவனிடத்துச் செல்வார்களாயின் மேற்கூறிய துன்பங்கள் அனைத்தும் அவர்களை வந்தடையும். இதனைப் பின் வரும் பைந்தமிழ்ப் பாடல் பாங்குடன் எடுத்துக் கூறுகின்றது.

"உழவாத மம்மரு முன்னுத நெஞ்சு
முருப்பசப்பு
மிழவாத நாணுமெங் குண்டுவண் டீரியல்
சேர்குறிஞ்சிக்
கிழவா வைனை யினையோ னெனுந்தன்மை
கேட்கிலராய்த்
தொழவா தரத்தொடு செந்தில்சென்றே
கண்ட தோகையர்க்கே."

வண்டினை விளித்து இப்பாடல் பாடப்பட்டிருப்பதால் இது 'வண்டு' என்னும் துறையின் பாற்படும்.

கண்கொண்டு உளங் குளிர்க!

நெடிதுயர்ந்து விளங்கும் யானை. அதன் மீது வெண் கொற்றக் குடையுடன் கூடிய அம்பாரி. அவ்வம்பாரிமீது அழகுடன் செந்தில் முருகன் வீற்றிருந்து, இருபுறத்திலும்

கவரி வீச, இன்னியம் முழங்க, மடவன்னங்கள் போல மகளிர் சூழ்ந்துவர, மணம் வீசும் சந்தனக் கலவை பூசப்பெற்ற தோளில் கண்ணிக் கடம்பசைய, வெற்றிவேலினைக் கைக் கொண்டு வருவானாகில், அனைவரும் அவனது அழகினைக் கண்ணால் கண்டு பருகி, அருளைப்பெற்று உளங் குளிர்வர், உள்ளம் உருகி நிற்பர், முருகனும் உவந்து அவர்களுக்கு அருள் பாலிப்பான். இதனைத் தமிழ்க் கவிஞர்,

"ஏழுயர் கடாயானை மேல்வெண் குடைக்கீ
ழிணைக்கவரி யெறிய விருபா
லின்னிய முழங்கமத் வன்னங் குழீஇய
னைய வேழையர் மருங்கு சூழக்
காழகின றுங்குற டிரிஞ்சுபூந் தேய்வைகடி
கமழ்தடவும் வலைய நிமிர்தோட்
கண்ணிக்கடம்சைய வேல்கொண்டு நிவரக்
கண்கோண் டுளங்கு ளிர்வனே!"

என்று கனிந்து உளமுருகப் பாடியுள்ளார். மேலும் மேற் கூறியவாறு பாங்குடன் பவனி வரும் உமை பாலனை, சரவணத்துதித்தோனை, செந்திற் தம்பிரானை, அன்புறப் பணிந்தோர் உயர்நிலை அடைந்து உம்பராய் நிலைத்து வாழ்வர். சுருங்கக் கூறின் செந்தில் முருகனின் கருணைக்குப் பாத்திரமாவோர், இப் பாரிலே சிறக்க வாழ்வதோடமையாது இறுதியில் நிலைத்த பேற்றை அடைவர்.

இதுவரை கூறியவற்றால், திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தில் சேர்ந்து, அங்கு இனிது உறையும் முருகப்பிரான் முன்நின்று, நாம் செய்த பிழைகளை எல்லாம் உண்மையாக உளம் உருகக் கூறி, அவனது சீர் பரவி, அவனது வேலினை மனத்திலே நினைந்து, வேண்டின், நாம் நினைத்ததை நமக்கு அருள் புரிவான். ஐயம் அகற்றி, குற்றங்கடிந்து, தூய மனத்தோடு சென்று ஒருவன் செந்தில் முருகனை வழிபடுவானேயாகில் அவன் சீரும் சிறப்பும் பெற்று வாழ இயலும். அவனது துன்பம் எல்லாம் எங்கே மறையும். அவனது வினை தொடராது விலகி நிற்கும். அவனது உள்ளம் உயர்ந்த உள்ளமாக உருமாறும். அவ்வுள்ளம் உவகையால் நிரம்பப் பெறும். அதற்குச் சான்றுகள் இரண்டு உண்டு. ஒன்று பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்ப் பெரும் புலவர் குமரகுருபரரது வாழ்க்கை; மற்றொன்று நம் காலத்தில் நம்மோடு வாழும் இசையறிஞர், இசைவாணர் மாரியப்பசுவாமிகளது வாழ்க்கை வரலாறு. முன்னவர் ஐந்து வயது வரை மூங்கைப்பிள்ளையாய் இருந்து பின்னர் செந்தில் சென்று முருகனது கருணையைப் பெற்று வாய் திறந்து பேசவும், கனிவான கவிதைகள் பாடவும் தொடங்கினார். பின்னவர் செந்தில் சென்று முருகன் முன்னமர்ந்து விரதம் இயற்றிப் பின்னர் தம் நாவினை அரிந்து காணிக்கையாகப் படைக்க, முருகன் அருள் சுரக்க, அதன் காரணமாய் அறுந்த நா வளர, அருள் பாடல்கள் பலவற்றை மழைக் கொண்டலெனப் பொழிந்தார். இவ்வாறு செந்தில் முருகன் அருளைப் பெற்ற அடியவர்கள் பலராவர். நாமும் அவர் வழி நின்று அவன் அருளைப் பெறுவோம்.

மேலே தரப்பட்டிருக்கும் பாடல்கள் முருகன் புகழ் மாலைகளில் ஒன்றாக விளங்கும் திருச்செந்திற் கலம்பகத்தில் காணப்படுவனவாகும். அந்நூலை இயற்றிய புலவர் பாண்டி வள நாட்டில் தோன்றிய பாவலர் சுவாமிநாத தேசிகர் ஆவார். முருகன் மீது குறையாத அன்புடைய அடியவர்களில் ஒருவராக விளங்கிய அவர் இயற்றிய திருச்செந்திற் கலம்பகத்தை நாள்தோறும் ஓதி வருவோர் செந்தில் ஆண்டவன் அருளைப் பெற முடியும் என்ற நம்பிக்கை இன்றும் பலருக்கு உண்டு.





தமிழக வரலாற்றில் பழையனூர் ஆலங்காடு

[செப்பேடுகளும் கல்லெழுத்துக்களும் செப்புவன - ஒரு வரலாற்று இலக்கிய ஆராய்ச்சி.]

D. நடராஜன், M. A., F. R. Econ. S. (Lond.), Ford Found. Res. Trg. Cert. (Madras) Cert. Anthrop. (Madras)

பழையனூர் ஆலங்காடு தமிழ் நாட்டு வரலாற்று வல்லுநர்களுக்கு ஒரு தீபத் தம்பம். அங்கே காணப்பெறும் கல்லெழுத்துக்களானும் (inscriptions), செப்பேடுகளானும் (Copper plates) சோழப் பேரரசர் வரலாறு தெளிவாகத் தெரிய வருகிறது. ஆலங்காட்டு அடிகளாரின் கோயில். புராதன சோழர் காலத்துக் கோயில் அதன் சாசனங்களிலிருந்து, முற்காலத் தமிழக வளம், பழக்க வழக்கங்கள், தொழில், சமுதாயம், சமயம், கல்வி, நிர்வாகம் இன்ன பிற செய்திகளை வேறு வகைகளாற் கிடைக்கும் செய்திகளோடு ஒப்பு நோக்கி ஓரளவு ஊகிக்கலாம்.

சென்னைக்கு மேற்கே, அரக்கோணம் செல்லும் இருப்புப் பாதையில், சென்னையினின்றும் *59·6* கிலோ மீட்டர் *(37 மைல்)* தொலைவில் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள இம்மூதூர், இறைவன் நடம்புரியும் ஐம்பெரும் மன்றங்களுள் இரத்தினசபையாகும். இலக்கியத்தில், திருவாலங்காட்டினைக் காணும்போதெல்லாம் அதனைப் பழையனூர் மேவிய திருவாலங்காடாகவே பார்க்கிறோம். பழையனூர், திருவாலங்காட்டுக்குக் கிழக்கே *1·3* கிலோ மீட்டர் *(3/4* மைல்) தொலைவில் உள்ளது.

''அம்மையே!'' என்னும் செம்மை ஒரு மொழியால் உலகம் எல்லாம் உய்யக் கயிலையில் அன்று அழைத்த பரமன், ''பழையனூர் ஆலங்காட்டு அடிகள்'' என்னும் திருநாமத்துடன் எழுந்தருளியிருக்கும் பேறுபெற்றது இத் திருவாலங்காடு. காரைக்காலம்மையார் கயிலையிலிருந்து இத் தலத்திற்கு வந்து சேர்ந்ததும், இறைவன் தாண்டவமாடும்போது அவன் அடியின் கீழ்த் தங்கி என்றும் ஆனந்த நிலையிலிருக்கும் பேற்றை அளித்ததும் இத்தலமே.

'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்பர் பெரியோர். இவ்வாய்மொழிக்குச் சான்றாக நிற்பது பழையனூர். ''வையம் பெறினும் பொய் சொல்ல மாட்டார் தொண்டை நாட்டாரே'' எனப் பாடியுள்ளார் ஒரு புலவர். ''மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகன் உயிர் இழப்பத் தாங்கள், கூறிய சொல் பிழையாது துணிந்து செந்தீக் குழியில் எழுபது பேரும்'' மூழ்கிய வாய்மை மொழியாளராம் வேளாளர் வாழ்ந்தது, இத் தொல்லூர். இதன்கண் தழலின் கொழுந்தீஸ்வரர் கோயிலும், காரைக்கால் அம்மையார் கோயிலும், பழையனூர் நீலி கோயிலும் உள்ளன. இம்மூதூருக்கு ஆலங்காட்

---

* நன்றிக் குறிப்பு: சென்ற ஆண்டில் திருவாலங்காட்டில் நிகழ்ந்த காரைக்கால் அம்மையின் திருவிழாவில், ஆயும் பழைய அடியாருடன் கூடி, ஆலங்காடரின் அருளைப் பெறவும், பழையனூர் ஆலங்காட்டுத் திருக்கோயில்களை யான் காணச் செல்லுமுன் படித்த சில குறிப்புகளை விரித்து ஒரு கட்டுரையாக உருவாக்கித் தரவும் என்னை ஊக்கிய சைவப் பெரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை' B.A.,L.T., அவர்கட்கு நான் மிகவும் நன்றியுடையேன். இவ்வாராய்ச்சியுரையினைப் படித்துப் பார்த்துதவிய தென் பிராந்திய இந்திய தொல்பொருள் சர்வேயைச் சார்ந்த, கோயில்கள் சர்வே இயக்கத் தலைவர் (Superintendent, Temple Survey Project, Archaeological Survey of India, Southern Circle, Madras), திரு K. V. சௌந்தராஜன் அவர்கட்கும், சொல்ல எழுதியும், பிரதிகள் செய்தும் உதவிய எனது அண்ணியார்க்கும் மற்றும் பல்வேறு வகைகளில் உதவிய ஏனைய நண்பர்கட்கும் எனது உளங்கனிந்த நன்றி. பழனைமேய ஆலங்காடர் பழுதறு நலன்கள் பலவும் இவர்கள் அனைவருக்கும் பரிந்தருளவேண்டும் என்று பரவுகின்றேன்.

டிறைவர் ஆண்டுக்கு இருமுறை திருவீதி எழுந்தருளி விழாக் கொள்கிறார். தேவார முதலிகள் மூவருக்கும் முற்பட்டவரும், மூத்ததிருப்பதிகம் அருளியவருமான காரைக்கால் அம்மையும், தேவார முதலிகளும், சேக்கிழாரும், அருணகிரியாரும், குமர குருபரர் முதலியோரும் ஆலங்காட்டாரைப் புகழ்ந்து பாடிய பக்திப் பாடல்கள் இப் பழம் பெரும் பழையனூர் ஆலங்காட்டைப் புகழ்கின்றன. தனியே தலபுராணமும் இதற்கு இண்டு.

பழையனூர் ஆலங்காடு இலக்கியச் சிறப்பு மட்டுமன்றி, வரலாற்றுச் சிறப்புப் கொண்டது. கல்லினும், செம்பினும் உள்ள சாசனங்களே நம் நாட்டின் பழைய வரலாற்றைப் பல துறைகளாலும் அறிய உதவுகின்றன. சாசனங்களுள் பெரும் பாலனவை தானம், காணிக்கை முதலிவை அளிக்கப்பெற்ற செய்திகளையே அறிவிப்பன. எனினும், இவற்றுள் பிற வகைகளும் உள்ளன. அவையாவன, நிலவிக்கிரயம், பரிவர்த்தனை, கோயில், மடம், குளம் நிறுவியமை, திருப்பணிகள், சரித்திர நிகழ்ச்சிகள், இலக்கியச் செய்யுட்கள், பத்திப் பாடல்கள், தருமோபதேசங்கள் போன்றவை. இத்தகைய சாசனங்கள் நமது செந்தமிழ் நாட்டில் இதுவரையில் பதினைந்தாயிரத்துக்கும் மேற்பட்டவை கிடைத்துள்ளன. தமிழ் மொழிச் சாசனங்கள் பி. பி. ஆறும் நூற்றாண்டில் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாகக் கிடைக்கின்றன. அதற்கு முன்னும் - கிறிஸ்து அப்தத்தின் ஆரம்பத்தில் முன்னும் பின்னும் நூற்றாண்டுகளில் - பிராமி எழுத்தில் (Brahmi Script) பொறிக்கப்பட்ட சில கல்லெழுத்துக்களும் கிடைத்துள்ளன.

திருவாலங்காட்டுச் சாசனங்கள் பெரும்பாலும், தமிழ் மொழிச் சாசனங்களே. சில வடமொழி கிரந்த எழுத்துச் சாசனங்கள்; சில, கிரந்த எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களும் சேர்ந்தவை; பழையனூர் திருவாலங்காட்டில் இதுவரை நாற்பத்தாறு கல்லெழுத்துக்கள் கணக்கிடப்பட்டுள்ளன. பயைழனூர் திருவாலங்காடு, அங்குக் கிடைத்த பழைய செப்பேடுகளாலும் பெரும் புகழ் பெற்றிருக்கிறது. இச் செப்பேடுகள், முதலாம் இராஜேந்திர சோழனால் (பி. பி. *1012-44*) வெளியிடப் பெற்றனவாகும். இவை, ஆலந்து (Holland) நாட்டினைச் சேர்ந்த லேய்டன் பல்கலைக் கழகத் தொல்பொருள் கூடத்தில் (Leyden University Museum) உள்ள புகழ்பெற்ற பெரிய லெய்டன் சாசனம் (Large Leydon Grant). எனவும் அன்னமங்கலம் சாசனம் (Annamagalam Grant) எனவும் வழங்கும் சாசனத்துடன் ஒப்பிடும் அளவுக்கு உயர்ந்தது என வரலாற்று வல்லுநர் கருதுகின்றனர்.[1] இச்செப்பேட்டுச் தொகுதி முப்பத்தொரு ஏடுகளைக் கொண்டது. இதன் எடை சுமார் மூன்று குவின்டல்கள் (Quintals) (எட்டே கால் மணங்கு) ஆகும். முதல் பத்துச் செப்பேடுகள் வடமொழியில், கிரந்த எழுத்தில் உள்ளன. மற்றவை தமிழ் மொழிச் சாசனங்கள்.

பழையனூர் திருவாலங்காட்டுச் செப்பேடுகளாலும் கல்லெழுத்துக்களாலும் வெளிப்படும் பல்வகை வரலாற்றுக் குறிப்புக்களுள் சிலவற்றினை இப்பொது ஒருசேரத் தொகுத்து நோக்குவோமாக;

[2] பழயனூர் ஆலங்காடு: பழையனூர் ஆலங்காடு பழையனூர் நாட்டைச் சேர்ந்ததாயும், இப்பழையனூர்நாடு, ஜெயம்கொண்ட சோழ மண்டலத்தைச் சார்ந்த மேல்மலைக் கோட்டத்தைச் சார்ந்ததாயும் இருந்தது என ஒரு சாசனம் சாற்றுகிறது, மற்றொரு சாசனம் பழையனூர் ஆலங்காடு வடவரை மனவிற் கோட்டத்து மேம்மலைப் பழையனூர் நாட்டைச் சேர்ந்தது எனத் தெரிவிக்கிறது.

கங்கை கொண்ட சோழன் என்று புகழப் பெறும் முதலாம் இராஜேந்திர சோழன் இப்பழையனூர்க் கிராமத்தைத் திருவாலங்காடருக்குத் தேவதானமாகக் கொடுத்த செய்தியும் சாசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இத்தேவதானச் செய்தியை ஊரார் அறியும் பொருட்டு, பிடிசூழ்ந்து படாகை நடப்பித்துப் பிரசுரம் செய்யப்பட்டது - அதாவது, பெண்யானை, கிராம எல்லை முழுவதும் சுற்றிவரச் செய்யப்பட்டது - எனவும், ஆங்காங்குக் கள்ளியும் சூலக்கல்லும் நாட்டப்பட்டன எனவும் தெரியவருகிறது. சோழப் பேரரசன் முதலாம் இராஜேந்திரன் (கி. பி. *1012-44*)

(1) ''கொடிய வெஞ்சினக்காளி, குவலய முழுவதும் முடிவு செய்வன், என்று எழுந்த நாள், முனிரியோன் முதலோர் அடைய அஞ்சவும், அவள் செருக்கு அழிவுற அழியாக் கடவுள் ஆடலால் வென்ற'' பழையனூர் ஆலங்காட்டு வர்த்தவதாண்டேசுவரரின் செப்புச் சிலை, பழமையானதும் புகழ்பெற்றதும் ஆகும். இத்தகைய கலைச் சிறப்பு மிக்க நடராஜர் படிமங்கள் பல இக்கோயிலில் இருந்தன. அவை இஞ்ஞான்று புதுடெல்லியிலும், லண்டனிலும் பாரிசிலும் உள்ள கலைக்கூடங்களுள், காண்போர் மகிழும் காட்சிப் பொருளாக உள்ளன. அமெரிக்க நாட்டு பாஸ்டன் (Boston) கலைக் கூடத்து நடராஜர் படிமத் தொகுதியிலும், ஆலங்காட்டு நடராஜர் படிமங்கள் அழகுற விளங்குகின்றன.

(2) *1924*-ம் ஆண்டுவரை, சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்திருந்த பழையனூர் ஆலங்காடு, இப்பொழுது தமிழ்நாட்டுச் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்துள்ளதாகும்.

தனது ஆட்சிக்காலத்தின் ஆறும் யாண்டின் எண்பத்தெட்டாம் நாளில், பழையனூரைத் தேவதானமாக வழங்கினன். இப்பேரரசரின் கட்டளை, அதே யாண்டு தொண்ணூறுவது நாளில், சாசனம் செய்யப்பட்டது. பிறகு அப் பேரரசரின் ஆட்சிக் காலத்தில் ஏழாம் ஆண்டின் நூற்றைம்பதாம் நாளில், இத் தேவதானம் நிறைவு பெற்றது. இப் பழையனூர், சோழர் ஆட்சிக் காலத்தில், இராஜாதி ராஜ சோழனுக்கு உட்பட்ட பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பனுன அண்ணன் பல்லவ ராஜன், ஈழத்தான் பராக்கிரமபாகு ஆழ்வான் என்பவன் ஆட்சியுள் அடங்கியது. அம்மையப்பன் என்னும் பெயர், சோழச் சிற்றரசர் ஒருவருக்கான பட்டப் பெயர் ஆகும். இச் சிற்றரசரைக் குறிக்கும் கல்லெழுத்து, இரண்டாம் இராஜாதி இராஜனின் (கி. பி. 1173-1178) காலத்தியது ஆகும். இச் சிற்றரசன் மிக்க செல்வாக்கு உடையவனுக இருந்தான். ஆலங்காட்டு அடிகளார்க்கு மூன்று திருவிளக்குகள் அறம் செய்தான்.

ஆலங்காட்டு அடிகளார் கோயில்: பழையனூர் ஆலங்காட்டுச் சாசனங்களிலிருந்து, திருவாலங்காட்டுக் கோயில் இன்ன காலத்தில் இன்னவரால் கட்டப்பட்டது என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனல், இக்கோவிலுக்கு முதலாம் ஆதித்திய சோழன் காலம் (கி. பி. 871-907) தொடங்கிப் பல பேரரசர்கள் திருப்பணி செய்துள்ளார்கள். சோழப் பேரரசர்களும், பாண்டியப் பெருமன்னர்களும், பல்லவ மன்னர்களும், கங்க பல்லவ மன்னவர்களும், விஜயநகர மன்னவர்களும், இக் கோயிலுக்குப் பல அறங்கள் புரிந்ததைச் சாசனங்கள் தெரிவிக்கின்றன. இப் பேரரசர்களின் பட்டியலைப் பிற்சேர்க்கை 1-ல் பார்க்க.

திருவாலங்காட்டுக் கோயில் புராதன சோழர் காலத்துக்கோயில் என முன்பே குறித்தோம். முதலாம் ஆதித்திய சோழனும் (கி. பி. 871-907) கங்கபல்லவ மன்னன் நிருபதுங்கனும் (கி. பி. 855-896) இக் கோயிலுக்குச் சில அறங்கள் செய்து இருப்பதால், இக்கோயிலின் பழைய கட்டிடங்கள், அவர் தம் காலத்துக்கும் முற்பட்டனவாக இருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆலங்காட்டு அடிகளோ, தேவார முதலிகள் மூவருக்கும் முற்பட்ட காலத்தவராகிய காரைக்கால் அம்மையாரால் (கி. பி. 550) கண்டு பாடப் பெற்றவர்.

திருவாலங்காட்டுக் கோயில் நடராஜர் சந்நிதியின் முதல் பிரகாரத்து வடக்குச் சுவரில் உள்ள ஒரு கல்லெழுத்து, அச்சுவர்களால் அமைந்த மன்றத்தினை அம்மையப்பன் பழியஞ்சிய பல்லவராயன் கட்டினதாக அறிவிக்கின்றது.

பேரரசன் மூன்றும்குலோத்துங்க சோழன் (கி. பி. 1178-1218) கல்லெழுத்து ஒன்று திருவாலங்காட்டுக் கோயிலினைத் திருவரங்கில் அண்டமுற நிமிர்ந்தாடுலிங்க நாயனுர கோயில் எனக் குறிக்கிறது. விஜயநகர மன்னர் காலத்துக் கல்லெழுத்து ஒன்றே, இக்கோயிலினைப் பழையனூர் மேவிய திருவாலங்காடுடைய நாயனர் கோயில் எனக்குறிக்கிறது. மற்றொரு சாசனம் இறைவியை, வண்டார் குழல் நாச்சியார் என வழங்குகிறது. இச் சாசனம் விஜய நகர மன்னன் முதலாம் திருமலை (கி. பி. 1570-71) காலத்ததாகும்.

கோயில் திருப்பணிகள்

சாசனங்களினின்றும் அறியப் பெறுவனவும், இத்தலத்தே நிகழ்ந்தனவுமான சில திருப்பணிகளையும், திருவறங்களையும் இனி நோக்குவோம்:

1. நிலஅறம்: (i) மணவில் கிராமத்தைச் சேர்ந்த நிலங்கள் சில கோயிலுக்கு நில அறம் செய்யப்பட்டன. (சோழ மன்னன் கோனேரின்மை கொண்டான் (கி. பி. 1173-1178) காலத்திய கல்லெழுத்து).

(ii) திக்கரசன் விஜயதேவன் சில நிலங்களைக் கோயிலுக்கு மானியமாக வழங்கினன்.

(iii) மன்னன் மதுசூதன தேவன் கோயிலுக்கு நிலம் வழங்கினன்.

2. விளக்கு அறம்: பலவகைப்பட்ட அறங்களுள் கோயிலுள் விளக்கு எரிக்கும் அறம் ஒன்றாகும். இதனை மக்கள், தங்களது நலனுக்காகவோ, அல்லது தம்மைச் சார்ந்தார் நலனுக்காகவோ, அல்லது தமது அரசரின் நலனுக்காகவோ, அல்லது தாங்கள் செய்த குற்றத்திற்குப் பிராயச்சித்தமாகவோ செய்துவந்தனர். விளக்கு அறம் செய்பவர்கள், ஆடுகள், பசுக்கள், எருமைகள் பணம் ஆகியவற்றுள் ஒன்றினையோ அல்லது பலவற்றினையோ கோயிலுக்குச் கொடுத்தனர். ஆலங்காட்டு அடிகளார் கோயிலுக்குச் செய்யப்பட்ட இத்தகைய விளக்கு அறங்களுள் எடுத்துக் காட்டாகச் சிலவற்றை இங்கே குறிக்கலாம்:

1. கோயிலுக்கு இரண்டு விளக்குகளுக்காகப் பொன் வழங்கப்பட்டது. கங்க பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன் (கி. பி. 855-896) காலத்துக் கல்லெழுத்து]

2. ஊர்க்காடு என வழங்கும் அழகிய சோழநல்லூர் என்னும் ஊரினர் ஒருவர், கோயிலில் திருவிளக்கு இடுவதற்கு என்று பன்னிரண்டு ஆடுகளை வழங்கினர். சோழப் பேராசன் விக்கிரம சோழ தேவன் (கி. பி. 1118-35) காலத்திய கல்லெழுத்து).

---

(2) இச்சோழச் சிற்றரசன் இரண்டாம் இராஜாதிராஜனின் (கி. பி. 1173-1178) காலத்தவன்.

3. திருவாலங்காட்டுக் கோயிலுள் உள்ள திருக்காமக் கோட்டத்தைச் சேர்ந்த இறைவி பெரிய நாச்சியார் சன்னிதியில் இரண்டு விளக்குகள் எரிக்கச் (சோழப் பேரரசன் இரண்டாம் இராஜாதி இராஜனின் காலத்தில் [கி. பி 1173-1178] பொன் கொடுக்கப்பட்டது.

4. கோயிலுள் சில நந்தாவிளக்குகள் எரிக்கச் சில வரிகளின் வருவாயை மன்னன் கோயிலுக்குத் தானமாக வழங்கினன். (மன்னன் விஜயகண்ட கோபாலன் கல்லெழுத்து.)

5. விஜயநகர மன்னன் மல்லிகார்ச்சுன மகாராயனின் (கி. பி. 1447-1465) பெருமையை விளங்கச் செய்ய ஒரு விளக்கு கோயிலுக்கு அறம் செய்யப்பட்டது.

6. கோயிலுக்கு ஒரு விளக்கு எரிக்கப் பதினறு பசுக்கள் தானம் செய்யப்பட்டன.

பிற அறங்கள்:

1. சோழ மன்னன், தம்முசித்தி என்பான், கோவிலைச் சேர்ந்த கிராமங்களில் இருந்து தனக்குக் கிடைக்க வேண்டிய வருவாய்ப் பகுதியைக் கோவிலுக்குந் தானமாகத் தந்தான்.

2. நிருபதுங்கவர்மனின் பட்டத்தரசி, இராணி காடவன் மாதேவியார், நூற்றெட்டுக் களஞ்சு பொன் திருவாலங்காட்டுக் கோவிலுக்கு வழங்கினள். (கங்க பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன் காலத்திய (கி. பி. 855-896) கல்லெழுத்து.)

3. கோவிலில் ஒரு விழா நடத்த தானங்கள் வழங்கப்பட்டன. (விஜயநகர மன்னன் வீரப்பிரதாப சதாசிவதேவ மகாராயன் (கி. பி. 1542-1576) காலத்திய கல்லெழுத்து.)

சாசனங்கள் செப்பும் பிற செய்திகள் சில:

1. சோழப் பேரரசர் காலத்தில் நிலங்கள் நன்கு அளவை (சர்வே) செய்யப்பட்டன. பழையனூர் நாடும் நில (அளவை) சர்வே செய்யப்பட்டது. அக்காலத்தில் நில அளவை செய்தலைக் குறிக்க 'உலகளவு' என்ற சொல் வழக்கில் இருந்தது. முதலாம் குலோத்துங்க சோழமன்னர் (கி. பி. 1070-1118) ஆட்சியின் பதினறுவது ஆண்டில், நில அளவை (சர்வே) நடந்தது. (சோழ மன்னன் இரண்டாம் இராஜாதி ராஜன் (கி. பி. 1173-1178) காலத்துக் கல்லெழுத்து.)

2. இப்பழையனூர் ஆலங்காட்டில் சில நிலங்கள் வேற்றூரைச் சேர்ந்த சிலருக்குப் பகிரங்க விற்பனை (Public sale) செய்யப்பட்டன.

3. விஜயநகர மன்னன் கிருஷ்ணராயன் காலத்தில் சக்கரநல்லூரில் சில வரிகள் தள்ளுபடி (வஜா) செய்யப்பட்டன.

4. திருவாலங்காடு சந்திரகிரி ராஜ்யத்தைச் சேர்ந்தமை. (விஜயநகர மன்னன் வீரபிரதாப தேவராய மகாராயன் காலத்துக் கல்லெழுது.

5. இராஜ நாராயண சதுர்வேதி மங்கல ஊர்ச்சபை, திருவாலங்காட்டுக் கோயிலுக்கு நடுவில் மலைக்கிராமத்தில் இருந்து சில நிலங்களை விற்றது.

6. சாளுவ மன்னன் காலத்தில் ஒரு வெண்கலக் கொடிமரம் (துவஜஸ்தம்பம்) திருவாலங்காட்டுக் கோயிலில் நிறுவப்பட்டது. (கோயிலுள் நிற்கும் கொடிமரத்தில் உள்ள கல்லெழுத்து - விஜயநகர மன்னர் காலத்தியது.)

பழையனூர் ஆலங்காட்டுச் சாசனங்களில் பெறப்படும் தமிழரசர்களைப் பற்றிய சில செய்திகள்

பழையனூர் ஆலங்காட்டுச் சாசனங்கள், சோழப் பேரரசர் பேராற்றல், போர்த்திறம் ஆகியன பற்றிய விரிவான செய்திகளைத் தெரிவிக்கின்றன. அவற்றிலிருந்து, தமிழ்நாடு போரிலே கண்ட பெரும் வெற்றிகள் சோழப் பேரரசர் கொண்ட வெற்றிகளே என்பது விளங்கும்.

பழையனூர் ஆலங்காட்டுச் சாசனங்கள் குறிக்கும் தமிழரசர்களைப் பற்றிய செய்திகளுள் சிலவற்றை அவ்வரசர்களின் கால அடைவில் வைத்துப் பார்ப்போம்:

பேரரசன் முதலாம் ஆதித்தியன் (கி. பி. 871-907).

இப்பேரரசன், பலம்பொருந்திய பல்லவ மன்னன் அபராஜிதனை வென்று தொண்டை நாட்டைச் சோழ நாட்டோடு சேர்த்துக் கொண்டதைச் சாசனங்கள் தெரிவிக்கின்றன. இது நடந்தது கி. பி. 890-ல். இத்துடன் பல்லவர் ஆட்சி முடிவடைந்து சோழப் பேரரசு செழித்தது.

இராஜாதித்தியன் (கி. பி. 949)

இவன் முதலாம் பராந்தக சோழனின் (கி. பி. 907-955) மகன். சோழ வரலாற்றில் முதலாம் பராந்தகனின் மறைவுக்குப் பின்னும் (கி. பி. 955), முதலாம் இராஜராஜன் அரியணை ஏறுவதற்கு முன்னுமான(கி. பி. 985) இடைக்காலத்தில் ஆண்ட சோழ மன்னர்களைப்பற்றிய குறிப்புகள் தெளிவான முறையில் கிடைப்பன அல்ல. முதலாம் பராந்தகனுக்குப் பிறகு இராஜாதித்தியன் பட்டத்துக்கு வந்தான். அவன் தக்

கோலப் போரில்[1] உயிர் துறந்தான். இவனுக்குப் பின் வந்த சோழ அரசர்களின் பட்டியல், பழையனூர் ஆலங்காட்டுச் சாசனங்களினின்றும் ஓரளவுக்குக் கீழ்க் கண்டவாறு கிடைக்கின்றது.

கண்டராதித்தியன் (கி. பி. 949-959).

அரிந்தமன் (கி. பி. 956-957).

இரண்டாம் பராந்தகன் (கி. பி. 956-973) இவனே சுந்தர சோழன் எனப்படுபவன்.:

இரண்டாம் ஆதித்தியன் (கி. பி. 956-969).

மதுராந்தகன் (கி. பி. 970-985).

இரண்டாம் ஆதித்தியன் (கி. பி. 956-969):

இவன் பாண்டியனைப் போரில் வென்று அவன் தலையைச் சோழப் பேரரசின் தலை நகருக்குக் கொண்டு சென்றதாகப் பழைய னூர் ஆலங்காட்டுச சாசனம் ஒன்று தெரி விக்கின்றது [2].

முதலாம் இராஜராஜன் (கி. பி. 985-1016):

இவன் சோழப் பேரரசருள் தலைசிறந்த வன். இவனது முப்பது ஆண்டு ஆட்சி, சோழப் பேரரசரது ஆட்சியிலேயே ஒரு முக்கியப் பகுதி. திருவாலங்காட்டுச் செப் பேடுகள் மகிழ்ச்சிக்குரிய இவனது பிறப் பைக் குறித்து வெகுவாகப் புகழ்கின்றன. இவனது திக்விஜயம் குறித்து திருவாலங் காட்டுச் செப்பேடுகள் பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. பாண்டிய மன்னன் அமர புஜங்களை இவன் வென்று சிறை கொண்ட தையும், ஈழம் (Ceylon) வென்றதையும் சாசனங்கள் வெகுவாகப் புகழ்கின்றன். இதோ ஒரு செப்பேடே சொல்வதைக் கேட்க லாம்: ''இராமர் குரங்குகளின் துணைக் கொண்டு கடல் நடுவே பாலம் அமைத்து மிகவும் கஷ்டப்பட்டுக் கூரிய அம்புகளால் இலங்கை மன்னனைக் கொன்றார். ஆனால் இராஜராஜனின் ஈழவெற்றி, ஸ்ரீராமர் கொண்ட வெற்றியிலும் பெரியது. இப் பேரரசனின் பலம் பொருந்திய படைகள் கப்பல்களில் கடலைக் கடந்து இலங்கை மன்னனுக்குத் தீயிட்டன''. இராஜராஜன் சாளுக்கிய மன்னனைப் புறங்கண்டதையும், அச்சாளுக்சிய மன்னன், இராஜராஜ சோழ னது கடல்போன்ற படையினை எதிர்க்க வலியில்லாது புறமுதுகு காட்டி ஓடியதை யும் சாசனங்கள் சொல்லுகின்றன.

முதலாம் இராஜேந்திரன் (கி. பி. 1012-1044)

இராஜராஜனின் மகன் இராஜேந்திரனும் வரலாற்றுப் புகழ் கொண்டவனே. இரா ஜேந்திரனின் வரலாறு பெரும்பான்மையும் அவனது போர்களையும், அவன் சூடிய வெற்றி வாகைகளையும் கொண்டதாகும். புகழ்மிக்க தனது தந்தையைப் போலவே இப்பேரரசனும் பல போர்களில் வெற்றி வாகை சூடியதையும், கடல்கடந்து வேற்று நாடுகளுடன் தொடர்பு கொண்டதையும் பழையனூர் ஆலங்காட்டுச் செப்பேடுகள் சொல்லுகின்றன. இவன் பாண்டியனைப் போரில் புறமுதுகு காட்டி ஓடச்செய்த தையும், கேரளன மன்னரை வென்று வெற்றிமாலை சூடியதையும், அனைத்திலும் மேலதாகச் சோழன் கங்கை கொண்டதை யும், கடாரம் வென்றதையும், விரிவாகவும் அழகாகவும் இச்செப்பேடுகள் சொல்லு கின்றன.

கரிகாலன் முதலிய பண்டை மன்னர்க ளின் இமயச் செலவுபோன்ற இந்த கங்கைப் பிரதேசமீது எடுத்த படையெழுச்சி, தமிழ் நாட்டு வரலாற்றிலே சிறப்பான இடம் பெற்றதென்றும், முற்காலத் தமிழ் நாட்டு மன்னர்களின் இமயப் படை யெழுச்சியைச் சங்க நூல்கள் விவரித்துக் கூறுவது போலப் பழையனூர் திருவாலங்காட்டுச் செப்பேடு கள் இராஜேந்திரனது கங்கைப் படை யெழுச்சியைப் பற்றிச் சான்று பகர்கின்றது என்றும் வரலாற்று ஆசிரியர் சொல்வர்.

இதோ செப்பேடுகளே சொல்லக் கேளுங்கள்:

கங்கையை இறங்கி வருமாறு தனது தவ வலிமையால் செய்த பகீரதனையும் சூரியகுல விளக்கு (இராஜேந்திர சோழன்) மிஞ்சினான். தனது நாடு கங்கை நீரால் தூய்மையுற அத்தண்ணீரைத் தனது தோள் வலியால் கொணரப் புறப்பட்டான். அந்நீரைக் கொணரத் தனது தளபதிகளில் ஒருவனைச் செல்லுமாறு பணித்தான். அவன் சென்று கங்கை நீரைக் கொணரும்போது கோதா வரி ஆற்றங்கரையிலே அவனை எதிர் கொண்டு அழைத்தான். கங்கை நீரைக் கொணரச் சென்ற இவ்விக்ரம சோழனின் தளபதி நடுவழியில் பல ஆறுகளைக் கடக்கு

1. திரு ஊறல் எனும் இந் தக்கோலம், திரு வாலங்காட்டுக்கு வெகு சமீபத்திலேயே உள் ளது. தக்கோலப் போர் (கி. பி. 949) தமிழக வரலாற்றிலே ஒரு முக்கிய நிகழ்ச்சி. இங்கு, இராஜாதித்தியன் இராஷ்டிரக்கூட மன்னன், மூன்றும் கிருஷ்ணனை எதிர்த்து யானையின்மீது இருந்து போர்செய்து உயிர் துறந்தான். இவனே ''யானையின் மீது துஞ்சிய தேவன்'' என்று புகழப்படுபவன்.

2. இது மிகுதிக் கூற்றே என்று எண்ண வேண் டியிருக்கிறது. இது செப்பேடு வரைந்தவர் ஆதித்தியனின் வீரத்தினை விளக்கப் புனைந்த கற்பனையே. வீரபாண்டியன் போரில் தோற்றது என்னவோ உண்மை. ஆனால் சோழன் அவன் தலைகொண்டதை லேடன் சாசனம் போன்ற மற்றைய சாசனங்கள் உறுதிப் படுத்தவில்லை என்பர் வரலாற்று வல்லுநர்.

வேண்டி இருந்தபோது அதற்காகத் தனது படைகளில் இருந்து பல யானைகளையே பாலமாகப் பயன்படுத்தினன். தான் சென்ற வழிகளில் இருந்த அரசர்களை யெல்லாம் போரில் தோல்வியுறச் செய்து அவர்களையே கங்கை நீரையும் கமந்துவரச் செய்தான்.

பழையனூர் ஆலங்காட்டுச் செப்பேடுகள் இராஜேந்திரன் கடாரத்தில் கொண்ட வெற்றிகளைப்பற்றிப் பேசுவதைப் பார்த்தால், அவைகள் அவனது கங்கைப் படையெழுச்சியினும் மிகப் பெரியவை எனத் தெரியவருகிறது. இக்கடாரப்படையெழுச்சியில் இராஜேந்திரன் பல இடங்களைப் பற்றினன். இவற்றில் இப்போது எளிதில் கண்டுகொள்ளக்கூடிய இடங்கள், கடாரம் (சுமித்திரா), ஸ்ரீ விஜயா (சுமித்திராவிலுள்ள பலம் பேங்க்), பண்ணை (சுமித்திராவின் கிழ்க்கரை), மலையூர் (மலேயாவின் தென்கோடி), இலமூரி (சுமித்திராவின் வடபாகம்) முதலியன. கடாரமும், ஸ்ரீ விஜயமும் பண்டை நாட்களிலேயே பெரும் கப்பல் வாணிபத் தலங்கள். எனவே இவற்றினை இராஜேந்திரன் கைப்பற்றியது, சோழர் கால வாணிபத்தின் செழுமைக்குப் பெரிதும் துணைபுரிந்தது,

ஆட்சி முறை

தமிழக வரலாற்றில் சோழர் காலம் பொற்காலம் எனச் சொல்லுதற்கு அவர் தம் சிறந்த அரசியல் முறையும் ஒரு காரணமாகும். கிராமத்தின் தன்னாட்சி முறையைத் தமிழ் நாட்டின் சங்ககால அரசியல் வரலாற்றிலேயே பார்க்கலாம். பல்லவர் காலத்தில் வலுப்பெற்ற இம்முறை, சோழர் காலத்தில் சிறப்புற்றது. பழைனூர் ஆலங்காட்டுச் சாசனங்களில் இருந்து, சோழர் ஆட்சி முறையைப் பற்றிய சில செய்திகளும் கிடைக்கின்றன. சோழர் அரசாட்சி நல்ல முறையில் நடைபெற, நாட்டின் பல்வேறு இடங்களிலும் இருந்த உள்ளூர் அலுவலகங்கள் (Local offices) சோழப் பேரரசின் தலைமை அலுவலகத்திற்குக் கட்டுப்பட்டு இயங்கின என்றும், கண்காணிகள் என்ற தலைமை அலுவலக அதிகாரிகள் உள்ளூர்களில் இருந்த பலதுறை அரசாங்க அதிகாரிகளையும் கண்காணித்தனர் என்றும் தெரிய வருகின்றது. இவை யாவும் மக்களின் சுய ஆட்சிக்கு உதவுவனவாகவே இருந்தன. மக்களின் சுய ஆட்சி மாண்புற விளங்கியது. ஊர் சுயாட்சிச் சபைகள் ஒன்றுடன் ஒன்று மிகவும் நல்ல முறையில் ஒத்துழைத்தன. எடுத்துக்காட்டாக, பழையனூரின் நாட்டார், பழையனூரைத் தேவதானமாக வழங்கும் போது, பிரம்மதேய கிராமங்களின் பெரியவர்களும் கேவதானம், பள்ளிச் சந்தம் என்பன போன்ற பல திறப்பட்ட நில உரிமைகளைக் கொண்ட ஊர்களின் ஊர்களிலார்களும், நகரங்களின் ஊர்களிலார்களும் ஒத்துழைத்தனர் எனச் சாசனங்கள் சொல்லுகின்றன.

மேலும், சோழர் சுய ஆட்சி முறையில் நாட்டார்களைக் கொண்ட நாடு என்ற ஊர்ச் சபை, ஊர்களிலார்களைக் கொண்ட ஊர்கள், நகரங்கள், இவைகளின் சபைகளினின்றும் வேறுபட்டது என்றும், மேலும் ஒரு நாட்டின் சபை அது தனது எல்லையுள் அடங்கிய ஊர்கள், நகரங்கள் இவற்றின் சபைகளினின்றும் போந்த பிரதிநிதிகளைக் கொண்டது. என்றும் சாசனங்கள் தெரிவிக்கின்றன

சமூக உயர்வின் திருக்கோயிலில் பணி

சமுதாய உயர்வில் பழையனூர் திருவாலங்காட்டுக் கோயில் மிகுதியும் கருத்து செலுத்தியதைச் சாசனங்களின்றும் காண்கிறோம். மதுவிலக்கு அந் நாளிலேயே கோயில் நிலங்களில் (அமுலில்) இருந்தது என ஒரு சாசனம் கூறுகிறது. இவ்வூரில் (பழையனூர்), ''தெங்கு பனையும் ஈழவர் ஏறப் பெறுததாகவும்'' என்று குறிக்கும் இச்சாசனம் அந்நாளிலே, கோயில் நிலங்களில் இருந்து கள் இறக்குதல் இல்லை என்பதனையும், மதுவிலக்குக் கொள்கைக்கு இது ஆதாரமானது என்பதனையும் அறிவிக்கிறது. சுருங்கக்கூறின் திருவாலங்காடர் கோயில் சமய வாழ்க்கைக்கு மட்டும் அன்றி, சமூக வாழ்க்கை உயர்வுக்கும் நிலைக்களனாக இருந்தது.

கல்வி, கேள்வி, கலை நலன்களும், சமயவளர்ச்சியும்

சோழர் காலம் தமிழ் நாட்டின் பொற்காலம் என்பதற்கு அவர் தம் காலத்தில் கல்வி, கேள்வி நலன்களும் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தன என்பதோர் காரணமாகும். பழையனூர் ஆலங்காட்டுச் சாசனங்களின் வாயிலாக. சோழர் காலத்திலும், அவர்க்குப் பிற்பட்ட விஜயநகர மன்னர் காலத்திலும், தமிழ் நாட்டில் பாட்டும், புலமையும், பக்தி நெறியும் பெரிதும் பரந்து செழித்ததைப் பார்க்கிறோம். சோழ மன்னர்கள் சைவ சமயத்தவர் எனினும், அவர்கள் பிற சமயங்களையும் போற்றினர். பல்லவர் காலத்திலேயே சைவமும், வைணவமும் தழைத்த போதிலும் இவற்றின் ஒழுங்கு முறையெல்லாம் சோழர்

1. இது இப்பொழுது கிடைக்கப் பெறுவதில்லை.

காலத்திலேதான் சீர்ப்படுத்தப்பட்டன என வரலாற்று ஆராய்ச்சியாளர் சொல்லுகின்றனர். சோழர் காலம் இந்து சமயத்தின் - குறிப்பாக சைவ சமயத்தின் - வளர்ச்சிக் காலம் என்ருல் அது மிகையாகாது. எடுத்துக்காட்டாக, ஒரு சாசனம் சொல்லுவதைப் பார்ப்போம். இது திருவாலங்காட்டுக் கோயிலுக்கு ஒரு திருவிளக்கு அறம் செய்த அரும்பாகத்தைச் சேர்ந்த அருள்நிலை விசாகன் பிரைலோக்கிய மல்லன் வத்ஸராஜன் என்பவனைப் பற்றியதாகும். இவன் கி பி. 1210-ல் ஆலங்காட்டு அடிகளார்க்கு ஒரு திருவிளக்கு அறம் செய்யுங்கால், தன்னை பாரதத்தை[1] அழகிய தமிழில் பாடியவனும், சிவனை அடையும் முக்தி நெறி கண்டவனும் எனச் சாசனத்தில் கூறிக்கொள்கின்ருன். விஜய நகர மன்னர் காலத்துச் சாசனம் ஒன்றில் இருந்து விஜய நகர மன்னன் வீரப்பிரதாப சதாசிவ தேவ மகாராயன் காலத்தில் (கி. பி. 1542-1576) வேத மார்க்க பிரத்திஷ்ட பாணுச்சார்ய தர்ம சிவாச்சாரியார் எனும் தத்துவ ஞானி ஒருவர் வாழ்ந்தார் எனத் தெரிகிறது. மேலும் விஜய நகர மன்னன் காலத்திய மற்ருெரு கல்லெழுத்திலிருந்து முதலாம் திருமலை காலத்தில் (கி. பி. 1570.1571) சைவ சமயாசாரியர் அனந்த சிவாச்சாரியார் என்பவரும், அவர் மாணுக்கர் பொன்னம்பல சிவாச்சாரியார் என்பவரும் வாழ்ந்து சைவ சமயத் தொண்டாற்றினர் எனவும் தெரிகிறது,

சோழர் காலத்தில் கட்டிடக்கலையும், சிற்பக்கலையும் சிறப்புற்றிருந்தன. இதற்குச் சான்று பகரத் திருவாலங்காட்டுத் திருக்கோயிலே சாலும். சோழர் காலத்தில் சிற்பக்கலை மிகச் சிறந்து விளங்கியதனை முன்னரே குறித்தோம். திருவாலங்காட்டு நடராஜர் செப்புப் படிமங்கள் இன்று திக்கெல்லாம் (இலண்டனிலும், பாரிசிலும்) புகழப்படுகின்றதன்ருே?

இவ்வண்ணம், பழையனூர் ஆலங்காட்டுச் செப்பேடுகளானும் கல்லெழுத்துக்களானும் அந்நாளிலே மக்களும் பல்வேறு மன்னரும் கோயிலுக்குப் பேராறங்கள் புரிந்ததையும், சமுதாய நலம் ஓங்கி நின்றதையும், கல்வி, கேள்வி, கலை நலங்கள் சிறந்து விளங்கினதையும், சோழப் பேரரசரின் பேராற்றலையும், அவர் தம் ஆட்சி முறையின் சீரிய இயல்புகளையும் கண்டோம். அனைத்தினும் மேலதாக, திருக்கோயில்கள் மக்களின் இகபர வாழ்க்கையுடன் இரண்டறப் பிணைப்புற்றுண்டு விளங்கியதும் கண்டோம். இது பற்றியே, ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்னும் முதுமொழி பிறந்தது போலும்.

பிற் சேர்க்கை-I

பழையனூர் ஆலங்காட்டுச் சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அரசர்கள்*

I. கங்க பல்லவர்:

1. நிருபதுங்கதேவன் (கி. பி. 855—896).
2. இராணி காடவன்மாதேவியார் (மன்னன் நிருபதுங்க தேவனின் பட்டத்தரசி)

II. சோழப் பேரரசர், மற்றும் சிற்றரசர்:

1. பேரரசன் ஆதித்தியன் I கி. பி. 871—907).
2. இராஜாதித்தியன் (கி. பி. 949).
3. கண்டராதித்தியன் (கி. பி. 949—99).
4. அரிந்தமன் (கி. பி. 956—957). 5 கி
5. ஆதித்தியன் IIகி. பி. 956—969) (கரிகாலன்).
6. கோபரகேசரி வர்மன் என்னும் திரிபுவன சக்கரவர்த்தி பராந்தகதேவன் (இரண்டாம்), (கி. பி. 956—973).
7. மதுராந்தகன் (கி. பி. 970—985)
8. இராஜராஜன் (முதலாம்), (கி. பி. 985—1016).
9. கோராஜகேசரிவர்மன் குலோத்துங்கன். (முதலாம்), (கி. பி. 1070—1118).
10. பரகேசரி வர்மன் என்கிற உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழதேவன் (முதலாம்), (கி. பி. 1012—1044).
11. இராஜகேசரி வர்மன் என்கிற உடையார் ஸ்ரீ இராஜாதி இராஜதேவன் (முதலாம்), (கி. பி. 1018—1054.)
12. இராஜகேசரி வர்மன் என்கிற சக்கரவர்த்தி விக்கிரம சோழ தேவன் (கி. பி. 1118—1135).
13. திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் இராஜாதி ராஜன் (இரண்டாம்), (கி. பி. 1173—1178)
14. திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ வேந்தன் (மூன்ரும்) (கி. பி. 1178—1218).
15. இராஜராஜதேவன் (மூன்ரும்), (கி. பி. 1216—1256).
16. தம்முசித்தி (Tammusiddhi).
17. பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பனுன அண்ணன் பல்லவராஜன் ஈழத்தான் பராக்கிரமபாகு ஆழ்வான்.

III பாண்டிய மன்னர்:

1. ஜடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன். (கி. பி. 1251—1269).

* இப்பட்டியல் பூரணமானதன்று (The list is not exhaustive.)

IV. விஜயநகர மன்னர், மற்றும் அவர்தம் சிற்றரசர்:

1. சாளுவ மன்னன் திப்பைய தேவ மகாராஜன்.
2. வீரப்பிரதாப தேவராய மகாராயன் (இரண்டாம் தேவராயனின் தம்பி). (கி. பி. 1426—1446).

3. மல்லிகார்ச்சுன தேவ மகாராயன் (கி.பி. 1447—1465), இரண்டாம் தேவ மகாராயனின் மகன்.

4. வீரப்பிரதாப சதாசிவதேவ மகாராயன் (கி. பி. 1542—1576).

5. வீரப்பிரதாப திருமலைத்தேவ மகாராயன் (முதலாம்), (கி. பி. 1570—1571).

6. விஜயநகர மன்னன் கம்பண உடையார்.

7. கிருஷ்ணராயன்.

பிற் சேர்க்கை-II

பழையனூர் ஆலங்காட்டின் சாசனங்களுள் எடுத்துக்காட்டாக ஒன்று

[இது திருவாலங்காடு வடாரணியேசுரர் ஆலயத்தில், நடராஜர் கோயில் பிராகாரத்தில் உள்ளது.
அரசன்: இராஜாதிராஜன்-II (கி. பி. 1173—1178).
காலம்: கி. பி. 1176.]

''ஸ்வஸ்திஸ்ரீ, கடல் சூழ்ந்த பார்மாதரும் (பூமிதரும்) கலைமாதரும் அடல் சூழ்ந்த போர் மாதரும் சீர்மாதரும் அமர்ந்து வாழ, நாற்கடல் சூழ் புலியெழும் பாற்கடல் சூழ் அகழ் பரப்ப, ஆதியுகம் ஆம் என்னச் சோதிமுடி புனைந்தருளி, அறு சமயமும் ஐம் பூதமும் நெறியில் நின்று பாரிப்ப, தென்னவரும் சேரலரும் சிங்களரும் முதலாய மன்னவர்கள் திறை சுமந்து வந்தீண்டிச் சேவிப்ப, ஊழியூழி ஒரு செங்கோல் ஏழு பாரும் இனிதளிப்பச், செம்பொன் வீர சிங்காசனத்து, உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோ இராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவது, நாள் நூற்றைம்பத்தேழினால், திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான், ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மேன்மலைப் பழையனூர் நாட்டுப் பழையனூர், பழையனூர் உடையார், திருவாலங்காடுடையார் கோயிலில் தேவகன்மிக்கும் ஸ்ரீ மாஹேச்வரக் கண்காணி செய்வார்களுக்கும்:

பழையனூருடையான் வேதவனமுடையான் அம்மையப்பனை அண்ணன் பல்லவராஜன் ஈழத்தான் பராக்கிரமபாகு ஆழ்வான்போதே தொடங்கி, சோழ ராஜ்யத்துக்கு விரோதமாயிருப்பன பலவடிகளாலுஞ் செய்யப் பார்த்து, இதுக்கு உறுப்பாகப் பாண்டி நாட்டிலே படையற விட்டு....குலசேகரனையும் மதுரையில் நின்றும் வெள்ளாற்றுக்கு வடகரையிலே போதப் பண்ணினபடியாலே, [வினைக்கேடுகளு]ம் செய்யப் பார்த்த இடத்து, இதற்குப் பரிகாரமாக, குலசேகரர்க்கு வேண்டுவனவும் செய்து, முதலிகளும் படைகளும் போகவிட்டு, ஈழத்தான் படையையும் இப்படைக்குக் காரணவரான இலங்காபுர தண்டநாயக்கனும் ஜெகத்ரயத் தண்ட நாயக்கனும் உள்ளிட்டாரையும் கொன்று, மதுரை வாசலிலே இவர்கள் தலைகளைத் தேய்ப்பித்து, இவ்வூரிலே குலசேகரரையும் புகவிட்டுச் செல்லா நிற்க,....கு விரோதமாயிருப்பன செய்யப் பார்த்து, இவன் தன் படை நிலையான ஊரத்துறை, புலைச்சேரி, மாதோட்டம், வல்லிகாமம், மட்டிவாழ் உள்ளிட்ட ஊர்களிலே படைகளும் புகுதவிட்டு, படவுகளும் செய்விக்கிறபடிக் கேட்டு, இதுக்குப் பரிகாரமாக ஈழத்தான் மருமகனுராய் ஈழராஜ்யத்துக்கும் கடவராய் முன்பே போந்திருந்த சிவல்லவரை அழைப்பித்து, இவர்க்கு வேண்டுவனவும் செய்து, இவரையும் இவருடனே வேண்டும் படைகளும், ஊராத்துறை, வல்லிகாமம், மட்டி வாழ் உள்ளிட்ட ஊர்களிலே புகவிட்டு, புலைச்சேரி மாதோட்டம் உள்ளிட்ட ஊர்களும் அழித்து, ஈழத்தானின வாய் இவ்வூர்களில் நின்ற ஆனைகளும் கைக்கொண்டு, ஈழ மண்டலத்தில் கீழ் மேல் இருவதின் காத மேற்படவும் தென் வடல் முப்பதின் காத மேற்படவும் அழித்து, இத்துறையில் இவன் மனிச்சராயிருந்தாரில் கொல்வாரையும் கொன்று, பிடிப்பாரையும் பிடித்து, இவர்களையும், சரக்காய்க் கைக்கொண்டனவும், பிடித்த ஆனைகளும், அழைப்பித்து, இவன் நமக்குக் காட்டி ஈழ மண்டலத்துக் காரியம் எல்லாப் படியாலும் இவன் அழிய செய்வித்த படிக்கும், பாண்டியனுற் குலசேகரர் தமக்கு முன்பு செய்த நன்மைகளும் பாராதே, ஈழத்தானுடனே சம்பந்தம் பண்ணவும், இவனும் இவரும் கூடநின்று சோழ ராஜ்யத்திற்கு விரோதமாயிருப்பன செய்யவும் கடவதாக நிச்சயித்து, இதுக்கு உறுப்பாகப் பாண்டி நாட்டு ஏழகத்தாரிலும் மறச் சாமந்தரிலும் நமக்குச் சேர்வுபட்டு நின்று பணி செய்கிற இராஜராஜக் கற்குடி மாராயனும், இராஜ கம்பீர அஞ்சு கோட்டை நாடாழ்வானும் உள்ளிட்டாரை அத்துறைகளில் நின்றும் வெள்ளாற்றுக்கு வடகரையிலே போதப் பண்ணி, இலங்காபுரி தண்ட நாயக்கனும் ஜெகத்ரயத் தண்ட நாயக்கனும் உள்ளிட்டார். தலைகளாய் மதுரை வாசலிற் தைச்ச தலைகளும் வாங்கிப் போக விடுத்து, எல்லாத் தீமைகளும் செய்யக் கடவதாகக் கருதி செய்கிறபடியும் ஈழத்தான் குலசேகரருடன் கூட நின்று உதவி செய்கை சூட்டி, இவருடன் சார்வுபட்டு நின்ருர்க்கு வரக்காட்டின ஓலைகளும் வஸ்துக்களும் வழியிலே இவை (எல்லாப்)படியாலும் சோழ இராஜ்யத்துக்கு விரோதமாய் இருக்கையாலே, இவனை அங்கு நின்றும் போக்கி, முன்பே பிடித்து, மதுரைக்குக் காரணவரான பராக்கிரம பாண்டியர் மகனுர் வீரபாண்டிய தேவரை மதுரை (கோயிலில் இடக்கடவதாக இவனுக்கு நாம் சொல்லி, பெலங்களையும் வேண்டுவாரையும் போக விடுவனவும் விட்டு) இவ்வத்துவாலும் குதிரையாலும் வேண்டுவன வையிற்றில் நமக்குச் சொல்லிச் செய்ய வேண்டுவனவும் செய்வித்து, அல்லாதன இவனே மிகுதிப்பட நேர்ந்தும் செய்து, சுருக்கி(ன) நாளைக்குள்ளே மதுரை....(னைப் போக்கி, வீரபாண்டிய தேவரை மதுரையில் புக விட்டபடிக்கும், இவனுக்கு அருமொழி) தேவ வளநாட்டு, நென்மலி வளநாட்டு, இராஜராஜன் பழையனூரிலே பதிற்று வேலி நிலம் பன்னிரண்டாவது முதல் அந்தராயம், பாட்டம் உள்பட இறையிலியாக இட்டு, இப்படி உடையார் திருவாலங்காடுடைய ....மூவேந்தவேளான். இவை நீல கங்கரையன் எழுத்து. இவை தீபத்தரையன் எழுத்து. இஸவ கனகராஜன் எழுத்து. இவை மலையப்பி ராஜன் எழுத்து. இவை மழவ....து. இவை வில்லவ ராயன் எழுத்து.''

சிதம்பரம் கோயிற் சிற்பம்

மறை, திருநாவுக்கரசு, தமிழ் விரிவுரையாளர்

வ. உ. சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

பண்டைக்காலந் தொட்டு நம் பாரத நாடு கலைக்கு இருப்பிடம் என்று போற்றப்பட்டு வருகின்றது. பாரதத்தின் தென்பாகமாகிய தமிழ்நாடு கலைகள் பலவற்றிற்குப் பிறப்பிடம், சிறந்த பீடம் என்று அறிந்தோர் கூறுவர். கலைகளில் சிற்பம் ஒன்று. சிற்பத்தைக் கலைகளின் தலைவன் என்றுங் கூறலாம். கவர்ச்சியில்லாக் கற்பாறைகளைச் சிற்பிகள் தம் அறிவினாலும் கைத்திறத்தாலும் அழகு பொழியும் சிலைகளாக அமைத்துவிடுகின்றார்கள். உயிருள்ள பொருள்களைக் கண்டால் கூடப் பலசமயங்களில கவர்ச்சி ஏற்படுவதில்லை வெறுப்புங்கூட ஏற்பட்டுவிடுகின்றது. ஆனால், வெறுக்கதக்க வடிவங்கள் கூடச் சிற்பமாக அமைந்துவிடுமபோது அவ்வடிவங்களின் அழகு அளவற்ற கவர்ச்சியும், ஆர்வமும் தருகின்றது.

இத்தகைய சிற்பங்கள் நம் தமிழ் நாட்டுக் கோவில்களில் ஆயிரக்கணக்கில் அமைந்து கிடக்கின்றன. அசட்டை செய்யக்கூடிய அளவிற்கு ஏராளமாய்க் கிடக்கின்றன. தமிழகம் கற்கோயில்களால் ஆகிய கோயில் நாடு என்று கூறக்கூடிய நிலையிலுள்ளது. தமிழ் நாட்டின் தலைசிறந்த பெருங் கோயில்களில் சிதம்பரம் கோயில் மிகவும் சிறப்புடையது, பெயர் குறிப்பிடாமல் ''கோயில என்றால்'' அது சிதம்பரத்தைக் குறிக்கும். இது சைவ சமயத்தவர்கள் கருத்து; ஆர்வமுமாகும.

சைவ சமயத்தில் நால்வர்களால் பாடப் பெற்ற தலங்கள் 275. இத்தலங்களில் முதலாவதாகக் கணக்கிடப்படுவது சிதமபரம். சிவசமயப் பாடல்களை மிகுதியாகப் பெற்ற தலங்களிலும் சிதம்பரமே முதன்மையுடையது. சிதமபரத்தின் பெருமைகள் அளவிட முடியாதன, அத்தலம் சைவத்தின் உயிர்நாடி. இவ்வாறு சிதம்பரம் சிறப்பாக விளங்குவதற்குப் பலகாரணங்கள் உண்டு. அக்காரணங்களில் சிறந்தது ; அங்கே அமைந்து விளங்கும் சிற்பத்தின் உயிராக ஒளிரும் நடராஜப் பெருமான் சிற்பமேயாகும். சிற்பக்கலையின் சிறப்புக்கள் எல்லாம் ஓரிடத்தில் ஓர் வடிவத்தில் அமைந்திருக்கின்றதென்றால் அது நடராஜர் வடிவமேயாகும. சிற்பத்தின் தனித்தெய்வமான அம்பலவாணனுடைய கோயிலாதலால் சிதம்பரங்கோயிலில், பஞ்சலோகத்தால் ஆகிய சிலைகளின் சிற்டங்களும், கற்சிலைகளால் ஆன சிற்பங்களும் ஏராளமாயுள்ளன. அச் சிற்பங்களில், சிலவற்றை என்னுடன் பார்க்க வாருங்கள்; மாணவர்களே முதலில் கிழக்குக் கோபுரத்தைப் பார்ப்போம்.

கிழக்குக் கோபுரச் சிற்பங்கள்

சிதம்பரத்து நான்கு கோபுரங்களும் அவற்றை இணைத்து நிற்கும் மதில்களும் பெருந்தோற்றந் தருவன. இவற்றிற் சிலப் பகுதிகளைப் புதுக்கியோர் கட்டியோர் பிற்காலச் சோழர்களாவர். இவர்கள் அரசு புரிந்த காலம் 11, 12, 13,ஆம் நூற்றாண்டுகளாகும். கிழக்கு கோபுரவாயிலைச் செப்பனிட்டவன்; கோப்பெருஞ்சிங்கன் 2வது (கி.பி. 1243—1279) இக்கோபுரம் 135 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் உள்வாயிலின் இருபுறத்தும் உள்ள திண்ணைகளில் கோப்பெருஞ்சிங்கன் சிலையும், பச்சையப்ப முதலியார் சிலையும் அமைந்துள்ளன. 18ஆம் நூற்றாண்டில் இக்கோபுரத்தைப் புதுக்கியவர் இம்முதலியாரேயாவர்; இவர் பெயரால் தான், சென்னை, காஞ்சி, சிதம்பரம் முதலிய நகர்களில் கலைக்கூடங்கள் அமைந்துள்ளன.

கோபுரத்தின் மேற்பகுதியின் வெளிப்புறங்கள் முழுவதிலும் சுதைகளாற் செய்யப்பட்ட பதுமைகள் காடசியளிக்கின்றன. நம் புராணங்களில் உள்ள பல கதைகளைச் சுதைச் சிற்பங்களாக அழகாக அமைத்துள்ளனர். நாம் காணும் சிற்பங்கள் பஞ்சலோகத்தாலும், சுதைகளாலும் ஆக்கப்பட்ட சிற்பங்கள் அல்ல. கற் சிற்பங்களும் தான் காண இருப்பவையாகும. இனி அச்சிற்பங்களையே பார்த்துவிடுவோம்.

இந்திரன்

இச் சிற்பம், ஐராவதம் என்னும் தன் வாகனமாகிய யானையின் மேல் தேவர்க்கரசனாகிய இந்திரன் அமர்ந்திருப்பது போல அழகாகக் கம்பீரமாகக் காட்சியளிக்கினறது. கலியாண சுந்தர சிற்பம்:– சிவபெருமான் பார்வதயை மணக்கும் முறையில் பார்வதியின் கையைப் பற்றி நிற்கும் வகையில் அழகாக வடிக்கப்பட்டிருக்கின்றார். மாப்பிள்ளையின் மகிழ்ச்சி மனம் அவர் முகத்தில் அப்படியே காட்டப்பட்டுள்ளது. நாணமும், மகிழ்ச்சியுங்கலந்த மணமகளின் தன்மை பார்வதி சற்றே முன் சாய்ந்து சிறிதே முகங்கவிழ்ந்து நிற்கும் நிலையில் அழகாக அமைந்திருக்கின்றது. பரமசிவனை மணங்கொள்ளும் அவள் ஆனந்தம் பார்வதியின் முகத்தில் வழிகின்றது. கடைக் கண்ணால் கீழ்நோக்குவது போலக் கணவனைக் காணும் அவள் பார்வையின் இனிமைதானென்ன ?

அகத்தியர் சிற்பம் :— அகத்தியர் கட்டை விரலளவுக் குட்டைவடிவினர். சிவபெருமானுக்கு நிகரான பெருமைகளையுடையவர். மாபெரும் முனிவர் முனிவர் தலைவருமாவர். அதனுற்றன், சிவபெருமான் தன் திருமணத்தின் போது தேவர் முதலியவர்களின் பெருங்கூட்டத்தால் தாழ்ந்துவிட்ட இமயத்தின் சிகரத்தை உயர்ந்து விட்ட பொதிகைமலைக்குச் சமமாக அமையும் பொருட்டு அகத்தியரைப் பொதிய மலையின் உச்சியில் விற்றிருக்கச் சொன்னர் அப்படியே அகத்தியர் செய்தபோது இமயமும, பொதியமும சமமாக நின்றதாம். ஆம் வடககும் தெற்கும் பொருளாதாரம் உள்ளிட்ட எல்லாத்துறைகளிலும் சமமாக இருந்தால் தான் நாடு நலம் பெறும; நாட்டில் ஒற்றுமையும் நிலவும். அக்கதை இவ்வுண்மையைக் காட்டுகின்றதோ ? என்னவோ ? அகத்தியர் கங்கையை தம் சிறு கமண்டலத்தில் கொண்டு வந்து குடகு மலையிலுள்ள சையமலையில் சிவபூசைகள் செய்ய முற்படுகையில் விநாயகரால் கமண்டலம் கவிழ்க்கப்பட்டு அதிலிருந்த கங்கை காவிரியாய் ஓடத் தொடங்கியது தமிழ்மொழியையும் அவர் தாம் வளர்த்ததாகக் கதையுண்டு. அகத்தியர் தன் கையில் கமண்டலத்தை வைத்துக் கொண்டே தில்லை நடராஜனின் கூத்தைக் காண வந்து நிற்கின்றார். ஆள் குட்டையானாலும் அவர் சடைமுடியும், தாடியும், நீண்டும தொப்பை பெருத்தும் காணப்படுகின்றார். ஆனந்தத் தாண்டவங்காணும் அவர் சிரித்த முகத்தில் நாம ஆனந்தத் தாண்டவத்தை அழகாகக் காண்கின்றோம்.

நாரதர் சிற்பம் :— நாரதர் கலகப்பிரியர் என்று யாவருங் கூறுவர். அவர் கலகம் நன்மை விளைக்கும் தன்மையுடையது என்று அறிந்தார் சொல்லுவர். நாரதருக்கு இசையில் மிகுந்த விருப்பம் உண்டாம். அந்த இசைக்கு ஏற்ற இனிய யாழைக் கையில் கொண்டிருப்பாராம். இசையை யாழில் மீட்டி ஈசனை இன்பமாகப் பாடி ஆடி ஆனந்தமாய் இருப்பாராம். புராணங்கள் இவர் வடிவைப் பாட்டில் இப்படித் தீட்டி காட்டும். அக் காட்சி நம் காது வழியாகக் கருத்துக் கண்களில் தான் தெரியும். இத் தொல்லை நீங்கச் சிற்பம் வல்லான் கருங்கல்லில நாரதரின கோலத்தை உள்ளபடிக் காட்டி விட்டான். கல் மறைந்து விட்டது. நாரதர் தான் நம்புறக் கண்முன் யாழேந்திக் கூத்தன் ஆட்டத்தை அகமகிழ்ந்து பாடிக் கொண்டு நிற்கின்ருர். யாழ் பிடித்திருப்பதற்கேற்றவாறு அவர் உடலும் சிறிது வளைந்து தான் இருக்கின்றது. அப்படித்தானே இருக்க வேண்டும். முனிவர்களுக்குச் சடையுண்டு. இந்த நாரதமாமுனிவருக்குச் சடையைச் சார்ந்து சடையின்பின்புறம் வேலை பாடமைந்த அழகான திருவாசியும் அமைந்திருக்கின்றது. அதன் காரணம் யாதோ ?

அசுவனி தேவர்கள் சிற்பம் :— தேவர்களுக்கு இவர்கள் மருத்துவர்கள். மருத்துவர்கட்குப் போதிய தேர்ச்சி இல்லாவிட்டாலும் உடையில் குறையிருக்கலாமா ? ஆடம்பரத்தில் குறையிருக்கலாமா ? படிக்காவிட்டாலும கையில் வைத்தியம பற்றிய புத்தகங்கள் வேண்டுமல்லவா ? நல்ல தோற்றம் அவர்கட்கு மிகவும் தேவையல்லவா ? சிற்பி இவைகளை எல்லாம் தான படைத்த மருத்துவர்கட்குச் சரியாக அமைத்து விட்டான். இம்மருத்துவர்கள், தேவர்களைப் பார்த்து உங்கட்கு என்ன நோய் ? அஞ்சாதீர்கள், இதோ மருந்து என்று கேட்கும் முறையில் அழகாக நிற்கின்ருர்கள். தேவர்களைக் காணோம் இவர்கள் அவர்களைக் கேட்கின்ருர்களோ ? என்னவோ ? ஒன்று மட்டும் உண்மை. நம்மைப் பார்த்துத் தான் அப்படியெல்லாம் கேட்கின்ருர்கள் இதில் ஐயம் உள்ளவர்கள் நேரில் போய்ப் பார்த்து உண்மையை அறிந்து கொள்ளலாம்.

பரதநாட்டியச் சிற்பங்கள் :— இவை பல வகை அபிநயங்களோடு வடிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்த்துப் பரதத்தின் பல நிலைகளை அறியலாம்.

இனித் தென் கோபுரத்திலுள்ள சிற்பங்களுக்குப் போவோம்.

திரிபுராந்தகச்சிற்பம் :— இக்காலத்து வல்லரசுகள் இரும்பு, பொன், வெள்ளிகளைக், கோட்டைக் கோட்டையாகக் குவித்து வைத்துக் கொண்டு எளிய நாடுகளை அடக்கி அழித்து ஆதிக்கம் கொள்வதைப் பார்க்கின்றோம். பழையதோர்யுகத்தில் இப்படி இராக்கதர்கள் பொன், இரும்பு, வெள்ளிகளால் கோட்டைகள் அமைத்துக் கொண்டு வான்வழியாக பறந்து சென்று தேவர்களின் நகரங்களை அழித்தனர். வருத்த மடைந்த தேவர்கள் சிவபெருமானை வேண்ட அவர் அவர்களை அழிக்கப் புறப்பட்டார். பிரபஞ்சம் தேரானது; பிரம்மாசாரதியானர், விஷ்ணு அம்பானர். இப்படி எல்லாத் தேவர்களும் சிவபிரானுக்குத் துணையாய் நின்றனர். சிவபிரான் போருக்குத் தயாராய் நின்ருர். அப்போது, "தேவர்கள்" நாம் எல்லோரும் இல்லாவிட்டால் சிவபெருமான் இராக்கதரை அழிக்க முடியுமா"? என்று தற்பெருமை கொண்டனர். இஃதுணர்ந்த சிவபெருமான் ஒருவர் உதவியுமின்றி ஒரு கருவியின் உதவியுமின்றி திரிபுரங்களையும் தம் புன்னகையால் பார்த்தார் அவ்வளவில் அவ்வரக்கர் மூவரும் தம் நகரங்களுடன் சாம்பலாயினர் இந்நிலையில் அமைந்தது தான் சிவபிரானின திரிப்புராந்தக சிற்பம். புனனகையால் அழித்தாராதலால் அவர் கையிலுள்ள வில் வளையாதிருக்கின்றது. தூலமாகிய அம்பும் வில்லில் கோக்கப்படாது நேராயுள்ளது. போர்க்கோலத்தில் நிற்கும் பிரானின் கோலமே கண்டாரை அழிக்கும் ஆற்றலுடையது போல அமைந்துள்ளது. பார்வதி தேவியாரை அஞ்சல் ! என்று அரவணைத்துக் கொண்டு ஆண்டவன் நிற்பினும் அச்சத்தால் அவர் தலையை ஓர்பக்கம் சாய்த்துக் கொண்டு போரைப் பார்க்கின்ருர். எதிரிகளின் எளிமை நோக்கி இறைவன் இகழ்வுச் சிரிப்புக் கொள்ளும் போதே அவன் தோற்றம வீரத்தின் உருவாக விளங்குகின்றது. உண்மையில் அவன் சினங் கொணடால்-அதனைச்சிற்பி வடித்து விட்டால் அச் சிற்பத்தை நாம் காணப் போவதும் ஆபத்தாய் முடியுமல்லவா ? கடவுளின் உருவத்தைச் சிற்பி பிடிக்காவிட்டாலும் அவன் வீரத் தோற்றத்தைப் பிடித்துக் கல்லில் கட்டி விட்டானே வியப்புதான்.

வேளாளர் பெருமை

[நிலக்கிழார் திரு. கே. இராஜு முதலியார் அவர்கள்]
கைவண்டூர், *Member, Madras State Agricultural Extension Council.*

"வேளாண் மாந்தருக்கு உழுதூண் அல்லது இல்லென மொழிப் பிறவகை நிகழ்ச்சி" எனத் தொல்காப்பியர் கூறியதற்கு ஏற்ப, தொன்று தொட்டு உழவுத்தொழிலை மேற்கொண்டு, உணவுப் பொருள்களை விளைவித்து உலகுக்கு நலம்பல புரிந்துவரும் பெருங்குடி மக்களே, வேளாளர்கள் எனப்படுபவராவர். ஒரு நாட்டிற்கு மிகமிக இன்றியமையாதவர்கள் உழவுத் தொழில் புரியும் வேளாளர்களே என்பதனை எல்லோரும் உடன்படுவர். அதுபற்றியே தெய்வப்புலவர் திருவள்ளுவர். "தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு"—என்னும் திருக்குறளில் 'தள்ளா விளையுள்' என உற்பத்தியைப் பெருக்கும் உழவர் பெருமக்களாகிய வேளாளர்களையே, முதற்கண்குறிப்பிட்டார்.

வேளாளர்களின் பெருமையினை நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியத்தினை இயற்றியருளிய இளங்கோவடிகளும் புகழ்ந்து கூறியுள்ளார். அரசனுக்கு வெற்றியையும், இரப்போர்களுக்குச் சுற்றத்தையும், உண்டாக்கிப் பாதுகாப்பவர்கள் உழவர்களே என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர் பழவிரல் ஊர்கள்" என்னும் வரிகளால் சிலப்பதிகாரம் வேளாளர்களின் சிறப்பினைப் புகழ்ந்திருத்தல் காணலாம்.

"வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்" என வரும் பாடலால் வேளாளர்களின் விருந்தோம்பும் பண்பை உணரலாம். ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னர் விளங்கியிருந்த திருஞானசம்பந்தப் பெருமான் வேளாளர்களின் வள்ளன்மையினைத் தமது தேவாரத்தில் புகழ்ந்து பாராட்டியிருக்கின்றார்.

"வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே."

"இன்மையால் சென்றிரந்தார்க்கு இல்லையென்னாதீந்துவக்கும் தன்மையார் ஆக்கூரில்தான்தோன்றி மாடமே"

என்னும் தேவாரப் பாடல்களின் அடிகள் வேளாளர்களின் மாட்சியினை வியந்து போற்றியிருத்தல் காணலாம்.

வேளாளர்கள் தங்கள் வயல்களில் நட்ட நாற்றின் முடி திருந்தினால் தான் அரசர்கள் கவித்த மணிமுடி திருந்தும்; வேளாளர்களின் ஏரடிக்கும் சிறு கோலாலேயே அரசர்களின் செங்கோல் செலுத்தப்படுகின்றது. இவ்வுண்மையினை.

"காராளர் அணிவயலில் உழுது தங்கள்
கையார நட்டமுடி திருந்தில் இந்தப்
பாராளும் திறல் அரசர் கவித்த வெற்றிப்
பசும்பொன்மணி முடிதிருந்தும் கலப்பை
பூண்ட
ஏராலெண் திசைவளர்க்கும் புகழ் வேளாளர்
ஏரடிக்கும் சிறுகோலால் தரணியாளச்
சீராரு முடியரசர் இருந்து செங்கோல்
செலுத்துவர் வேளாளர் புகழ் செப்ப
லாமோ"

எனவரும் செய்யுளில், சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களில் ஒருவரான உமாபதி சிவாசாரியர்,

அருளிச் செய்திருத்தலை அருந்தி இன்புறுதற்குரியது.

சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவரில் வாயிலார், சத்தியார், விறல்மிண்டர், திருநாவுக்கரசர், சாக்கியர், கோட்புலியார், மானக்கஞ்சாறர், ஏயர்கோன் கலிக்காமர், இளையான்குடிமாறர், மூர்க்கர், அறிவாட்டாயர், செருத்துணையார், முனையடுவார் என்னும் பதின்மூவர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவரேயாவர்.

"வாயிலார் சத்தியார் விறல்சேர் மிண்டர்
வாக்கரையர் சாக்கியர்கோட் புலிகஞ்சாறர்
ஏயர்கோன் கலிக்காமர் முனைவீத் தாக்கும்
இளையான்றன் குடிமாறர் மூர்க்கர் செங்கைத்
தாயனார் செருத்துணையார் செருவில்
வெம்போர்
சாத்த முனையடுவார் ஆக நம்பி
பாயிரஞ்சேர் அறுபதுபேர் தனிப்பேர்
சும்மில்
பதின்மூவர் வேளாளர் பகருங் காலே."

வேளாண்மை என்னும் சொல், இந்நாளில் விவசாயம் அல்லது உழவுத்தொழில் என்னும் பொருளில் வழங்கி வருகிறது, என்ருலும் பழங்காலத்தில் அச்சொல் வேருெரு சிறந்த பொருளைக் குறிக்கப் பயன்பட்டு வந்தது. எல்லோர்க்கும் உபகாரம் செய்தல் என்னும் பொருளில் வேளாண்மை என்னும் சொல்லை, ஆசிரியர் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தியுள்ளார்.

"தாளாண்மை என்னும் தகைமைக்கண்
தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு"

"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை
பேடிகை
வாளாண்மை போலக் கெடும்"

எனவரும் திருக்குறள்களில், வேளாண்மை என்னும் சொல்லானது 'எல்லோர்க்கும் உபகாரம் செய்தல்' எனும் சிறந்த பொருளில் அமைந்திருத்தல் காணலாம்.

இத்தகைய சிறப்பிற்குரிய வேளாளர்குலப் பெருமக்கள் பண்டைக் காலத்தில் பல்லாற்ருனும் சிறந்து விளங்கி வந்திருந்த பான்மை போலவே, இக்காலத்திலும் இனிவரும் எதிர்காலத்திலும் சிறப்புற்றோங்கித் திகழ்வதற்குத் திருவாலங்காட்டுப் பழையனூர்ச் சாட்சி நாதப் பெருமானின் திருவருளைப் பெரிதும் வழுத்துகின்றேன்.

முருகன் உண்மை நிலை

இயற்றியவர் :—வித்வான், பண்டித ரா. நடேச நாயகர்,
முன்னுள் துணைத்தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

1. மாசான தற்றபெரு நால்திசையும் மேல்கீழ்
மன்னுமிரு திசையெங்கும் மகிழ்ந்துறையுஞ்
சிவன்றன்
தேசான மேலிடத்துங் கீழிடத்துந் தெற்கும்
தெளிவடக்கும் மேகுடனே கீழிடத்தும்
முறையாய்
ஈசானந் தற்புருடம் ஏற்ற அகோரம்மே
எழில்வாம தேவஞ்சத்தி யோசாதத் துடனே
ஆசான தற்றஅதோ முகமாறுங் கொண்டே
அறுமுகமாய் உலகுய்ய உதிமுருக அருள்வாய்.

2. விண்ணினிடை ஒன்ருயும் வளியினிடை
இரண்டாய்
விரிதீயில் மூன்ருயுங் புனலிடையே நான்காய்
மண்ணினிடை ஐந்தாயும் மறைந்தெங்கும்
நிறைந்து
மாகத்துக் கப்பாலும் அணுவிலணு வாயும்
நண்ணியுறை நின்னிலையைத் தொண்டரன்றிப்
பிரர்தாம்
நாடியென்றும் அறியாநின் அதிரேக மாயை
எண்ணிடவுஞ் சொல்லிடவும் முடிந்திடுமோ முருகா,
இளையோனே, சேயோனே, மாயோனின் மருகா.

3. ஆவினுடைப் பாலிடைநெய் கரந்திருந்த போதும்
அட்டதனைக் கடைந்திடநெய் வெளித்தோன்று
மதுபோல்
ஆவிதோறும் மறைந்துளநின் அருவடிவைக் காண
ஆசைசினங் காமம்பொய் யழுக்காறு முதலாம்
தீவினையைச் சுட்டெரித்தே அன்புகயிருகச்
சீரியநற் பத்தியெனும் மத்ததனல் கடையத்
தீவியநின் காட்சியது தோன்றிடுமே சேந்தா,
தேவநங்கை வள்ளிமங்கை யாரிருவர் காந்தா.

4. கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனையே
போன்றும்
கரும்பிருக்க இரும்பயின்ற கசடனையே
போன்றும்
துனியிருக்குந் துயரனைத்துந் தொலைக்குநின் தாள்
மலரைத்
துதியாமல் வாணுளை வீணாளாக் கழித்தேன்
இனியிருக்கும் நின்தொண்டர்க் குழுவிடையே
குலவி
இனிதினவர் தொண்டுடனின் தொண்டயர
அருள்வாய்,
பனியிருக்கும் நதிமதியும் பொதிசடையர் மைந்தா,
படியிலுன்றன் பத்தர்களைப் பரிந்தளிக்கும்
கந்தா.

சைவம் தழைக்க

இரா. நடராஜன், பி.ஏ.,
துணை ஆசிரியர், தமிழ்க் கலைக் களஞ்சியம்.

எல்லைகாண வொண்ணுத வரலாற்றுக் காலத்துக்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தொடர்ந்து வருகின்ற பெருநெறி சைவச் செந்நெறி. இத்தொன்மைத் தமிழ்நெறியைச் சிவநெறி என்றும் சொல்வர். சித்தாந்த சைவம் எனினும் ஒன்றே. சிவத்துடன் தொடர்புடையது சைவம் ஆகும். சிவம் என்னும்சொல் 'குறைவிலாமங்கலக் குணத்தான்' என்றும், 'பேரின்பவடிவினன்' என்றும் பொருள்தரும். துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் பெற்று வாழுதற் பொருட்டே ஆருயிர்கட்கு மாயாகாரிய உடம்புகளுடன் பொருந்துவதாகிய பிறப்பு ஏற்பட்டது. அவ்விதம் பொருந்துமாறு திருவுள்ளக்குறிப்பால் புரிந்தருள்பவன் சிவன்.

சங்கத் தொகை நூல்களில் சிவம் என்னும் சொல்லைக் காண்பதரிது. எனினும் 'செம்பொருள்' என்னும் சொல்லைப் பரக்கக் காண்கின்ருேம். சங்கத்தையடுத்த மணிமேகலையில் 'நின்றசைவவாதி நேர்படுதலும்' எனக் காணப்படும் அடியில், சைவம் என்ற சொல் சிவத்தின் தொடர்புடைய தெனப் பொருள்தரும் வகையில் கையாளப்பட்டிருக்கிறது. இதனுல், சிவன் என்னும் சொல் மிகத் தொன்மை வாய்ந்தது என்பது ஒருதலை. மேலும் சிலப்பதிகாரத்தில் "அருமறை மருங்கன் ஐந்தினும் எட்டினும்" (நாடு காண்காதை. 128) என்பதில் 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்து மறை, மறைமுகமாகக் குறிக்கப்பட்டுள்ளது. புறநானூற்றில், "பணியியரத்தை நீர் குடையே முனிவர், முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே' என வரும் அடியில் முக்கண்ணன் சிவபெருமான், "முக்கட் செல்வர்", என அழைக்கப்படுகின்ருர்.

அச் சிவபெருமான் ஒருவனையே விழுமிய முழுமுதற் கடவுளாகக் கொண்டு தொழுது உய்வதற்கு வழிவகைகளை முறைப்படுத்திக் காட்டுவது செந்நெறியாகிய சைவம், இந் நெறி தமிழகத்தில் முளைத்தெழுந்து செழிப்புற வளர்ந்து இது காறும் ஒன்றுபோல் நின்று நிலவும் தமிழர்திருநெறி. நினைப்பரிய நனி நாகரிகப் பண்பை அனைத்துலகிற்கும் வாரி வழங்கிய வழுவிலாப் பெருமக்கள் செந்தமிழ் மக்கள். அவர்கள் வகுத்த சைவத்திருநெறி உண்மை உயர்வினையுடைய உலகப் பொது நெறி.

இத்தகைய பழம்பெருமைவாய்ந்த சைவப் பெருநெறி இன்று நலிவடைந்து வருவது தமிழர் ஒவ்வொருவரும் நாணுதற் குரியது. இந் நலிவைப் போக்கிப் பண்டைப் பொலிவோடு சைவம் மீண்டும் தழைத்தோங்கச் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டியது உடனடித் தேவையாகும். சமயத்தைப் பரப்புவதில் நாம் கிறிஸ்தவர்களை முன்மாதிரியாகக் கொள்ளல் வேண்டும். கிறிஸ்தவ அன்பர்கள் சென்ற சென்ற நாடுகளில் எல்லாம் அவ்வந் நாட்டு மொழிகளில் தங்கள் சமய நூலை மொழிபெயர்த்துப் பரப்பிவருவதைப் பார்க்கின்ருேம். அது மட்டுமின்றிச் சமயத் தொண்டர்களைத் திரட்டி, வீதிதோறும் வீடு தோறும் சென்று கிறிஸ்தவ சமயத்தின் பெருமைகளை விளக்கிக் கூறுவதையும் இலவசமாகச் சமய நூல்களை வழங்குவதையும் அன்ருடம் காண்கிருேம். முச்சந்திகளிலும், நாற்சந்திகளிலும் கிறிஸ்தவப் பெண் - ஆண் தொண்டர்கள் குழாமாக நின்று மதப்பாடல்கள் பாடியும் சொற்பொழிவாற்றியும் சமயப் பிரசாரம் செய்துவருவதைப் பார்க்கிருேம். சமயத்தைப் பரப்புவதில் இவர்கள் இத்தகைய ஆர்வத்தோடு முனைந்து செயலாற்றுவதால் தான் கிறிஸ்தவ சமயம் இன்று உலகின் மூலை முடுக்கிலெல்லாம் பரவி உலகின் தனிப்பெருஞ் சமயமாகத் திகழ்கின்றது.

சைவத்தைப் பரப்புவதிலும் கிறிஸ்தவ சமயத்தவரைப்போல் நாம் தீவிரமான முயற்சிகளில் இறங்கவேண்டும். 'சைவப் பிரசாரத் தொண்டர் படை' ஒன்றைத் திரட்டி, சைவ நெறியின் பெருமையினையும் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து உணர்த்த வேண்டும். இவர்கள் ஆங்காங்கே பொதுக்கூட்டங்கள் நடத்தினுல் மட்டும் போதாது. வீட்டுக்கு வீடு

சென்று செந்நெறி பரப்பவேண்டும். உலகி லேயே தொன்மையான சைவசமயத்தைப் பரப்பும் முயற்சிகளில் இடைவிடாமல் ஈடுபட் டிருந்தோமானால், இன்று உலகிலேயே மிகப் பெரிய சமயமாக சைவசமயத்தை உருவாக்கி யிருக்கலாம். இடையிலே ஏற்பட்ட புறச் சமயத்தார் படையெடுப்பும், சைவத்தை ஒழிக்கக் கங்கணங்கட்டிக் கொண்டு அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளும், ஆல்போன்ற ஆழ வேரூன்றி யிருக்கும் சைவத்தின் சில கிளை களை விழ்த்திவிட ஏதுவாக இருந்தன. எனி னும், அதன் ஆணிவேரை அசைக்க முடிய வில்லை; இனியும் முடியாது. தமிழர்கள் இனி யும் உறங்காமல் விழித்துக்கொள்ள வேண்டும்.

பிற சமயத்தார், அந்தந்த நாட்டு மொழி களில் தங்கள் மறை நூலை மொழிபெயர்த்துப் பரப்பி வருகின்றபோது, நம் நாட்டில் நம் தாய் மொழியில் மட்டுமே திருவருட்செல்வர்கள் வாயிலாகத் தோன்றிய மறைமுறைகளுக்கு முதலிடம் கொடாமல் அயல் மொழிகளுக்கு முதன்மை கொடுத்து வரக்காண்கிறோம். அத னால் நம் செந்நெறியுண்மை பொதுமக்களிடை யே பரவ வழியின்றிக் கிடக்கின்றது. மேலும், வடமொழியே மந்திரமென்றும், திருமுறைகள் மந்திரங்களல்லவென்றும் பொதுமக்களிடை யே ஒரு கருத்து அழுத்தமாக பதிந்து கிடக்கின் றது. அதற்கு, திருக்கோயில் வழிபாட்டில் தேவார திருவாசகங்கள் மந்திரமாயிருந்தும் மந்திரம் போல் கையாளப்படாமையே காரண மாகும். அவைகள் சிறந்த மந்திரங்கள் என்ற உண்மையைப் பெருமக்களுக்கு உணர்த்த வேண்டுவது செந்நெறிச் செல்வர்களின் பெருங் கடனாகும். அதற்கு எளிய வழி கோயில்களி லும் திருமடங்களிலும் நிகழும் நாள் விழா, சிறப்பு விழா முதலிய எல்லா வழிபாடுகளிலும் திருமுறைத் திருமறையாம் தமிழ் மந்திரங் களுக்கே முதன்மையும் முதலிடமும் நல்கு வதாகும்.

சைவத்திருமடங்கள் தமிழகத்தில் பல உள. திருமடமுதல்வர்கள் ஒருங்கு கூடிச் சைவம் தழைக்க வழிவகைகள் வகுக்கலாம். தமிழக மாவட்டங்களில் இன்னின்னார் இன்னின்ன பகுதிக்கு எழுந்தருளுவதென முடிவுசெய்து அவ்வப்பகுதிக்கு அவரவர் எழுந்தருளி, திரு முறை பரப்புதலும், செந்நெறிவிரிவுரைகள் நிகழ்த்தலும் வேண்டும். 'தமிழோடு இசை கேட்கும் இச்சையன்' சிவபெருமானுக்கு 'மறை வளருந் தமிழ்மாலை' சூட்டி 'நாளும் இன்னிசை யாற்றமிழ் பரப்பல்' வேண்டும்.

ஒரு நாட்டின் உயர்ந்த பண்பாட்டை ஆடி நிழல் போல் அனைத்துலகிற்கும் எடுத்துக் காட்டி வழிப்படுத்துவது சமயமேயாகும். என வே, தமிழின் தமிழ் மக்களின், தமிழர் பண் பாட்டின் மேன்மை உலகமக்களுக்கு உணர்த் தும் தமிழ் நெறியான சைவச் செந்நெறியின் உயர்வை அவர்களுக்கு முதலில் உணர்த்துதல் வேண்டும். அதற்குச் சைவசித்தாந்த அறிஞ ர்கள் வெளிநாடுகளுக்குத் தூது அனுப்பி சைவத்தின் பெருமையினைச் சொற் பொழிவு கள் மூலம் பரப்பவேண்டும். ஒரு விவேகானந் தர் மேல் நாடுகளில் இந்துசமயத்தின் மேன்மை யினை நிலைநாட்டிவிட்டு வந்தார். சைவ நெறி யைப் பரப்ப இன்று பல விவேகானந்தர்கள் தேவை. வெளி நாடுகளுக்குச் சமயத் தூதர் களை அனுப்புவதோடு அமையாது, பல்வேறு நாடுகளில் 'சைவசமய நற்பணி நிறுவனங்களை **(Saiva Missions)** நிரந்தரமாக நிறுவி சமயத் தொண்டாற்ற வேண்டும். அவற்றின் மூலம் உலகமெலாம் தமிழ் முழக்கம்' கேட்கச் செய் தால் தமிழ்நெறியும் உலகப் பொதுநெறியாய் பாரெங்கும் தழைத்தோங்கும் என்பது ஒரு தலை.

ஸ்ரீ சக்தி விலாஸ் பஸ் சர்வீஸ

பொறையார்.

பொதுமக்கள் சேவையே எங்கள் லட்சியம்

மாணவ மாணவிகள் உல்லாசப்பயணம் செய்வதற்கும் பக்தர்கள் யாத்திரை மார்க்கம் செல்வதற்கும் பஸ் வசதி செய்துகொடுக்கிறோம்.

எங்கள் பஸ் மார்க்கத்தில் கீழ்க்கண்ட புண்ணிய க்ஷேத்திரங்கள் அநேகம் இருக்கின்றன.

பஸ் மார்க்கம்.	க்ஷேத்திரம்	விசேஷம்
பொறையார் – மாயுரம்	ஒழுகமங்கலம்	பிரசித்திப் பெற்ற மாரியம்மன் கோவில். பங்குனி மாதம் உற்சவம்–காவடி விசேஷம்.
,,	திருக்கடையூர்	சித்திரை மாதம் பிரம்ம உற்சவம். 6-ம் திருநாள் அன்று காலசம்ஹாரம். கார்த்திகை சோமவாரங்களில் 1008 சங்காபிஷேகம்.
,,	மாயூரம்	ஐப்பசி 1-ம் தேதி காவிரி துலா ஸ்நானம் ஆரம்பம். 30-ந் தேதி கடைமுழுக்கு.
பொறையார் – சீர்காழி	நாங்கூர்	வைஷ்ணவ க்ஷேத்திரம்—ஒரே சமயத்தில் 12 கருடசேவை.
,,	சீர்காழி	சித்திரை மாதம்—திருமுலைப்பால் உற்சவம்.
சீர்காழி ,, காவேரிப் பட்டினம்	திருவெண்காடு	முக்குளம் தீர்த்தம். வைகாசி மாதம் வீரபத்திர சுவாமிக்கு அன்னபிஷேகம்.
,,	காவேரிப்பூம் பட்டினம்	ஆடி அமாவாசை ஸ்நானம்—கண்ணகி சிலை வைக்கப்பட்டிருக்கிறது.
பொறையார் – நாகப் பட்டினம்	காரைக்கால்	வைகாசி மாதம்—மாங்கனி மகோற்சவம்.
,,	நாகூர்	நாகூர் ஆண்டவர் பள்ளிவாசல்.
காரைக்கால் - கும்பகோணம்	திருநள்ளாறு	சனீஸ்வரர் கோவில்—நளன் குளம் ஸ்நானம்
,,	கும்பகோணம்	மாசி மக உற்சவம்.
நாகப்பட்டினம்-நன்னிலம்	திருக்கண்ண புரம்	விஷ்ணு க்ஷேத்திரம்—சித்திரை மாதம் கருட சேவை.
,,	அம்பல்–திரு மாகாணம்	சேரமான் நாயனர் யாகம்.
,,	திருச்சங் காட்டாங்குடி	சித்திரை மாதம்—சிறுத்தொண்டர் அமுது படையல்.
பட்டுக்கோட்டை–மன்னார்குடி —	மன்னார்குடி	பங்குனி மாதம்—வெண்ணைத்தாழி உற்சவம் தெப்பத்திருவிழா.

வீ. பார்த்தசாரதி,
உரிமையாளர்.

பழையனூர் ஆலங்குடி

(ச. சிவகுமாரன், M.A.)

பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் மாலைக் காலம் தொண்டை நாட்டைச் சேர்ந்த பழையனூர் என்ற ஊரில் ஒரு பெரிய ஆல மரத்து நிழலில் அவ்வூர் வாசிகளாகிய எழுபது வேளாளர்கள் ஒன்று கூடி ஏதோ கிராம பரிபாலனம் முதலான விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

காஞ்சிபுரத்து வணிகர்குல வாலிபன் ஒருவன் தரிசனன் என்பான் கையில் ஒரு வாள் ஏந்தியிருந்தும் பயந்தவனுய் அச்சபையோரை நோக்கி விரைந்து வந்தான். அவனுக்குச் சற்று தூரத்தில் அவனைத் தொடர்ந்து ஒரு இளம் பெண் கையில் ஒரு குழந்தையுடன், சோகமும் கவலையும் உருக்கொண்டாள் போல வந்து சேர்ந்தாள். தரிசனன் தன்னைத் தொடர்ந்து வந்தவள், பேய் என்று அலறினன். அவளோ தரிசனன் தன் கணவனென்றும் மாற்ருன் ஒருத்திபால் வைத்த அன்பால் தன்னைப் புறக் கணித்தான் என்றும் தன் கையில் இருப்பது அவனது அருமந்த செல்வமே என்றும் பிரலா பித்தாள். தரிசனன் ''ஐயோ! இவள் பேய். பெண் அல்ல இவள் பேசுவது பொய். இவளே மாயம், இவள் கையில் இருப்பது குட்டிப் பிசாசு'' என்று கூச்சலிட்டான். அதற்கு அப் பெண் தன் பெயர் நீலி என்றும் தன் கணவன் குலமுறை கூறி தான் அவனது மனைவி என்பதாகவும் அங்குள்ள யாவருக்கும் சந்தேகமற மனதில் படும்படிச் சொல்லி அதற்கு அத்தாட்சியாக கையிலிருந்த குழந்தையைக் கீழே விட்டு ''என் செல்வமே உங்க அப்பா விடம் போடா'' என்ருள். அக்குழந்தை தத்தித் தளர்நடையிட்டுத் தரிசனனிடம் போய் அவன் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அவனிடம் கொஞ்சி விளையாடிற்று.

இனி என்ன சொல்வதற்கிருக்கிறது. எழுபது வேளாளர்களும் ஏகோபித்த குரலில் நீலிக்குப் பரிந்து பேசி, தரிசனனிடம் அவன் தன் மனைவியை அவ்வாறு வெறுப்பது தவறு என்று கூறி மேலும் தமக்குள் மனம் கலந்து பேசி ஊடல் தீர்த்துக்கொள்ளுமாறு அருகிலிருந்த ஒரு கட்டிடத்தைக் காட்டி அன்றிரவுப் பொழுதை அங்கு தம் விருந்தினர்களாகக் கழிக்கச் சொன்னர்கள். நீலி மகிழ்ச்சி தெரிவித்தாள்; ஆனல் தரிசனன் கையில் வாளிருக்கக்கூடாது என்றும், தன்மேல் நெடுநாள் கோபம் காரணமாக ஒருவேளை தரிசனன் தன்னைக் கொன்றுவிடவும் கூடும் என்றும் ஆகையால் அவ்வாளை யாராவது வாங்கி வைத்துக்கொள்ளுமாறும் வேண்டினள். தரிசனன் மறுபடியும் ''ஐயோ இவள் பேய், என் கையில் வாளில்லையென்ருல் இவள் என்னை அறைந்து என் இரத்தத்தை உறிஞ்சிவிடுவாள்'' என்ருன். அங்கிருந்த வேளாளர்கள் ''என்னப்பா! திரும்பத் திரும்ப பேய் பேய் என்று கத்துகிருயே. பாவம் சொந்த மனைவியை, உன் செல்வக்குழந்தையை இப்படியா வெறுப்பது, அப்படி உன் உயிரை இவள் பேயாகிப் பருகிவிட்டால் எங்கள் எழுபது பேர் உயிரையும் தருகிருேம் அப்பா. நீ இன்றிரவு வாள் இன்றி அவளோடு சமாதானமாக இருந்து பார்'' என்ருர்கள். வாளையும் வாங்கிக்கொண்டார்கள்.

நீலி தன் கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளெல்லாம் சரிவரச் செய்தாள். குழந்தைக்கும் பராக்குக் காட்டி மெல்ல மெல்லச் சோறு ஊட்டினள். இதையெல்லாம் பார்த்திருந்த அவ்வேளாளர்கள் நீலி மிகவும் நல்லவள் என்றும் அவள் பக்கம்தான் நியாயம் இருக்கிறது என்றும் கூறிக்கொண்டுத் தத்தம் வீடு சென்றனர்.

பொழுது புலர்ந்து, பொற்கோழி கூவிற்று. ஒரு கிழமாது தான் தரிசனன் தாய் என்றும் தன் மகன் முன்னுள் இரவு அங்கு வந்ததாகத் தான் கேள்விப்பட்டதாகவும் கூறிக்கொண்டு அவன் எங்கே என்று விசாரித்தாள். வேளாளர்கள் நடந்ததைக் கூறி, இரவில் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்ததன் காரணமாகப் பொழுது விடிந்தும் உறங்குகிருர்கள் போலும் என்று சொல்லிக்கொண்டே தரிசனனும் நீலியும் தங்கியிருந்த கட்டிடத்திற்கு அத்தாயாரை அழைத்துச் சென்று அவர்கள் உறங்கிக்கொண்டிருந்த அறையின் கதவைத் தட்டினர்கள்

பதிலில்லை, மேலும் பலமாகத் தட்டினுர்கள். பதிலில்லை, வேளாளர்கள் பயந்து போனுர்கள். எழுபதின்மரில் அறுபத்தொன்பது பேர் கூடி விட்டார்கள். கதவை உடைத்து உள்ளே பார்த்தார்கள். தரிசனன் மட்டுமே குடல் சரிந்து இரத்தம் சொரிந்து இறந்து கிடந்தான், நீலியைக் காணேம். குழந்தையைக் காணேம். அப்பொழுது வந்த அந்தக் கிழவியையும் காணேம், "உண்மையில் நீலி பேய்தான். அநியாயமாக தரிசனனின் அகால மரணத்திற்கு காரணமாக நாமே நேற்று நீதி பிறழ்ந்தோம்" என்று அவ்வேளாளர்கள் மனம் நொந்தனர்.

ஒரு பெரிய பள்ளத்தில் தீ மூட்டி சொன்ன சொல் தவருத சீலர்களாக அவ்வறுபத்து ஒன்பதின்மரும் தீக்குளித்தனர். ஊருக்கு வெளியே ஏர் உழுதுகொண்டிருந்த எழுபதாவது வேளாண்மைந்தனும் இதைக் கேட்ட மாத்திரத்திலே "தரிசனன் சாவுக்கு நானும் காரணம்" என்று சொல்லி கையிலிருந்த கலப்பையால் தன்னை மாய்த்துக்கொண்டான். இவ்வாருக எழுபது வேளாளர்களும் ஒரு தரிசனன் கொலைக்குப் பிராயச்சித்தமாக சத்தியத்தைக் காக்க மாண்டார்கள்.

இதனுற்ருன் தெய்வச்சேக்கிழார் பெருமான்

நற்றிரம்புரி பழையனூர்ச்
சிறுத்தொண்டர் நவை வந்து
உற்றபோது தம் உயிரையும்
வணிகனுக்கு ஒரு கால்
சொற்ற மெய்ம்மையும் தூக்கி
அச்சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது
பெருந்தொண்டை நாடு

என்று கூறியருளினர். இப்பழையனூர் நிகழ்ச்சியை மேலும் திருவுளம் கொண்டு போலும் "நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்து............ ......தொன்மை மேன்மையில் நிகழ் பெருந் தொண்டை நன்னடு" என்றும்

"தீய என்பன கனவிலும்
நினைவிலாச் சிந்தை தூய
மாந்தர் வாழ் தொண்டை

நாட்டியல்பு சொல்வளாத்தோ"

என்றும் தொண்டை நாட்டைச் சான்ருேருடைத்து என்று புகழ்ந்துள்ளார்.

திருமுருகாற்றுப் படையில் நக்கீரனர் பார்வதி தேவியாரைப் பழையோன் என்றும் முருகப்பெருமானை பண்டைத்தன் என்றும் குறிப்பிடுவதுபோல, பழையன் என்பது தொல்லோன் ஆகிய சிவபெருமானைக் குறிக்கும். அப்பழையன் விரும்பி எழுந்தருளியிருக்கும் ஊர் பழையன் ஊர் அல்லது பழையனூர். இப்பழையனூரின் அருகில் ஆலமரங்கள் காடு போல அடர்ந்து வளர்ந்து படர்ந்திருந்ததன் காரணமாக அவ்விடத்தை ஆலங்காடு என்பார்கள். அங்கே இறைவன் காளியை அடக்கச் சண்ட தாண்டவம் புரிந்து திருக்கோயில் கொண்டருளியதால் அதற்குத் திருவாலங்காடு என்ற பெயர் வந்தது. திருச்செங்காட்டங்குடி என்ற ஊரில் கணபதியீச்சுரம் என்ற திருக்கோயில் இருப்பது போலவும், திருவெண்ணெய் நல்லூரில் திரு அருள்துறை என்ற திருக்கோயில் இருப்பதுபோலவும், திருப்பெண்ணுடைத்தில் திருத்துங்கரானை மாடம் என்னும் திருக்கோயில் இருப்பது போலவும், பழையனூரில் திருவாலங்காடு இருக்கிறது என்று பொருள் கொள்ளும்படி

"பழைனூர் ஆலங்காடு என் அடிகளே"

என்று திருஞானசம்பந்தப்பெருமானும்

"பழனைமேய........ ..ஆலங்காட்டு
அடிகளீரே"

என்று திருநாவுக்கரசர் பெருமானும்

"பழயனூர்மேய அத்தா ஆலங்காடா"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளியமை காண்க.

நடராஜப் பெருமான் உலகம் உய்யும் பொருட்டுத் திருநட்டம் புரியும் ஐந்து சபைகளுள் திருவாலங்காடு இரத்தின சபையாகும். மேலும் காரைக்கால்அம்மையார் நான் மகிழ்ந்து பாடி, அறவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்று இறைவனிடம் திருக்கயிலையில் விண்ணப்பித்துக் கொண்டார்.

கூடுமாறு அருள் கொடுத்துக் குலவு
தென்திசையில் என்றும்
நீடு வாழ் பழனமூதூர் நிலவிய ஆலங்
காட்டில்
ஆடுமா நடமும் நீ கண்டு ஆனந்தம்
சேர்ந்து எப்போதும்
பாடுவாய் நம்மை என்ருன் பரவார்
பற்றுய் நின்ருன்.
அப்பரிசு அருளப் பெற்ற அம்மையும்
செம்மை வேத
மெய்ப் பொருளானர் தம்மை விடைகொடு
வணங்கிப் போந்து

செப்பரும் பெருமை அன்பால் திகழ்
திருவாலங்காடாம்
நற்பதி தலையினலே நடந்துபுக்கு
அடைந்தாரன்றே.

இவ்வாறு, இறைவனது எடுத்தருளும் சேவடிக் கீழ் என்றும் இருக்கின்ருராகிய காரைக்காலம் மையாரின இருப்பிடம் என்னும் பெரும் பழைய னூர்த் திருவாலங்காட்டிற்கே உரியது.

இத்தலத்திற்குப் பின்னெருகால் திரு ஞான சம்பந்த சுவாமிகள் எழுந்தருளியபோது "எம் மையாளும் அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாம் என்று......மூதூர் மிதிக்க அஞ்சிச்...செம்மை நெறி வழுவாத அப்பதியின் புறம்பே உள்ள தோர்பள்ளியில் அன்றிரவு தங்கலானர். இறை வனும் கனவில் தோன்றி நம்மை அயர்த்தனை யோ பாடுதற்கு என்று கேட்டருளினர். உடனே ஆளுடைய பிள்ளை துயிலெழுந்து இறைவனைப் புகழ்ந்து பாடினர். திருவாலங் காட்டுக்கு ஆளுடைய நம்பிகள் வந்தார் ; மனம் வெதும்பிய நிலை.

"பொய்யே செய்து புறம் புறமே திரிவேன்
தன்னைப் போகாமே
மெய்யேவந்து இங்கெனை ஆண்ட மெய்யா
மெய்யா மெய்பொருளே........."

"மறிநேர் ஒண்கண் மடநல்லார் வலையில்
பட்டு மதிமயங்கி
அறிவே அழிந்தேன் ஐயா நான்"
வேலங்காடு தடங்கண்ணர் வலையில்பட்டு
உன் நெறிமறந்து
மாலங்கடி மறந் தொழிந்தேன்—" என்று

உண்மையும் சீலமுமே இறைவனது இரண்டு கண்கள் என்று பொருள்படப் பாடியரு சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாலங்க இறைவனைத் தரிசிக்க வந்திருந்த சம மற்றும் பல சிவனடியார்கள் கோயிலுக்கு வழக்கமாக வருகிற உள்ளூர் வாசிகள் இசை யோடு இறைவழிபாடு செய்திருக்க வேண்டும். அதனைக் கண்ணுற்ற அடிகளார்.

பண்ணூர் இசைகள் அதுகொண்டு பலரும்
ஏத்தும் பழையனூர்
அண்ணு ஆலங்காடா உன் அடியார்க்கு
அடியேன் ஆவேன்

என்று பரவினர்.

திருவாலங்காட்டிற்கு அருணகிரிநாதர் திருப் புகழ் உண்டு. பட்டினத்தடிகளாரும்

வீடு நமக்குத் திருவலாங்காடு விமலர் தந்த
ஓடு நமக்கு உண்டு; வற்ருத பாத்திரம்
ஓங்கு செல்வம்
நாடு நமக்கு கேட்டதெல்லாம் தர நன்
னெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவே ஒருவரும் இங்கு
இல்லையே

என்று திருவாலங்காட்டினை முத்திக்கு வித் தாகக் கொண்டார்.

இவ்வாறு திருவாலங்காட்டின் பழமையும் பெருமையும் அங்கு இன்றும் காரைக்காலம்மை யார் பாட ஆண்டவன் நள்ளிருளில் நட்டம் பயின்ருடும் புதுமையும் பொதுமையும் என் ணில் அடங்கா ; எழுத்தில் அடங்கா உள்ளன் போடு இத்திருத்தலத்திற்குப் போந்து மன முருகி அம்மையப்பனைத் தரிசித்து காரைக்கால் தாயாரையும் வணங்குவதே வானேக்கும் வழி யாகும்.





திருவாலங்காடு பஞ்சாயத்து யூனியன் தலைவரும்,
ஷை திருப்பணிக்கழக பொருட்காப்பாளருமாகிய
திரு. ப. சு. சுந்தர முதலியார்.

சைவ நெறியும் அருள் நெறிச் சித்தரும்

கு. ம. ராஜாகந்தசாமி, B.A.,

பண்டைத் தமிழகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகில் புகழ்க்குன்றின் கொடுமுடியை அடைந்திருந்தது; மேனாட்டு நாகரிகம் பழைய கற்கால வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தபோது பொற்கால வாழ்க்கையில் திளைத்தது. சங்க காலத்துக்கு முன் தமிழ் நிலப்பரப்பு இன்றைய தமிழகத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகப் பரவியிருந்தது என்று வரலாற்று அறிஞர் கூறுகின்றனர். கடைச்சங்க காலத்தில் தமிழகம் மிகக் குன்றிய எல்லைகளில் அடங்கிவிட்டது என்று பண்டைத் தமிழர் அறிவுச் செல்வங்களாகிய இலக்கியங்கள் பகர்கின்றன. ஆதலின், நமக்குச் சங்க காலத் தமிழகத்தைப் பற்றித்தான் வரலாறு கிடைத்துள்ளது. அவனி புகழ்ந்த தமிழர் எவ்வாறு வாழ்க்கை நடத்தினர் என்பதும் தம் திருந்திய பண்பாட்டினையும் சீர்த்த நாகரிகத்தினையும் பிற நாடுகளுக்கு வாணிபத்தின் மூலம் அனுப்பியுள்ளனர் என்பதும் சங்கம் மருவிய காலத்து வரலாற்று உண்மைகள். இத்தகு மேம்பாடு அடைந்த மக்கள் இறைவழிபாடு எவ்வாறு இயற்றினர் என்று ஆராயின் அவர்கள் இயற்கையோடு இயைந்த வழிபாடு அநுசரித்தனர். என்று தெரிகிறது. அவர்கள் முருக வழிபாட்டில் முக்கியமாக ஈடுபட்டிருந்தனர். எனினும் தொல்காப்பியர் காலத்தில் ஆரிய மதமாகிய சைவமும், வைணவமும், ஆரிய மொழியாகிய வடமொழியும், அவர்கள் பண்பாடும், பழக்க வழக்கங்களும், இதிகாச புராணங்களும், சுமிருதிகளும், வேத நெறியும் நம் நாட்டில் வேரூன்றியிருந்தன. ஒல்காப்புகழ் தொல்காப்பியரும், ஆரியப் பண்பாட்டுத் தொடர்பு உடையவர் என்பது அவர் வரைந்துள்ள முதல் இலக்கண நூல், 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்' என்று அழைக்கப்படுதலால் அறியக்கூடும். விந்தமடக்கிய நந்தமிழ் முனிவரும் வடக்கிலிருந்து வந்து தலைச்சங்கப் புலவருள் ஒருவராய் அமர்ந்து தமிழை ஆராய்ந்து தமிழுக்கே உயிர் தந்தனர் என்று இறையனார் அகப்பொருள் உரையில் காணக் கிடக்கின்றது. இத் தமிழ்தந்தார் ஆரிய நாட்டிலிருந்தே தமிழகத்துக்குப் போந்ததும், சிவபெருமானிடம் தமிழைக்கற்றனர் என்பதும், இந்நாட்டவருக்கு அகத்தியம் போன்ற தமிழ் இலக்கணத்தையும், மருத்துவம், ஜோதிடம் இறை வழிபாடு இசை நுணுக்கம் ஆகிய கலைகள் யாவும் நல்கினர் என்பதும் தெரிகிறது. அதனால் இலக்கிய காலத்திலிருந்தே வடமொழி தமிழில் கலந்துவிட்டது என்பதும் சைவ மதம் தமிழ் நாட்டில் பரவியிருந்தது என்பதும் தேற்றம். வடமொழியோடு ஆரியக்கொள்கைகளும், வேதநெறியும் தமிழ் நாட்டில் பெருகிவந்தன. சைவத்திற்குப்பின் வடக்கிருந்து வந்த பௌத்தமும் சமணமும் தமிழ் நாட்டில் நீடு நிலைத்து மக்களையும், மன்னரையும் தம்மகத்தே ஈர்த்து வலிமையுற்றன. அம்மதத்தைச் சார்ந்து கல்வி கேள்விகளிலும், கலைகளிலும் தேறிய



பேரறிஞர் பலர் தமிழ் உலகில் மேம்பட்டு வாழ்ந்தனர். அவர்களுள் பெரும்புலவர் அநேகர். அவர்கள் இயற்றிய இலக்கியங் களும் தமிழின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றன. அஃதன்றியும் தமிழ்நாட்டில் பலகலைகள் தழைத்தோங் கச் செய்ததில் சமணப் புலவர்க்குப்பெரும் பங்கு உரிமையுண்டு. பௌத்தமும், சமண மும் தலைவிரித்தாடிய ஐந்தாம்—ஆறும் நூற்றுண்டுகளில் சைவ நன்னெறி சீர் கேடடைய ஆரம்பித்தது. அதற்கு முதற் காரணமாய் நின்றது சைவசமயமாகிய பயிரில் கட்சி பேதங்களும் கொள்கைப் பேதங்களும் ஆகிய களைகள் செழிக்கஆரம் பித்தமையேயாம். சைவசித்தாந்தம் என் றும் வேதாந்தம் என்றும் தத்துவங்கள் சமயக் கொள்கையின் முடிவு காணப் போராடியதில் அவை பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு புறப்புறச் சமயம் என்றும் புறச் சமயம் என்றும், அகப்புறச் சமயம் என்றும் அகச்சமயம் என்றும், பல சமயங் கள் ஆயின. இவற்றுள்ளும் ஒவ்வொன்றுக் கும் ஆறு உட்பிரிவுகள் உண்டாக்கப்பட் டன. ஒவ்வொரு பிரிவினரும் தம்முள் மாறுகொண்டு, சொற்போரும் கட்சிப் போரும் நடத்தி, ஏளனப் புல்லுரைகள்பல பகர்ந்து சைவத்தின் முக்கிய குறிக்கோளை மறந்து, பொல்லாச் சமயங்கள் தோன்று வதற்கு ஆதாரமாக இருந்தனர். அர்த்த மற்ற, வெறுஞ்சடங்குகளேமலிய ஆரம்பித் தன. சைவமக்கள் இறைவனை மறந்து கொள்கையை மாத்திரம் வழிபட்டு பெரிய சாமியார், குட்டிச் சாமியார்களை மேன்மை படுத்தினர். அவ்வமயம் ஆன்ம பக்தர்களும், உண்மை ஞானிகளுமான பல சித்தர்கள் தோன்றினர். தமிழ்ச் சித்த ருள் திருமூல நாயனுரே மிகத் தொன்மை யானவர் என்பதற்கும் மிக்க மேலான புகழெய்தியவரென்பதற்கும் இவர் பாக் கள் திருமுறைகளில் இடம் பெற்றமையே சான்று பகரும்.

திருமூலர், பக்தி நெறி மாத்திரம் முக் கியமன்று என்றும், இறைவனைக் காண யோகமும் ஞானமுமே முக்கிய சாதனங் கள் என்றும் போதித்தார்.

"யோக சமாதியின் உள்ளே அகலிடம்
யோக சமாதியின் உள்ளே உளர் ஒளி"

என்று திருமந்திரத்தில் அவர் திருவாய் மலர்ந்தருளினர்.

மேலும் அவர், 'சிவனெடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்பதால் சிவநெறிச் சித்தரே என்பது தேற்றம். எனினும் அவரிடம் இதர மதத் துவேஷம் இல்லை - மற்ற இந்து மதக் கடவுளரையும் அவர் பிரித்துப் பேசவில்லை.

"ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை ஆயனும்
சோதிக்கின் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்று - [எனுர்
பேதித்து உலகம் பிணங்குகின்றுரே' என்றுர்."

அவர் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமைகளை அழகிய எளிய சொற்க ளால் யாத்த பாக்களில் அமைத்து மக்க ளுக்கும் மன்னர்க்கும் அன்பு, கற்பு, நீதி யுடைமை, நடுவு நிலைமை, கொல்லாமை, மது நீக்கல், புலால் நீக்கல் ஆகிய பண்பு களின் முக்கியத்தையும் அறிவுறுத்தினர். 'ஒன்றே குலமும் ஒருவனே தெவனும்' என்ற சிறந்த கொள்கையைப் பரப்பினர்.

வேதியர் தம் வாழ்க்கை முறை பிறழ்ந்து வாழ்ந்ததைக் கண்டு வெகுண்ட திருமூலர்,

"வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தம் கேட்டும் தம் வேட்கை [ஒழிந்திலர்"

என்று இடித்துக்கூறி சைவ நெறிக்கு உண்மை ஆக்கம் தந்தனர்.

அவருக்குப் பின்னரும் சைவமக்கள் திருந்தவில்லை. சிவமதம் வழுக்கி விழுந்து எழமுடியாமல் தவித்தது. சமண மதம் பேருள்ள லுற்றுத் தலைவிரித்தாடியது. சைவம் மடிந்துவிடும் என்றுணர்ந்த மதத் தலைவர்கள் தம் உடல், பொருள், ஆவி தர முன் வந்தனர். தேவாரம் இசைத்தனர். கோயில்களுக்குப் புனருத்தாரணம் தந்த னர். சைவ சமயத்தை அழியாது காப்ப தில் அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் சொல்லில் அடங்கா. அவர்கள் மேற் கொண்ட தூயவாழ்க்கையைக்கொண்டும் ஆன்ம வன்மையைக் கொண்டும் தாம் கண்ட இறையொளியைத் தேனினும் இனிய தமிழ்ப் பண்ணமைந்த தேவாரப் பாக்கள் மூலம் தமிழரிடை பரப்பி மக்கள் மனத்தை பழைமைபோல் பண்பட மாற்றினர்; அவர்களது வாழ்க்கை யையும் தூய்மை படுத்தினர். பௌத்த சமண மதங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த பெரு மன்னரையும், சிற் றரசர்களையும், சைவ நெறியின் தெய்வத் தன்மையையும் அறியச் செய்து அவர்களை

மதம் மாற்றி, சைவத்துக்குப் புத்துயிர் அளித்தனர். சோழ மன்னரும், பாண்டிய மன்னரும் சேரமன்னரும் சைவ வைணவ நெறிகளில் கழிபேருக்கம்கொண்டுகோயில்கள் பல கட்டினர். குளங்கள் பல தொட்டனர், சத்திரங்கள் பல சமைத்தனர். இந்து மதக் கூட்டத்தார்க் கெல்லாம் ஊணும், உறைவிடமும் கொடுத்து வட நாட்டிலிருந்தும் அடியார்கள் இலவசமாக வந்து தங்கி புதிய யாத்திரைகளில் ஈடுபடத்தூண்டிவிட்டனர். அதனல் வட நாட்டிற்கும், தென்னுட்டிற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படலாயிற்று. ஆரியப் பிராமணர்களும் அணித்திரளாக வந்து தமிழ் நாட்டில் குடியேறினர்; சமணரும் பௌத்தரும் தழைத்தோங்கிய இடங்களிலெல்லாம் வேதகோஷமும் யாகசாலைகளும் ஒயாது நடத்த ஆரம்பித்தனர்; கோயில்களிலும் ஆட்சியிலும் முதலிடம் பெற்றனர். நெறியும் ஆரியம், முறையும் ஆரியம், மொழியும் ஆரியம், எனவே சைவ நெறியைத் தமிழ் மக்கள் யாவரும் நன்கறியவே சீரடியார் தமிழ்ப் பண்ணில் தேவாரம் போன்ற இன்னிசைப் பாக்கள் அமைத்தனர். வைணவ பக்தர்கள் தமிழில் திவ்விய பிரபந்தங்கள் இயற்றினர். இயற்றவே தமிழ் மக்களிடைக் கேடு விளைத்த பௌத்தரும், சமணரும் சீர் கெட்டு வேறு நாடுகளைத் தேடிச் சென்றனர். எஞ்சியோர் மலைகளிலும் குகைகளிலும் வசிக்கலாயினர். சைவ நெறியும், வைணவ மதமும் தலைதூக்கின. முன்பு தமிழ் வளர்த்த நகரங்களிலெல்லாம் மாடக் கோயில்களும் குகுடக் கோயில்களும் மணிக்கோயில்களும் தூங்கானை மாடங்களும் நூற்றுக்கணக்கில் எழுந்தன. தமிழ்மன்னர் யாவரும் தாம் வெற்றி கண்ட காலத்தெல்லாம் கோயில் கட்டி, இறைவனுக்குத் திருப்பணி பலவும் ஆற்றினர். இறைவழிபாடு நித்தமும் நடைபெற இறையிலி நிலங்களையும் பிரமதாயங்களையும் காமக்காணிகளையும் நல்கினர். அவர்கள் செய்த புண்ணியத்தால்தான் சைவநெறி இன்னும் மக்களிடை ஒருவாறு நடமாடுகிறது என்று சொல்லுவது மிகையாகாது. சைவமும் வைணவமும் தமிழ் நாட்டில் நிலை கண்ட பின்னர் அவற்றுள் மீண்டும் வீண் சடங்குகளும், ஆசாரங்களும் அதிகமாயின. ஒவ்வொரு சமயத்தோரும் தமக்குள் கட்சி பேதமும் கொள்கை பேதமும், சடங்கு பேதமும் கொண்டு பூசல் செய்தனர். ஒவ்வொரு சிறு கட்சியினரும் ஜாதி பேதத்தாலும் வழிபாட்டுமுறை வேறுபாட்டாலும் வேறு சிறு கட்சியினருடன் உடன்று நின்றனர். புராணங்களும் வெகுவாகத் தோன்றின. சைவ வைணவருக்குள் பிற சமய வெறுப்பு தோன்றிற்று. பக்தி மார்க்கத்தில் வலியுறுத்தப்பட்ட உட்கிடக்கைகளை மறந்து சடங்குகளாய வெளித் தோற்றங்களில் மக்கள் தம்மை ஈடுபடுத்தலாயினர். ஒவ்வொரு சமயக் கட்சியினருக்கும் தத்தம் கட்சிக்கு ஆள் சேர்க்கும் விருப்பம் மிகுந்தது. வைணவ சமய குரவர் ஒருவர்,

'திருமருமார்ப நின்னைச்
சிந்தையுள் திகழவைத்து
மருவிய மனத்தராகில் மாநிலத்து
உயிர்களெல்லாம்
வெருவறக் கொன்று சுட்டிட்டு ஈட்டிய
வினையரேனும்
அறுவினைப் பயனதுய்யார்,
அரங்கமா நகருளானே''

என்று திருமாலிடம் கொண்ட இணையிலாப் பக்தியினுல் திருவாய் மலர்ந்தனரேனும் இவ்வடிகளால் மக்களிடம், தாம் பாவ காரியங்களையே செய்துப் பின் பக்தியால் முத்திபெறலாம், என்ற அறநெறி தவறிய எண்ணம் தோன்றாமலிருக்குமா! உண்மை பக்தி அருகி மீண்டும் தமிழ்நாட்டில் பாவங்கள் மிகைபடலாயின. பொல்லாப் புறச்சமயங்கள் துளிர்விட்டுத் தழைக்கலாயின.

சைவவைணவச் சொற்போரை நிறுத்துவதற்கு பின்னர் வந்த தாயுமானுரும் அரும்பாடுபட்டனரென்று தெரிகிறது. திருமூலருக்குப் பின் அவரே சமரசத்துக்குப் புத்துயிரளித்தனரென்பது தெளிவு. பிரபுடதேவன் காலத்திலவரித்த அருணகிரியாரும் ஞானயோக முதிர்ச்சியினுல் தாம் கண்ட முருகனைப் பக்தியுடைய பிறர்க்கும் காட்டவல்ல தெய்வ சக்தி பெற்றிருந்தார். சைவ வைணவ சமரச நோக்கங்கொண்டு முருகனைத் திருமாலின் மருகன் என்று தெரிவித்தார். வேத, உபநிடத, ஆகம புராணங்களிலெல்லாம் குறிப்பிட்ட அருமையான நுட்பங்களையறிந்து இசைத்தமிழ்ப் பாடல்களில் அமைத்துப் பாடி யாவரும் அறிந்து ஒழுகக் கூடியவாறு எளிதாக அறநெறி காட்டியிருக்கின்ருர். இத்தகைய அவரது உயர்வையே யெண்ணித் தாயுமான அடிகளும்,


"ஐயா அருணகிரியப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்''

என்று மெய்ம்மறந்து புகழ்கின்ருர். இதிலிருந்து அக்காலத்தில் மக்களிடை சமரச

வறுமை எத்தகைத்தாயிருந்த தென்பது தெளிவாகும்.

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் சைவ வைணவ நெறிகளைக் கெடுக்கும் வகையில் இஸ்லாமிய மதமும் கிறிஸ்தவ மதமும் கடற்கரையோரமாக வந்து காட்டுத்தீப் போல் உள்நாடெங்கும் பரவ ஆரம்பித்தன. பழங்காலமாக வந்த சைவ வைணவக் குடும்பங்கள் நெறி மாறினதோடு நில்லாமல் அரசினர் ஆதிக்கத்திமிரால் தம்மைஇதுகாறும் வளர்த்த இந்து மதத்தைத் தூற்றவும் எள்ளி நகையாடவும் ஆரம்பித்தன. கிறிஸ்தவ குருக்களான டி நொபிலியும் போப்பையரும், வீரமாமுனிவரும், கால்டுவெல் ஐயர் போன்ருரும் உயர் ஜாதியினரிடத்தும் பிராமணரிடத்தும் கிறிஸ்தவத்தை நிறுவ அரும்பாடுபட்டு வந்தனர். நாளுக்கு நாள் கிறிஸ்தவர்கூட்டம்பெருகலாயிற்று. அக்காலத்தில் தாயுமானுர் வழிவந்த வடலூரடிகள் தோன்றினுர். அவர் வேதம் உபநிடதம், புராணம் இதிகாசம் முதலியவற்றை ஓதாதுணர்ந்த செம்மல்; சைவ நன்னெறியில் வழிவழி வந்த ஒழுக்கம் சிறந்த குடியில் பிறந்த தோன்றல். அவரது அருள் நிறைந்த உள்ளம் நாட்டில் சைவத்துக்கு ஏற்பட்ட அபாயங்கண்டு எவ்வாறு பதைத்ததோ எத்துணை ஆண்டுகள் கலங்கினதோ? சொல்லி முடியாது, அச் சித்தருள்ளத்தில் அருள் வெள்ளம் பெருக்கெடுத்தது. அவருள்ளிருந்த பாவன்மை நாவன்மையோடு கலந்து பல்லாயிரம் அருட்பாக்களாக மலர்ந்தன. அவை திருவாசகத்தைப்போல், கற்பவர் கேட்பவர் உள்ளத்தைக் கரைந்துருகச் செய்யும். இவரும் ஒருசித்தரானதால்சாகா கலையையும் சமரச நெறியையும் அடியார் வழிபாடு சிவ வழிபாடு என்னும் பேருண்மையையும் போதித்தார். மரணமில்லா பெருவாழ் வெய்தும் வகைகளைத் தமிழர்க்குச் சிறப்பாகவும் உலகினருக்குப் பொதுவாகவும் உபதேசித்தருளினுர். மெய்கண்டார் கூறியதுபோல் ''மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயத்தானும் அரனெனத் தொழுமே''-சங்கமர் நடமாடுங் கோயில்கள் என்றும் உயிர்தொறும் இறைவன் திருநடம் புரிகின்ருர் என்றும் உணர்த்தினுர். உயிராக்கம் வளர்வதற்குரிய உண்டி கொடுக்கும் சத்திய தருமச்சாலையை நிறுவினர்

'மனிதர்க்குப்புறத்தும் அகத்தும் ஒளி வேண்டற்பாலது; மனிதன் எதைச் சார்கின்ருனே அதன் வண்ணம் ஆகின்ருன்; ஒளியைக் கண்டு ஒளியையே நினைத்து ஒளியில் நின்றுநிலவ ஒளியாவான்' என்ற உண்மையை விளக்கத் திருவிளக்கை வடித்துக் கொடுத்தனர். அன்னுர் ஒரு சித்தரன்றோ; தெய்வ ஆற்றல் கைவரப் பெற்றவரன்றோ; சைவ நெறிக்கு சாகாக்கலையூட்ட வந்த உயர்ந்த வீர சிகாமணியன்றோ!




சமயமும் நாகரிகமும்

D. ஆறுமுகம், M.A., D.R.S.

முன்னுரை :

ஆரம்பகால் மனிதன் காடுகளிடையே விலங்கொடு விலங்காய் வாழ்ந்தான். தங்கி வசிக்க மரப் பொந்துகளேயும், குகைகளேயும் தக்கதொரு இடமாய்க் கொண்டான். கற்களாலும், மரத்தாலும் பல கருவிகள் செய்து வாழ்க்கையில் பயன்படுத்த முற்பட்டான். நாளடைவில் இயற்கைச் சக்திகளின் பேராற்றல்களுக்கு பயந்தான். அது போன்ற பேராற்றலின் காரணகர்த்தா ஒன்று இருப்பதாய் தெளிந்தான். அவ்வாற்றலின் அன்பைப் பெற எண்ணி அதன் பொருட்டு பல விதமான சடங்குகளேயும் மிருக பலியிடுதல்களேயும் செய்தான். அவ்வுயர்ந்த சக்திக்கு கடவுள் என்ற பெயரிட்டழைத்தான். நாளடைவில், மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையேயுள்ள தொடர்பையும் மனிதன் அக்கடவுளே அடையும் வழியையும் பற்றிக் கூறத்தலேப்பதுதான் சமயம், பின் மனித வாழ்வின் முக்கியப் பகுதியாய் சமயம் மாறிற்று. இவ்வாறு மனித வாழ்க்கையின் முக்கிய பகுதியாய் சமயம் மாறிற்று. இவ்வாறு மனித வாழ்க்கையில் முக்கிய பகுதியாய் மாறிய சமயம் மனித வாழ்வின் நாகரிகத்திற்கு பெரிதளவு துணை புரிந்தது. இவை பற்றி இனி ஆராய்வோம்.



சமயம் என்றுல் என்ன ?

இது பற்றி பலர் பலவாறு வரையறுக்கின்றனர். அவற்றுள் சில அறிஞர்களின் வரையறைகளே இனிக் காண்போம். தமிழறிஞர் திரு. வி. க. அவர்கள் கூறுவதாவது சமயம் என்பது "உயிருக்கும் "சத்" என்னும் மாறுதலில்லாத உண்மைக்கும் இடையே உள்ள தொடர்பை தெளியப்படுத்தும் மார்க்கம்" ஆகும் என்றுர்.

மேலும் இவர் இதுபற்றி கூறுகையில் சமயம் என்பது அன்பைப் பெருக்கி உயிர்க்கும் இறைக்கும் இடையேயுள்ள தொடர்பை பெறுதற்குரிய மார்க்கமாகும்.

கடைசியாக 'இயற்கை நெறியே சமயம்' என்று கூறுகிறுர். இதுபற்றி மேனுட்டறிஞர் E. B. Tylor கூறுவதாவது, "இயற்கையின் உன்னத சக்திகளில் நம்பிக்கை வைத்தலே" சமயம் என்றுர்.

சமயத்தைப் பற்றி பல மனித இயல் வல்லுனர்கள் கூறுவதாவது,

"சமயம் என்பது வழக்கங்களிலிருந்து எழுந்த ஒன்று" என்கின்றனர். பிரபல உளவியலாளராகிய Freud என்பவர்சமயத்தை வரையறுக்குங்கால் சமயம் என்பது.

'மனிதன் இயற்கையிடமும் மரணத்துக்குபின் வரும் நிலைமையிடமும் உள்ள அச்சத்தின் விளேவே" என்கிறுர்.

"உணர்வுடன் கூடிய அறமே சமயம்"

— Mathew Arnold

பிரபல சரித்திர ஆசிரியரான H. G. Wells கூறுவதாவது "மானிட சமூகத்துடனும் அதன் வாயிலாகவும் வளர்ந்த ஒன்றுதான் சமயம்" (Religion is something that has grown up with and through human association) என்கிறுர்.

சமயம் என்பது தெய்வத்தைப்பற்றிய நம்பிக்கைகளேயும் பழக்க முறைகளேயும் கொண்ட அமைப்பு முறை என்றும் அதில

இதனைச் செய்யலாம் செய்யக்கூடாது போன்ற சட்ட திட்டங்கள் அடங்கியுள்ளது என்றும் பிரபல சமூகவியலாளராகிய (Duraheim) கூறுகிறார்.

நீதிநெறிச் சட்டங்களை யாவும், தெய்வீக மானது என்று பார்த்தலே சமயம் (Krnt) மேற்கூறிய கருத்தையே வலியுறுத்தி சமயம் என்பது "உலகிலுள்ள நீதி நெறிகளில் நம்பிக்கை வைத்தலே" (Faith in the moral order of the uniuerse) என Fichte என்னும் மேனாட்டறிஞர் கூறுகிறார்.

சமய மென்பது, "முழுமையும் முழுமையற்றதும் சேர்ந்த ஒன்றுதான்"—Schelling.

சமய மென்றால், "இயற்கைச் சக்திகளை சார்ந்திருத்தல்"—Sehlermacher

சமய மென்பது எண்ணம், விருப்பம், உணர்வு, இவற்றை சொல்லாலும் செயலாலும் வெளியிடுதலும், உலகம், மனித இனம், கடவுள் இவைகளைப்பற்றி நம் மனத்தேயுள்ள எண்ணங்களுமாகும். —(Wilson Harper) சமூகவியலாளர் பலர் சமயத்தை வரையறுத்திருக்கின்றனர். அவர்கள் கூறுவதாவது,

"சமயம் என்பது மற்றைய நிறுவனங்கள் போன்று சூழ்நிலைக்கேற்றவாறு தனிமனிதனை மாற்றச் செய்திடும் வழிமுறையாகும்."—Sumner & Keller.

"சமயம் என்பது மனிதனைக் காட்டிலும், சக்தி உடைய பொருள்களின்மேல் நம்பிக்கையுடைமை என்றும், அச்சக்தி இயற்கையாகவே வாழ்க்கையில் மனிதனுக்கு வழிகாட்டியும், கட்டுப்படுத்தியும் வருகிறது"—Sir. Frager.

இதுபோன்ற பல அறிஞர்களும் சமயம் என்றால் என்ன? என்ற வினவிற்கு விடையளித்திருக்கின்றனா. இவற்றிலிருந்து நாமறிவது யாதெனின் சமயம் என்பது உயிர்க்கும் கடவுளுக்கும் இடையேயுள்ள தொடர்பையும் உயிர் எவ்வாறு கடவுளை அடைவது என்பது பற்றியும் கூறுவதர்கும். மேலும் அறஉணர்ச்சிகளுக்கு வழிகோல்வது சமயமே என்றுந் தெளியலாம். ஆனால் தற்காலத்தில் சமயம் என்பதற்கு பொருள் வேறாக கொள்ளப்படுகிறது.

நவீன காலத்தில் சமயம் என்றால் என்ன?

தற்காலத்தில் சமயம் என்பது வெறும் புறக்கோலங்களும் சம்பிரதாயக் கட்டுப்பாடுகள் என்றும் பலவிடங்களில் மாறுபட்ட பொருள்கள் நிலவுகின்றன. ஆனால் சமயம் என்பது புறக்கோலமுமன்று சம்பிரதாயக் கட்டுப்பாடுகளும் இவைகளை ஒட்டியெழுந்த வலக்க ஒழுக்கங்களும் சமயத்தின் பேரில் புரோகிதர்களால் நுழைக்கப்பட்டனவேயாகும். இவைகள் யாவும் உயிர்க்கும் இறைக்கும் இயல்பாயுள்ள தொடர்பைத் தெளியப்படுத்தும் மாாகமாகிய சமயம் ஆகா.

உலகில் பல சமயங்கள் இருப்பதால் சமயம் ஒன்றா? அல்லது பலவா? என்ற ஐயம் எழுகின்றது. ஆனால் சமயம் என்பது ஒன்றுதான் உலகில் மொழிகள் பலவாயிருத்தலான் சமயத்துக்கும் பெயர்கள் பலவாக வழங்கப்படுகின்றன. சமயத்தின் பெயர்கள் பலவாயிருப்பினும் அவற்றின் பொருள் ஒன்றேயாம். சமயத்தின் புறப்பெயர்களை நீக்கி அதன் அகத்தை நோக்கின் பொருள் ஒன்றாயிருத்தல் காணலாம். சமய குருக்கள் பலர் தோன்றி நாளடைவில் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே பணியாற்றினர். இவர்கள் நாளடைவில் பலவிதமான சடங்குகளையும், உற்சவங்களையும் சமயத்தின்பேரில் புகுத்தினர். இதனால் இவர்கள் உடலுழைப்பின்றி வாழ்ந்தனர். ஆதலால் சமயம் என்பது சடங்குகள், வழக்கங்கள் போன்றவை என்று பிற்காலங்களில் பொருள் கொள்ளப்பட்டன. ஆனால் இக்கருத்து உண்மைக்கு புறம்பானதாகும்.

சமயத்தைப்பற்றி என் கருத்து :—

உலகிடையே பல்வேறு சமயங்கள் தோன்றின. ஒவ்வொரு சமயமும் கடவுளையடைய தனித்தனி வழிமுறைகளை கூறுகின்றது. பல்வேறு ஆறுகள் தனித்தனி வழிகளில் ஒடிய பின் கடைசியில் அவையாவும் கடலில் சங்கமாகின்றன. அதுபோல் உலகிடை சமயம் பலவிருப்பினும், அவற்றின் நோக்கம் யாவும் ஒன்றேயாகும். ஆனால் அன்னேக்கத்தை அடையும் வழிமுறைகள் சமயத்திற்கு சமயம் வேறுபடலாம்.

சமயத்தின் நோக்கம் யாதெனின் உயிர்க்கும் கடவுளுக்கும் கடையேயுள்ள தொடர்பை

யறிதலும் உலகிடை அறவுணர்ச்சியை வளர்ப்பது மேயாம். காலப் போக்கில் மானிட வாழ்க்கையின் முக்கிய அம்சமாய் சமயம் அமைந்தது. இது போன்று மானிட வாழ்க்கையில் முக்கிய இடம் பெற்ற சமயம் உலக நாகரிக வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. இருப்பினும் சிலவிடங்களில் தடையாகவும் இருந்தது.

இனி நாகரிகம் என்பதைப்பற்றி ஆய்வோம்.

நாகரிகம் என்ருல் என்ன ?

மனித வாழ்விற்கு தேவையான பொருள்களின் ஒவ்வொரு கண்டுபிடிப்பும் மனித நாகரிக வளர்ச்சியின் ஒவ்வொரு படிகளாகும். இருப்பினும் வாழ்விற்கு வேண்டிய புறப்பொருள்களின் கண்டுபிடிப்பும், அவற்றில் ஏற்படும் முன்னேற்றங்கள் மட்டும் நாகரிகமாகா. அத்துடன் மனிதனது அகம் உயர்ந்த எண்ணங்களின் இருப்பிடமாய் அமைவதே நாகரிக வளர்ச்சியாகும். நாகரிகத்தைப் பற்றிய பலரின் வரையறைகளை இனிக் காண்போம்.

மனிதன் காட்டில் திரிந்து காய்கனி முதலியன தின்று விலங்குகளிடையே வாழ்ந்து வந்த காலம் நாகரிகம் அற்ற காலம் என்பர். வேட்டையாடிக் கொன்றவற்றை வேகவைத்துத் தின்றதும் நிழலும், குகையும் நாடுதல் விட்டு, வீடுகட்டி ஒதுங்கியதும் நாகரிகத்தின் தொடக்கம் என்பர். உண்ணும் உணவைப் பண்படுத்தி பயன்படுத்தக் கற்றது போலவே உடுக்கும் உடை எடுக்கும் படை முதலியவற்றையும் எண்டாக்கிப் பயன் படுத்தக் கற்றதும் நாகரிகத்தின் தோடக்கபே என்பர். சிறு சிறு கூட்டமாய் இங்கும் அங்கும் அலைந்து வாடியது போய் பெருஞ்சமூகமாய் பேரூரிலும் சிற்றூரிலும் அமைந்து வாழ்ந்தது நாகரிகத்தின் வளர்ச்சி என்பர். "ஆயினும் எண்ணத் தெரிந்து அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் உயர்ந்த உயர்வே நாகரிகத்தின் மலர்ச்சி" எனலாம். ஆகவே உள்ளத்தின் உயர்வே நாகரிகம் எனலாம். ....டாக்டர் மு. வ.

நாகரிகம் என்பது சிந்தனை செய்து திட்டமிடுதற்குறிய திறமையை பெற்றிருக்கும் ஒரு சமூக அமைப்பாகும்.

("Civilisation is a form of society in which people are able to think and ylan."

நாகரிகம் என்பது மனித சமுதாயம் அடைந்த முன்னேற்றத்தைப் பற்றி கூறும் கதைகளாகும்.

(Civilisation is one which contains the story of human achlevements in all its bevildering development)

— ENCYCLOPODEA

சரித்திர ஆசிரியர் கூறுவதாவகு

பல்லாண்டு காலமாய் மனிதஇனம் வாழ்ந்ததைப் பற்றியும் மனித இனத்தின் உலகத்தை பற்றியும் உடன் வாழும் உயிரினங்களைப்பற்றியும் தாம் கற்றுக்கொண்டதையும் என்னியதையும் படிப்பதே நாகரிகம்.

H. G. Wells.

"உலகக் கூட்டு வாழ்க்கையில் தன் நிலைமையை உணர்ந்து தனது கடமைகளையும் உணர்ந்து அற வழியில் நடப்பதே உண்மையான நாகரிகம்"

— Tagore.

"நாகரிகம் என்பது ஒரு அரசிற்குள் ஒவ்வொரு மனிதனும் மற்ற மனிதர்களுடன் சேர்ந்து வாழுந்திறமையே" என்று கூறுகின்றனர்.

(Civilisation is the ability to live in hermony with other people in a state)

— Willdurant.

நாகரிகத்தின் தன்மையைப் பற்றி கூறுங்கால் "தனி மனிதன் பிறந்து வாழ்ந்து இறப்பதைப்போல நாடுகளும் தோன்றி, இருகதுமறையலாம். ஆனுல் நாகரிகம் என்றும் அழியாதது"

(Nations like Individuals live or die but civilisation cannot perish)

— Mazzi

நாகரிகத்தைப்பற்றி Balfour என்பவர் கூறுவதாவது" நாகரிகம் என்பது மனித வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக ஏற்பட்ட ஒரு போராட்டமாகும். அப்போராட்டத்தில் பலபேர் இறந்து சிலரே வாழ்ந்து வெற்றி பெற்றனர்.

(Civilisation is the upward struggle of menkind in which millions are trampled to death; that thousands may mount on their Bodies)

— Balfour.

மேற்கூறியவாறு பல அறிஞரும் பலவாறு நாகரிகத்திற்கு பொருள் கூறுகின்றனர். நவீன காலத்தில் நாகரிகம் என்றால் என்ன? என இனி பார்ப்போம்.

தற்காலத்தில் நாகரிகம் என்றால்....?

தக்காலத்தில் நாகரிகம் என்பது மனிதனின் ஆடம்பர வழ்க்கையின் உச்சநிலையைக் குறிக்கின்றது. உயர்ந்த ரகதுணிகள் அணிவதும், பொன்னகை பலவற்றை சுமத்தலும், நாகரிகம் என தற்பொழுதைய மக்கள் நினைக்கின்றனர். சுருங்கக் கூறின் இன்றைய மக்கள் நாகரிகம் என்பதை ஊண், உடை, மற்று வாழ்க்கைக் குதவும் பொருள்களின் முன்னேற்றத்தை குறிக்கும் சொல்லாக உபயோகப் படுத்துகின்றனர். ஆனல் உண்மைப் பொருள்வேறு.

நாகரிகம் பற்றிய எனது கருத்து.

ஒரு நாட்டில் ஒரு சிலரே தங்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு ஆடம்பரம் பொருள்களில் நாட்டம் செலுத்துகின்றனர். இவ்வாறு ஆடம்பரப் பொருள்களுடன் உல்லாச வாழ்க்கை வாழ்வதே நாகரிக வாழ்வு என்று எண்ணுவோர் நாகரிகத்தின் பொருளறியாதோர் ஆவர். இது போன்று உல்லாச வாழ்க்கை நடத்தும் சிலர் பலன் உழைப்பின் பயனையே துய்க்கின்றனர். இது முற்றிலும் இயற்கைக்கு முரணானது. இது போன்ற மக்கள் தன்னலமொழிந்து, மற்றையோரின் நலத்தை நாடி அதற்காவன செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் தான் அவர்கள் நடத்தும் வாழ்விற்கு நாகரிக வாழ்வென்று பொருள்.

எனவே சுருங்கக் கூறின் நாகரிகம் என்பது மனித வாழ்க்கைக்குதவும் புறப்பொருள்களின் முன்னேற்றத்துடன், மனித இனத்தினது உள்ளத்தின் உயர்வையும் குறிக்கின்றது.

சமயமும் நாகரிகமும்

கால ஓட்டத்தில் சமயமானது மனித வாழ்வின் ஒரு பகுதியாய் அமைந்தது. அவ்வாறமைந்த சமயம் மனித வாழ்கையை முன்னேற்றவும் உள்ளத்தின் நிலையை உயர்த்தவும் பாடுபட்டது. இனி எந்த எந்த துறைகளில் சமயம் நாகரிக வளர்ச்சிக்குதவியது என அறிவோம்.

சமயமும் கல்வியும்:

நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாய் விளங்குவது கல்வியாகும். இதற்கு சமயம் பல நாடுகளில் பலவாறு உதவியது. உதாரணமாக சீன தேசத்தில் கன்பூஸிய மதஸ்தாபகரான கன்பூஸியஸ் ஓர் கல்லூரி கட்டி தனது உயர்ந்த சமயக் கருத்துக்களை மாணக்கர்களுக்கு கற்றுத் தந்தார். தன்னடக்கம், தலைமைப் பண்பு முதலிய ஏற்படும்படி அவரது கல்வி அமைந்தது. இரண்டாவதாக இந்து மத குருக்கள், பண்டை காலங்களில் இந்து ஆசிரமம் என்ற ஸ்தாபனங்களை ஏற்படுத்தி அதில் பயிலும் மாணக்கர்களுக்கு வேதங்களின் நுண்ணிய உயர்ந்த கருத்துக்களை கற்றுக் கொடுத்தனர். பின் இந்து சமயத்தின் சார்பில் பெனரஸ் என்னுமிடத்தில் இந்து சமய சர்வகலாசாலை ஒன்று ஏற்படுத்தப் பட்டு அதில் பல்லாயிரக்கணக்கான மாணக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

கிறித்துவ சமய ஸ்தாபனங்கள் உலகிலுள்ள நாடுகள் அனைத்திலும் உள்ளன. அவை உயர்ந்த கருத்துகள் அடங்கிய தங்களது விவிதிய நூல்களை கற்க தபால் வசதியுடன் மக்களுக்கு உதவி செய்கின்றது. மேலும் கிறித்துவ சமய ஸ்தாபனங்கள் பல கல்லூரிகளை நிறுவி கல்வியை வளர்த்தது, வளர்க்கின்றது. இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள 12,000 ஆரம்ப நடுத்தர பள்ளிகளுள் $\frac{2}{3}$ பாகம் கத்தோலிக்க சமயம் ஏற்று நடத்துவதாகும். ஞாயிறு பள்ளிகளில் (Sunday School) சிறந்த அறிவுரைகளை மாணக்கர்களுக்கு போதித்து வருகின்றது. நளந்தாவில் உள்ள பௌத்த சமய பல்கலைக் கழகம் பல நாட்டு மாணக்கர்களுக்கு கல்வி யறிவை புகட்டியது.

எகிப்திய ஆரம்ப நாகரிகத்தில் இருந்த சமய குருக்கள் மக்களிடையே அறிவைப் புகட்டினர். அத்துடன் குழந்தைகளுக்கு படிப்பு சொல்லியும் கொடுத்தனர். இவ்வாறு சலயம் கல்வி வளர்ச்சிக்கு உதவியது.

சமயமும் கலைகளும் :

மனித நாகரிகங்களின் அழியாச் சின்னங் களாயிருப்பது அவர்கள் படைத்த கலைச் செல்வங்களேயாகும். சமயத்தின் பேரில் எழுந்த பல கோயில்களின் உள்ளே சென்று பார்த்தால் உயிரில்லா ஒவியங்கள் யாவும் உயிருள்ளனபோல் தோன்றும். சமயமானது கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஒவியக்கலை இம் மூன்று கலைகளையும் வளர்த்தது.

திருச்சி மலைக்கோட்டை, தஞ்சாவூர் ஆல யங்கள் இவற்றின் உள்ளே இருக்கும் சிற்பக் கலைகளுக்குக் காரணமாயிருந்தது சைவ சமய மாகும். சாரநாத்திலே உள்ள கோயிலின் உள் விளங்கும் சிற்பக்கலைக்கும், கட்டிடக் கலைக்கும் காரணமாயிருந்தது பௌத்த சமய மாகும். ஆன்மா அழியாதது என்ற சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாகியது தான் எகிப்திய பிரமிடுகள். பழங்கால மாதா கோயில்களின் கட்டிடம் யாவும் கவின் பெறு வனப்பை வீசுகின்றது. மகாபலிபுரச் சின்னங் கள், பல்லவர்களால் சமயத்தின் நம்பிக்கையில் செய்யப்பட்டவையேயாம். மெக்காவிலுள்ள மசூதி (Mosque)யின் கலைவளத்திற்கு காரண மாயிருந்தது இஸ்லாமிய சமயமன்றோ ?

இங்ஙனம் சமயத்தின் வாயிலாய் கலை வளர்ச்சியுற்றது.

சமயமும் பண்பாடும் :

பண்பாட்டு வளர்ச்சியே நாகரிக வளர்ச்சி யாகும். உலகிடை தோன்றிய பல சமயங் களின் கொள்கைகளும் பண்பாடு மிகுந்த கொள்கைகளாகும்.

கிறித்தவ சமயத்தின் கொள்கையில் ஒன்று யாதெனின், "உலகிடை தோன்றிய யாவரும் கடவுளின் குமாரர்களே. ஒருவரை ஆகை யால் சகோதரர் போல் நேசிக்க வேண்டும்." என்பதாகும். யூத சமயத்தில், மோஸஸ் அருளிய "பத்துக் கட்டளைகள்" மனித சமூ கத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு மிகவும் உதவுவன ஆகும். கன்பூஸிய மதத்தின் அடிப் படைக்கொள்கை யாதெனின் மனிதர்களின் ஒவ்வொருவருடைய சொல்லிலும் செயலிலும் நேர்மையிருத்தல் வேண்டும்" என்பதாகும். டாயிஸ சமயம்கூறும் அடிப்படைக்கொள்கை யாதெனின் "மக்கள் யாவரும் இயற்கைவழி வாழ்வு நடாத்தல் வேண்டுமென்பயத." இஸ் லாம் மதம் கூறுவது யாதெனில், "யாரொரு வன் கடவுளின் உயிரினத்திடம் அன்பாய் இருக்கிறானோ அவனிடம் கடவுளும் அன்பாய் இருப்பார்." சமண மதத்தின் கொள்கை யாதெனின் "தன்னுயிர் போல் மன்னுயிரை யும் காத்தல் வேண்டுமென்பதே."

இங்ஙனம் சமயங்கள் யாவும் மனிதனது பண்பாட்டை வடாரத்தன.

சமயமும் இலக்கியமும் :

உலகத்தில் தோன்றிய சமயங்கள் மக்கள் இடையே கல்வியறிவை புகட்டியவுடன் கற் றறிந்தோர் பலரும் சமய சம்பந்தமான இலக் கியங்களை எழுதினர்.

உதாரணமாக புத்தமதத்தின்கண் அம் மதத்தின் கொள்கையை சிறு சிறு கதைகள் மூலம் பரப்பும் பொருட்டு ஜடகா கதைக் (Jataka Stories) கொத்து இயற்ப்பட்டது. இதன் வாயிலாய் அக்காலத்திய மக்கள் வாழ்க்கை, சமூகநிலை, பொருளாதார நிலை முதலியனவற்றை அறியலாம். சைவ சமயத் தின் காரணமாய் பெரிய புராணம் என்ற புராண நூலும் இயற்றப்பட்டன. வைஷ்ணவ சமயத்தின் இலக்கியங்கள் என பல இயற்றப் பட்டன. அவற்றுள் "ஆண்டாள் சரிதை" என்ற ஒரு நூலானது ஆண்டாளின் சரிதை யுடன் வைஷ்ணவ மதத்தின் பெருமையையும் கூறுகின்றது. சைவ சமய அடிகளான அப்பர் சுந்தரர், மாணிக்க வாசகர், தாயுமானவர் போன்றோர் பக்தி பாடல்கள் பல பாடி அதை யும் தந்தருளினர்.

இவ்வாறு சமயமானது இலக்கியங்கள் உருவாக உறுதுணையாய் விளங்கியது.

சமயமும் அறிவியலும்

சமயமானது அறிவியல் துறையிலும் சில சில இடங்களில் துணைபுரிந்தது. பொன் போன்றது என புகழப்படும் காலத்தை கணக்கிட்டு நாட்குறிப்பேடு கண்டுபிடித்தது சமயத்தின் வாயிலாகவே. மேலும் வானில்

உள்ள நட்சத் திரங்கள் போன்றவைகளை ஆய்ந்து பஞ்சாங்கம் போட உதவியதும் சமயமே இவ்வாறு சில இடங்களில் அறிவியல் வளர்ச்சிக்கு துணையாயிருப்பினும் பல இடங்களில் தடையாயுமிருந்தது.

கலிலியோ என்ற விஞ்ஞானி உலகம் உருண்டை யானது என்ற உண்மையை கூறியதற்காக சமயவாதிகள் அவரை தண்டித்தனர். ஏனெனில் வேதநூலில் பூமி தட்டை யானது என்று கூறியிருப்பதால். இதே போன்ற டார்வின் என்ற மேதையை உயிரினங்கள் யாவும் பரிணாம வளர்ச்சி முறையால் உருவான பவை என்ற உண்மையை கூறியதற்காக சமய வாதிகள் அவரையும் தண்டித்தனர்.

இவ்வாறு சிற்சில இடங்களில் சமயம் அறிவியல் வளர்ச்சிக்கு துணையாயும், சில இடங்களில் முட்டுக்கட்டை யாகவும் அமைந்தது.

முடிவுரை

இந்த 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழும் நாம் நாகரிகவாழ்வு வாழ்வதாக எண்ணுகிறோம். நாம் இவ்வளவு தூரம் நாகரிக வளர்ச்சி யடையக்காரணம் யாதெனில் சமயமும், மற்றபிறவுமாகும். சமயங்களானது நாகரிகக் கூறுகளை வளர்த்ததின் காரணமாக மக்களுக்கு நாகரிக வாழ்வு வாழவும் கற்றுக்கொடுப்பதும் என சொல்லாமலே விளங்கும்.

இன்றைய ஏவுகணையுகத்திலே, வாழுகின்ற நமது சமுதாயத்தில், ஆன்மீக சூன்யம்' இருப்பதாக பல அறிஞர்கள் கூறுகின்றனர். அது உண்மையே அறிஞர்களின் அறவுரைகளைக் கேட்டலும் அதன்படி நடத்தலும் மற்ற மக்களின் கடமையேயாகும். ஆதலின் ஆன்மீக உணர்வை நிரப்பவேண்டும். இதற்குறியவழி யாகலின், அறஉணர்ச்சிகஇ பலவற்றை வாழ்க்கையில் கைக்கொண்டு, இயற்கையுடன் இயைந்த அன்பு மயமான வாழ்வு நடாத்த வேண்டும். அத்துடன் உள்ளத்தின் நிலையையும் உயர்த்திக் கொண்டு நாகரிக வாழ்வை மேற்கொள்ளுதல் நலம்.

முற்றும்.

பாரதம் தன்னை அருந்தமிழ்ப் படுத்தியோர்

(K. M. வேங்கடராமையா M.A., திருப்பனந்தாள்)

முன்னுரை

'தமிழ்நாட்டில் பண்டுதொட்டு இன்று வரை கற்றோராலும் மற்றோராலும், பாராட்டிப் போற்றப் பெற்று வருபவை பாரதமும் இராமாயணமும் ஆம். ஆங்காங்குச் சிற்றூர்களில் திரௌபதியம்மன் கோயில்கள் இருத்தலும் பாரதக் கதையினிடத்து மக்களுக்கு இருந்த பற்றைத் தெரியப்படுத்தும்.

பல்லவப் பேரரசர்களில் கி. பி. 630—665 வரை அரசாண்டவன் நரசிம்மவர்மன் எனப் பெறுவான். அவன் மகாபலிபுரத்தில் ஒற்றைக்கல் கோயில்களை வெட்டுவித்தான். அவை தேர்கள்போல் அமைந்தவை. ஐந்து (கல்) தேர்கள் வரிசையாக இருத்தலைக்கண்ட மக்கள், (பஞ்ச பாண்டவர் தேர் என்று கருதித் தருமராசர்தேர், பீமசேனன்தேர், அருச்சுனன்தேர், திரௌபதித் தேர் என்று பெயரிட்டனர். இவ்வண்ணம் பாண்டவர் களை நினைவுகூர்ந்த இடங்கள் பல.

சங்க இலக்கியங்களில்

சங்க இலக்கியங்களில் பாரதக் கதைப் பகுதிகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில :

துரியோதனன் சூழ்ச்சியால் பாண்டவர் இருந்த அரக்கு மாளிகையை நெருப்புச் சூழ்ந்த வரலாற்றை,

'ஐவர் என்று உலகேத்தும் அரசர்கள்
அகத்தராக்
கைபுனை அரக்கில்லைக் கதழ்எரி சூழ்ந்தாங்கு'

என்று கலித்தொகையில் பாலைக்கலி 24ஆம்

பாடலில் பாலைபாடிய பெருங் கடுங்கோ பாடியுள்ளார்.

அவ்வரக்கில்லை வீமசேனன் அழித்துச் சுற்றத்தோடு போய்ப்பிழைத்தான் என்பதை

'முளிகழை யுயாமலை முற்றிய முழங்கழல்
ஒள்ளுரு அரக்கில்லை அளிமகன்
உடைத்துத்தன்
உள்ளத்துக் கிளைகளோடு உய்ப்போகு
வான்போல'

என்று மேற்குறித்த பாலைக்கலிப் பாடலில் கூறப்பெற்றது.

துரௌபதியின் கூந்தலிற்கைந் நீட்டினான் என்று வீமன் துச்சாதனனைப் பிளந்து வஞ்சந் தீர்த்தான் என்பதை,

'அஞ்சீர் அசையியல் கூந்தற்கை நீட்டினான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண்தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்'

என்று முல்லைக்கலி முதற்பாட்டில் சோழன் நல்லுருத்திரன் கூறியுள்ளார்.

துரோணரைத் திருட்டத்துய்மன் கொன்றான்; அவன் தலையை அசுவத்தாமன் திருகினான். இச்செய்தி,

'ஆரிருள் என்றான் அருங்கங்குல் வந்துதன்
தாளிற் கடந்தட்டுத் தந்தையைக்கொன்றானைத்
தோளில் திருகுவான் போன்ம்'

என்று மேலே குறித்த முல்லைக்கலிப் பாடலிலேயே உள்ளது.

வீமன் கதை கொண்டு துரியோதனின் தொடையை மோதி அடித்துக் கொன்றான் என்பதை,

'மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கறுத் திடுவான் போல்'

என்று குறிஞ்சிக்கலி 16-ம் பாடலில் கபிலர் கூறியுள்ளார்.

தருமன் முதலியோர் துரியோதனாதியரை வென்றழித்தனர் என்பது,

'புரிபு மேற்சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வில் ஐவர் அட்ட
பொருகளம் போலும்'

என்று முல்லைக்கலி 4-ம் செய்யுளில் கூறப்பெற்றுள்ளது.

பாரதப் போரில், உதியஞ்சேரல் என்ற சேரவரசன், இருதிறத்தார்க்கும் சோறு அளித்தனன். இச்செய்தி,

'அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது
கொடுத்தோய்'

என்று புறம் 2-ல் முரஞ்சியூர் முடிநாகரும்,

'ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது
தானளித்த, சேரல்,

என்று சிலப்பதிகாரத்திலும் கூறப்பெற்றுள்ளது.

'விழுக்கடிப் பறைந்த' என்ற 366-ம் புறப்பாடல் தருமபுத்திரனைக் கோதமனார் பாடியதாக வுள்ளது.

பாண்டியன் மாபாரதம் தமிழ்ப்படுத்தியது

பாண்டியனது முதற்பேரரசைப் பற்றி யறிவதற்கு பெரிதும் பயன்படும் செப்பேடுகளில் சின்னமனூர்ச் செப்பேட்டுத் தொகுதி சிறப்பிடம் பெறும் 10-நூற்றாண்டில் வாழ்ந்த இராசசிம்மன் காலத்தே அளிக்கப் பெற்றவையே சின்னமனூர்ச் செப்பேடுகள்.

"மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று மாபாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்த செயலைத் தன் முன்னோர் செயல்களுள் ஒன்றாக இராசசிம்மன் இச்செப்பேடுகளில் கூறியுள்ளான். மேலே கண்ட சங்கப் பாடற் பகுதிகளைக் கொண்டு, பாரதக் கதை தமிழ் நாட்டில் நன்கு போற்றப்பெற்று வந்தமை அறியப் பெறுதலின், மக்கள் மனப்போக்கை நன்குணர்ந்த அந்நாட் பாண்டிய அரசன் ஒருவன் மகாபாரதத்தைத் தமிழில் மொழி பெயர்க்க செய்தனன் என்றறியலாம்.

தொல்காப்பியப் பொருளதிகார உரையில்

தொல்காப்பியத்துக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையில் மேற்கோட் பாடல்கள் சில பாரதக் கதைக்கு உரியனவாய் இருக்கின்றன அவை சங்கப் பாடல்களின் சொன்னடையுடையவை, ஆகவே மேலே கூறிய-பாண்டியனால் தமிழாக்கப் பெற்ற பாரதத்தைச் சார்ந்த

பாடல்களையோ அல்லது வேறு பாரத நூற் பாடல்களையோ நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டினார் எனக் கொள்ளலாம்.

பாரத வெண்பா

புலவர் பாடும் புகழுடைய பல்லவ அரசர்களுள் ஒருவன் மூன்றாம் நந்திவர்மன் இவன் கி. பி. 825—850 வரை ஆட்சி புரிந்தவன் இவன் பேரில் பாடப்பெற்றதே நந்திக் கலம்பகம். இவன் தெள்ளாற் றெறிந்த நந்தி வர்மன் எனப் புகழப் பெற்றான். இனைச் சிவனை முழுவதும் மறவாத சிந்தையனம் பைந்தமிழ் ஆய்கின்ற நந்தி—என்று கல்பகம் போற்றும். இவ்வரசன் காலத்தில் பாடப் பெற்றதே பாரத வெண்பா என்ற நூலாகும் இதனை இயற்றியவர் பெருந்தேவனார் எனப் பெறுவர். இது வெண்பா யாப்பில் பெரிதும் எழுதப் பெற்றது; இடையிடையே கதைத் தொடர்புக்காக உரைநடையும் பொருந்தியது இந்நூல் முழுவதும் அகப்பட வில்லை. உத்தியோக பருவமும் யுத்த பருவத்தில் பதின்மூன்று நாட் போர்களுக் குரியப் பகுதியுமே கிடைத்துள்ளது. இதிற் கிடைத்த பாடல்கள் 830. மூன்றாம் நந்திவர்மனுடைய தெள்ளாற்றுப் போர் பின் வரும் பாடலில் உள்ளது :—

வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினை யால்
உண்மையால் பாரான் உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு
யார் வேந்தர் ஏற்பார் எதிர்.

அருணிலை விசாகன் எழுதியது

மூன்றாம் குலோத்துங்க சோழன் கி. பி. 1178-ல் பட்டம்பெற்ற சோழ அரசன் ஆவன். அவனது 32-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (சென்னைக்கருகில்) வடதிருவாலங்காட்டில் உள்ளது. 'மணவில் கோட்டத்துத் திருப்பழையனூர் நாட்டுத் திருவாலங் காட்டுத் திருவரங்கில் அண்டமுற நிமிர்ந் தருளிய நாயனார்க்குக் குன்றவத்தனக் கோட்டத்து இல்லத்தூர் நாட்டு அரும்பாக்க முடைய அருணிலைவிசாகன் திரைலோக்கியமல்லன் வத்சராஜன் என்பவன் திருநுந்தா விளக்குவைக்க நிபந்தம் அளித்தான்' என்று அக்கல்வெட்டுக் கூறுகிறது. இவ்வருணிலைவிசாகன் 'பாரதந் தன்னை அருந்தமிழ்ப்படுத்திச் சிவநெறிகண்டவர்' என்று அக்கல்லெழுத்தில் புகழ் பெறுகிறான். இவர் மூன்றாங் குலோத்துங்கனின் அரசியல் அதிகாரிகளுள் ஒருவராதல் கூடும். இவர் சிறந்த சிவபக்தியுடையவர். இவர் இந் நூலில் சிவநெறி தாழ்வுபடாமல் பாரதக் கதையை எழுதினார் என்பதை மேற்கண்ட அவரைப்பற்றிய புகழ்ச்சி மொழியால் அறியலாம். இந்நூல் இந்நாளில் கிடைத் திலது.

வில்லிபாரதம்

தமிழ் நாட்டில் வெகுவாகப் பயிலப் பெறுவது வில்லிபுத்தூரார் எழுதிய மகாபாரதமே யாகும். வில்லிபுத்தூரார், திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் * பிறந்தவர்; வக்கபாகையில் ஆண்ட பரதியாட்கொண்டான் என்பவரால் ஆதரிக்கப் பெற்றவர்: இவர் காலம் இரட்டையர் காலம்; அதாவது கி. பி. 14-ம் நூற்றாண்டின் முற்பகுதி என்னலாம். இவர் வைணவராயினும் சிவத்துவேஷம் உடையவர் அல்லர். இவர் பாடிய பாரதத்தில், முதல் பத்துப் பருவங்களே உள்ளன.

நல்லாப்பிள்ளை பாரதம்

வில்லிபுத்தூரார் பாடல்களுள் 4000 பாடல்களை எடுத்துக்கொண்டு, பதினெட்டுப் பருவங்களையும் பிற்காலத்தில் எழுதிய பெரும் புலவர் நல்லாப்பிள்ளை என்பவர் ஆவர். இவர் இன்றைக்கு ஏறத்தாழ 150 ஆண்டுகட்கு முன் இருந்தவர்.

பாரதம் சொல்ல நிபந்தங்கள்

யாவரும் போற்றும் பாரதக் கதை கூறும் பாரதம், நான்கு வேதங்களோடு ஒருங்கு வைத்து, ஐந்தாவது வேதமாகக் கருதப் பெற்றது. ஆகவே கோயில்களில் பாரதம் சொல்லுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. அங்ஙனம் செய்யப்பெற்ற ஏற்பாடுகளில் மிகப் பழமையானது, கூரம் பட்டயத்தில் காணப் பெறுகிறது. கூரம் என்பது காஞ்சிபுரத்துக்கு அண்மையில் இருக்கும் தலம். கி. பி. 670-685 வரை ஆண்ட பல்லவ அரசனாகியபரமேசுவரவர்மன் கூரத்தில் ஒரு சிவன் கோயில் எடுப்பித்து, அதற்குப் பரமேசுவர மங்கலம் என்ற ஊரைத் தானமாக அளித்தான். அவ்வூரை 25 பங்குகளாகப் பிரித்துப்

91-ம் பக்கம் தொடரும்

* இவ்வூர் இந்நாளில் எப்பெயரால் வழங்குகிறது என்று தெரியவில்லை,

உண்மை உயர்த்தும்

P. SUBRAMANIAN, *Assistant Inspector of Labour, Madras.*

சிறுகதை

சென்னையிலிருந்து புறப்பட்ட நீலகிரி எக்ஸ்பிரசில் ஏறி உட்கார்ந்ததும் "வணக்கம்மா" என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன்.

"ஓ! நீயா வணக்கம் தம்பி நேற்று போன காரியம் நல்லப் படிக்கு முடிந்ததா? பெண் உனக்கு பிடித்துவிட்டதா"? என்றேன்.

பெண் என்னமோ எனக்கு பிடித்துவிட்டது. ஆனால் அந்தப் பெண்ணைப் பற்றி எனக்குத் தெரிந்தவர் நல்ல அபிப்பிராயம் தெரிவிக்க வில்லை. ஏதோ அந்த பெண் மற்றொரு வாலிபனுடன் சுற்றிக்கொண்டிருப்பதை அவர் பலமுறை பார்த்திருக்கிறு ராம்" என்ருர் பெண் பார்த்துவிட்டு வந்த வாலிபர்.



நான் "அப்போ! பெண்ணை மணந்துக் கொள்ள சம்மதிக்கவில்லை. உமக்குத் தெரிந்தவர் கூறியதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கிற தென்பதைப்பற்றி நீர் ஆராய்ந்து தெரிந்துகொள்ளவும் விரும்பவில்லை. உடனே ஊருக்குத் திரும்பி விட்டீர். அவ்வளவு தானே என்றேன்?

வாலிபர் 'ஆம்' என்ருர்.

நான் என் சொந்தக் கதையையே இப்போது உனக்குச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப் பட்ட நிலையில் நான் அதை உனக்குச் சொல்வது என் கடமையுமாகும். இப்படி நான் சொல்லுவதின் மூலம் நீர் பார்த்து விட்டு வந்த அந்தப் பெண்ணை கற்புக் கரசி என்று சொல்லி உன்னிடம் வாதம் புரிய விரும்பவில்லை. அது என்னுடைய நோக்கமுமல்ல.

இப்போது எனக்கு வயது நாற்பது. நான் பதினெட்டு வயதடைந்து எழில் மிக்க பருவ மங்கையாயிருந்த போது சுமார் இருபத்திரெண்டு வயதுடைய ஓர் வாலிபருடன் சென்னையில் ஓர் இரவு ஓர் உணவு விடுதியில் தனி அறையில் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆம்! யாருமில்லை, நாங்கள் இருவரும் ஒரே அறையில் தனியாக இரவு முழுவதும் தங்கியிருந்தோம். தங்குவதற்கு முந்தி நாங்கள் ஒருவர்க் கொருவர் பார்த்ததுமில்லை சந்தித்ததுமில்லை. நான் இப்போது உன்னைக் கேட்கிறேன் நான் அப்படி ஓர் இரவு அவ் வாலிபருடன் தனி அறையில் தங்கியதனுல் என்னுடைய கற்பை நான் இழந்து விட்டேன் அல்லது நடத்தைக் கெட்டவளாகி விட்டேனென்று நீர் கூற முடியுமா? என்றேன்.

வாலிபர் ஒன்றும் சொல்ல முடியாமல் திகைத்துக் கொண்டிருந்தார்.

ஆம்! இன்று சுமார் 22 ஆண்டுகளுக்கு முந்தி எனது ஊரிலிருந்து என் தகப்பனுரோடு சென்னையைப் பார்க்க வந்தேன். அப்போது நான் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். நானும் என் தகப்பனுரும் ஒரு நாள் மாலை சைனு பஜாருக்கு சில முக்கிய சாமான்கள் வாங்கச் சென்ருேம். ஒரு கடையுள் நுழைந்து சாமான்கள் வாங்கிக் கொண்டிருக்கும்போது திடீரென்று எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது.

அப்போது நம் நாட்டில் சுதந்திரக் கிளர்ச்சி உச்சக்கட்டம் அடைந்திருந்தக் காலம். அன்று யாரோ ஒரு பெரிய சுதந்திரத் தலைவரை பிரிட்டிஷ் அரசாங்கம் கைது செய்து விட்டதாக நாடெங்கும் எழும்பிய சுதந்திரக் கிளர்ச்சி சென்னையிலும் திடீரென தீவிரமாகப் பரவிற்று. தேசத் தொண்டர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்காக போலீஸ் அதிகாரிகள் லத்தி சார்ஜும் கண்ணீர் புகைப் பிரயோகமும் செய்யலாயினர். அதிலும் முக்கியமாக சைனு பஜாரில் கொந்தளிப்பு அதிகமாகி விட்டது. எல்லாக் கடைகளும் திடீரென்று மூடப்பட்டன. பஜாருக்கு வந்த மக்கள் எல்லோரும் பீதியடைந்து ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தனர். அப்போது ஊரடங்குச் சட்டம் வேறு அமுலில் இருந்தது. குழப்பத்

தில் என் தந்தையும் நானும் பிரிக்கப்பட்டோம். எப்படியோ சமாளித்துக் கொண்டு தங்கச் சாலைக்கு வந்து சேர்ந்தேன். அங்கு வந்து சேருவதற்குள் மணி 10 ஆயிற்று. என் தகப்பனுர்க்கு மிகவும் பழக்கமான கடை ஒன்று அங்கிருந்தது. அங்கு எப்படியும் அவர் வந்து சேர்வாரென்ற நம்பிக்கையில் நான் அங்கு வந்தேன். வந்தவள் கடையைப் பார்த்து பெரிதும் ஏமாற்றமடைந்தேன். கடை முற்றிலும் மூடப்பட்டிருந்தது. இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டு நான் வருத்தத் தோடும் வேதனையோடு மிருக்கும்போது திடீரென்று வானம் இருண்டது. தூற்றல்கள் சிறிது போட ஆரம்பித்தன. மழைக்காக அங்கு பக்கத்திலிருந்த ஒரு பெரிய கட்டடத்தின் முகப்பில் ஒதுங்கி நின்றேன்.

நான் அங்கு நின்ற சில விநாடிகளுக்குப் பிறகு ஒரு வாலிபர் மழையில் நனைந்தும் நனையாததுமாய் ஓடோடி வந்து நான் நின்று கொண்டு இருந்த இடத்திலேயே சிறிது தள்ளி நின்ருர். முகப்பில் நுழையும்போது நான் நின்றுகொண்டிருந்ததை அவர் பார்த்ததோடு சரி. மறுபடியும் அவர் என்னை திரும்பிக் கூட பார்க்கவில்லை. தன் கையிலிருந்த பெட்டியை கீழே வைத்து விட்டு ஏதோ சிந்தித்த வண்ணம் நின்றுக் கொண்டிருந்தார்.

மழை ஆரம்பித்த ஒரு மணிக்குப் பிறகு பெரும் காற்றும் புயலும் அடிக்கத் தொடங்கியது. மழையின் வேகமும் அதிகரித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் புயலின் வலிமையை எதிர்க்க முடியாமல் மரங்கள் சாய்ந்தன மின்சாரக் கம்பிகள் அறுந்தன. நகர முழுவதும் காரிருளில் மூழ்கி விட்டது.

நான் நின்று கொண்டிருந்த கட்டடத்தில் முக்கியப் பகுதிகளில் மெழுகு வர்த்தி விளக்குகள் ஏற்றி வைக்கப் பட்டன. அப்போதுதான் அது எனக்கு ஓர் தங்கும் வசதிகளைக் கொண்ட உணவு விடுதி என்பது (Boarding and Lodging) புலனுயிற்று.

மணி 12 இருக்கும் அப்போது மழைவிடவில்லை. மழையின் வேகம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. நான் இனி என் தந்தையை சந்திக்க முடியுமென்ற நம்பிக்கை அடியோடு போய்விட்டது. இரவு எங்கு தங்குவது? அங்கேயே நின்று கொண்டிருக்க முடியுமா? இடம் சென்னை, அதுவும் தங்கச்சாலையாயிற்றே! என் நிலைமையைப்பற்றி மிகவும் பயந்துவிட்டேன். மேலும் சுமார் பத்து சவரன் தங்க நகைகளை நான் அப்போ அணிந்திருந்தேன். பெண்ணுக்கும், பொன்னுக்கும் ஆசைப்பட்டு விளைவிக்கும் எத்தனையோ பாவச் செயல்களும், கொலைகளும் நான் கேட்டதும், படித்ததும் என் ஞாபகத்திற்கு அப்போது வந்தது. அச்சமும், வருத்தமும் என்னை சூழ்ந்துக் கொண்டது.

நீரைத்தாங்கிக் கொள்ளமுடியாமல் மேகம் அதை மழையாக பூமியில் பொழிந்துக்கொண்டிருந்தது. எனது உள்ளமோ வருத்தத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் கண்ணீர் மூலம் தன் பளுவைக் குறைத்துக்கொண்டிருந்தது. மழையாகப் பொழிந்தும் தன் சுமையை குறைத்துக் கொள்ளமுடியாத மேகக் கூட்டம் ஒன்றோடொன்று மோதி இடியோசையை வானத்தில் கிளப்பிக்கொண்டிருந்தன. கண்ணீர் மூலம் வருத்தத்தை வெளிப்படுத்தியும் தன் துன்பச் சுமையை குறைத்துக் கொள்ள முடியாத என் உள்ளம் சிறிது விக்கி அழும் நிலைமையை எனக்குண்டாக்கி அதன் மூலம் தன் பளுவை குறைக்க ஆரப்பித்தது.

இடியோசையையும் பொருட்படுத்தாமல் இதுகாறும் அசைவின்றி நின்றுக்கொண்டிருந்த வாலிபர் நான் விக்கி அழும் மெல்லிய அழுவோசையைக் கேட்டு என்னை திரும்பி ஏறெடுத்துப் பார்த்தார். அவர் என்னைப் பார்த்ததும் என் கண்களில் வழிந்துக்கொண்டிருந்த நீரை என் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டேன்.

சற்றுநேரம் என்னை உற்றுப்பார்த்து விட்டு மிகுந்த இரக்கத்தோடும் பண்போடும் "ஏனம்மா அழுகிருய்?" என்ருர். நான் மௌனமாகயிருந்தேன். மேலும் அவரே தொடர்ந்து "உடன் வந்தவர்களை தவறவிட்டு இங்கு வந்து மழையில் சிக்கிக்கொண்டாயா"? என்ருர். அவர்கேட்ட தோரணையிலிருந்தும், முகப்பாவனையிலிருந்தும்அவரை ஒருவாறு நம்பி என் நிலைமையைச் சொல்லலாம் என்று நினைத்தேன். அதற்குள் அவரே நானும் இங்கு ஒரு பெரிய மனிதரை உத்தியோக விஷயமாக பார்க்க வந்தேன். அவரைப் பார்த்து விட்டு அடையாறு போகத் திரும்பிக் கொண்டிருந்தேன். இதற்குள் இப்படியாகிவிட்டது. இனி எங்குமே வெளியே போக முடியாது. வாடகைக்கும் எந்த வாகனங்களும் கிடைக்காது. மழையும் விடாது போல் இருக்கிறது. இப்போது மணி ஒன்ருகி விட்டது " என்ருர்.

என் நிலைமைப்பற்றி முழுவதையும் அவரிடம் கூறினேன். எல்லாவற்றையும் கேட்ட அவர். "உன் நிலைமை இப்படியா! ஆகிவிட்டது. இப்போது என்ன செய்வது. இன்றுள்ள நிலைமையில் எங்கும் இனி வெளியே தலைகாட்ட முடியாது. என்னைப் பொருத்தவரையில் நான் ஒரு ஆண்மகன். எந்தச் சூழ்நிலையிலும் எப்படியும் சமாளித்துக் கொள்வேன். உன் நிலைமை மிகவும் ஆபத்தாக இருக்கிதே. என்ன செய்வது? இன்னும் சிறிது நேரத்தில் உணவு விடுதிக்காரரோ போலீசாரோ உம்மை தனிமையாக இருப்பதைப் பார்த்துவிட்டால் சந்தேகக் கண்ணோடல்லவா கேள்விகேட்க ஆரம்பிப்பார்கள்! இது உன்னை மிகவும் இக்கட்டான நிலையிலல்லவா கொண்டு போய்விடும்" என்று அவர் என்னிடம் மெதுவாக பேசிக்கொண்

டிருந்தபோதே விடுதியின் சொந்தக்காரர் எங்களைப் பார்த்து இளம் தம்பதிகளெனக் கருதி "ஏன் இன்னும் நீங்கள் இருவரும் இங்கு நின்று கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் எமது லாட்ஜில் தங்கியிருப்பவர்கள் தானே?" என்ருர்.

அவர் அப்படிக் கேட்டதும் என்னுடனிருந்த வாலிபர் "நாங்கள் அடையாறுக்குப் போக வேண்டும்: மழையில் இங்கு அகப்பட்டுக் கொண்டோம். உங்கள் லாட்ஜில் ரூம் காலியாக இருந்தால் இரவு இங்கு தங்கிவிட்டு காலையில் அடையாறுக்கு புறப்பட்டு விடுகிறோம்" என்ருர்.

இதைக் கேட்டதும் உணவு விடுதிக்காரர் "கொஞ்சம் இருங்கள், மேனேஜரைக் கேட்டு வந்து சொல்கிறே னென்று" உள்ளே போய் விட்டார்.

வாலிபரின் துணிவான முடிவு என்னை அதிரச் செய்து விட்டது. உடல் நடுங்கியவாறு கலங்கிய கண்களோடு வாலிபரைப் பார்த்து "ஐயோ, நான் இதற்கு சம்மதிக்கமாட்டேன். அப்படி ஒன்றும் ஏற்பாடு செய்து விடாதீர்கள்" என்று அவரிடம் முறையிட ஆரம்பித்தேன்.

அவர் மிக்க வருத்தத் தோடு "உன் பெயரென்ன?" என்ருர்

நான் "கமலம்" என்றேன்.

"கமலம், நான் ஒரு வாலிபன்தான். ஒரு M. A. பட்டதாரியும் கூட. யாரோ ஒரு சில வாலிபர்கள் தகாத முறையில் பண்பாட்டுக்குக் குறைவாக நடந்து கொள்கிருர்கள் என்பதை வைத்துக்கொண்டு எல்லாரையும் அப்படி நினைத்துக்கொள்ளாதே. இப்போது அதைப் பற்றி நான் மேலும் உன்னிடம் விவாதித்துக் கொண்டிருக்க நேரமில்லை. ரூம் கிடைத்தால் நாம் இருவரும் இங்கேயே தங்கி விடுவோம். என் பெற்ருேர்கள் மீதும் நம் தாய் நாட்டின் மீதும், நான் கற்ற கல்வியின் மீதும் இவ்வுலகைப் படைத்த ஆண்டவன் மீதும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன், என்னுல் உன் கற்புக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது. இன்று இரவு உன்னையும், உன் கற்பையும் காப்பது என் மனிதக் கடமை அதை நிறைவேற்றி வைப்பதில் என்னை தடுக்காதே. அப்படித்தடுத்தால் உனக்கு அதனுல் எத்தகைய விபரீத விளைவுகள் ஏற்படுமென்பதை நான் அறிவேன்.

"அதோ விடுதியின் சொந்தக்காரர் வந்து விட்டார். உன் கழுத்தை சேலையால் நன்கு மறைத்துக்கொள்" என்ருர்.

"சார் ஒரு ரூம் காலியாக இருக்கிறது. நீங்கள் தங்கிக் கொள்ளலாம்" என்ருர் விடுதிக்காரர்.

கட்டவேண்டிய விடுதிக் கட்டணத்தை கட்டி விட்டு ரூமுக்கு என்னை அழைத்துச் சென்ருர். செல்லும் போது என் உள்ளம் படபடத்தது. உடல் நடுங்கியது. முன்னே அவர் செல்ல நான் பின்னே தொடர்ந்து சென்றேன் தூக்கு மேடைக்குச் செல்லும் கொலையாளியைப்போல் அறைக்குள் சென்றதும் அங்கிருந்த ஒரு கட்டிலைக் காட்டி, "கமலம்" பயப்படாதே. எந்த விதமான பயமின்றி நீ படுத்து தூங்கலாம் இவ்விடத்தில் என் உயிருள்ளவரை என்னுலோ பிறராலோ உன்கற்பிற்கு எவ்விதமான ஆபத்தும் வராது என்பதை மறுபடியும் உனக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு பக்கத்திலிருந்த மற்ரெரு கட்டிலில் படுத்து சிறிது நேரத்தில் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார். என்னதான் அவர் ஆணையிட்டுக் கூறியிருந்தாலும் என் மனம் எதையும் நம்பமுடியவில்லை. அந்த நிலையிலேயே என் வாழ்வு பாதி அழிந்து விட்டதாகக் கருதி கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தே னென்ருல் தூக்கத்திற்குயிடமேது?

பொழுது விடியும் நேரம் மணி சுமார் ஐந்தாகியிருக்கலாம். தூக்கத்திலிருந்தவர் எழுந்து நான் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். சிறிது லேசான புன்முறுவலுடன் "நீ இன்று இரவு படுத்து தூங்கமாட்டாய், தூங்க வைக்கவும் என்னுல் முடியாதென்பதை உணர்ந்தே நான் நன்ருகத் தூங்கிவிட்டேன். கற்பைக் காத்துக்கொள்ள விரும்பும் எந்த இந்தியப் பெண்ணும் இந்த நிலைமையில் இப்படித்தான் நடந்து கொள்வார்கள். அது அவர்களின் இயல்பு" என்றவர், கமலம் நான் அவசரமாக இப்போதே அடையாறுக்குப் போகவேண்டும் புறப்படு, உன்னை உன் அப்பாவிடம் சேர்த்து விட்டு போகிறேன்" என்ருர்.

நான் "அப்பாவா! அவர் எங்கு எனக்காக இந்நேரம் அலைந்து கொண்டிருக்கிருரோ?" என்றேன்.

அவர் "அப்படியானுல் என்ன செய்வது? நான் உடனே புறப்படவேண்டுமே" என்ருர்.

நான் "இனி எனக்கொன்றும் பயமில்லை என்னை விடுதியை விட்டு வெளியே கொண்டு போய்விட்டு விடுங்கள். இந்த வீதியிலேயே என் தகப்பனுர்க்குத் தெரிந்த கடை ஒன்று இருக்கிறது. எட்டு மணிக்குள் கடையை திறந்து விடுவார்கள். அதுவரையில் நான் வீதியில் அங்கும் இங்குமாய் திரிந்து கொண்டிருந்து விடுகிறேன்" என்றேன்.

"அதுவும் நல்ல யோசனைதான். சரி புறப்படு" என்ருர்.

அறையின் கதவை திறந்துகொண்டு அவர் முதலில் வெளியே வந்தார். அவர் பின்னே நான் தொடர்ந்தேன். அறையின் வாயிலை விட்டு நான்கு அடிகள் எடுத்து வைத்திருப்பேன். என் ஊர் மணியக்காரர் என்னைப் பார்த்துவிட்டு ஒரு கணை கணைத்தார். அவரைப்

பார்த்ததும் எனக்கு பகீரென்றது. என் உள்ளம் உடல் மறுபடியும் ஆட்டங்கண்டன. எனது வாழ்க்கை என்னும் கட்டிடத்தின் அஸ்தி வாரத்தில் எந்தச்சமயத்திலும் வெடிக்கக்கூடிய வெடி குண்டு ஒன்று வைத்தாகி விட்டதென்று முடிவு செய்து விட்டேன். அவர் என்னுடன் ஒன்றும் பேச வில்லை. தன் ஓரக்கண்ணாலேயே என்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். நான் வாலிபருடன் பின்னாலேயே சென்றேன். உணவு விடுதியைக்கடந்து வெளியே வந்தோம். "கமலம், நான் வரட்டுமா" என்று சொல்லியவர் என் கலங்கிய கண்களைப் பார்த்து "ஏன் கமலம்! இன்னும் கலக்கம். என்ன நடந்துவிட்டது" என்றார்.

விஷயத்தை அவரிடம் சொன்னேன். என்னைப் பார்த்தவாரே "கமலம்! வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான சோதனை ஏற்படுவதுண்டு. அதில் நாம் தைரியமாகவும், நேர்மையாகவும், அதிலும் முக்கியமாய் உண்மையாகவும் நடந்து கொண்டால் நிச்சயம் நன்மையே உண்டாகும். பொய்மை தாழ்த்தும் உண்மை உயர்த்தும் நீ ஒரு மாசற்ற கற்புடையப் பெண். பொய்யென்னும் பனிப்படலம் உன் வாழ்க்கையை மூடி மறைக்க முயன்றாலும் உண்மை என்னும் கதிரவன் சிறிது நேரத்தில் தோன்றி உன் வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்வான். இதற்கெல்லாம் அஞ்சாதே. நீ உண்மையாகவே நடந்துக்கொள். நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு நான் கைகூப்பி வணங்கியக் கரங்களைக் கண்டு என்னை ஆசிர்வதிப்பது போல தன் வலக்கரத்தை அசைத்துக்கொண்டே இடது கையில் பெட்டியுடன் சென்றுவிட்டார். அவர் சென்ற திசையை நோக்கியபடியே அவர் என் பார்வையிலிருந்து மறைகிற வரை அங்கேயே நின்றுக் கொண்டிருந்தேன்.

என் உள்ளத்தில் அச்சம் நீங்கி ஒருவித புதிய உணர்ச்சியால் நான் பழைய நிலைமையடைந்து என் தகப்பனாருக்குத் தெரிந்த கடைக்குச் சென்று அவருக்காகக் காத்திருந்தேன். அன்று பகல் 10 மணிக்கு அதே கடைக்கு என் தகப்பனார் என்னை தேடிவந்தார். ஒருவரை ஒருவர் பார்த்த பிறகு இருவரும் கண்ணீர்விட்டு அழுது விட்டோம். அன்று இரவு நடந்த விஷய முழுவதும் என் தந்தையிடம் கூறினேன்.

"ஐயோ! எல்லாம் சரிதானம்மா. நீ உயிர் தப்பியதே எனக்குப்போதும். உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? நம் ஊர் மணியக்காரர் உமாபதி பார்த்து விட்டாரென்று சொல்லுகிறாயே, அதில் தானம்மா உனக்கும் நம்ம குடும்பத்துக்கும் ஆபத்து வந்துவிட்டது. அந்த உமாபதி உளறுவாயனாயிற்றே. உண்மையை அறியாமல் ஊர் முழுவதும் உன்னையும், நம் குடும்பத்தைப்பற்றியும் மானம்பறிபோகும்படி பறைசாற்றி விடுவானே. அவன் வாய் சிறிதும் நேரம் கூடசும்மா இருக்காதே. சரி ஆனது ஆகி விட்டது. நான் போய் அந்த உமாபதியின் காலில் விழுந்தாகிலும் விஷயத்தை அவனோடு வைத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறேன்." என்று சொல்லிவிட்டு நான் வாய் திறந்து எதுவும் கூறுவதற்கு முந்தியே அந்த உணவு விடுதியை நோக்கி என் தந்தை வேகமாகப் போய்விட்டார்.

அடுத்த நாள் நானும் என் தந்தையும் எங்கள் ஊர் வந்து சேர்ந்தோம். அன்றையலிருந்து உமாபதி எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார். என்னை அவரது கடைக்கண்ணால் ஒரு மாதிரியாகப் பார்ப்பார். அவர் வரும்போதெல்லாம் என் தந்தையார் அவருக்கு ராஜோபசாரம் செய்வார். அடிக்கடி பணமும் கடனாகக் கேட்பார். வாங்கியப்பணத்தை திரும்பவும் தரமாட்டார். எங்களது மளிகைக் கடையில் பணம் தராமலே சாமான்களை தாராளமாக வாங்கிப் போவார். அதற்குப் பணம் கேட்டால் அலட்சியமாகப் பதில் சொல்வார். என் தகப்பனார் அவரால் ஆட்டி வைக்கப்பட்ட பம்பரம் போல் இயங்கி வந்தார். ஒவ்வொரு சமயங்களில் உமாபதி எங்கள் குடும்பத்தின் கௌரவம், பிழைப்பு, அந்தஸ்து எல்லாமே அவர் கைக்குள் அடங்கியிருப்பதாகச் சிலரிடம் சொல்லிக் கொண்டிருந்ததையும் என் காதாலேயே நான் கேட்டிருக்கிறேன். இவ்வளவும் என் குடும்பத்திற்கு ஏற்பட்டது என்னால்தான் என்று நினைக்கும்போது என் உயிரைப் போக்கிக்கொள்வதைப்பற்றியும் நான் நினைத்ததுண்டு.

எனது படிப்பு பத்தாம் வகுப்பில் பாதியிலே நின்று விட்டது. என் தகப்பனார் இனி பள்ளிக்கு நான் செல்லக் கூடாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். என் கழுத்தில் ஓர் முடிச்சுப் போட ஓர் வாலிபனைத் தேடும் படலத்தில் அவர் முழு மூச்சுடனிறங்கி விட்டார்.

என் நிலைமை என்ன என்பதை நான் நன்கு சிந்தித்துப் பார்த்தேன். எப்படியும் எனது சென்னை இரகசியம் ஒரு நாள் வெளியே வந்து தீரும். என்னதான் உளறுவாய் உமாபதியின் வாயை என் தகப்பனார் அடைத்து வைத்திருந்த போதிலும் அது ஒரு நாள் திறந்து இரகசியத்தை அம்பலமாக்கும். எதை அதிக நாட்களுக்கு அடைத்து வைத்தப் போதிலும் வாயை மாத்திரம் அதிக நாட்களுக்கு அடைத்து வைக்க முடியாது என்ற உண்மை எல்லோரும் அறிந்தது தானே! உமாபதி தான் இரகசியத்தை வெளியிடாவிட்டாலும் பிறர் யாராகிலும் எங்கள் இருவரையும் உணவு விடுதியில் பார்த்திருந்து பிற்காலத்தில் எப்போதாகிலும் ஒரு நாள் ஓர் வித சூழ்நிலையில் என்னை மணப்பவர் அதை அறியும்படி நேர்ந்துவிடலா மல்லவா? அப்படி நேரிடுமானால் என் வாழ்க்கை கெடுவது மன்றி என்னை மணக்கவரும் ஓர் உத்தமரின் வாழ்க்கையும் கெடலா மல்லவா? அத்துடன் வாழ்நாள் முழுவதும் இதைப் பற்றி பயந்து தானே நான் வாழ நேரிடும்.

இத்தகைய பிற்கால வாழ்க்கையிலுள்ள அபாயத்தைத் தடுக்க ஒரே ஒரு வழிதான் எனக்குத் தோன்றிற்று. அதுதான் என்னை பெண்பார்க்க வரும் வாலிபனிடம் உண்மையைச் சொல்லி விடுவது. அதற்குப் பிறகும் அவர் சம்மதித்தால் திருமணம் இல்லாவிட்டால் கால முழுவதும் கன்னியாகவேயிருந்து விடுவதென்று உறுதியுடன் முடிவு செய்து விட்டேன்.

என் தந்தையின் முயற்சியாலும் உமாபதியின் உதவியாலும் எத்தனையோ எழுத்தாளர்களும் புரட்சிக் கருத்துள்ளவர்களும், சமுதாய சீர்திருத்தவாதிகளும், விதவைத் திருமணத்தைப் பற்றி வீரிட்டுப் பேசுபவர்களும், பெண்களின் சம உரிமையைப் பற்றி வலியுறுத்திக் கூறுபவர்களும் ஒவ்வொருவராக என்னைப் பெண் பார்க்க வந்தனர்.

எல்லாம் முடிந்த பிறகு என்னை மணந்துக் கொள்ள சம்மதம் தெரிவித்த ஒவ்வொரு மணமகனையும் என் பெற்றோர்களின் சம்மதத்தைப் பெற்று என் தனி அறையில் அழைத்து சென்னையில் அன்று இரவு நிகழ்ந்த முழு சம்பவத்தையும் கூறி அவர்களுடைய சம்மதத்தைக் கேட்டேன். ஒவ்வொருவரும் முகத்தை சுளித்துக் கொண்டு சென்றார்களே ஒழிய ஒருவரும் என்னை மணக்கச் சம்மதிக்க வில்லை.

என் தகப்பனுரும், எனக்காக தன் ஊளறு வாயை இதுவரையிலும் மூடி வைத்திருந்த உமாபதியும் என்ன வற்புறுத்தி கெஞ்சிக் கேட்டுக் கொண்ட போதிலும் உண்மையைச் சொல்லாமல் யாரையும் நான் மணந்து கொள்ள முடியாதென்று அவர்களுக்கு பணிவோடும் உறுதியோடும் கூறி விட்டேன்.

எனது இவ்வுறுதியான முடிவு எதற்கும் தளராத என் தந்தையின் உள்ளத்தை தளரச் செய்து விட்டது. ஆம்! உள்ள முடைந்த அவர், அவரது தொழிலில் நாளுக்கு நாள் தோல்வியுற்று நஷ்டத்தையே அடைந்து வந்தார். வளமான என் குடும்பம் வாழ்விழந்து வறுமை நிலையை யடைந்து விட்டது. என் திருமணம் தடைப்பட்டதால் எனக்குப் பின்னுல் காத்துக் கொண்டிருந்த என் இரண்டு இளைய சகோதரிகளின் திருமணமும் தடை பெற்று என் தந்தையை அச்சுறுத்தி வந்தது.

பல நாட்கள் ஓடி மறைந்தன. மாதங்கள் புரண்டன, ஆண்டுகள் மாறின, ஆனுல், என் திருமண நிலைமை மாத்திரம் அப்படியே தான் இருந்தது.

அன்றொருநாள் நான் படித்த பள்ளியில் வகுப்பில் முதலில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் ஆண்டு விழா ஒன்று நடந்தது. எனது இளையச் சகோதரனும் ஓர் பரிசு அன்று பெறுவதா யிருந்ததால் நானும் அவ் விழாவிற்குச் சென்று பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் முன் வரிசையில் உட்கார்ந்திருந்தேன். பரிசு வழங்குவதற்காக ஒப்புக்கொண்டிருந்த டெப்டி கலெக்டர் அவர்கள் மேடை மீது அவருக்காக அமைக்கப் பெற்றிருந்த ஆசனத்தில் வந்து உட்கார்ந்தார். உட்கார்ந்ததும் மாணவர்களின் பெற்றேர்கள் மற்றப் பொதுமக்கள் உட்கார்ந்திருந்த இடத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். பிறகு என்னைக் கண்டவராய் சற்று அதிசயப் பார்வையோடு என்னையே கூர்ந்து சிறிது நேரம் பார்வையை என்மீதே செலுத்தினர். நானும் சற்று அவரையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். இருவராலும் ஒருவர் முகத்தை ஒருவர் நன்கு பார்க்க முடியாத தூரத்தில் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவரைப் பற்றி வாயாரப் புகழ்ந்து கூறியதை ஊளறுவாய் உமாபதியின் மூலம் நான் கேட்டிருக்கிறேன். "இளம் வயதிலேயே தன் சொந்தத் திறமையால் உயர்ந்த பதவிக்கு வந்தவர் நல்ல பண்புள்ளவர், தங்கமானவர்" என்றெல்லாம் அவர் அடிக்கடி சொல்வதுண்டு. என்னை ஏன்? அவர் அப்படிப் பார்க்கிருரென்பது எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்கு வயது அப்போது இருபத்தைந்து. அப்படி ஒன்றும் நான் எழில் மிக்க மங்கையாகவோ அல்லது கவர்ச்சி தரும் ஆடை ஆபரணங்களணிந்த கன்னியாகவோ காட்சி யளிக்கவில்லை. என் வாழ்க்கைத்தான் ஏற்கெனவே மங்கிப்போயிருந்ததே என்னிடம் எங்கிருந்து கவர்ச்சியிருக்கும்? கவலையுடன் உட்கார்ந்திருந்தேன்.

பரிசு வழங்கும் வைபவம், பரிசு வழங்கியவரின் இனியப் பேச்சு, தலைமை ஆசிரியரின் நன்றியுரை எல்லாம் இனிதே முடிந்தது. விழாவிற்கு வந்திருந்தக் கூட்டம் கலைய ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

பரிசு வழங்கியவர் பேசும் போதும் அவர் பார்வை என்மீது அடிக்கடி விழுந்ததை நான் கவனித்துக் கொண்டிருந்தேன். பேசி முடித்து விட்டு தன் ஆசனத்தில் அமர்ந்ததும் தன் பக்கத்திலமர்ந்திருந்த தலைமை யாசிரியரிடம் என்னைச் சுட்டிக்காட்டி ஏதோ கேட்டார். அவர் பதிலளிக்க முடியாமல் என்னை ஒருமுறை உற்றுப் பார்த்து விட்டு அங்கு பக்கத்திலமர்ந்திருந்த மணியக்காரர் உமாபதி அவர்களை அவசரமாகக் கைகாட்டி அழைத்தார். உமாபதி மேடைக்கு வந்ததும் அவருக்கு என்னைச் சுட்டி காட்டி ஏதோ கேட்டார். ஊளறுவாய் உமாபதி ஏதோ "கிசு கிசு" என்று மெல்லியக் குரலில் டெப்டி கலெக்டரிடம் பேசியதைக் கண்டு தலைமை ஆசிரியர் மெதுவாக அவ் விடத்தை விட்டு எழுந்து நகர்ந்தார். சிறிது நேரம் அவர் பேச்சை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த டெப்டி கலெக்டர் அவர்கள் திடீரென்று கோபமடைந்த வராய் அவருடைய நிலைமையையு மறந்து உண்மையை தெரிந்து கொள்ளாமல் எதையும் உளராதே" என்று உமாபதியிடம் சற்று உரக்கக் கூறிவிட்டு "சரி, நீர் போகலாம்" என்று அவருக்கு உத்தரவு

கொடுத்து விட்டு மேடையை விட்டு கீழே இறங்கி நேரே போய் தன் காரில் உட்கார்ந்தார். எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டதும் கார் நகர்ந்தது. அப்படி அவர் கோபமாக மேடையை விட்டு இறங்கும் போதும் என்னை மறுபடியும் உற்று பார்த்துவிட்டு சிறிது புன் முறுவலுடன் தன் தலையை அசைத்துக் கொண்டார்.

அவரை வழியனுப்பிவிட்டு வந்த தலைமை ஆசிரியர் கூனி குறுகி நின்று கொண்டிருந்த மணியக்காரர் உமாபதியைப் பார்த்து என்ன உமாபதி! கலக்டரிடம் என்ன உளறி தொலைத்தாய்? உன் மீது அவர் அப்படிக் கோபித்துக் கொண்டாரே! என்று கேட்டுக்கொண்டிருதார். உமாபதி மௌனமாய் எல்லாவற்றிற்கும் காரணம் நான் தான் என்று அவர்களுக்குச் சொல்லுவது போல் என்னையே கோபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

விஷயம் பல நாட்களுக்குப் பிறகு தான் எனக்குத் தெரியவந்தது. இது வரையிலும் என் சென்னை சம்பவத்தைப் பற்றி இரகசியமாக வைத்திருந்த உமாபதி அவர்கள் என்னைப்பற்றி கலக்டர் கேட்டபோது அவ்இரகசியத்தை முழுதும் அவருக்கு பயந்தோ அல்லது வாய்தவறியோ கூறிவிட்டிருக்கிறார். கூறியவர் அத்துடன் நில்லாமல் என்னைக் கற்பிழந்தவளென்றும், அதனால் திருமணம் நடைபெறுமல் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறேனென்றும் சொல்லியிருக்கிறார்.

விழாவுற்கு வந்தவர்கள் எல்லோரும் போய் விட்டனர். நான் வருத்தமும் வேதனையுமாய் என் சகோதரனுடன் வீடு வந்து சேர்ந்தேன்.

பள்ளி ஆண்டு விழா நடந்த இரண்டாம் நாள் காலை சுமார் பத்துமணிக்கு மணியக்காரரும் தாசில்தாரும் மிகவும் மரியாதையுடனும், வணக்கத்துடனும் என் தகப்பனருடன் ஏதோஇரகசியமாக பேசிக்கொண்டிருந்தனர். சுமார் ஒருவாரம் வரை தாசில்தாரும் மணியக்காரரும் என் வீட்டுக்கு வருவதும் போவதுமாயிருந்தனர். மணியக்காரர் உளறுவாய் உமாபதி எங்கள் வீட்டுத் திண்ணையிலேயே காத்துக் கிடந்தார். என் தந்தையாருடன் மிகவும் மரியாதையாகவும் வணக்கத்தோடும் பேச ஆரம்பித்தார். இப்போது அவர் நிலைமை முற்றிலும் மாறுபட்டிருந்தது. என்னுல் காரணம் ஒன்றும் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

ஒரு நாள் மாலை என் தகப்பனர் என் அறைக்கு வந்து "கமலம், உனக்கு எதிர்பாராத ஓர் பேர திர்ஷ்டம் வந்திருக்கிறதம்மா. அந்த அதிஷ்டத்தை உன் புத்திசாலி தனத்தால் கட்டி அணைத்துக்கொள்வதோ அல்லது உன் முட்டாள்தனத்தால் உதறித்தள்ளிவிடுவதோ உன் கையிலிருக்கிறது" என்றுர்.

நான் அதிசயத்தோடும் ஆச்சரியத்தோடும் ஆவலோடும் "அது என்ன என்று" கேட்டேன்.

"சென்ற வாரம் நம் ஊருக்கு வந்திருந்தாரே ஓர் இளம் வயதுடையடெப்டி கலக்டர் அவர் நாளைக் காலை உன்னைப் பெண்பார்க்க வருகிறுர்" என்றுர்.

நான் இதைக்கேட்டதும் நம்பமுடியாமல் அப்படியே அசந்து நின்றேன். அவர் தொடர்ந்து பேசினுர். "நீ நாளைக்கு வருபவரிடம் சென்னையில் நடந்த விஷயத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் இதுவரையிலும் வந்தவர்களிடம் சொல்லியது போல் சொல்லக்கூடாது. சொன்னுல் விஷயமுழுவதும் கெட்டுவிடும். உன்னை இதை மிகவும் கெஞ்சிக்கேட்டுக் கொள்கிறேன். இனி குடும்பம் பிழைப்பதோ அல்லது அழிவதோ உன் கையிலிருக்கிறதம்மா" என்று சொல்லிவிட்டு மிக்க வருத்தத்தோடும் ஆவலோடும் என் பதிலை என் தகப்பனர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

"இதைப்பற்றி என் உறுதியான முடிவை உமக்கு ஏற்கனவே சொல்லிவிட்டிருக்கிறேன். அதை என்னை அரசனே மணக்க வந்தாலும் மாற்றிக்கொள்ள முடியாது. உண்மையில் நடந்ததைச் சொல்லியே தீருவேன். உயர்ந்த பதவி வகிப்பவர் வருகிறுர் என்ற காரணத்தால் உண்மையை மறைக்க நான் எப்போதும் இணங்கேன். இதனுல் எனக்கோ, நம் குடும்பத்துக்கோ எத்தகைய விளைவுகள் ஏற்பட்டாலும் சரி" என்று சொல்லிவிட்டு என்னுல் குடும்பத்திற்கேற்பட்டுள்ள வறுமைநிலையை நினைத்து கண்ணீர் விட்டேன். கண்ணீரைக் கண்ட என்தகப்பனர் மேலும் ஒன்றும் பேசமுடியாதவராய் வெளியே சென்றுவிட்டார்.

அடுத்த நாள் காலை குறித்த நேரத்திற்கு கலக்டர் இரண்டு உறவினர்களுடன் என் வீட்டுக்கு வந்தார். சம்பிரதாயப்படி பெண்பார்க்கும் சடங்கு முறைப்படி நடந்த பிறகு என் வழக்கப்படி கலக்டரை என்தனிஅறைக்கு அழைத்தேன். உள்ளே வந்தவரை நிமிர்ந்து கூடப் பார்க்க தைரியமில்லை; நடுக்கத்துடனும் தட்டும் தடுமாறிய வார்த்தைகளுடன் பேசத் தொடங்கினேன்.

"நான் உங்களுக்கு என்வாழ்க்கையில் ஏற்பட்ட ஓர் தனிப்பட்ட சம்பவத்தைச் சொல்லுகிறேன், கேட்பீர்களா"? என்றேன்.

"என்ன! தராளமாக சொல்லலாம்" என்றுர்.

"சென்னையில் ஒருநாள் ஓர்இரவு" நான் சொல்லி முடிக்கவில்லை. "ஆம்; என்று சொல்லியவர் ஒரு தேதியைக்குறிப்பிட்டு "அன்று இரவு கடும் மழை, நீ தனியாக ஓர் உணவு விடுதியில் (அதன் பெயரைச் சொல்லி) ஒரு வாலிபனுடன் தங்கிவிட்டாய் - அது தானே"? என்றுர்.

நான் ஆச்சரியத்தோடு அவரை அப்போது தான் நிமிர்ந்து நன்ருகப் பார்த்தேன் "ஆம், அவரே தான் இவர் என்று" நினைத்தேன். அதற்குள் அவரே பேசினுர்.

"கமலம்! நான் உனக்கு யாரென்று இன்னும் தெரியவில்லையா? உன்னேடு அன்று இரவு உணவு விடுதியில் தங்கிய வாலிபன் நான்தான். உன்னைப் பற்றிய விஷயம் முழுவதும் கேட்டறிந்த பிறகே உன்னை நான் மணந்துக் கொள்வது என் அதிர்ஷ்ட மென்று முடிவு செய்து விட்டேன்" என்ருர்.

அவர் காலடியில் நான் அப்படியே விழுந்தேன். அவரது அன்புக்கரங்களால் என்னைத் தூக்கி தன்பக்கத்தில் அமரச்செய்தார். என் கண்களில் என்றும் வராத அளவுக்கு நீர் வழிந்து கொண்டிருந்தது.

"ஏன்? இன்னும் கண்ணீர் விடுகிருய், இது நீ விட்ட கடைசிக் கண்ணீராக உன் வாழ்க்கையில் இருக்கட்டும்" என்று தன் கைகுட்டையால் அதைத்துடைத்தார்.

அவரைப் பார்த்து "அன்று பொய்மை தாழ்த்தும், உண்மை உயர்த்தும் என்று தாங்கள் சொன்னீர்கள். இதுவரையிலும் நான் உண்மையை மறைக்காமல் என்னைப் பெண் பார்க்க வந்தவர்களுக் கெல்லாம் சொல்லினேன். என்னையாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. என்னை சமுதாயத்தில் தாழ்த்தியே வந்தார்கள்" என்றேன். அவர் "உண்மை சீக்கிரத்தில் வெளி வராது கமலம்; அப்படி வந்து விட்டால் உண்மைக்கு என்ன மகிமை யிருக்கும்? உண்மையை உலகம் இன்னும் முற்றிலும் உணரவில்லையே! அதை உணரத்தானே அது இன்னும் படித்தும், பேசியும், சிந்தித்தும், ஆராய்ந்தும் வருகிறது" என்றவர் சற்று நிறுத்தி "கமலம், இப்போது சொல்லும் நீ உண்மையைக் கூறி வந்ததால் உண்மை இப்போது உன்னை தாழ்த்திற்ரே அல்லது உயர்த்திற்ரு" என்ருர்.

நான் ஒன்றும் பதில் சொல்லாமல் அவர் மார்பின் மீது சாய்ந்து விட்டேன். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் வெளியே சென்ருர். திருமணத் தேதி நிச்சயிக்கப்பட்டு விட்டது. உண்மையை அவரே எல்லோர்க்கும் விளக்கினுர். உளறுவாய் உமாபதி அவரிடம் வந்து "நான் பொய்யானதை தங்களுக்கு சொல்லியதற்கு என்னை மன்னிக்க வேண்டும்" என்ருர்.

அவர் "உம்மை மன்னிப்பதா? நீர்தானய்யா உண்மையை வெளிக்குக் கொண்டு வந்தது. நெல்லுக்குள் அரிசி யிருப்பதுபோல், மண்ணுக்குள் தங்கமிருப்பது போல் உண்மை பொய்யுக்குள் தான் இருக்கிறது" என்ருர்.

இது வரையிலும் என் கதையை மவுனமாகக் கேட்டிருந்த வாலிபன் அடுத்த ஸ்டேஷனிலிறங்கி சென்னைக்குத் திரும்பத் தயாராஞன். "தம்பி ஞாபகத்தில் வைத்துக் கொள். ஒரு பெண் தான் விரும்பினுலொழிய அவள் தன் கற்பை எப்போதும் எந்த சூழ் நிலையிலும் இழக்க மாட்டாள். ஆனுல் அவள், அல்லது அவள் கற்பு, அழிக்கப் படலாம். கற்பு இழப்பது வேறு அழிக்கப்படுவது வேறு. முன்னதற்குக் காரணம் அவள், பின்னதற்குக் காரணம் உலகம்" என்றேன். இதைக் கேட்டுக் கொண்டே வாலிபன் அடுத்த ஸ்டேஷனில் இறங்கினுன் சென்னைக்குத் திரும்ப.

முற்றும்.

P. சுப்பிரமணியன்



நெஞ்சிலாடு மீசன்

(நெ. பி. ஸ்ரீ.)

அகத்தியன் என்ெருரு முனிவன் ஆக்குவித்த நாடு தமிழகம் அகத் திருவை உணர்ந்த பெரியோர் வாழ்ந்து தவ வலிமை பெற்றது. அகத்தின் பெருமையை, அதாவது உள்ளொளியின் மகிமையை, நன்கறிந்து இரு மாபெரும் சித்தாந்தங்களை நிலை நாட்டிய மஹான்கள் தோன்றிய தொன்னுடுமாகும்.

சேர நன்னுட்டில் பிறந்து, தொண்டை நாட்டின் தலைநகராய காஞ்சிதனில் வதிந்து, அறுசமய வித்தூன்றிய வித்தகன் ஆதிசங்கர பகவத் பாதர் அத்வைத சித்தாந்தம் செய்தார். தொண்டை நாட்டில் தோன்றி, காஞ்சிதனில் தொண்டு பூண்டு, வசிஷ்டாத்வைத சித்தாந்தம் கண்டருளினர் ஸ்ரீ உடையவர். ஆகமங்களில் சிறந்த பெரியோர்கள் தமிழ் நாட்டில் பஞ்ச பூதங்களையும் லிங்க ரூபத்தில் ஊன்றி, ஆன்மிக சொரூபத்தை நிலைநாட்டினர். பிரபஞ்சத்துக்கே நாபிக் கமலமெனக் கொண்டாடப் பெறும் காஞ்சியில் பிருத்வியைப் பிரதிஷ்டை செய்தது குறிப்பிடத்தக்கது. உலகத்திற்கே மூலஸ்தானம் போன்றது காஞ்சி என்பதையே இது காட்டுகிறது. இயற்கையன்னையும், முன்னேர்களுக்குத் துணை நின்ருள். பாலாற்றில் பொன்னையும், காவிரியில் அயத்தையும், பொருனையில் தாமிரத்தையும், கலந்து பஞ்சலோகங்களின் உருவமாக தமிழகத்தைச் சிறப்பித்து விட்டனள். அகத்தியனின் அகத்தினை ஆன்ம நெறியைக் கொணர்ந்து தமிழகத்தை யோக பூமியாக்கி விட்டது.

தொண்டை நாட்டினை அரசியலுக்காக சிறு நிலங்களாகப் பகுத்த முன்னேர்கள் 24 கோட்டங்களாகப் பிரித்தனர். காஞ்சியில் ஸ்தாபித்துள்ள காயத்ரி மன்றத்துக்கு ஏற்ப இதுவும் அமைந்துள்ளது. மந்திர சாஸ்திர நுட்ப முணர்ந்தவருக்கு இதன் உட்கருத்து தெள்ளென விளங்கும். இத்தகைய தொண்டை நாட்டிலுள்ளது திருவாலங்காடு க்ஷேத்திரம். சோழ நாட்டுக்குச் சிறப்பான பொன்னம்பலம் போலும், பாண்டி நாட்டுக்குச் சிறப்பான வெள்ளியம்பலம், தாமிர சபை போன்றும், திருவாலங்காட்டு ரத்தின சபை தொண்டை நாட்டுக்கு மணியாரம் போன்றதாகும். தில்லை வெளியில் ஸ்ரீ நடராஜன் தாண்டவமாட, ஸ்ரீ கோவிந்த ராஜப் பெருமாள் சயனத் திருக்கோலத் திருக்கையை நினைப்பூட்டிக் கொள்பவர்கள், திருவாலங்காடு கூத்தாடும் பிரானையும், திருவெவ்வுள்ளூரில் பள்ளிகொண்டிருக்கும் வீரராகவப் பெருமானையும் ஒரு சேர தியானிப்பார்களாகில் பேருண்மையொன்றைக் காண்பார்கள்.

தில்லையம்பலம் ஆலய அமைப்பையும், மனித உடலமைப்பையும் ஒருங்கே நோக்க வேண்டும். மனிதனுடைய உடலமைப்பில் இருதயம் உள்ள இடத்தில், தில்லை ஆலயத்தில் சித்சபை அமைந்துள்ளது. உள்ளத்தில் நின்று போதிக்கும் குருவென்று பரமாத்மாவை யோக சாஸ்திரங்கள் அழைக்கின்றன. தில்லையில் இதய ஸ்தானத்தில் நடராஜனும், கோவிந்த ராஜனும் கோவில் கொண்டிருப்பது இத் தத்துவத்தைப் போதிக்கும். திருவாலங்காட்டடிகளும், திருவெவ்வுள் கிடந்தானும் போதிக்கும் உண்மையும் இதுவே. நடன மூர்த்தியும், சயன மூர்த்தியும் ஆன்ம குரு என்பர் பெரியோர்.

கருணையினுல் கூத்தன் உடுக்கையடித்து பக்தர்களை விளித்து, பேதலித்து நிற்கும் மனத்தில் அலைக் கழிக்கும் ஆணவங்களை எரிக்கும் மழுவைக் காட்டுகின்ருன். நாராயணன் வலம்புரி முழக்கி, அகந்தையை எரிக்கும் திருவாழியைக் காட்டுகின்ருன். சித்தத்தை ஸ்வாதீனமாக்கும் யோகத்தை போதிக்கும் ஞானகுரு. ஆலய அமைப்பின் தத்துவத்திலும் கர்ப்ப கிருகத்தை யோக மண்டபமாகக் கருதுவதுண்டு.

பெரிய ரிஷிகள் தவம் செய்வார்கள். அவர்களுக்கு மோக்ஷ காலம் நெருங்கியதும் தங்களுடைய யோகம் தவம் எல்லாவற்றையும் பகவ தார்ப்பணமாகப் பிரதிஷ்டை செய்துவிடுவதுண்டு. இவ்விதம் பிரதிஷ்டையான ஆலயங்கள் உள்ளன. வனம் எனில் நகரத்தை யடுத்துள்ளதும், மனித சஞ்சாரமில்லாமல் அமைதி குடிகொண்டிருப்பதும், பசுமை நிறைந்த மரங்கள் அடர்ந்ததுமான இடங்களைக் குறிக்கும். ரிஷிகள் இதை தேர்ந்தெடுப்பார்கள் தவத்துக்கு. காடாரம்பம் என்று சோழ நாட்டவரும், வனந்தரம் என்று வடமொழியிலும் அழைப்பது பெருங்காடுகளையே குறிக்கும். வனம் என்பது தவநெறிக்குரிய நிம்மதியான இடம்; உலாவுக்குரிய நந்தவனத்தைப்போல. இத்தகைய வனங்கள் நிரம்பிய மணவூர் கோட்டத்தில், பழையனூர் நாட்டில் அமைந்துள்ளது திருவாலங்காடு. ஆலடிக்கீழ் அமர்ந்து மௌன குருவாக வீற்றிருக்கும் எம்பிரான், அகந்தையெனும் காட்டை வெட்டி, ஆத்மாரங்கமான வெட்ட வெளியில் ஆட வருகிறான். இருள் போக்கி, மருள் நீக்கி, அருள் கூட்டும் ஞான குருவென நெஞ்சிலாடுகிறான். ஆனந்தம் தாங்கவில்லை. எண் தோள் வீசி, அண்ட சராசரங்களும் எட்ட காலை உயரத்தூக்கி காளிகா தாண்டவம் ஆடுகிறான். தாண்டவத்தில் இதைவிடச் சிறந்ததோர் நடனமில்லை! தமிழ் நாட்டில் உள்ள ஐந்து நடன சபைகளில் முதல் முதலாக ஆண்டவன் தாண்டவமாடிய தலம் இது. ரத்தின சபை எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் முன்னோர்கள், கயிலையில் காணாத பெருந் தத்துவத்தைக் காரைக்காலம்மையார் இங்குக் கண்டு இறவா பேரின்ப மெய்தினாரெனில் தலத்தின் மகிமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

கயிலையில் புனிதமாய திருவாலவனத்தில் ஆனந்தக் கூத்தாடும் ஈசன் சத்தியத்தின் மெய்ப்பொருளுக்கும் விளக்கம் தந்த தலம் பழையனூர். சத்தியமெனில் சத்துவத்தின் விளக்கம். உண்மை என்பர் தமிழ் பெருமக்கள். உள் - மெய்; உள்ளத்தில் மெய்யாக நின்றருளும் பரமாத்மா என்ற பொருள் கொள்வது பொருந்தும். உண்மையை நிலை நிறுத்திய தவத்தலம் இது. அதனால் பழையனூர் நாட்டு திருவாலங்காடு என்று உலக வழக்காக இருந்தது. பதிகங்கள் பாடிய நால்வரும், ''பழையனூர் ஆலங்காட்டடிகள்'' ''பழனைமேய ஆலங்காட்டு அடிகளாரே,'' ''பழையனூர் மேய ஆண்டா! ஆலங்காடா!'' என்றும் சிறப்பித்தனர். அய்யன் முதல் முதலில் ஆடிய தலம் என்பதையும் ''பழையனூர்'' குறிப்பாகச் சுட்டுகிறது.

இவ்வாறு நடம்பழகியவனூர்ந்த ஊரின் கண் தீப்பாய்ந்த எழுபது வேளாளர்களின் மரபு உள்ளது. வணிகன் ஒருவன் அவ்வழி வந்து கொண்டிருந்தான். நீலிப்பேய் அக்காட்டில் இருந்தது. தனியாகச் செல்லும் வணிகனைக் கண்டது. உடனே பெண்ணுருக் கொண்டது, மகவு ஒன்றையும் இடுப்பில் வைத்துக் கொண்டு வணிகன் பின்னால் வந்தது.

வணிகன் அச்சமுற்றான். பழையனூரில் வேளாளரிடம் தஞ்சமடைந்தான். நீலிப் பெண் வேளாளரிடம் சென்றாள். ''இவன் என் மணாளன். என்னை கைவிட்டுச் செல்கின்றான்'' என்று வழக்குத் தொடுத்தனள். பெண்ணின் நீலிக் கண்ணீர் வென்றது! வணிகன் உயிரைக் காப்பதாக எழுபது வேளாளரும் சத்தியம் செய்தனர். உயிருக்கு ஊறுண்டாயின் எழுபது வேளாளரும் தீப்பாய்ந்து விடுவதாகச் சொன்னார்கள். வணிகனும், நீலியும் தங்க இடம் கொடுத்தனர்.

நிசி வந்தது. பெண் பேய் உருக்கொண்டது. வணிகன் உடலைக் கிழித்துக் கொன்றது. கைப்பிள்ளையை அழித்தது. பொழுது புலர்ந்தது. உண்மையும் புலர்ந்தது. ஆண்டவன் சன்னதி முன் தீக்குழி வெட்டினர். எழுபது வேளாளரும் தீப்பாய்ந்து சத்திய நெறியை, வழுவிலா அறநெறியை நிலை நாட்டினர். ''கூழாண்டார் கோத்திரமுடையார்'' எனும் சிறப்புடைய இவ்வேளிர் மரபினர் இன்றுமுள்ளனர். எழுபது பேரின் தீக்குளி குளமும், அதன் எதிரில் ஸ்ரீ சாக்ஷி பூதேசுவரர் ஆலயமும் உள்ளன. வேளாளர் நன்செய் நிலங்களைப் பயிரிட்டு, விளை நெல்லை கூத்தாடு மீசனுக்கீந்து புல் நெல்லை உண்டு வாழ்ந்ததால் கூழாண்டார் என்று புகழ் பெற்றனர். இவ்வரலாறு கழிந்து 2500 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. தீக்குளித்தலத்தில் நாற்கால் மண்டபத் திருப்பணியும், ஸ்ரீ சாக்ஷி பூதேசுவரர் ஆலயத் திருப்பணியும் முடிந்து விட்டன. இவை பழைய பெருமையைப் பறைசாற்றும். புதுமைக்கோர் நந்தா விளக்காகும்.

(80-ம் பக்கம் தொடர்ச்சி)

பாரதம் படிப்பதற்காக ஒரு பங்கை ஒதுக்கினன். இதனல் பாரதம் படித்துப் பொருள் விளக்கம் செய்யும் பழக்கம் 9-ம் நூற்றுண்டிலேயே தொடங்கிவிட்டது என்றறியலாம்.

பாரத விருத்தி

கோயில்களில் பாரதம் படித்துப் பொருள் கூறுவதற்கென விட்ட நிபந்தங்கள் **பாரத விருத்தி** எனப் பெறும். இங்ஙனம் பல நிபந்தங்கள் முன்னுளில் விடப்பெற்றன என்று கல்வெட்டுக்களினின்றறிய வருகிறது.

ராஜகேசரின் மாது 9-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று (63 of 1897; s. i. i. VI No. 12) செந்தலே என்ற ஊரிலுள்ளது. இவ்வூர் 53 குடுப்புகளாகப் பிரிக்கப் பெற்று, **இறையிலி பாரதப் பங்காகப்** பெரும்புலியூர் ஊரவரும்—ஆத்திரைய கோத்திரத்தவரும்—வைகானச சூத்திரத்தவரும் ஆன் சிங்கி நந்தி ஸ்வரூபபட்டர் என்பவருக்கு அளிக்கப் பெற்றது. அவர் நாடோறும் ஊர் பிரம்மஸ்தானத்தில் கட்டப்பெற்ற அம்பலத்தில் பாரதம் படித்தல் வேண்டும்; இவர்க்குப் பிறகு இந்தப் பங்கை அனுபவிப்பவர் பாரதம் படித்தல் வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப் பெற்றது.

தொண்டை மண்டலத்துப் புழலூரில் பாரதம் இராமாயணம் முதலியவற்றைப் படிப்பதற்கென பாரத விருத்தி அளிக்கப் பெற்றது—என்று ஒரு கல்வெட்டில் (48 of 1923) உள்ளது.

ஷெ ஊரில் உள்ள இன்னெரு கல்வெட்டு (500 of 1932) மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஆளுங் கணத்தாருள் ஒருவருடைய மனேவி பாரத விருத்திக்கென நிலம் அளித்த செய்தியைக் கூறுகிறது.

முடிப்புரை

மேற் கூறியவற்றல் இதிகாசங்களில் ஒன்ருகிய மகாபாரதம் தமிழ்நாட்டில் மிக்குப் பழக்கப்பட்டு வந்ததென்றும், ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளாகப் பாரதம் படித்துச் சிற்றார்க்குப் பொருள் விளக்க நிபந்தங்கள் அளிக்கப் பெற்றன என்றும், பாரதக் கதை கூறுங்காலும் சிவநெறி தாழ்வுபடாமல் கூற முயற்சிகள் எடுக்கப் பெற்றன என்றும், பாரத நூல்கள் பல எழுதப் பெற்றிருப்பினும் இந்நாளில் பயிலப் பெறுவது வில்லிபுத்தூரார் பாரதம் ஒன்றே என்பதும், அறியப் பட்டனவாம்.

முற்றும்

நீதி காத்த நன்னிலம்

தா. பால்வண்ணன் (ஆசிரியர் சுத்த சன்மார்க்கம்)

நீதியைக் காத்த நெடுங்கதைகள் பல நமது தமிழ் மண்ணுக்குச் சொந்தம். நீதியைக் காக்க தன்னேயே தந்த பாண்டியன் நெடுஞ்செழியன், நீதியைக்காக்க தன்கையை துணித்துக் கொண்ட பொற்கைப் பாண்டியன், நீதியைக் காக்க தன் மகன்மீது தேருருளேயை உருட்டிய மனுநீதி மன்னன், நீதியைக் காக்க தன் உடம்பின் தசையை வெட்டி யீந்த மாமன்னன் சிபி இப்படிப் பலர்.

இவர்கள் அனேவரும் நீதியின் மாண்பை—நேர்மையின் உயர்வை — உண்மையின்

சிறப்பை உலகிற்கு எடுத்துக் காட்டிடும் ஒளிச்சுடர்கள். இந்தப் பாரம்பரை முடிவு பெற்றதன்று — தொடர்ந்து நிகழ்ந்தது; நிகழும். இப்படிப்பட்ட நீதிகாத்த நல்லவர்களின் பாரம்பரையினர் தொண்டைமண்டலத்திலும் இருந்ததை எடுத்து இயம்புவதே பழையனூர் வரலாறு.

பழையனூர் தீக்குளித்த மண்டபத்தின் மாண்பு இன்றைய வெற்றறிவுபெற்ற வெறும் வாய்மெல்லும் வீணர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும். பழையனூரில பல்லாண்டுகளுக்கு முன்னர் ஒளி பெற்ற ஓர் உண்மை சம்பவம் அனைவருக்கும் தெரியும்

"ஏழை மகன் ஒருவன்—அவனை அழைத்து வருகின்றாள் ஒருத்தி கைக்குழந்தையுடன், நீதி காப்போர் முன்னிலையில் :

அவள் : "ஐயன்மீர்! இவன் என் கணவன், இது இவனால், எனக்குக் கிடைத்த குழந்தை; என்னை அவன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறான். இது நியாயமா? நீதியா? அருள்கூர்ந்து தீர்ப்பு வழங்குவீர்'' என்கின்றாள்.

அவன் : "நீதியின் காவலர்களே! அவள் என் மனைவியன்று சூன்யக்காரி, மாயக்காரி, என்னைக் கொலை செய்யும் எண்ணத்துடன் வந்துள்ள சூதுக்காரி. பேய் ஏழை அவள் வார்த்தையை நம்பி அவளுடன் என்னை இணைக்காதீர்கள்'' என்று அழுது கூவுகிறான்.

நீதி வழங்குவோர்: ''அவளுடைய அழகு முகம், அழும் விழி, ஆற்றாமை இவைகள் அவளை குற்றமுடையவள் என்று காட்டவில்லை. நீயும் அவளைப் போல் அழுது கூறுகிறாய். உன் உயிர்க்கு ஆபத்து என்கின்றாய். உன் ஒரு உயிருக்கு எங்கள் 70 பேர் உயிரையும் தருகிறோம். எனவே அஞ்சற்க. அவளுடன் இரவு இரு'' என்று நீதி வழங்குபவர் கூறினர்.

காலை மலர்ந்தது. கணவன் பிணமானான் —குழந்தை இறந்து கிடந்தது. செய்தி அறிந்த நீதி வழங்குபவர்கள் வந்தனர். தாங்கள் வாக்கு அளித்ததுபோல் தீ வார்த்து அதிலே 69 பேர் பாய்ந்தனர்— எங்கோ வெளியில் சென்று வந்து எழுபதாவது நபரும் இ∴தறிந்து தன்னை மாய்த்துக் கொண்டார். கொடிய நீதியை தங்களின் உயிர்த் தியாகத்தால் கோடாமல் தூக்கி நிலை நிறுத்திய மாண்புடையவராயினர். இத்தகு உண்மையான தியாகிகளுக்கு—சொல்தவறாத சுத்த வீரர்களுக்கு—நீதியின் உண்மையான காவலர்களுக்கு மண்டபம் எழுப்புவது எத்தனை சிறப்பு உடையது? எத்தனை மாண்பு உடையது.

அதுவும் நீதியின் பெயரால் அநீதிகளை செய்யும் இந்தக் காலத்தில்—சட்டங்களின் பெயரால் சரியற்ற காரியங்களைச் செய்யும் இந்த நாட்களில், நீதியின் உண்மையை உலகிற்கு உணர்த்த இம்மண்டபம் ஒரு கலங்கரை விளக்கமாக அமைகிறது.

நீதியின் வழி நில்லாத உலகமே! நேர்மை நம்பாதே மனித வர்க்கமே! நிமிர்ந்து பார் பழைய ஜாண! அங்கே நிமிர்ந்து நிற்கும் மண்டபம் உங்களுக்கு உணர்த்தும் உண்மையின் நீதியை உணர்ந்து—உண்மையான மனிதர்களால் நிறையப் பெற்ற உண்மையா உலகை உருவாக்க முனைக.

இந்த அரிய பெரிய முயற்சியில் ஈடுபாடு கொண்ட பெரியவர்கள் — காலமறிந்து நீதியை நிலை நிறுத்திய பெரியவர்களின் நினைவை மறுபடியும் நினைக்கவைத்த நல்லவர்கள் இறைவன் திருவருளால் எல்லா இன்பங்களும் பெற்று வாழ்வதாக! நீதி காத்த நன்னிலத்தை தரிசித்து நீதிமான்களாக திகழ அனைவரும் முயல வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

நீதி வாழ்க!

அம்மையில்லாற்கு அம்மை யார்

(திருமதி ச. மரகதவல்லியம்மாள் B.A.. B.T.)

சிவபெருமானைப் பற்றி "தாயுமிலி தந்தையுமிலி தான் தனியன்" என்றும், "தாய் தந்தை பல்லுயிர்க்கும் தானே ஆய தலைவன்" என்றும், "எவர்க்கும் இவன் தந்தையே யன்றித் தனயனுகாதவன் காண்" என்றும், "அம்மையே அப்பா! ஒப்பிலாமணியே!" என்றும்சிவாநுபூதிச்செல்வர்கள் தம் பாடல்களில் குறித்துப் போற்றியுள்ளனர். பிறப்பு இறப்பு இல்லாத இப்பெருமான்—அம்மையில்லான்—ஒரே ஒரு அடியவரை—பெண்ணடியவரை- நோக்கி "அம்மையே!" என்று அழைத்தருளினுர். அம்மை இல்லானுக்கு "அம்மை"ஆனவர் யார்? அவர்தான் காரைக்கால் அம்மையார்.

தனிப்பெரும் சிறப்பினை உடைய இந்த அம்மையாரது அற்புதமான சரித்திரத்தின் முக்கியமான பகுதிகளை நினைப்பூட்டி அவற்றின் அருமை பெருமைகளை இயன்ற அளவு குறிப்பிட்டு முடித்தல் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

காரைக்காலம்மையார் வாழ்ந்த காலம் கி. பி. நானூறை ஒட்டியதாயிருக்கலாம். அக் காலத்தில் இப்பர், கவிப்பர், பெருங்குடி வணிகர் என்ற மூவகைப் பிரிவுகளை உடையதாக இருந்தது வணிகர் குலம். அவற்றுள், பெருங்குடி வணிகர் குடியில் அறவழியில் பொருள் ஈட்டிய பெருஞ்செல்வர் தனதத்தன் என்பவர், நீர் வளமும் நிலவளமும் பெருகிய காரைக்கால் என்னும் துறைமுகப் பட்டினத்தில் வாழ்ந்துவந்தார். இவரது பெருந்தவப் பயனுய், திருமகளைப் போன்ற பொலிவுடன் ஒரு பெண் மகவு பிறந்தது. இம் மகவிற்குப் 'புனிதவதி' என்னும் புனிதமாகிய பெயரைப் பெரியோர்கள் இட்டனர்.

"மானமிகு தருமத்தின் வழிநின்று
வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடி
துவன்றி ஓங்குபதி"

என்று சேக்கிழார் பெருமான் அக்காலத்தில் வணிகப் பெருமக்கள் அற வழியிலேயே பொருளீட்டியதைக் குறிப்பிடுகின்ருர்.* இக்காலத்திலோ, வியாபாரம் என்ருலே, பொய்யும், புன்மையும்கொள்ளை லாபமும் என்று பொருள் கொள்ளும் வகையில் வணிக மக்களிற் பலர் சீர் குலைந்தவர்களாகி விட்டனர்.

நல்லொழுக்க சீலரின் தவப்பயனுய் இப் புவியில் மகளாய் வந்தவதரித்த புனிதவதியார், சீலமும், அறிவும் சிவபெருமானிடத்தில் மாருத பக்தியும் உடையவராகி அழகின் கொழுந்து போன்று வளர்ந்து வந்தார். அவரது இளமை விளையாட்டுகளெல்லாம் எம்பெருமான் தொடர்புடையனவாகவே. இருந்தன. "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம், காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" என்று அம்மையார் இல்லறவாழ்க்கை முடிந்த பின் அருளிய பாடல் ஒன்றில் குறித்துள்ளார்.

அவர் மங்கைப் பருவம் அடைந்ததைச் சேக்கிழார், "இல்இகவாப் பருவம்அடைந்தார்" என்கின்ருர். மகளிர் மங்கைப்பருவமடைந்த பின்பு, வீட்டைவிட்டு வெளியே போகாத வழக்கம் முப்பது ஆண்டுகளுக்கு முன்வரையிலிருந்து வந்தது. இன்றும் சில கிராமங்களில் அந்த நல்ல வழக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மங்கைப் பருவமடைந்து, அக அழகும், புற அழகும் சிறந்து விளங்கும் புனிதவதி

---

* சங்க காலத்தில், புகார் நகரத்து வணிக மக்கள் அனைவரும் வாய்மையும் தூய்மையும் உடையவர்களாய்ப் பெரும் பொருள் ஈட்டினதை, பட்டினப்பாலை என்னும் நூலில் விரிவாகக்கண்டு மகிழலாம்.

யாருக்கு, மணவினை நடத்த அவர் குலத்துப் பெரியவர்கள் தீர்மானித்தனர். செல்வத்திலும், அழகிலும், இயற்கை அறிவிலும் மிக்க பரமதத்தனுக்குச் சாத்திர முறைப்படி மன்றல் சிறப்புடன் நடந்தது.

அம்மையாரின் திருமண விழாவைக் குறிக்கும் பாடலில் சேக்கிழார் பெருமான்

தளிரடிமென் தகைமயிலைத் தாதவிழ்
தார்க் காளைக்குக்

களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணம்
செய்தார்கள்''

என்று குறிக்கின்றார்.

புனிதவதியாரின் எழில்வடிவை மயிலுக்கு ஒப்பிட்ட பெருமான், மணமகனைக் காளைக்கு ஒப்பிடுகின்றார். நளினமும், பேரழகும், அடக்கமும் உள்ள மயிலுக்கு இணை காளையா! 'மயிலானது பிறர் கண்ணையும் கருத்தையும் கவரும் வனப்புடையதாயினும்' தன் பேரெழிலைப் பறைசாற்றவேண்டித் தன் தோகையை எப்போதும் விரித்துக் கொண்டிருப்பதில்லை. கார்மேகத்தைக் கண்டபோதும், தன் துணையைத் தன்பால் ஈர்ப்பதற்காகவும் அவ்வப்போது தோகையைவிரித்து ஆடும். அதுபோல கற்புடைய மகளிர் தம் உடலழகைத் தம் கணவர்க்கு மட்டுமே அர்ப்பணித்து, மற்றவர்க்கு அடக்கமான—பகட்டற்ற—தோற்றமளிப்பார்கள். ஆனால் இன்று பெண்டிரின் ஆடை, அலங்காரங்கள் நேர் மாறாக உள்ளன. அவர்கள் பிறர் கண்ணைக் கவர எத்தனையோ கஷ்டப்பட்டு, உடலைச் சரியாக மறைக்காமல் அலங்காரம் செய்து கொண்டு வெளியே செல்வதைப் பார்க்கின்றோம்! இது அறிவின்மையேயன்றி வேறென்ன என்று சொல்வது! பெற்றோர்கள் சிறு வயதிலிருந்தே பெண்களை நல்ல முறையில் வளர்த்துத் தாமும் அவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக இருந்திருப்பார்களேயானால் இத்தகைய தவறு நேரிடாது.

பரமதத்தனைக் காளைக்கு ஒப்பிட்டது அவனுடைய இளமையையும், வீரத்தையும் குறிப்பிடுதற்குத்தான்—எந்த வாலிப ஆண்மகனையும் காளை என்று கூறுவது வழக்கம். ஆனால், காளைக்கும் மயிலுக்கும் என்ன பொருத்தம்! அம்மையாரின் ஆன்மீக வளர்ச்சிக்கும், பக்குவத்திற்கும் பொருத்தமற்றவன் பரமதத்தன் என்பதை இதனால் உணர்த்துகின்றாரோ சேக்கிழார் பெருமான்.

திருமணத்திற்குப்பின் தனதத்தன் தன் ஒரே புதல்வியைப் பிரிய மனமின்றி, காரைக்காலிலேயே தனிமாளிகையமைத்துப் பெரும் பொருளும் கொடுத்து, மணமக்களை வாழச் செய்தார். பெருஞ்செல்வந்தனாகிய தனதத்தன் தன் மகளைத் தன்னில்லத்திலேயே உறையச் செய்யாமலிருந்ததற்குக் காரணமுண்டு. அது முறையல்ல என்பது ஒரு காரணம். மருமகனைத் தன்னுடன் வைத்துக்கொள்ளுதல் பல சிக்கல்களுக்குக் காரணமாகிப் பகையில் முடியலாமென்பது மற்றொரு காரணமாக இருக்கலாம். இல்லற தர்மத்தைக் கடைப்பிடித்து ஒழுகி, வாணிபத்தைப் பெருக்கி, மேன்மையுற வாய்ப்பளிக்க வேண்டியும் தனியாக அவர்களைக் குடி வைத்திருக்கலாம். பரமதத்தனும்,

''தகைப்பில் பெருங்காதலினால் தங்கு
மனை வளம் பெருக்கி

மிகப் புரியும் கொள்கையினில் மேம்
படுதல் மேவினான்''

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா! மீன் குஞ்சுக்கு நீந்த யாராவது கற்றுத்தர வேண்டுமா? பரமதத்தன் வாணிபத்திலே சிறந்து பெரும்பொருளீட்டினான். புனிதவதியாருடன் நல்வழியில் இல்லறம் நடத்தி வந்தான். சிவபக்தி மிகுந்த புனிதவதியார், கற்புடைய மனைவியின் கடமையில் சிறிதும் வழுவாது வாழ்க்கை நடத்தினார். தமது பக்தியைப் பெருக்கினர் தம் இல்லத்திற்குச் சிவனடியார் எப்போது வந்தாலும், மனமுவந்து வரவேற்று, தாயினும் சாலப் பரிந்து, அமுது படைத்து, வேண்டும் பொன்னும், பொருளும் தகுதிக்கேற்ப வழங்கிச் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்.

ஆண்டவன் அடியாரைப் பிரிய மாட்டான் உத்தம அடியாருள்ளத்தில் அவன் நிறைந்துள்ளான்; இருவரையும் பிரித்தறிய முடியாது. ஆதலின், அடியவரைப் போற்றுதல் ஆண்டவனைப் போற்றி அழியும் பொருள்களில் விருப்பம், கோபம், பேராசை ஆகியவற்றை ஒழித்து, சத்சங்கத் தொடர்புடைமை பூசனை, தியானம் ஆகியவற்றை ஒவ்வொருவரும் ஆன்ம வளர்ச்சிக்காக மேற்கொள்ள வேண்டும். சீலமும், சிவபக்தியும் நிறைந்த புனிதவதியார் உயர்ந்த பக்குவமடைந்த ஆன்மா, இத்தகைய பக்குவான்மாக்களைச் சீவ பெருமான் உவந்து ஏற்றுக் கொள்வான்.

ஒருநாள், பரமதத்தனைக் காண வந்தவர் சிலர் அவன் வாணிபம் செய்யுமிடத்தில் அவனைக் கண்டு, தாம் கையுறையாகக் கொண்டுவந்த நல்ல இரு மாங்கனிகளைக் கொடுத்தனர். பரமதத்தனும் அக்கனிகளைத் தனதில்லத்திற்கு ஏவலர் மூலமாகக் கொடுத்தனுப்பினான். அவ் வேளையில் அவனில்லத்தில் அமுது தயாராகிக்கொண்டிருந்தது. திருவமுது மட்டுமே சித்தமாகியிருந்தது; கறிவகைகள் தயாராகவில்லை. எப்போதும் திருவமுதை முதலிலே செய்துவிட்டு, பிறகுதான் கறிவகைகள் தயாரிப்பது பெரியோர் வழக்கம். ஏனெனில், இதனால் நலிந்தோர், பசித்தோர், அடியவர், யார்வரினும், பசிப்பிணியை நீக்கும் அமுதை இல்லை எனது உடனே அளிக்கலாம். வீட்டிலுள்ள குழந்தைகளுக்கும் பசிக்கும்போது உணவு தரலாம். பெரும் பசிக்குக் கறிவகைகள் மட்டும் உண்டால் பசியடங்காது. ஆகவே முதலில் அன்னந்தான் தயாரிக்கப்படவேண்டும். மாங்கனி அனுப்பப்பட்ட நாளில், புனிதவதியாரின் இல்லத்திற்குப் பசியால் நலிந்த வயது முதிர்ந்த சிவனடியார் ஒருவர் வந்தார். அம்மையாரும் அவரை முறைப்படி வணங்கித் திருவமுது படைத்தார். கறியமுது சித்தமாகாததால், தம் கணவர் கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை அடியவருக்கும் படைத்தார். குழந்தையின் பசியைத் தீர்க்கும் தாய்போன்று அடியாரின் பசி தீர்த்து ஆண்டவன் திருவுள்ளத்தைக் கவர்ந்த பக்த காரிகையன்றோ அம்மையார்! அதனாலன்றோ இறைவன் அவரை "அம்மையே!" என்று அழைத்தார்!

அடியவர் உணவுண்டபின் அம்மையாரை வாழ்த்திச் சென்றார். பின்பு மரமதத்தன் தன் மாளிகைக்கு வந்தான். குளித்தான். உணவருந்த அமர்ந்தான். அம்மையாரும், "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற வள்ளுவர் வாசகப்படி, கணவனுக்குப் பரிவுடன் உணவு படைத்தார். பரமதத்தன் உணவருந்துமுன் இறைவணக்கம் செய்யவில்லை. சிவன் கழலே நினைந்து, சிவனடியாரைப் பேணி, சிவசம்பந்தமான சிந்தனையிலேயே திளைத்திருக்கும் அம்மையாருக்குச் சமமா பரமதத்தன்! உணவுடன், தம்மிடம் எஞ்சியிருந்த மாங்கனியையும் படைத்தார் புனிதவதியார். தமக்கென்று ஒரு பகுதியும் வைத்துக்கொள்ளவில்லை. அடியவரையும் கணவனையும் உபசரித்ததே கனியுண்ட இன்பத்தைத் தந்தது போலும் அம்மையாருக்கு! பரமதத்தன் மதுர மாங்கனியை அருந்தி, 'இது மிக்க சுவையுள்ளதாயிருக்கிறது. யான் கொடுத்தனுப்பிய இன்னொருகனியையும் கொண்டு வந்து எனக்கு வை" என்றான். மனைவியிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தான் இக்கணவன்!

இக் கட்டளை பிறந்ததும் திகைத்தார் புனிதவதியார். அப்பழத்தைக் "கொண்டு வர அணைவார் போல் அங்கு அகன்றார்" அடியாருக்கு ஒருகனியைப் படைத்ததைக் கணவரிடம் இதுவரை கூறவில்லை. தான் ஒரு கனியை அருந்தி, மற்றொன்றைத் தன் மனைவிக்கு வைப்போம் என்று பரமதத்தன் நினைக்கவில்லையே! முழுக்கனி தர வேண்டாம், 'ஒரு பகுதியை உனக்கு வைத்துக் கொண்டு, மற்ற பகுதியை எனக்குப் படை' என்றாவது சொன்னானா? அதுவுமில்லை. ஆனால் அம்மையார் செய்ததென்ன? எஞ்சியிருந்த ஒரு கனி முழுவதையும் கணவனுக்குப் படைத்தார். என்ன அருமையான கணவன் பரமதத்தன்! இதுவும் இறைவன் திருவுள்ளம்

போலும்! அவனது மாங்கனி மோகம் வாழட்டும். அவன் அவ்வாறு கேட்டிரா விட்டால் நமக்கு அற்புதத் திருவந்தாதியும், இரட்டைமணி மாலையும், மூத்த திருப்பதிக மும் எப்படிக் கிடைத்திருக்கும்!

திகைத்த அம்மையார் மற்றொரு மாங் கனியை எடுத்துவரச் செல்வார் போன்று உள்ளே சென்று, அடியார்க்கு இடர் உற்றபோது உதவும் இடபவாகனர் தம் மனத்திற் கொண்டு போற்றி, ஆவது புரிந் தருளுமாறு வேண்டினர். அம்மையார் கைத்தளத்தில் "அதிமதுரக் கனியொன்று" வந்திருந்தது. அதனைக் கொண்டுவந்து கணவனிடம் தந்தார். அதனைக் உண்ட பரமதத்தன் 'இது அமுதினும் மேற்பட்ட சுவையுடையதாயிருக்கிறது. இது நான் முன்னே கொடுத்த மாங்கனியன்று. நீ இதைப் பெற்றது வேறு எங்கிருந்து? என்று வினவினன். அம்மையார் தரும சங்கட மான நிலையாலிருப்பதாக உணர்ந்தார்.

''அவ்வுரை கேட்டதும் மடவார்'' அருளுடை யார் அளித்தருளும்
செவ்விய பேரருள் விளம்புந் திறமன்று''
என்று உரை செய்யார்
கைவரு கற்புடை நெறியால் கணவனுரை காவாமை
மெய்வழியன்று''என விளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்
செய்தபடி சொல்லுவதே கடன் என்னும் சீலத்தார்'' ஆகிய

அம்மையார் இறைவன் திருவடிகளை மனத் தால் வணங்கி; அவன் திருவருளால் தமக்கு கனி வந்ததை நிகழ்ந்தபடியே சொல்லி விட்டார்.

அதைக் கேட்ட பரமதத்தன் ''இது சிவ பெருமான் திருவருளாலேயே கிடைத்தது உண்மையானல், அத்தகைய அரிய கனி இன்னுமொன்றை அவனருளால் தரு வித்து எனக்கு அளிப்பாயாக'' எனப் பணித்தான். அம்மையார், இல்லத்துட் சென்று, இறைவனைச் சிந்தித்து வந்தித்து ''ஈங்கு இது அளித்து அருளீரேல் என்னுரை பொய்யாம்'' என்று விண்ணப் பித்தார். ''மாங்கனி ஒன்று அருளால் வந்து'' அம்மையார் கையில் அமர்ந்து அதனைக் கணவன் கையில் கொடுத்தார். அதிசயித்து வாங்கினன். உடனே கனி மறைந்துவிட்டது. மாதேவன் அருளிய மாங்கனியைப் பெறும் பக்குவம் பரமதத்த னுக்கு ஏது? எதையும் சோதித்து முடி விற்கு வரும் விஞ்ஞானியையே போல் அவ னும் சோதித்து அம்மையார் கூறியது உண்மையென அறிந்து, தெய்வீக சக்தி யுடைய புனிதவதியாரை ஒரு சாதாரணப் பெண் எனவோ மனைவி எனவோ நடத்துதல் பெரும்பாவம் என்று கருதினன். அவரை விட்டு நீங்கத் துணிவு கொண்டான். இதை எல்லாம் பிறர் எவர்க்கும் சொல்ல வில்லை. மனைவியிடம் தொடர்பில்லாமல் குடும்ப வாழ்வை நடத்தி வந்தான். கடல் கடந்து வாணிபஞ்செய்து பெரும் பொருள் ஈட்டித் திரும்பத்தீர்மானித்திருப்பதாக உற வினர்களிடம் கூறினன். அவர்கள் உதவிய மரக்கலத்தில் ஏறி, வெளிநாடு களில் வாணிப யாத்திரை செய்தான். பெரும் பொருள் ஈட்டிக்கொண்டு, பாண்டி நாட்டிற்கு வந்து ஓர் பயிரை இறங்கி அங்கே தங்கினன். இப்பக்ஷணம் கொள்கையாயிருக்கலாம் அங்குள்ள ஒரு வணிகச் செல்வரின் புதல்வியை மணந்துகொண்டான். ஒரு பெண் குழந் தையும் பிறந்தது.

புனிதவதியாரோ, தம் கணவர் சொன் னபடி தம் இல்லத்திற்குத் திரும்பி வரு வார் என்று எதிர்பார்த்திருந்தார். தமக்கு இயன்ற முறையில் இல்லறக் கடமைகளைச் செய்து வந்தார். இப்படி இருக்கையில், பரமதத்தன் பாண்டி நாடு சென்று அங்கே தங்கிவிட செய்தியை அம்மையாரின் உற வினர்கள் கேள்வியுற்றார்கள். உடனே அவர்கள் புனிதவதியாரை அழைத்துச் சென்று அவனிடம் சேர்க்கத் தீர்மானித் தனர்.

''மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயில் அன்கினுரை
தாமரைத் தவிசில் வைகும் தனித்திரு என்ன ஏற்றி''க்கொண்டு

சுற்றத்தார்கள் நெடுந்தூரம் கடந்து, பரமதத்தன் வாழும் பதிக்கு அருகில் வந்து சேர்ந்தனர்.

அம்மையாரின் அழகைச் சேக்கிழார் பல இடங்களில் குறிக்கின்ருர். (1) ''திரு மடந்தை அவதரித்தாள் என வந்து பொங் கிய பேரழகு மிகப் புனிதவதியார் பிறந் தார்'',(2)''அழகின் கொழுந்து எழுவதென வளர்வார்''; (3) பூப்பயல் மென்குழல் மடவார்; (4) ''அன்னம் அணையார்'' ''தளிர் அடி மென்னகை மயில்''; ''அணி குழலவா'' என்பவை உதாரணங்கள். இவ்வளவு சிறப்பு வாய்ந்த அழகு விரை வில் மறையப் போவதால்தான் தெய்வச் சேக்கிழார் இவ்வாறு அம்மையாரின் பேரெழிலைப் போற்றினரோ என்று வியக்க வேண்டியிருக்கிறது.

பரமதத்தன் வசித்து வந்த பாண்டி நாட்டுப் பதியின் எல்லையில் புனிதவதியா ருடன், அவர் உறவினர்கள் வந்திருப் பதைக் கேள்வியுற்ருன். அவன் சிந்தை யில் அச்சம் எய்தினன். தனது புதிய மனைவியுடனும் தன் பெண் மகவுடனும் விரைந்து வந்து, புனிதவதியார் திருவடி யில் வீழ்ந்து வணங்கினன்.

வியந்து நின்ற சுற்றத்தாரையும் வணங் கும்படி ஆர்மையுடன் சொன்னன்.

பரமதத்தன், புனிதவதியாரின் உறவை நீக்கிச் சென்றதற்கும் தன் மகவிற்குத் தன் தெய்வமாகிய அம்மையாரின் பெயரையே சூடியதற்கும் காரணம் கூறினன். நம் நாட்டில் மக்கள் தத்தம் குழந்தைகட்குத் தாம் வழிபடும் தெய்வத்தின் திருநாமத்தை பெயராக வைப்பதை இன்றும் காண்கின் ருேம். நம் மக்களைப் பெயரிட்டு அழைக் கும் போது, தம்மையும் அறியாமல் இறை வன் திருநாமத்தை உச்சரிக்கின்ருேம். இதற்கும் ஓரளவு பயனுண்டு என்று கொள்ளலாம் இப்படித் தன் மனைவி யாரின் தெய்வீக மாண்பைப் போற்றியது நல்லதே என்ருலும், அவன் செய்த ஒரு பெருந்தவறு, அவரிடம் தன் மனநிலை மாறிவிட்டதை வெளிப்படையாகத் தெரி வித்து விடாமல், நீங்கிவிட்டதே யாகும்.

தம் கணவன் இங்ஙனம் தம்மை தெய்வம் என்று கொண்டு வணங்கியதையும், சுற்றத்தாரையும் வணங்கும்படி கூறியதை யும் கண்ட புனிதவதியார், செயற்கரிய செயல் ஒன்று செய்தார். கணவன் பொருட்டுத் தாம் தாங்கியிருந்த தசைப் பொதி கொண்ட உடலழகை உடனே கழித்துவிட்டு, இறைவனை அருகில் நின்று போற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ள பேயின் வடிவைத் தமக்குத் தரவேண்டும் என்று பெருமானைப் பிரார்த்தித்தார். யாருக்காகப் புற அழகைத் தாங்கி இது காறும் இல்லறம் நடத்திவந்தாரோ, அவரே விலகிய போது, சிவபக்தியே மேலோங்க நின்ருர் கணவனும் கைவிடலாம். ஆனல் இறைவன் தன் மெய்யடியாரை என்றுமே கைவிடுவதில்லை அம்மையார் வேண்டிய பேயுருவத்தை அளித்தான். உடல் அழ குடன் அதற்குத் துணையாயிருந்த அணி கலன்களையும் உதறிவிட்டார்.

அம்மையார் வேண்டிப் பெற்ற பேயுரு வம் பூதகண வடிவமாகும்.'மற்றிருகண் நெற்றி மேல் வைத்தான்தன் பேயாய* நற்கணத்தில் ஒன்ருய நாம்'' என்று அம்மை யாரே பாடியிருக்கின்ருர்கள்—தமது அற்பு தத் திருவந்தாதியில். தன் அழகைப் புறக் கணிப்பதும், பேயுரு வேண்டிப்பெறுவதும் வேறு எந்தப் பெண்ணுக்கும் இயலாத அசாதாரணச் செயலாகும். இப்படிப் பெரு மாறுதல் ஏற்பட்டதும் அம்மையார் மேற் குறித்த அற்புதத் திருவந்தாதி என்னும் அற்புதமான 101 பாடல்களைப் பாடினர் கள்.

● நஞ்சன்கூடு என்னும் தலத்திலுள்ள நஞ் சுண்டேசுவரர் கோயிலில் அறுபத்து மூவர் விக்கிரகங்கள் உள்ளன. அவற்றின் அடியில், அவரவர் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. காரைக்காலம்மையார் திருவுருவத்தின் பீடத் தில் தவதி என்று அவர் பெயர் குறிக்கப்பட் டுள்ளது. பேயார் என்னும் பெயரும் இப்பொருளை உடையதே-

(இதை திரு.K.M.வெங்கடராமையா அவர்கள் திருப்பனந்தாள் மடம் வெளியிட்டுள்ள பதினே ராம் திருமுறைப் பதிப்பு முன்னுரையில் காண லாம்.)

பிறகு அம்மையார் திருக்கயிலையை நோக்கிக் காற்றைவிட வேகமாகச் சென்ருர். அவரைக் கண்டவர் யாவரும் அஞ்சி ஒதுங்கினர். அம்மையார் இதையெல்லாம் கவனியாமல் சிவபெருமானைத் திருக்கயிலையில் நேரே தரிசிக்கவேண்டும் என்னும் பேரார்வத்துடன் வடதிசை நோக்கி விரைந்து சென்று திருக்கயிலையை அணுகினர். அப்புனிதத் தலத்தைத் தம் கால்களால் மிதித்தல் பாவம் என்றெண்ணினர். உடனே தலையால் நடந்து செல்லத் தொடங்கினர்.

மனிதனே பேயோ, யாராவது தலையால் நடக்க முடியுமா? முடியும். எப்படி? உடலின் தசைச் சுமை நீங்கப் பெற்றதும் உடல் பாரம் மிகக் குறைகிறது; பேய்கள் தலைகீழாய் நடக்க முடியும். கலிங்கத்துப் பரணி என்னும் நூலில் இதுபற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. சில யோகிகள் தலைகீழாக நடப்பதை இன்றும் காணலாம். ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த முத்துசாமி என்ற போர் வீரர் ஒருவர் தலைகீழாக நடந்ததை யானே பார்த்திருக்கின்றேன்.

தலைகீழாக சில யோகிகளும், நம் அம்மைமையாரும் நடந்ததற்கு உட்பொருள் ஒன்றுண்டு என்பர். தலையால் நடத்தல் நிவிருத்தி மார்க்கத்தைக் குறிப்பதாகும் என்று கூறுவர்.

அம்மையார் இம்முறையில் வந்தடைந்தார். இதனைக் கண்டு அதிசயித்த உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, தலையினால் நடந்து இங்கு ஏறிவரும் "எற்பின் யாக்கை அன்பு என்னே!" என்று வியப்புடன் வினவினர். இறைவன் உமாதேவியாரை நோக்கி, "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண். உமையே! மற்று இப்பெருமைசேர் வடிவும் வேண்டிப்பெற்றனள்" என்று திருவாய் மலர்ந்தருளினர். பக்குவம் அடைந்த ஆன்மா தன்னை நாடி வரும்போது மகிழ்ந்து காட்சியளித்து ஆண்டருளும் அப்பன், பேயுருவில் வரும் புனிதவதியாரை நோக்கி 'அம்மையே!' என்று அழைத்தருளினன். அம்மையார், அளப்பரிய அன்புடன் "அப்பா!" என அலறி, செந்தழல் மேனியான்தன் திருப்பாதங்களில் வீழ்ந்து எழுந்தார். திருவுளம் மகிழ்ந்த சிவபெருமான் "நம்பால் நீ இப்போது வேண்டுவது யாது?" என்று வினவியருளினர்

அம்மையார் தந்த பதிலைத் தெய்வச் சேக்கிழார் பின்வருமாறு புலப்படுத்துகின்ருர்:

"இறவாத இன்பஅன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்ருர்:
பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்புண்
டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும்:
நான் மகிழ்ந்துபாட
அறவா! நீ ஆடும்போதுன் அடியின் கீழ்
இருக்க"

என்ருர்.

இப்பாடலின் அமைப்பும், அருமையும் ஊன்றி உணரத் தக்கவையாகும். ஒரே ஒரு அரிய குறிப்பை மட்டும் இங்கே சுட்டலாம் திருவாலங்காடில் தாண்டவம் ஆடும் சிவபெருமானை அம்மையார் பாடிய மூத்த திருப்பதிகளில் முதலாம் பதிகத்தின் பதினொரு பாடல்களிலும் "அப்பன்" என்று தவருதுகுறிக்கின்ருர். அப்படிஅவன் ஆடும் போது அவன் "அடியின்கீழ் இருக்க" வரம் வேண்டினர். "அடியின் கீழ் இருத்தல்தான் மிக மிகச் சிறந்த முத்தி, "அடி சேர் முத்தி"தான், பதிஞானத்தின் பயனுகக் கிடைக்கும் உத்தமோத்மான முத்தி என்று சித்தாந்தச் சாத்திரம் கூறும்.

உமையொரு பரகர், அம்மையார் விரும்பக் கேட்ட நான்கு வரங்களையும் நல்கி, "எனது நடனத்தைக் கண்டு பாடுதற்கு நீ திருவாலங் காட்டிற்குச் செல்லுக என்று பணித்தருளினர். அம்மையாரும் தமிழகத்திற்குத் திரும்பி, தலையாலே நடந்து திருவாலங் காட்டை அடைந்தார். அப்பன் அண்டமுற நிமிர்ந்தாடும் திருக்கோலத்தை கண்டு பரவசமடைந்து, 'கொங்கை திரும்பி நரம்பெழுந்து எனத் தொடங்கும்

மூத்த திருப்பதிகத்தின் முதற்பதிகத்தை பாடினுர். இதன் கடைசி பாசுரத்தில் தம்மை அவர் ''காரைக்காற் பேய்'' என்று குறித்திருக்கிருர். வியப்புற்று, அன்பின் மிகுதியால் ''எட்டி இலவம் ஈகை''எனத் தொடங்கும் இரண்டாம் திருப்பதிகத்தை யும் பாடினுர்.

தேவார காலத்துக்கு முந்திய காலத்திலேயே இப்பதிகங்கள் பாடப்பட்டபடியால், அவை மூத்த திருப்பதிகங்கள் என்னும் பெயர் பெற்றன. இவை முறையே நட்டபாடைப் பண்ணிலும், இந்தரைப் பண்ணிலும் பாடப்பெற்றன.

இவ்வாறு அண்ணல் ஆட, அவர் சேவடி கீழமர்ந்து பாடும் அரும்பேறு பெற்ற அம்மையார் ஒரு சிறந்த பெண் புலவர் என்று யாவரும் போற்றுவர்! இவர் முறைப்படி பள்ளியில் கல்வி கற்றதைக் குறித்தோ, தனதத்தன் தன் மகளுக்குத் தனியாக ஓர் ஆசிரியரை தம் வீட்டில் அமைத்து கல்வி கற்பித்தது குறித்தோ சேக்கிழார் ஒன்றும் தெரிவிக்கவில்லை. முற்காலத்தில் பெருஞ் செல்வர்க்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத் தம் இல்லங்கட்கு வருவித்துத் தங்கவைத்து, சிறந்த முறையில் தம் புதல்வர் புதல்வியர்கட்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்து வந்தனர் என்று ஊகிக்க இடமுள்ளது. அம்மையார் தமிழ்க் கல்வி நிரம்பப் பெற்றவர்கள் என்பது வெள்ளிடை மலை. அவர் பாடல்கள் பல, பொருட் செறிவுடனும் பக்திச்சுவையுடனும், நகைச்சுவையுடனும், நுண்கலை உணர்வுடனும் விளங்குகின்றன. இசை ஞானமும், அவர்கட்கு இருந்ததென்பதை, 'துத்தம் கைக்கிளை, விளரி, தாரம்.' எனத் தொடங்கும் பாடலில், ஏழிசையின் பெயர்களையும் பல்வேறு வாத்தியங்களின் பெயர்களையும் அம்மையார் குறித்திருப்பது கருதத்தக்கதாம்.

அம்மையார் பாடியருளியுள்ள அற்புத திருவந்தாதிப் பாசுரங்கள், கற்போர் கேட்போர்கட்கு விழுப்பயன் விளைக்கும் ஆற்றல் படைத்த அற்புதமான பிரபந்தமே.

1. ''பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம்''
2. 'இடர்களையாரேனும், எமக்கிரங்காரேனும்'
3. 'இனிவார் கடையினில் கங்கை என்பாளை'
4. 'அழலாட அங்கை சிவந்ததோ?
5. காகயே போன்றிலங்கு மேனி'
6. ஒருபால் உலகளந்த மாலவனும் மற்றை ஒருபால் உமையவளாம்'
7. 'அறிவானும் தானே அறிவிப்பான் தானே'
8. அன்றும் திருவுருவம் காணுதே ஆட்பட்டேன்'

எனத் தொடங்கும் பாடல்கள், சிறந்த பல பாடல்கட்குச் சில உதாரணங்களேயாகும். அம்மையாரின் விசித்திர விருப்பத்தைக் குறிக்கும் பாசுரம் ஒன்றை எடுத்துக் காட்டி இந்தக் கட்டுரையைப் பூர்த்தி செய்யலாம்.

'எமக்கிதுவோ பேராசை; என்றும் தவிராது.
எமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய்—
அமைக்கவே
பேரந்தெரி பாய்ந்தென்ன புரிசடையாய்!
பொங்கிரவில்
ஏந்தெரி பாய்ந் தாடும் இடம்''

இறைவனது ஊழிக் கூத்தைக் காணவே விருப்பம் கொண்டுள்ளோர் அம்மையார். அதுதான் அவர்க்கும் பேராசை. தற்கால நாகரிக மக்களுக்கோ?

'தாய்தந்தை பல்லுயிர்க்கும் தாமே ஆய
தலைவர்'

தம் மக்களை எல்லாம்,
'புன்னெறி அதனிற் செல்லும் யோக்கி'
னின்றும் விலக்கி,
'மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து',
'நவையறு காட்சி நல்கி'
நம்மெல்லோரையும் விரைவில் மெய்யடியார்களாக்கத் திருவுளங் கொள்வாராக!


'நம்பன் திருமலை நான்மிதியேன'என்று தாளிரண்
டும் உம்பர் மிசைந்தலையால் நடந்தேற உமை
நகலும்,
செம்பொன் உருவன், 'என்னம்மை' எனப்
பெற்றவள் செழுந்தேன்
கொம்பின் உருகாரைக் காலினில் மேய
குலதனமே'


(நம்பியாண்ணர் நம்பி அருளிச் செய்த திருத் தொண்டர் திருவந்தாதி)

'மடுத்திபுனல் வேணியினுர்' அம்மை; என
மதுரமொழி
கொடுத்தருளப் பெற்ருரைக் குலவிய தாண்ட
வத்தில் அவர்
எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றுமிருக் கின்
ருரை
அடுத்தபெரும் சீர்பரவல் ஆரணவாயின(து)
அம்மா!''

[சேக்கிழார்—பெரிய புராணம்)

பழையனூரில்
திருவாலங்காட்டு நடராஜப்
பெருமான் எழுந்தருளி
யிருக்கும் கோலம்.
(அடியார்களுடன்)





ஸ்ரீ நடராஜப் பெருமானுடன் ஆடிய
ஸ்ரீ காளிகாம்பாள்

வண்புகழ் வாழ்க! வளர்ந்து

திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,
ஆசிரியர் : "திருக்கோயில்"

—※—

(வெண்பா)

சத்தியத்திற் காக உயிர்கொடுத்த சான்ருேர்தம்
மெய்த்திறஞ்சொல் **நற்சரிதம்** வேறுென்றை—எத்திறத்தும்
எங்கணுமே நாம் இதுபோற் கேட்கிலம்! இச்சிறப்பை
நன்கினிது போற்றுகிற்போம் நாம். 1

வாய்மைமொழி காக்க மகிழ்ந்துயிர்தா னும்வழங்கும்
தூய்மைமக்கள் **தொல்சரிதை** சூழ்ந்திதுபோல்,—சேய்மைதிகழ்
எந்நாட்டும் என்றும் எவரும் நினைப்பும் ஒல்லார்!
நம் நாட்டின் **பண்புநலன்** நன்று. 2

சொன்னசொல்லைக் காப்பதற்காத் தூய **பழையனூர்**
மன்னுமுயர் **வேளாண் குலமக்கள்**—முன்னம்தம்
நல்லுயிரைத் தாமே நயந்தளித்தார்! இவ்வுலகில்
எல்லையில்சீர் விந்தை இது. 3

உலகறியத் **தாஷ்கெண்ட்** ஒப்பந்தம் செய்தும்
கலகம் சிலர் இழைத்தல் காணும்—நிலைமையினில்,
பண்டைப் **பழையனூர்** மக்களின்நற் **பண்பாடு**
கொண்டாடல் வேண்டும் குறித்து. 4

தேக்கு பெரும்புலமைச் செம்மலாம் நம் அருமைச்
சேக்கிழார் பெம்மான், தம் சீர்த்திமிகும்—வாக்கினல்
பண்புயர்த்துப் போற்றும் **பழையனூர் வேளாளர்**
வண்புகழ்தான் **வாழ்க** வளர்ந்து. 5

இரட்டை மணிமாலை

பேராசிரியர் : வித்துவான் பாலூர் - கண்ணப்ப முதலியார், M.A., B.O.L.

நாயன்மார்கள் அறுபான் மூவர் என்பதைச் சைவ உலகம் நன்கு அறியும். அவர்களுள் மூவர் பெண்பாலார். அவர்களே காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானி யார் என்பவர்கள். காரைக்கால் அம்மையார் அவர்களே புனிதவதியார் என்றும் குறிக்கப் படுவார். இப்பெயரை சேக்கிழார் திருவாக் கின் வழி உணருகின்றோமே அன்றி சுந்தரர் வாக்கின் மூலமோ, நம்பியாண்டார் மொழியின் மூலமோ, அம்மையார் திருவாக்கின் மூலமோ அறிகின்றோம் இல்லை. நம்பி ஆரூரர் இவ்வம் மையாரைக் குறிக்கும்போது, "பேயார்" என் றனர். நம்பியாண்டார் நம்பிகள் "செம்பொன் உருவன் அம்மை எனப்பெற்றவரை" என்ற னர். அம்மையாரும் "காரைக்கால் பேய்" என்று தாம் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்ட னர். ஆனால் உமாபதிசிவம் மட்டும் குன்றைக் கோமகனார் அடி ஒற்றி 'தணதித்தன் தரும் புனிதவதியார்' என்றனர். இது நிற்க ;

காரைக்கால் அம்மையார்க்குச் சிவாலயங் களில் தனிச் சிறப்பு இருப்பதை நாம் உற்று நோக்கினால் நன்கு உணரலாம். அறுபான் மும்மை நாயன்மார்களின் உருவங்களை இவ் வாலயங்களில் அமர்த்திய நிலையில், எல்லா நாயன்மார்களையும் நின்ற கோலத்தில் நிறுத்தி இவ்வம்மையாரை மட்டும் அமர்ந்த கோலத் தில் அமைத்திருப்பதை காணவும். இது ஒப்பு யர்வு அற்ற ஒரு தனிச் சிறப்பு அன்றோ? இந்த ஒரு சிறப்பு மட்டும் அம்மையார்க்கு உரி யதன்று. இறைவன் தாயும் தந்தையும் அற்ற வன். அத்தகையவன் காரக்கால் அம்மையா ரைத் தாயாகக் கருதி "அம்மையே" என அழைத்தனன் அல்லனோ! இந்த மாண்பினை உணர்ந்தன்றோ நம்பி ஆண்டார் நம்பிகள் 'செம்பொன் உருவன் என் அம்மை எனப்பெற் றவன்' என்று பாடிக் களிக்கின்றனர். தொண் டர்சீர் பரவுவாரும் இவ்வம்மையாரைப் பற்றி இறைவன் இறைவிக்கு எங்ஙனம் உணர்த்தி னர் என்றபோது "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே" என்று அறி வுறுத்தியதாக உரைக்கின்றனர். அம்மையார் இறைவனை அணுகும்போது இறைவர் 'அம் மையே' என்று அருள் செய்தார் என்றும் சேக்கிழார் பெருமானார் பாடியுள்ளனர். உமா பதிசிவமும் 'அம்மையே என நாதன்' என்று இக்கருத்தை மொழிந்து களித்துள்ளார். இந்த அரும் பெரும் கருத்துக்களை நன்கு விளக்கு முகத்தால் கற்பனைக் களஞ்சியமாம் சிவப்பிர காச சுவாமிகள் "...எவர்க்கும் இவன் தந்தை யே அன்றித் தனையன் ஆகாதவன்காண் அந்த மில்சீர்க் காரைக்கால் அம்மைதனை—முந்தொரு நாள் தப்பா அருளால் தனக்கம்மை என்றவன் காண்" என்று திருவெங்கை உலாவில் பாடிப் பரவசமுற்றுள்ளார்.

திருஞானசம்பந்தர் இவ்வம்மையார்க்குத் தனிப்பெருஞ் சிறப்புத் தந்தனர் என்பதைப் பெரியபுராணம் நன்கு எடுத்து இயம்புகின் றது. அதாவது அம்மையார் தலையாலே நடந்த திருப்பதி திருவாலங்காடு. அதனை நாம் மிதிக் கூடாது—இதை

திருக்காளத்திப்புராண ஆசிரியர்களுள் கரு ணைப்பிரகாசரும் ஒருவர். அவர் காரைக்கால் அம்மையாரிடத்து மிகுந்த ஈடுபாடுடையவர் என்பது திருக்காளத்திப் புராணத்தில் இவ்வம் மையார்க்கும் வணக்கம் செய்திருப்பதனால் தெரியவருகின்றது. அவ் வணக்கப் பாடல்—

"தோற்றம் இல் பரஞ்சோதி
தன் வாய்திறந்தாற்ற
அன்புடன் அம்மையே என்னும் ஓர்
பேற்றை முன்பெற
பேய் உரு எய்திய சாற்றரும் புகழ்த்
தாயை வணங்குவாம்"—என்பது.

இராமலிங்கவள்ளலும் நம் அம்மையார் திருத்தலையாலே நடந்தமைப்போற்றி பாராட்டி

"நண்ணித் தலையால் நடக்கின்றோம்
என்ப தெங்கள்
மண்ணில் பழைய வழக்கம் காண்—
பண்ணில் சொல்

அம்மையார் வாமத்தோய்! ஆயினும்
முன் காரைக்கால்
அம்மையார் போல் நடந்தார் ஆர்?''

என்று பாடியுள்ளனர்.

இன்னோரன்ன ஈடும் எடுப்பும் அற்று விளங்கும் இவ்வம்மையார் பாடியுள்ள நூல்கள் மூன்று. அவையே மூத்த திருப்பதிகம், இரட்டைமணி மாலை, அற்புதத் திருவந்தாதி என்பன. மூத்த திருப்பதிகம் என்னும் பெயரைக் காணும்போதே அம்மையார் அவர்கள் மூவர் முதலிகட்கு முன்பே பதிகங்களைப் பாடிய பெருமைக்கு உரியவர் என்பதையும் நாம் கண்டு இன்புறுகின்றோம். இது நிற்க;

ஈண்டு, அம்மையார் பாடியுள்ள இரட்டைமணிமாலையைப் பற்றிச் சிறிது ஆய்வோமாக:

'இரட்டைமணிமாலை' என்பது தமிழில் தொண்ணூற்றுறுவகைப் பிரபந்தங்கள் என்று தொகை கொடுத்துப் பேசிவரும் தொகை நூல்களுள் ஒன்றாகும். இத்தகைய நூல்களுக்கும் தமிழ் இலக்கியத்தில் இடம் உண்டு என்பது ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியத்தில்

''விருந்தே தானும் புதுவது கிளர்ந்த
யாப்பின் பேற்றே''

என்று வரும் நூற்பாவைக் கொண்டு தெளியலாம். இதற்கு விளக்கம் கூறவந்த உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர்'புதுவதுகிளந்த யாப்பின் மேற்றே என்றது என்னை எனில், புதிதாகத் தாம் வேண்டிய ஆற்றால் பல செய்யுளும் தொடர்ந்துவரச் செய்வது. இது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்ய அந்தாதிச் செய்யுளும் என உணர்க, கலம்பகம் முதலாயினவும் சொல்லுப'—என்று விளக்கினர். ஆகவே, இரட்டைமாலை பாடுதற்குரிய விதி தொல்காப்பியத்துள் உண்டு என்பதை உணர்ந்தனம். இனி இவ்விரட்டைமணி மாலையின் அமைப்பினைப்பற்றிச் சிறிது பார்ப்போம்,

இரட்டைமணிமாலை வெண்பா முன்னரும் கட்டளைக் கலித்துறை பின்னரும், மாறி மாறி வர இருபது பாடல்களால் இயைந்து வருவதாகும். அங்ஙனம் வரும் நிலையிலும், ஒவ்வொரு செய்யுளின் ஈறும், அடுத்த பாட்டும் முதலும் பொருந்திவரப் பாடவேண்டும் என்பதும் விதி. இவ்வாறு வரும் அமைப்பைத்தான் அந்தாதி என்பர். இவ்விரட்டைமணிமாலையை இலக்கண விளக்கம்.

''இருபது வெண்பாக் கலித்துறை இயையில் வருவது இரட்டைமணிமாலை யாகும்'' என்று நூல் யாப்பால் நுவன்று சென்றுளது. ஆனால், அம்மையார் இரட்டைமணிமாலையில் இரட்டைமணிமாலைக் குரிய இலக்கணம் பெரிதும் அமைந்து, யாப்பு முறை வைப்பில் மட்டும் முன்னர்க் கட்டளைக் கலித்துறையும் பின்னர் வெண்பாவும் அமைந்துள்ளன. பின்னால் வந்த இரட்டைமாலை நூல்கட்கெல்லாம் அம்மையாரது இரட்டைமணியே மூலநூல் என்பதை ஊன்றி நோக்கி உளத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இனி அம்மையாரின் இரட்டைமணிமாலையின் சிறப்பு இயல்பைக் காண்போமாக:

இந்நூலில் நெஞ்சிற்கு அறிவுறுத்தும் பாடல்கள் உள்ளன. அம்மையார் அவர்கள் தம் நெஞ்சை நோக்கி ''நெஞ்சமே, சங்கரனை எப்போதும் ஓவாது (ஒழியாமல்) உரை; நீற்றனை நெஞ்சே நினை'' என்று அன்புரை பகர்ந்துள்ளார். இத்துடன் இன்றி நம் உறவினர்கள் நாம் இறந்தால் நம்மை விறகடுக்கித் தீமூட்டிச் செல்வர். அவர்கள் அங்ஙனம் செல்வதற்கு முன், இறைவன் புகழைக் கேட்டு அப்புகழில் ஆழ்க என்றும் அறிவுறுத்தியுள்ளனர். அவ்வற உரைதான்

''உத்தமராய் வாழ்வார் உவந்தக்கால்
உற்றார்கள்
செத்த மரம் அடுக்கித் தீயாமுன்—
உத்தமனும்
நீள்ஆழி நஞ்சுண்ட நெய்ஆடி
தன்திறமே
கேள் ஆழி நெஞ்சே கிளர்ந்து''—என்பது.

மேலும் மனத்தைப் பார்த்து அதனிடம் பரிவுகாட்டி இறைவன் திருவடிகளை நினைத்த வண்ணமாய் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவளாய் ''நினையாது ஒழிதி கண்டாய் நெஞ்சமே, அமரர்பிரான் அண்டவாணன் அடித்தலமே''—என்றனர்.

மக்களுக்கு அறவுரை பகரும் பாக்களும் மூன்று உள. அவற்றுள் ஒரு பாடலின் கருத்து: இறைவன் தன்னை யார் பல நாட்களாகப் போற்றி வழிபடுகின்றார்களோ அவர்களின் துன்பங்களைக் கண்டு சும்மா இராமல் அத்துன்பங் களைவான்—இதனை உணருங்கள் என்பது மற்றொரு பாடலில் ''மக்களே துன்பம் நீங்கி, இன்பம் வேண்டும் என்கிறீர்களே! அவ்வின்பம் வேண்டுமானால் இறைவனது திருவடிகளை வணங்குங்கள், வணங்கினால் துயர் போம்'' என்று கூறியுள்ளனர். அப்பாடல்—

"கிழாயின துன்ப வெள்ளக்
கடல்தன்னி உள்ளூறப் போய்
விழா திருந்நின்பம் வேண்டும் என்
பிர்! விர வார் புரங்கள்
பாழாகயிடக் கண்ட கண்டன் எனத்
தோளின் பைம்பொற் கழலே
தாழா திறஞ்சிப் பணிந்து பல்
நாளும் தலைநின்மினே"—என்பது.

இத்துடன் இன்றி இறைவனை மலர்கொண்டு தொழுதால் வல்வினைகள் நிற்கமாட்டாமல் ஓடி ஒளியும் என்பதையும் "எம்மானைக் கைம்மா மலர்தூய்த் தொழக்கண்டு நிற்கிற்குமோ துன்னி நம் அரும் தொல்வினையே"—என்றும் உபதேசம் செய்துள்ளார்.

இறைவனது இயல்பு எத்தகையது என்பதை அம்மையார் அறிவிக்கும்போது "அவன் பரவித்தொழுவார் இடர்கண்டு இரான்" என்றும், ஆள்பட்டார் ஆழாலே வந்தணைந்து காத்தளிக்கும் வல்லலான்—என்றும், வேதப் பொருளானை வேதத்திற்கு ஆதியான்—என்றும் குறித்துள்ளார். மேலும் அவன் அன்பர்மாட்டுக் காட்டும் அருளினை—

"ஈசன் அவன் அல்லா தில்லை என நினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண் உலகுக்
கென்றும்
பிறவாமைக் காக்டிம் பிரான்"

என்றும் பாடி உணர்த்தியுள்ளனர்.

மேலும் இறைவன் எல்லா உயிர்களிடத்தும் ஒரே அளவான அன்புடையான் என்பதை மிக்க நயமுற "பொன் கண்டால் பூணுதே கோள்நாகம் பூண்டான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இறைவனது திருவடிகளைக் காணக்கூடியவர்கள் யாவர்—என்பதை உணர்த்தும்போது, 'கழலைக்காண விழைவார் ஐம்புலன்களை அடக்கியவர்களும், தாழ்ந்தவர்களும் மேலானவற்றைக் காண்பவர்களும் ஆவர்' என்ற இந்தக் கருத்தினை—

"தலையாய ஐந்தினையும் சாதித்துத் தாழ்ந்து
தலையாயின உணர்ந்தோர் காண்பர்—தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம்
உண்டிருந்த
கண்டத்தான் செம்பொன் கழல்"

என்று பாடி உணர்த்தினர்.

அம்மையாரிடம் தாய் அன்பு தாய்ப் பண்பு தழைத்து இருத்தலை இவ் விரட்டை மணிமாலையில் காணலாம். இறைவன் வேறு ஊர்திகளில் செல்லாமல் மாட்டின்மீது தானே சென்றுகொண்டிருக்கிறான்! இதனை உட்கொண்டு இரக்கப் பண்புடன் 'ஏறு அலால் ஏற மற்று இல்லையே' என்பர். இத்துடன் இன்றி இறைவனை நோக்கி—

"உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு
கேட்கில் செவ் வான்தொடைமேல்
இரைக்கின்ன பாம்பினை என்றும்
தொடேல்"

என்றும் வேண்டுவார் ஆயின.

அம்மையார் இறைவனுக்குத் தாய் அல்லரோ? ஆகவே தாயாம் அம்மையார் தம் தனயனது நன்மை கருதி இவ்வாறெல்லாம் கூறுவாராயினர்.

அம்மையார் அவர்கள் இறைவனை நோக்கி ஏசல் முறையில் பாடிய பாடலும் இந்நூலில் உண்டு. அம்மையார் இறைவனை நோக்கி "இறைவரே! உம்மை எப்படி அணுகுவது? நீரோ பாம்பை அணிந்துள்ளீர். அவை ஒருவரையும் அணுக ஒட்டாமல் சீறுகின்றன. மேலும் நீங்கள் தலைமாலை மண்டைஓடு இறந்தார் எலும்புகளை அணிந்துள்ளீர்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது அச்சம் தோன்றுகிறதே அன்றி, அன்பு தோன்றவில்லை" என்கின்றனர். இந்தக் கருத்துக்களை—

"அன்பால் அதைுவது எவ்வாறுகொல்
மேலதோர் ஆடரவம்
தன்பால் ஒருவரைச் சார ஒட்டா
தது வேயும் அன்றி
முன்பா யினதலை ஓடுகள்
கோத்தவை ஆர்த்து வெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கோர்
ஏறுகள் தேறுவதே"

என்றும் பாடலில் காண்க.

தமிழ்நூல்கள் எதுவாயினும் எண்வகை மெய்ப்பாடுகளுடன் திகழ்தல் வேண்டும். அவற்றுள் நன்று நகை என்னும் மெய்ப்பாடு ஆகும். இந்த நகைச்சுவையும் நம் அம்மையாரது இரட்டை மணிமாலையில் உண்டு. அதனையும் கூறி இக்கட்டுரையினை முடிப்போமாக.

இறைவன் இரு மனைவியருடன் வாழ்பவன். அவர்கள் மலைமகளாரும், கங்கையாளும் ஆவர்.

இவர்களுள் மலைமகளாரை தம் உடல் பாதியி லும் மற்றொருத்தியாகிய கங்கையானை உமை யாள் காணுவண்ணம் சடையில் ஒளித்துவைத் துள்ளார். இஃது இறைவர் இருவரை வைத் துள்ள முறை. இதனை எள்ளிநகையாடுவார் போல் அம்மையார், சிவனுரே! நீர் கங்கையா ளைச் சடையில் ஒளித்துவைத்துள்ளீரே. இந் தக் கள்ளத்தனத்தை பார்வதி தேவியார் காணின் நீர் என் செய்வீர்'' என்று வினவுகின் ருர். இங்ஙனம் வினவும்போதும் இறைவரை வேறு எந்தவகையிலும் விளிக்காமல் திரிபுரம் எரித்த தீரரே என்னேவினுக் கிறைவா—இப் படி விளம்ப தன் கருத்தை 'நீங்கள் திரிபுரம் எரித்த வீரராயினும் பார்வதியார். பாகீரதி மறைந்து உறையும் இருப்பைக் காணில் கண் சிவப்பர், அதுபோது உங்கள் திரிபுரம் எரித்த வீரம் சொல்லாமல் விழிப்பீர் அல்லரோ?' என்பதாகும். இந்த அரிய நுண்பொருள்கள் அனைத்தையும் அம்மையார் அவர்கள் நகைச் சுவை ததும்ப—

''இனிவார் சடையினில் கங்கை என்பாளை
அங்கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணில் என்
யெய்தி கையில் சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும் வெந்
தன்றி செந்தியில் மூழ்கத்
தனிவார் கணை ஒன்றினுல் மிகக்
கோத்த எம் சங்கரனே!''

என்று பாடி இருப்பதைப் பார்மின், படிமின், படித்துப் பரவசம் உறுமின்.

இவ்விரட்டைமணிமாலைபல் ஓர் அரிய குறிப்பு உளது. இவ்வம்மையார் பாடிய ஏனைய இருநூற்களில் தன் பெயயை அமைத்து அந்நூல்களைப் படிப்பதனுல் பெறக்கூடிய பய னையும் குறிப்பிட்டுள்ளனர். இவ் விரட்டை மணிமாலையில் இவ்விரண்டையும் குறிப்பிட் டிலர். இதுவே அந்த அரிய குறிப்பு.



காரைக்காலம்மையார் அருளிச்செய்த

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 1

கள்ளிக் கவட்டிடைக் காலை நீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்து மையை
விள்ள எழுதி வெடுவெ டென்ன
நக்கு வெருண்டு விலங்கு பார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபி ணத்திச்
சுட்டிட முற்றுஞ் சுளிந்து பூழ்தி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 2

வாகை விரிந்துவெண் நெற்(று)ஒ லிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையொ(டு) ஆண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித் தோட வீசி
ஈகை படர்தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்ட கத்தே
ஆகங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே, 3

குண்டிலோ மக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன அதனை முன்னே
கண்டிலோம் என்று கனன்று பேய்கள்
கையடித் தோடிடு காட ரங்கா
மண்டலம் நின்றங்(கு) உளாளம் இட்டு
வாதித்து வீசி எடுத்த பாதம்
அண்டம் உறநிமிர்ந் தாடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 4

விழுது நிணத்தை விழுங்கி யிட்டு
வெண்டலை மாலை விரவப் பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளி என்று
பேரிட்டுச் சீருடைத் தாவ ளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப்
போயின தாயை வரவு காணு(து)
அழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 5

பட்டடி நெட்டுகிர்ப் பாறு காற்போய்
பருந்தொடு கூகை பகண்டை ஆந்தை
குட்டி யிடமுட்டை கூகை பேய்கள்
குறுநரி சென்றணங் காடு காட்டிற்
பிட்டடித் துப்புறங் காட்டில் இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே
அட்டமே பாயநின் றாடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 6

சுழலும் அழல்விழிக் கொள்ளி வாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடி ஆடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான்தடி தின்(று) அணங் காடு காட்டிற்
கழலொலி ஓசைச் சிலம்பொ லிப்பக்
காலுயர் வட்டணை இட்டு நட்டம்
அழலுமிழ்ந் தோரி கதிக்க ஆடும்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 7

நாடும் நகரும் திரிந்து சென்று
நன்னெறி நாடி நயந்த வரை
மூடி முதுபிணத் திட்ட மாடே
முன்னிய பேய்க்கணம் குழச் சூழக்
காடுங் கடலும் மலையும் மண்ணும்
விண்ணுஞ் சுழல அனல்கை யேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 8

துத்தங்கைக் கிள்ளை விளரி தாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதந் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கை மென்றோல்
தமருகங் குடமுழா மொந்தை வாசித்(து)
அத்தனை விரவினோ டாடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 9

புந்தி கலங்கி மதிம யங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இட்ட செந்தீ விளக்கா
முந்தி அமரர் முழவின் ஓசை
திசைகது வச்சிலம்(பு) ஆர்க்க ஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே. 10

ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி
ஒன்றினை ஒன்றடித்(து) ஒக்க லித்துப்
பப்பினை இட்டுப் பகண்டை பாடப்
பாடிருந்(து) அந்நரி யாழ மைப்ப
அப்பனை அணிதிரு வாலங் காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக் காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்து வாரே. 11

பழையனூர் வேளாண் பெருமக்கள்

சைவ புராணிகர்—பாகசாலை M. சுப்பராய முதலியார்

''துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று''
—திருக்குறள்

யான் எனதென்னும் அகப்பற்றும் புறப் பற்றும் துறந்தவர்களுக்குச் சமதையான வர்கள் யாரென்று ஆராய்ந்தார் திருவள் ளுவர். எந்த உலகத்திலுமே யாருக்கும் கிடைக்கவில்லை. ஆயினும் பிறகு செத் தொழிந்தவர்களைக் கண்டுபிடித்தார். இதன் பொருள் யாதெனின், இறந்தவர் களை எண்ணிமுடியாது. அதுபோல் எண்ணமுடியாத பெருமையுடையார் துற விகள். வீணே கழிந்தொழிபவர்களைக் கண்டு வருத்தத்தோடுங் கூறினரென லாம்.

பழையனூரென்ற பழம்பதியில் நீலி என்பவள் செய்த வஞ்சனையால் எழுபது பேர் வேளாளப் பெருமக்கள் உயிரையுந் துறந்து உடையவனை அடைந்தார்கள். இந்த சரிதம் மிகவும் பிரசித்திபெற்றது. அந்த வரலாறுகளை இங்கு எழுதவில்லை. பழையனூர் திருவாலங்காடு இந்த இரண் டின் மகிமைகளைச் சுருக்கமாக எழுத எண் ணம். இந்த நீலி கதையைச் செல்வமணி குன்றத்தூர் ஸ்ரீ சேக்கிழார் பெருமான் பாடியருளிய பெரிய புராணத்தில், திருக் குறிப்புத்தொண்ட நாயனுருடையபெருமை யைச் சொல்லத் தொடங்கி, அவர் தோன் றியது காஞ்சிபுரமாதலினல், தாரணிக்கு மங்கலமாம் பெருந்தொண்டைவளநாடு கொண்ட பெருமையனைத்தையும் மிகவும் விரிவாகக் கூறுகின்ருர். இதில் முதல் ஒரு பாடலால் காஞ்சிபுரத்தின் பெருமை யைக் கூறி, அடுத்தபடியாகப் பழைய னூர்ப் பெருமையும் இதில் எழுபது பேர் வேளாளப் பெருமக்கள் துணிந்து செந் தீக் குழியில் மூழ்கிச் சிவனடி சேர்ந்த செயற்கரிய செயலையும் இரண்டொரு பாடலில் சுருங்கச் சொல்லி விளங்கவைத் தார். இதில் ஒரு பாட்டிற்கு மாத்திரம் விளக்கந் தருகின்றேன்—

"நற்றிறம் புரிபழை யனூர்ச்
சிறுத் தொண்டர் நவைவந்
துற்ற போது தம்முயிரையும்
வளதிகனுக்கொரு கால்
சொற்ற மெய்ம்மையைத் தூக்கி
அச்சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது
பெருந் தொண்டை நாடு"

அதாவது நற்றிறம்; நல் + திறம். புரிதல் = செய்தல். திறமாவது அவர்கள் செய்வதா கிய நன்மைகளத்தனையும் உலகுள்ளளவும் கெடாதிருப்பது. இந்தபழையனூரில், காரி என்கிற ஒரு வேளாளப் பிரபு இருந்தார். அவர் பெருஞ் செல்வமுடையவர், வாரி வழங்கும் வள்ளல். மழையானது உலகத் தார் உதவியை எதிர்பாராமல் பொழிந்து உலகத்தை உய்யச் செய்யும். அதுபோல், இந்த காரி வள்ளலும் உதவி செய்யும் தலை வள்ளல். வேளாளரென்ருல் பயிர்த் தொழில் செய்வதும் இதன் பொருளாகும். அறுபத்து மூவர் நாயன்மார்களில் காரி என்ற பெயருடையவரும் ஒருவர் இருக் கின்ருர். அவர் பெயரையே இந்த வள்ள லுக்கிட்டார்களென்றுஞ் சொல்லலாம். இவரைப் பாரி என்ற தலை வள்ளலுடன் வைத்துப் பாடக்கூடிய பாடலும் ஒன்று ளது. அதை இதனடியில் காணலாம். அப்படிப்பட்ட காரி என்பவரிடத்திற்கு ஔவையார் ஒரு சமயம் வந்தார்கள். காரியின் உபசாரத்தில் பிராட்டியார் சில நாட்கள் தங்கி இருந்தார். இனி தான் வெளியூர்களுக்குப் போக விடை தர வேண்டுமென்று வள்ளலைக் கேட்பார். இந்தப் பழையனூர் காரி வள்ளல், 'நாளைக்குப் போகலாம்', 'நாளைக்குப் போகலா'மென்று சொல்லி அம்மையாரை அனுப்ப மனமில்லாமலிருந்தார். அந்த காலத்தில் விருந்தினரை உபசரிப்பது புண்ணியமும் புகழுமென்று கருதினர்கள். பிறகு ஒரு நாள் முறைப்படி விடிய ஐந்து நாழிகைக்கே படுக்கையைவிட்டெழுந்து காரி வள்ளல் தமது வயலுக்குப் போய்விட்

டார். பிறகு, ஔவையாரும் விழித்தெழுந்து, காரி வள்ளலைக் காணமல் தேடினர். அவரிருக்குமிடம் விசாரித்துக் கொண்டு அவரிருந்த வயலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது, பல ஆட்களுடன் வள்ளலும் களை வெட்டிக்கொண்டிருந்தார். அந்த இடத்தில் ஔவையார், 'காரியப்பா! நான் வெளியூருக்குப் போக வேண்டும், விடைதா' என்ருர். அது கேட்ட வள்ளல் இன்னெரு களைக் கொட்டை எடுத்து ஔவையார் முன்னல் போட்டு, 'நீயும் களை வெட்டம்மா' என்ருர். அது கண்ட ஔவையார் பெரு மகிழ்ச்சி கொண்டு அப்படியே செய்தார்கள்—இந்தப்பயிர்த் தொழில் உலகை உய்விக்கும் ஆதலினுலென்க. இதை தொண்டை மண்டல சதகத்தில்.

''ஏரி னியற்றுங் களைக்கொட்டை
ஈந்தன்ன மிட்டு நல்ல
பாரி பறித்தென்னும் பாடல்கொண்டோன்
பண்பு சேர் பழைய
னூரிலிருப்பவன் ஔவைதன்
பாடற் குவந்தபிரான்
மாரி எனத்தகு கைக்காரியுங்
தொண்டை மண்டலமே.''

என்ற பாடலில் காரியின் கையை மழை என்ருர். ''கார் கொண்ட கொடைகழறிற்ற றிவார்க்கும் அடியேன்'' என்ருர் சுந்தரர் அதுபோலெனலாம்—இன்னும்.—

''பாரி பறித்த பரியும் பழையனூர்
காரி கொடுத்த களைக்கொட்டும்—சேரமான்
வாரா யென அழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற்ருடைக்கு நேர்'' (ஔவையார்)

என்ற ஔவையார் பாடலும் இங்கு கருதத் தக்கது.

நமது தொண்டை நாட்டில் புழுக்கால் பயிரே பெரிதும் நடந்தது எனலாம்.

''தொடிப்புழுதிகஃசா உணக்கிற் பிடித் தெருவும்
வேண்டாது சாலப்படும்''

என்ற குறட்பாவினுலும் இதை அறியலாம், இப்போதும் அப்படியேயாம். இதனுலேயே, திருவள்ளுவர் தொண்டை நாட்டிற்ருேன்றியவரேன்பதில் ஐயமில்லை. தொண்டைமண்டல சதகம் பாடிய படிக்காசுப் புலவரும், இதே பழையனூரில் தோன்றிய பெரியவரொருவர், நெல்லமுது அனைத்தையும்—அதாவது, பச்சரிசி யாவும்—திருவாலங்காட்டப்பருக்கு அமுதுபடிக்காகக் கொடுத்துவிட்டு தான் கேழ்வரகு மாவு கொண்டு கூழாக்கி, அதை உண்டு வாழ்ந்தார். இந்த கூழுக்குக் கொஞ்சம் அரிசிபோட வேண்டுமே எனலாம், பச்சரிசியைச் சுத்தஞ் செய்தல்லவோ கொடுப்பார் அந்த சமயம் அதில் விழக்கூடிய நொய்யை இறைவனுக்குக் கொடார். அந்தக் கூழைச் சமையலுக்குச் சேர்ப்பார். இதோடு, அறுபத்து மூவரிடத்திலும் அவர் அன்புடைய பெரியவராகவும் இருந்தார். அது எப்படி தெரியும் என்பதைக் காணலாம். 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்' என்றபடி, பெரிய புராணம் இவர் கையிலேயே இருக்கும். அடிக்கடி அதைப் படித்துக்கொண்டு இருப்பார். இதோடு, அறுபத்து மூவர் குருபூசையிலும் மிகச் சிறப்பாக அன்னம்பாலிப்பு நடத்துவார். இதையுந் தொண்டமண்டல சதகத்தில் கீழ்க் குறித்துள்ள பாடலிற் காணலாம்.

''நீண்டார்வணங்குந் திருவாலங்
காடற்கு நெல்லமுதே
வேண்டா வெனக்கிந்த கூழையே
யமைதென்று வேண்டியகூ
ழாண்டா ரொருவர்
அறுபத்துமூவரில் அன்புவைத்து
மாண்டாரவர்க்கு வளநாடு
நீள்தொண்டை மண்டலமே.''

சேக்கிழார் பெருமானுக்கு இயற்பெயர் அருள்மொழித்தேவர். பிறகு, அவர் கோத்திரத்தையே இயற்பெயராக உலகம் அழைக்கலாயிற்று. அதுபோல், கூழாண்டார் கோத்திரமென்பது, கூழையே தானுண்டு பெருமானுக்கும் அறுபத்து மூன்று அடியார்களுக்கும் நெல்லமுதை உபயோகமாக்கியதால் இவர்களை கூழாண்டாரென்று பிறரெல்லாம் அழைத்திருக்கலாம். அதனல் முன்னிருந்த கோத்திரப் பேர் மறைந்து போய், கூழாண்டாரென்றே கூறுகின்ருேம். அவர்களும் அதையே கோத்திரமாகக் கொண்டார்கள். 'மாண்டார்' என்பதை வேறுவிதமாக எண்ணக்கூடாது. 'மாண்டார்' என்பதற்கு, பெரியவரென்று பொருள் உண்டு.

'நற்றிறம்புரி பழையனூர் என்பதற்கு சான்ருக இன்னும் ஒரு நற்றிறம். இப்போ

தும் காணக்கூடியதாக உள்ளது. இந்த பழையனூர் தெருமுகப்பில் பிள்ளையார் கோயிலொன்றிருக்கின்றது. அதில் இரண்டு பிள்ளையார்கள் இருக்கக் காண்கின்றோம் அதன் காரணம் யாதெனின் முன்னிருந்த பிள்ளையாரின் தும்பிக்கை ஒடிந்தொழிந்தது. அது என்ன காரணத்தால் ஒடிந்ததென்று தெரியவில்லை. ஒரு குறிப்பாகக் கூறலாம். கோயில் கதவு திறந்திருக்கலாம். அது சமயம் அங்கு யாரும் இல்லை. அப்போது ஏதோ ஒரு மாடு சென்று பிள்ளையாரை உராய்ந்திருக்கலாம் அதனால் விழுந்து ஒடிந்திருக்கலாம். இன்னும் மாட்டைப் பயப்படுத்தி ஒட்டி இருக்கலாம். அது கோயிலுக்குள் நுழைந்து இப்படியும் அப்படியும் சுற்றிக்கொண்டு வந்திருக்கும். அப்போது அதன் உடம்பு பிள்ளையார் மீது பட்டு அதனால் கீழே விழுந்து பின்னப்பட்டிருக்கலாம். உண்மை எதுவோ இறைவனுக்குத்தான் தெரியும். பிறகு இந்த பழையனூர் வேளாளரனைவரும் ஒன்று சேர்ந்து, பின்னப்பட்ட மூர்த்தியை பூசை செய்வது பாவமாகுமென்று பேசி, 'வேறு பிள்ளையார் ஒன்று சிற்பியைக்கொண்டு செய்வித்து, கும்பாபிஷேகத்துக்கான ஏற்பாடுகளெல்லாம் செய்துவைத்து, நாளைய தினம் பின்னப்பட்டதை எடுத்து குளத்தில் விட்டு புதுபிள்ளையாரை பிரதிட்டை செய்துகொள்ளலாம் என்று முடிவு செய்துகொண்டு அவரவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அன்றிரவே அதற்குத் தலைவராக இருந்தவர் கனவிற் பிள்ளையார் தோன்றி, அன்பனே! என்னைக் குளத்தில் போடத்துணிந்தீர்கள். ஏனென்றால், பின்னப்பட்டதால் அதை நாமும் ஒப்புக்கொள்கிறோம். உங்கள் குடும்பத்தில் கை நொண்டியாகவோ அல்லது காலில்லாமலோ, கண்ணில்லாமலோ, ஒரு குழந்தை பிறந்தால், அந்தக் குழந்தையைக் குளத்திலும் குட்டையிலும் போட்டொழிப்பீர்களா? என்று கூறி மறைந்தருளினர். உடனே அந்த அன்பர் திடுக்கிட்டெழுந்து கண்ணீரும் கம்பலையுமாக எழுந்து வெளியில் வந்து, பாதிராத்திரியில், அந்த வீதியிலுள்ள வேளாளர்கள் அனைவரையும் அழைத்துத் தனக்குநேர்ந்த அதிசய சம்பவத்தைக் கூறினர். அது கேட்ட அனைவரும் கண்ணீர்விட்டவர்களும் உடல் சிலிர்த்தவர்களும் வாய்விட்டுச் சொல்லமுடியாமல் இறைவன் பெருங் கருணையை வியந்திருந்தவர்களுமாகி; மறுநாள் அதே லக்கினத்தில் முன்னிருந்த பிள்ளையாரையும் புதிதாக வந்த பிள்ளையாரையும் விடாமல் பிரதிட்டை செய்து கும்பாபிஷேகத்தை மிகவும் சிறப்பாக நடத்தினார்களாம்.

'இதைப் பல ஆண்டுகளுக்கு முன்னால் எனக்கொரு பெரியவர் சொல்லக் கேட்டேன். அதன்படியே இன்றும் இரு பிள்ளையாரும் நிலமைதானத்தில் இருக்கப் பார்க்கின்றோம். "குறிகளும் அடையாளமுங் கோயிலும்" என்றார் திருநாவுக்கரசர். இதைக் கொண்டே உண்மை உணரலாம் என்பது பொருள்.

ஆதலால் இப்படி எல்லாம் நற்றிறம் புரி பழையனூர் இது. இந்தப் பழையனூர் மகத்தான க்ஷேத்திரம். இதன் பெருமையை முற்றிலும் கணிக்க முடியாது. சொல்லாமலும் விடமுடியவில்லை. "கோலப்பழனையுடையார் தாமே" என்றார் அப்பர். கோலமென்றால் அழகு என்று பொருள். நன்மை யாவும் அழகேயாம். முன்னமே சொன்னேன். அடியேன் ஒரு குட்டிப் புலவனென்று.இது எனக்கு அதிக பெரியதனந்தான். இந்த பழையனூருக்குக் கோயில் திருவாலங்காட்டுக் கோயில் தான். அப்படி இருந்தும் இந்த பழையனூருக்கு இரண்டு சிவன் கோயில்கள் உள்ளன. ஒன்று, ஈசானதிக்கில் உள்ள கைலாசநாதர் கோயில். மற்றொன்று மேற்கில் வாயு மூலையில், தழுவக்குழைந்த ஈசுவரக் கோயில். இதனுடைய காரணம் காண்போம் :

காரைக்காலம்மையார் கயிலாயம் போய் கயிலாசபதியுடன் பேசினார்கள். இதன் விவரம் தரும் பாடல்களாவன:

"இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்;
பிறவாமை வேண்டும்" மீண்டும் பிறப்
புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும். இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீஆடும்போதுன் அடியின்
கீழிருக்க என்றார்'

பிறகு இறைவர் கூறுவதாக,

''கூடுமா றருள்கொடுத்து;
குலவுதென்றி சையிலென்றும்
நீடுவாழ் பழனமுதூர் நிலவிய
ஆலங் காட்டில்
ஆடுமா நடமுங் கண்டு ஆனந்தஞ்
சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை'' என்ருன் பரவுவார்
பற்ருய் நின்ருன்''

தென் திசையில் என்னகுலவுகிறதென வினவலாம்! வேதாகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம், அறம், பொருளின்பம், வீடு என்கிற புருஷார்த்தங்களேயாம். ''தென்னுடைய சிவனே போற்றி; என்ருர் மாணிக்கவாசகர். இப்படி அருட் செல்வங்களும் மற்றும் வாழ்க்கைக்குரிய பிற செல்வங்களும் சிறப்பு வகையில் குலவுகின்றன எனலாம்.

இதை எல்லாம் நன்குணர்ந்த இந்த பழையனூர் பெருமக்கள் 'அம்மையார் கயிலாயம் போய்வந்ததால், அங்குப் போக இயலாதாராகிய நாம். அதற்குப் பதிலாக இங்கே ஒரு கயிலாசநாத கோயில் எடுப்பிக்கலாம் என்று தீர்மானித்து அப்படியே செய்து முடித்தார்கள்—கயிலாய நினைவை என்றும் போற்ற மேற்கிலுள்ள கோயிலின் வரலாறு பின்வருமாறு: இது கர்ண பாம்பரைச் செய்தி. ஆலங்காட்டப்பர் இந்த பழையனூர் வேளாளர்களுக்கு மருமகப் பிள்ளையென்றும், அவர் திருவோலக்கமாகத் திருவீதியில் வரும்போது இந்த வீதியிலுள்ள வேளாளப் பெண்கள் தெருக் கதவைக் கொஞ்சமாகச் சார்த்தி, அதன் மறைவிலிருந்து மருமகப் பிள்ளையைப் பார்ப்பார்கள் ளென்றும் பொதுஜனங்கள் பேசிக்கொள்வதை நான் என் காதாரக் கேட்டிருக்கிறேன். இதுவல்லாமல் பார்வதி தேவியார் இங்கு ஒரு வேளாளர் வீட்டில் பெண் குழந்தையாகத் திருவவதாரஞ் செய்து வளர்ந்து வந்தார்கள். அப்போது ஒரிரவில் அனைவருந் தூங்கும்போது திருவாலங்காட்டப்பர் இங்கு வந்து தமது தேவியாரைக் களவாடிச் சென்றதாகவும், இப்போதுள்ள கோயிலில்லாத இடத்தில் அன்றிரவு தங்கி இருக்கும்போது அம்மையார் தழுவிக்கொள்ளவும், அதற்கு இறைவர் அகமும் புறமும் குழைந்ததாகவும் பலர்கூறக் கேட்டிருக்கின்றேன். அங்கிருந்து இறைவர் அப்புறம் திருவாலங்காட்டிற்குப் போய்ச் சேர்ந்தார் என்றும், பின்பு இந்த வேளாளர்கள் ஆலங்காட்டப்பருக்கும் அம்மையாருக்குந் திருக்கல்யாணஞ் செய்வித்தார்களென்றும் கூறப்படுகிறது. அது, இன்றும் திருவாலங்காட்டில் வேளாளர்களால் பிரம்மோத்சவ காலத்தில் எட்டாவது நாள் திருக்கலியாணம் இந்த பழையனூர் வேளாளர்கள் நடத்துவதை இன்றும் பார்க்கிறோம்.

இது இப்படியாக அம்மையப்பர் தங்கிய இடத்தில் ஒரு கோயில் எடுப்பித்து, சுவாமியின் திருநாமம் 'தழுவக்குழைந்தவர்' என்றும் அம்மையார் திருநாமம் 'ஆனந்த வல்லி' என்றும் கொண்டு அம்மையப்பருக்கு வழிபாடுகள் நடத்தினர்கள். அதுமுதல், இந்தக் கோயிலிலும், கைலாசநாதர் கோயிலிலும், இன்னும் சிறப்பாக வழிபாடுகள் நடந்து வருகின்றன. இதனல் ''நற்றிறம்புரி பழையனூர் என்பது மெய் யென்பதற்கு இது குறிகளும் அடையாளமுங் கோயிலும் காணலாம்.

ஆனந்தவல்லி அம்மையார் இரண்டு தோள்களே கொண்டு காட்சியளிக்கின்ருள். மதுரை மீனுக்ஷியம்மையாரும் இரண்டு தோள்களே உடையவளாக இருக்கக்காண்கிறோம். சதுர்ப்புஜம் இல்லாமை அவள் பாண்டியன் மகளாய் வந்தமையால் பரதவர் மகளாவும், தக்கன் மகளாகவும் இருந்த என் தாய், இந்த வேளாளர்கள் மகளாக வந்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. இவர்கள் தக்கனுக்குக் குறைந்தவர்களல்ல. ஆதலால், ஆனந்த வல்லியும் இப்படி எழுந்தருளி, வேளாளர் மகள் யாரென்று ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கின்ருள்.

இந்த பழையனூருக்குக் கீழ்த்திசையில் ஒரு கோயிலும், இங்கு மேற்கில் ஒரு கோயிலுமிருந்தது. இந்த சரித்திரம் சந்தேகமே இல்லாததாகும். இதனல் பழையனூர் நற்றிறம்புரி பழையனூர்தான்.

இனி, தீயில் துணிந்திறங்கிய பெரியோர்களின் பெயர் தெரியவேண்டுமெனலாம். இவர்கள் திருப்பெயர்களை அறுபந்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் சிறுத்தொண்ட நாயனர். அவருடைய இயற்பெயர் பரஞ்சோதியார். இவருக்குச் சிறுத்தொண்டரென்று பெயர் வந்ததற்

குச் சேக்கிழார் காரணங் கூறுகின்ருர். இந்த நாயனுர் அடியார்களைக் கண்டபோதெல்லாம் ஆறடி உயரமுள்ளவர் இரண்டடி அளவில் குனிந்து வணங்குவார். அதனுல் அவரைக்காணும் அடியார்களெல்லாம் "சிறுத்தொண்டர்" என்று இவருக்குப் பெயரிட்டார்கள் ஆதலால் அதே போல் ஒழுகின இந்த பழையனூர் வேளாளர்களிலும் எழுபது சிறுத்தொண்டர்களைக் காண்கிரேம். சேக்கிழார் இவர்களை சிறுத்தொண்டரென்பதற்கு காரணம் இதுவேயாம்.

குனிந்து வணங்குவது எப்படி என்ற ஐயப்பாடு சிலருக்கு எழலாம். உதாரணமாக திருவாலங்காட்டில் கோயிலுக்குள் சென்று எல்லா மூர்த்திகளையும் வணங்குகின்ரேம். வணங்கும்போது நின்றபடியே கைகூப்பித் தொழுகின்ரேம். அதை வணக்க மென்கின்ரேம். சண்டீசரைப் போய் வணங்கும்போது, எவ்வளவுங் குனியவேண்டியதாக இருக்கின்றது. அதனுலேயே சிலர் அங்குச் செல்வதில்லை. அந்தக் கோயில் பெரிய அளவில் எடுப்பித்தாலென்ன? தன்னடியார்களை இப்படி வணங்க வேண்டுமென்கிற திருவுளம் சிவபெருமானுக்குளது. சண்டீசர் கோயிலில் மாத்திரம் நாமும் சிறுத்தொண்டர்களாகின்ரேம்.

"நவை வந்துற்றபோது" என்பதில் "நவை" என்பது குற்றம்; களங்கம்; மாசு; என்றெல்லாம் பொருள்படும். "தம்முயிரையும்" என்றதனுல், தானிய வகைகள், காசு பணம், பசுக்கள், அன்னம் வஸ்திரம் இப்படி யாவற்றையும் வழங்கினவர்கள், தாராள மனப்பான்மையுடன் கொடுத்து கொடுத்துப் பழகியதால், தம்முயிரையுங் கொடுத்தார்கள் என்று உணர்த்தப்படுகிறது."

பாண்டிய நாட்டில் பாண்டியனுக்கும் இந்திரனுக்கும் பகை நேர்ந்தது. அதனுல், மேகனுக்குந் தலைவனுன இந்திரன் பாண்டியர் நாட்டில் மழை பெய்யாதிருக்கச் செய்தான். "மாரியல்லது காரியமில்லை" யாதலின், பாண்டி நாடு பஞ்சத்தால் மிகவும் வருந்தியது. பாண்டியனும் இதை யறிந்து வருந்தினுன். ஒருநாள் வேட்டையாட மலையடர்ந்த வனங்களுக்குச் சென்ருன். அப்போது, அங்கு சப்த மேகங்களும் மலைச்சாரலில் மேய்ந்து கொண்டிருந்தன. அதைக் கண்ட பாண்டியன் அவைகளைப் பிடித்துக் கொண்டு வந்து சிறையிலடைத்தான்.

"படையிற்றேற்ற அரசரைப்
 பல்சிறை
இடையிற் போட்டன னென்கை
 வியப்பதோ!
கொடையிற் றேற்றிடும் கொண்டலை
 யுஞ்சிறை
இடையிற் போட்டன னென்ப
 திருக்கவே.

என்பது அருணுசலப் புராணம்.

இதையறிந்த இந்திரன் பாண்டியனுக்கு ஒரு தூதுவனை அனுப்பி, 'இனி மழை பெய்யச் செய்கின்றேன். மேகங்களை விடச்சொல்லிக் கேள்' என்று சொன்னுன் அதை பாண்டியன் பொருட்படுத்தாமல் விட முடியாதென்று மறுத்து விட்டான். இதையறிந்த இந்திரன் யார் சொல்லில் பிடித்தமுடையவனுக இருக்கின்ருன் பாண்டியன் என்று இந்திரன் ஆராய்ந்து ஒரு வேளாளனிடம் தெரிவிக்கச் சொல்லி தூதுவனை அனுப்பினுன்" அதை அறிந்த வேளாளன் பாண்டியனிடஞ் சென்று, நான், மழைபெய்யச் செய்கின்றேன். மேகங்களை விடுவிக்க வேண்டும் என்று கோரினுன். அதற்கு உடன்பட்ட பாண்டியன் என் செய்தான் பாருங்கள்-

"இடுக்கண்வந் துயிர்க்கும் ஊற்றம்
 எய்தினும் வாய்மை காத்து
வடுக்களைந் தொழுகும் நாளாம்
 மரபினுன் உரையை ஆந்தன்
எடுத்துரை மறையோற் சூழ்ந்து
 எழிலிகளிட்ட யாப்பை
விடுத்தனன் பகடு போல
 மீண்டன மேக மெல்லாம்"

பாண்டியன் வேளாளன் வார்த்தையைச் சிவபெருமானுடைய வார்த்தையாகக் கருதினுனென்பது திருவிளையாடற் புராணம்.

"வணிகனுக்கொருகால் சொற்ற
 மேன்மையை"

ஒரு தரஞ் சொன்னுர்கள், பலதரஞ் சொல்லவில்லை என்ருர் ஆசிரியர். "மெய்ம்மையைத் தூக்கி"—அதாவது, தாழ்ந்து

விடாமல் தூக்கி—சிரசின்மேல் தூக்கி—அதையே கொடியாகத்தூக்கி — மெய்ம்மைக்கொடி தூக்கி—அதையே காத்தார்கள் என்றார் சேக்கிழார். இதுதான் மேன்மை. "பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே மெய்யேநின்றெரியும் விளக்கேயொத்த தேவர் பிரான்" என்றார் சுந்தரர். "பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்புகழ் புரிந்தார்க்கருள் செய்யும் ஐயன்" என்றார்=அப்பர். 'மெய்யாராகிப் பொய்யை நீக்கி'=என்றார் சம்பந்தர். "உள்ளம் பொய்தான் தவிர்ந்து" என்றார் மாணிக்கவாசகர். 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று" என்றார் பொய்யாமொழியார்.

இனி, வணிகனுக்கு இவர்கள் சொல்லும்போது 'உன் உயிர் போனால் எங்கள் உயிரைக் கொடுக்கின்றோம்' என்றார்கள் இந்த உயிர் அவர்களுக்கும் பெரிதாகத் தெரியவில்லை. இதுவரை கொடுத்துவந்த பொருள்களில் இதுவும் ஒன்றெனக் கருதினார்கள். இதுவும் கவனிக்கற்பாலது. உயிரைக்கொடுப்பது யாருக்கு? வணிகனுக்கா? அல்லது இயமனுக்கா? அல்ல. சிவனுக்கு. சிவன் ஒருவன்தான் உயிருக்குடையவன் அவனுக்கே கொடுக்கின்றோம் என்றார்கள் குறிப்பாக. இன்னும், நெருப்பில் இறங்குவோமென்று கூறினார்களா? இல்லை. ஏன் நெருப்பில் இறங்க வேண்டும்? தண்ணீரில் இறங்கலாமல்லவா? நெருப்பு சிவன் வடிவம். அதனாலென்க. பொய் சொல்லி உலகத்திலிருப்பதே நெருப்பிலிருப்பதாக அவர்களுடைய எண்ணம். நெருப்பே அவர்கட்குத் தண்ணீர்த்தடாகமாக இருந்ததென்பது பொருள். ("தீயவை தீய பயத்தலால் தீயளவு தீயினும் அஞ்சப்படும்").பஞ்சபூதங்களில் நெருப்பே மிகச்சிறந்தது. நெருப்பில் விழுந்த எதுவும் நெருப்பாகவே மாறிவிடும். மற்றது அப்படிச் செய்யாது. அறுபத்துமூன்று நாயன்மார்களில், திருநாளைப் போவார் நாயனார் மாசுடம்பு விடத் தீயின் மஞ்சனஞ்செய்தருளி எழுந்து ஆசில் மன்று முனியாகி. அம்பலவர் தானடைந்தார்." இதை மஞ்சனமென்றார்.

அறுபத்து மூவரில் புகழ்ச்சோழநாயனாரும் ஒருவர். இவர் முடிமன்னர். இவர் சரித்தை எறிபத்திநாயனார்புராணத்தில்விரிவாகக்காணலாம். 'பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர் கடியேன்" என்றார் சுந்தரர். புகழ்ச்சோழருக்கு, அதிகன் என்பவன் வரிகொடா இயக்கம் நடத்தினன். அதனால் நாயனாருடைய சேனைகள் அவனுடன் போர்புரிந்து, அவனுக்காகத் திரண்டு வந்தவர்களை யெல்லாம் தலையையும்கூட வெட்டிப் பல தலைகளைக் கொண்டுவந்து அரசன் முன்னால் குவித்தான். அதை அரசர் பார்வையிட்டபோது, ஒரு தலையில் சிறிது சடை இருக்கக்கண்டார். உடனே கலகலவென்று கண்களிலிருந்து நீர் பெருகியது. உடனே, அரசர் ஆட்சியைத் தம் மகனிடம் ஒப்படைத்துவிட்டு, மந்திரிகளுக்கும் சமாதானம் சொல்லி, தீக்குழி உண்டாக்கினர். சடசடவென்றுகொழுந்துவிட்டு எரிகின்றபோது, அரசர் பெருமான்:

"கண்டசடைச் சிரத்தினையோர்
கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டுதிரு முடித்தாங்கிக்
குலவும்எரி வலங்கொள்வார்
அண்டர்பிரான் திருநாமத்
தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை
மகிழ்ந்தருளி உள்புக்கார்"

"குலவும்=எரி" எரியில் என்ன குலவும்? சிவன்தான் குலவும். "அங்கங் குளிர்ந்தன லாகுமெங்கள் அப்பனிடந் திருவாலங்காடே" என்றார் காரைக்காலம்மையார். இந்த பழையனூர்ப் பெருமக்கள் தீயிலிறங்கும்போது, சிவலிங்கம் ஒன்று பிரதிட்டை செய்து, அதற்கு சாக்ஷிபூதேசுவரர் என்று திருநாமஞ்சூட்டினார்கள்.

இதனால் நமக்கென்ன தெரிகிறது? இதுவரை எழுதியதிலுள்ள அனைவருமே பெரும்புலவர்கள். பெருமனப்பான்மையுடையவர்கள் சிவபெருமானிடத்தில் பேரன்புடையவர்கள். சிவதீக்ஷையும் நித்தியகர்மானுஷ்டானங்களு முடையவர்கள். சிவசின்னம் தாங்கிச் சிவபூசையுஞ் செய்பவர்கள். மகத்தான பெரிய ஞானிகள். இல்லையென்றால், 'நற்றிறம்புரி பழையனூர்" என்று சேக்கிழார் கூறார். திருஞானசம்பந்தர், உமாபதிசிவம், மூவேந்தர்கள், ஆகிய ஆன்றோர்கள் போற்றியிரார்கள். தொண்டைமண்டல சதகம் முதலிய புகழ்மாலைகளையும் அடைந்திருக்க முடியாது. 'அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழே'

மெய்ப்பேறு பெறும் வேளாளரென்பதற்கு பொருள் தெரியாதவர்கள் மங்கல மொழியில் மொழிவதில்லை. அது அவர்கள் தலைவிதி. "தாதா கோடிக்கொருவர்" என்ருர் ஒளவையார். எழுபதுபேர் நம் தொண்டை நாட்டில், நம்முடைய பழையனூரில், தாதாக்களிருந்தார்களென்ருல் அப்பெருமையை கணிக்க நாம் தரமல்ல.

இனி ஏர் ஓட்டிக்கொண்டு வயலுக்குப் போனுர் எழுபது பேர்களில் ஒருவர். அவரும் முறைப்படி விடிய ஐந்து நாழிகையளவில் எழுந்திருந்தவர். இவர்கள் அவருக்குச் சொல்லவில்லை அவரும் நம்பிக்கையோடு சென்ருர். பிறகு இங்கு நடந்ததை அவருக்கு உணவு கொண்டுபோனவர்கள் சொல்லக்கேட்டு, அங்கேயே கலப்பைப் படையிலிருந்த கொழுவைப் பிடுங்கிக் கொண்டு அதைக்கொண்டே அவர் உயிரை இறைவனுக்கு ஒப்படைத்தார். இது எப்படி இறைவனை அடைவிக்கும் என்று வினவலாம். மின்சாரம் ஒருவனைத் தாக்குமாயின் அவன் காலியாகின்ருன். அப்படியானவனை இன்னெருவன் தீண்டிஞல் அவனும் அங்ஙமேயாகின்ருன். அதேபோல, அறுபத்தொன்பதுபேர் தீயிலிறங்கிச் சிவனடியை அடைய, அதைக்கேட்டு, அவர்கள் ஞாபகமாக நடந்ததாதலின் இவரும் சிவத்தை அடைந்தாரென்பதில் ஐயமில்லை. இதனல் நமக்கென்ன தெரிகிறது? சத்தியம் இப்படி வரவொட்டாமல் கெட்டியாக இருக்கிப்பிடித்து, பொய்க்குப் பயந்தவர்கள் பாவத்துக்குப் பயந்தவர்கள் மானத்தைக் காக்கப் பிராணனைக் கொடுத்தவர்களைப் பெரிதுமாக உடையவர்கள் வாழ்ந்த ஊர் பழையனூர். "அஞ்சும் பழையனூர்" என்ருர் சம்பந்தர். பொய் சொல்லி உலகத்தில் உலாவுவதாக அவருக்குத் தெரிகிறது என் செயலாம். "சொன்னதோடு அப்படியானுர். இப்படி வந்து பார்க்கவுங்கூட மானமுஞ் சத்தியமும் வழிவிடவில்லை. என்ன செய்வார் சிறுத்தொண்டர். அதோடு அங்கிருந்து இங்கு வருவதே.

இந்த எழுபது சிறுத்தொண்டர்களுக்கும் பத்தினிமார்கள் உண்டல்லவா? அவர்கள் சிவத்தையடைந்தபிறகு இவர்கள் அமங்கலமாக வீட்டில் வாழ்வார்களா? இவர்களும் அதில் போய்ச்சேர்ந்தார்கள் - சோதியில் ஐக்கியமானுர்கள் எனலாம். வயலில், உயிரை உடையவனிடம் சேர்த்தவையும் இந்த எரிகின்ற தீயில்கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

"அங்கண்வி சும்பின் அகனிலாப்
பாரிக்கும்
திங்களும் சான்ருேரும் ஒப்பர்—மற்றிங்கண்
மறுவாற்றும் சான்ருேரமே கற்ருர்
தெறுமந்து தேய்வார் ஒருமாசுறின்"
(நாலடியார்)

ஆகாய வெளியில் சஞ்சரிக்கின்ற சந்திரனும் பெரியோர்களும் ஒன்றென்றுகூறி மறுபடியும், அந்த சந்திரன் தன்னிடத்திலுள்ள களங்கத்தைப் பொறுத்துக்கொள்வான். அதோடு, மேலிடத்தில் பலருங் காணத் திரிகின்ருன். ஆனல் இந்தப் பெருமக்களுக்கு, ஒரு களங்கமுண்டானல் உயிரையே விட்டுவிடுவார்கள். சந்திரனைப் போல் மானங்கெட்டவர்களல்ல — நமது பெருமக்கள் என்ருர்.

"குடிப்பிறந்தார் கண் விளங்குங் குற்றம்
விசும்பின்
மதிக்கண் மறுப்போலுயர்ந்து"
(திருக்குறள்)

இனி. சமயாசாரியர்களில் ஒருவரான சுந்தரமூர்த்திகள் திருஒற்றியூரை விட்டுத் திருவாரூருக்குப் போகப் புறப்பட்டு அந்த எல்லையைத் தாண்டினுர். உடனே சுவாமிகளுடைய இரண்டு கண்களையும் சங்கிலிக்காக மறைத்துவிட்டான் இறைவன். கண்களா சத்தியஞ்செய்தன? கண்களா எல்லையைத் தாண்டின? அல்ல. ஏன் இவர் கண்கள் மறையவேண்டும்? முதலில் சங்கிலியாரைக் கண்டவை கண்களேயாம். அப்புறஞ் சொல்லவேண்டாம். அதனுலென்க. அம்மையாருடைய வீட்டை விட்டுப் புறப்படும் போதும் மறைக்கவில்லை. திருஒற்றியூர் எல்லையைத் தாண்டுகிறவரைக்கும் மறைக்கவில்லை.ஏன்? ஒரு கடன்காரனுக்கு 'வாரண்டு' பிறக்குமாயின், அந்த கோர்ட்டு காம்பவுண்டில் இருக்கிறவரைக்கும், அவனைப் பிடிக்கக்கூடாது. அதுபோல் என்க. அப்படிக் கண்ணிழந்தவர் அங்கேயே திரும்பி இறைவரைப் பாடினுர். பெருமாள் பேசவில்லை. அதைவிட்டு, காலால் தடவிக் கொண்டும், வருவார் போவார் வழிகாட்டி

யும், திருமுல்லை வாயிலை அடைந்து பதிகம் பாடினார். அந்த பெருமானும் பேசவில்லை. அதையும் விட்டுத் திருவெண்பாக்கம் வந்து "கோயிலுளரையோ" என்றார். அப்போது இறைவர் இணங்கிய மொழியால் "உளோம். போகீர்" என்றான். பிறகு "ஊன்றுவதோர் கோலருளி உளோம் போகீர்" என்றான். அந்தக் கோலையும் அவர் முகத்திலேயே வீசி எறிந்துவிட்டு நந்தியின் கொம்பையும் ஒடித்துவிட்டு, திருவாலங்காட்டிற்கு வந்து எல்லைப்புறத்திலேயே இருந்து பாடியருளினார். ஏனென்றால் காரைக்காலம்மையார் தலையில் நடந்ததால், தாம் காலால்மிதிக்க அஞ்சி என்க. கண் கேட்கவில்லை இந்த இடத்தில் இது மோக்ஷத்தலம். மோக்ஷத்தில் இப்போது விருப்பமில்லை. இந்த இடத்தில் பாரியோசனையுடன் பாடியுள்ளார். எதைச்சொன்னால் இறைவருக்குத் திருப்தியாகும் என்று கருதி, "முத்தா!" வென்றெடுத்து, "உன்னடியார்க் கடியேனாவேன்" என்று முடித்து, இறைவரை மகிழச்செய்தார்-என்பும் உருகப் பாடினார். இந்தப் பலன்தான், காஞ்சிபுரத்தில் மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த இடக்கண் கொடுத்தார். மற்றைக் கண் திருவாரூரிறைவரிடம் பெற்று மகிழ்ந்தார். திருஒற்றியூர், காஞ்சிபுரம், திருவாரூர் இந்த மூன்று தலங்கள் பிருதிவி க்ஷேத்திரம். இதுவும் சிந்திப்பரியது.

இந்த தேவாரப் பதிகத்தில் "அடியார்க்கடியேன்" என்று பாடியதனால் இதுவுந் திருத்தொண்டத் தொகை எனலாம். தேவாசிரிய மண்டபத்தில் பாடிய திருத்தொண்டத் தொகையில் கடைசி பாடலின் கடைசிச் சீரில், "அன்னவனும் ஆரூரான் அடிமை கேட்டுய்வார், ஆரூரிலம்மானுக்கன் பராவாரே" என்றார். இங்குப் பாடிய பாடல்களில் கடைசிப் பாடலில் "பத்தும் பாடியாடுவார், பரமனையே பணிவாரே" என்றதனால், இரண்டும் ஒரே பொருளையுடையன. இது திருக்கடைக்காப்பு என்போம்.

இங்கு பழையனூரில் பாடியது; எழுபது பெருமக்களையே குறித்துப் பாடினது எனலாம். இதுபோல் வேறு எத் தலத்தினும் பாடியதில்லை.

இது நிற்க, திருப்பனந்தாளாதீனத்தில், சுந்தரர் பாடியருளிய பாடல்களையே திருவாலங்காட்டில் நடராஜப்பெருமான் கோயிலுக்கு என்றால் சபைக்கு அண்மையில், இந்த ஒரு பதிகம் மாத்திரம் எழுதி வைத்தார்கள். மற்றிருவர் திருப்பதிகங்களை எழுதக்கூடாதென்ற எண்ணமா? அல்லது அவர்களாலாகாதா? இது ஒரு பெரிய அதிசயமெனலாம். நடராஜப் பெருமானுடைய திருவுளக்கருத்தே இந்த எழுபது சிறுத்தொண்டர்களைக் கருதியே எனலாம். ஆனால் திருப்பனந்தாள் ஆதீனத்தில் அப்படி ஒரு கருத்துக்கொண்டார்களோ என்னமோ அறியேன். அப்படியே ஆயினும், அதுவுந் தெய்வச் செயல்தான்.

இதுவரைக்கும் எழுதியதில், இப்போதுள்ளவர்களிடத்தில் ஒரு சிறிதாயினும் இருக்கின்றதாவென்று கேட்பாரும்உண்டு இல்லாமலில்லை. அதாவது,இப்போதுள்ள வேளாளர்கள் நன் முயற்சியாலேயே, இப்படிக் கண்கொள்ளாக்காட்சியான கோயிலைக்காண்கின்றோம். இன்னும் எங்கள் சபாபதி தேசிகருடைய பெருமுயற்சியும் நன்முயற்சியுமே இந்த அளவில் ஆண்டானையும் அடியார்களையும் ஒருஇடத்திலேயே கும்பிடச் செய்கின்றது. இதுவரை எழுதியதில் பல பிழைகளுண்டெனலாம். தமிழறிஞர்களும், இன்னும் பல அன்பர்களும் திருத்தியமைத்துக்கொள்ளவும். குட்டிப் புலவனான அடியேனையுந் திருத்தியருள வேண்டிக்கொள்கின்றேன்.

இப்படிக்கு
பழையனூர் வாழ்வார்கள் எல்லார்க்கும்
அடியேன்.

உ
சிவமயம்.

"சொல் காத்தோர் எச்சம் உளதோ?"

பெருந் தொண்டாற்றிய சிறுத் தொண்டர்

ஆசிரியர் :
தி. மு. சபாபதி தேசிகர். திருவாலங்காடு.

ஒன்றே செய்க, இன்றே செய்க, என்பது பழமொழி.

'அரிதரிது மானிடராத லரிது' என்ருர் ஔவைப் பிராட்டியார். மனிதரினும் தேவர் உயர்ந்தோரேயாயினும் தேவராத லரிதெனக் கூறினாரில்லை ஏன்? தேவ (சுவர்க்க) உலகில் இன்பமே என்னுளுந் துன்பமின்றி வாழும் சிறப்பிருந்தாலும் நிலையாய ஆன்மனந்தத்தைப் பயக்கும் வீட்டின்பத்தைத் தரப்பெரு. ஆகவே ஞானத்தைத் தடுத்து பந்தமுறுத்தலின் சுவர்க்க இன்பம பொன்விளங்கோடொப்பானதே. வீட்டின்பம் வேண்டினோர், புண்ணிய பூமியாகிய பூவுலகத்திற்கு வந்துதான் அடைய வேண்டும். "வானிடத்தவரும் மண்மேல்வந்து அரன்றனை அருச்சிப்பர்" ஆகலேதான் மானிடராத லரிதெனக் கூறினர். இவ்வித சிறப்புடைய மனிதப் பிறவி கிடைக்கப் பெற்ற மக்களாகியவர்கள், செயற்கரிய செயலைச் செய்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படவேண்டிய முயற்சியில் ஈடுபட்டவர்கள்தான் மக்கள். ஏனையோர் மாக்கள்தான். "வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய், வினையின் வந்தது வினைக்கு விளைவாவது" வினைக்கீடாக ஒரு பிறவி வந்ததும், ஏதோ ஒரு செயலைச் செய்யத்தான் செய்யும், இது நியதி. செயலைச் செய்யும் போதுதான் பகுத்தறிவைப் பயன்படுத்தி நல்வினை, தீவினைகளை, நல்லதொரு முடிவுக்கு வந்து ஒன்றையே செய்ய வேண்டும்: அஃதும் அறநூலில் விதித்தவற்றுக்கு மாறுபடாவண்ணம் நன்றேயாயிருக்க வேண்டும். அதுவும் சந்தர்ப்பம் வாய்த்த போது நாளையென்னுது இன்றே செய்ய வேண்டும். இவ்வரிய பெரிய செயல்கள்தான் பேரிலக்கியங்களில் ஏற்றபட்டு பல்லாயிர மாண்டாயினும் குன்ருது பல அறிஞப் பெருமக்களால் போற்றி இன்றும் பாராட்டப்படுகின்றனர்.

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும் புருஷார்ததம். அஃதாவது புருஷர்கள் இன்னான்கு நெறியைக் கடைப்பிடித்து ஒழுகக் கடைமைப்பட்டவர்கள் இது நமது இந்திய நாட்டில் இமயம் முதல் குமரிவரை உள்ள மக்கள் அன்று முதல் இன்றளவும் கடைப்பிடித்து ஒழுகி வந்துள்ளார்கள். இனியும் கடைப்பிடிப்பார்கள், இந்திய நாட்டில் ஏனைய பகுதியைக் காட்டிலும் தமிழ் மொழி வழங்கும் தென்னுடு சிறப்புடையதெனக் கூறல் மிகையாகாது. மூர்த்தி, தலம், தீர்த்தங்களும் ,சமயாசாரியார்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், மதாசாரியர்கள் இத்தென்னகத்தே அவதரித்துத்தான் ஆண்டவனோடு அண்மையிலிருந்து அருள் விளையாடலாடினார்களென்பது உலகறிந்த விஷயம். இதில் தனிச் சிறப்பு உடையது தொண்டை நாடு. "தொண்டை நன்னுடு சான்ரோருடைத்து", 'தீயவென்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத் தூய மாந்தர்வாழ் தொண்டை நன்னுட்டியல்பு சொல்வரைத்தோ" இன்னுட்டில் மற்றெவ்வளமும் இல்லாவிடினும் சான்ருண்மையில் தனிச் சிறப்புடையதெனக் கண்டார்கள். இவ்விதச் சிறப்பமைந்த தொண்டை நாட்டிற்கு, மேலும் சிறப்பீந்ததாய் ஒரு சரிதம் நிகழ்ந்துள்ளது. இது பொன் அணியில் மணி பதித்தவாறு, தருமத்தின் வழி நின்ருெழுகும்

நம் இந்திய நாட்டிலே ஒருவனின் செயலால் ஒருயிர் அகால மரணமடைய நேரிட்டால், உயிர் நீங்கக் காரணமான அவரே தம் உயிரை மாய்த்துக்கொள்வார். ஒருக்கால் அவர் தவறும் பக்ஷத்தில் அரசன் நீதி முறையில் உயிருக்கு உயிர் கொடுக்கச் செய்வான். சிற்சில நூல்களில் பிராயச்சித்தம் என்று ஒன்றை வகுத்து, தேசம், இடம், காலம் என்பவற்றுள் வேறு விதமான நீதியை நியதியாக்கப்பட்டுள்ளது. இம்முறை மத்திய பக்ஷம் உத்தம பக்ஷத்தின் நெறி ஒருயிர் இறக்கக் காரணமாய ஒருவர் மீண்டும் அவ்வுயிரை மீட்டித்தர முடியாதாதலால் அவ்வுயிருக்குத் தன் உயிரைத் தந்தேயாக வேண்டுமென்பது தமிழ் நூல் மரபு. இவ்வித சரிதம் அருள் நூலாகிய பெரிய புராணத்து மனுச்சோழ சரிதத்தால் விளங்குகின்றது.

இத் தொண்டை நாட்டு முப்பத்திரண்டு சிவஸ்தலத்தில், ''ஒன்றாய் உலகனைத்து''க்கும் எங்குமிலா எண்தோள் மூர்த்தியாய் ஐம்பெரும் நடன சபையில் முதலாய் மணியம் பலக்கூத்துகந்த திருவாலங்காட்டுப் பழையனூரில் நடந்த சரிதத்தை இந்தியரனைவரும், சிறப்பாக ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து மற்றெவ்வுலகுக்கும் பல்பொற்றல் எடுத்து விளக்கிக் கூறி, இந்நாட்டு மக்களின் நேர்மை, உண்மை, மன ஒருமைப்பாடுகளை உலகறியச் செய்தல் தலையாய கடமை. முன்னோர் ஒழுக்கத்தின் புகழை அவ்வழியில் வந்த நாம் உயர்வடையச் செய்து சிறப்படைய வேண்டும்,

சற்றேறக்குறைய கடைச் சங்க காலத்தோடொப்ப கருதக்கூடிய காலத்தில் நடந்த நிகழ்ச்சியாய குறிகளும், அடையாளமும், கோயிலும், நெறிகளும் அவர்கள் நின்றதோர் நேர்மையும், அன்றுதொட்டு இன்று வரை பழைய லிங்கத் திருவுருவும் உண்மைக்கு உயிரீந்த உத்தம வேளாண் பெருமக்கள் எழுபதின்மர் செதுக்கிய கற்பாறைகளும், இடையே எத்தனையோ மதமாற்ற மாய வெறி பிடித்த அரசர்கள் ஆண்ட காலத்து எவ்வளவோ தெய்வத் திருச்சின்னங்கள் அழிந்துவிட்டன. இஃதொன்று மாத்திரம் காப்பாரற்றுக் கேட்பாரற்றுப் பரந்த வெளியில் இருந்தும் அழியாமல் ஆணையிட்டதைப் போல் நிலைத்திருந்த ஒன்றைக் கொண்டே உண்மையை ஒருக்காலும் ஒருவராலும் அழிக்க முடியாதென்பதை உணரலாம், இக் காலத்தின் பின்னர், பல்லவர் காலத்திய சின்னங்களையும் மற்றும்பல பழங்காலச் சின்னங்களையும் பழுதுபடாமல் பண்டைச் சிறப்பைப் பாதுகாக்க அரசினரால் தனித்துறை வகுத்து பெரும் பொருட் செலவில் கண் காணிக்கப்பட்டு வருகின்றது. அக் காலங்களுக்கு முற்பட்ட காலத்தே ஏற்பட்ட இச்சின்னங்களை அவர்கள் உணரவில்லையோ? அன்றி நம் தமிழ் சரித வல்லுனர்கள் நினைப்பூட்டவில்லையோ? யார் பாதுகாக்காவிடினும் அனைத்தும் ஒருங்கே காப்பவனே காத்து வந்தான்.

இத் திருத்தலம் காலத்தால் முற்பட்டது; கூத்தப்பிரானது ஐம்பெருஞ் சபையில் முதற்சபையாய இரத்தின சபையால் முற்பட்டது, என்தோள் வீசி உயரத் தூக்கிய திருவடியால் முற்பட்டது, அம்மையின் மூத்த திருப்பதிகத்தால் முற்பட்டது. இன்னும் பற்பல விதத்தாலும் முற்பட்டதுடன், ஒரு வணிகப் பெருமகனுக்கு நீலிப் பேயின் காரணமாய் உயிர் நீங்க தாம் சொன்ன சொல்லைக் காக்க எழுபதின்மர் ஒருசேர ஒருயிருக்கு எழுபது உயிர் கொடுத்த சிறப்பு மிக்க சரிதத்தாலும் முற்பட்டதாய்விட்டது.

''வம்பறு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா எம்பிரான் சம்பந்த'' பரமாசாரியராலேயே தேவாரப் பதிகத்துள் இச்சரிதத்தைச் சிறப்பிக்கப்பட்டமையாலும், அருளாளர் திருத் தொண்டை அருள்மொழியால் அளித்த பெருந் திருவாளர் சேக்கிழார் பெருமானும் ஞான சம்பந்தப் பெருமான் அடியொற்றி இச் சரிதத்தை விளங்கியருளினமையாலும் இதன் சிறப்பை உணரலாம். திருத்தொண்டத் தொகையில் சிறப்பித்த தனியடியார், அறுபின் மூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும், ஆக எழுபானிரண்டு

அடியார்களை கூத்தப்பிரானே அசரீரி அருள்மொழியில் சேக்கிழார் தம் உள்ளத் திருந்து தொகையை விரிவாகப் புராணமாக்கியருளினர். அவ்வருள் நூலில் வந்த தனியடியார் தொகையடியார் ஆகிய எழுபானிரண்டு நாயன்மார்களைப் போல இச்சரிதத்திலும் பேய் மகள் (நீலி) ஒன்று, வணிகப் பெருமகன் ஒன்று தீப் பாய்ந்த வேளாண் பெருமக்கள் எழுபது ஆக எழுபானிரண்டு எண்ணிக்கை யிலேயே முடிவதாலும் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நாவலூர் பழையனூர் இச் சரிதத்தைச் சிறப்பிக்கப்படாமையாலும், பெரிய புராணமருளிய சேக்கிழாரடி களும் இச்சரிதத்தைச் சிறப்பிக்கப்பட்டமையாலும், பெரிய புராணத்தோடொப்ப வைத்தெண்ணப்படும் சரிதமென்பதில் ஐயத்திற்கிடமில்லை.

மேலும் ஞானசம்பந்தர், ''வணங்குஞ் சிறுத்தொண்டர் வைகலேத்தும் வாழ்த்துங் கேட்டணல்கும் பழையனூர்'', ''கேழல் வினைபோகக் கேட்பிப்பாருங் கேடிலா வாழ்வர் பழையனூர்'' என்றும் நாவுக்கரசர், ''பண்ணினார் முழவமோ வாப்பைம்பொழிற் பழனை'', ''சோனுடைப் பிறவி தீர்ப்பார் குளிர்பொழிற் பழனை'' என்றும், நாவலூரர் 'பண்ணுரிசைகளது கொண்டு பலருமேத்தும் பழையனூர்'', ''பழையனூர்தன்னை யாள்வாய்'', ''பன்மாமலர்களவை கொண்டு பலருமெத்தும் பழையனூர்'' என தேவாரப் பதிகத்துள்ளேயே வருவனவற்றை உற்று நோக்கத் தக்கது.

கூத்தப்பிரான் உலகுய்ய நாவலூர் நம்பிக்கு அடி எடுத்துக் கொடுத் தமை போல சேக்கிழாரடிகட்கும் அடி எடுத்துதவ அவ்வருள் வழிய நஞ்செயலற் றிந்த நாமற்ற பின் நாதன் தன் செயலாலேயே உலகெலாமென்ற முதலோடு உலகலாமென்றே முடித்துப் பெரிய புராணத்தை உலகுய்ய அளித்த பெருந்தகை யார். ''நற்றிறம்புரி பழையனூர் சிறுத்தொண்டர் நவைவந்துற்ற போது தம் உயிரையும் வணிகனுக் கொருகால் சொற்ற மெய்மையுந் தூக்கியச் சொல்லையே காக்கப் பெற்றமேன்மை,, என்றருளினர் உயிரையும் என்றதினுல் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிரினங்கள் ஒன்றேனும் தம் உயிரைவிட துணியவே துணியாது ''இந்திரியாச் சபிரியப்பிராண'', ''இறப்பதனுக் கென்கடவேன்'' எவ்விதமாயேனும் தம்முயிரைக் காத்துக்கொள்ளத்தான் விரும்பும். இது இயற்கை, ''நெடுநாளிருந்தபேரும் காயகற்பந்தேடி நெஞ்புண்ணுவர்'' இவ்வித மாகிய பேரபிமானமான உயிரை உன் உயிர் நீங்குமாயின் நாங்கள் எழுபதின் மரும் உயிர் கொடுக்கின்ருேமென்ற வணிகனுக்குச் சொன்ன ஒரு சொல்லைக் காக்கத் தாமே தீப்புகுந்தாரென்றும், அதன் சிறப்பைக் கூற நம்மால் இயலுமோ? இது நீஎந்த நாட்டிலேனும் நிகழ்ந்ததாய்ச் சரித்திரம் உள்ளதா? இனித்தான் நிகழுமா? சபை கூடியிருந்த போது நீலி தன் வழக்கைக் கூறினள். அங்கு எழுபதின்மர் வேளாண் பெருமக்கள் கூடியிருந்தார்கள், அதற்குத் தலைவர் ஒருவர்தான் இருந்திருக்க வேண்டும். தீர்ப்புக் கூறுதல் தலைவர் ஒருவர்தான். எழுபதுபேருமாகத் தீர்ப்புக் கூறியிருக்க முடியாது. இக்காலநிலையைப் போல் தலை தலையாகப் பேசியிருக்க மாட்டார்கள். உன் உயிர் நீங்கினல் எங்களுயிர் கொடுக்கிருேமென்று வணிகருக்குத் தலைவர்தான் கூறியிருக்க வேண்டும். போனதென்னவோ வணிகன் உயிர் ஒன்றுதான். தலைவர் நாங்கள் என்று பன்மையில் உயிர் கொடுக்கிருேமென்று கூறிய சொல்லுக்காக சபையில் இருந்த அனைவரும் வணிகனுயிரிழப்ப தலைவர் வாக்குக்கு உள்ளடங்கி தீப்பாந்தார்களென் றும், அவ்வுண்மையின் ஒருமைப்பாட்டை என்னென்று வியப்பது! சேக்கிழார் பெருமான், ''மெய்மைநிலை வழுவாதபதி'' என்றும், ''துஞ்சலருவாரென்றே எழுத் தோசை சுருதிமொழி வழுவாது தொடுத்த பாடல் எஞ்சலிலாவதை தொடுத்து பழையனூராரியம்பு மொழிகாத்ததை சிறப்பித்தேத்தி'' என்றருளிச் செய் தார். சில ஆண்டின் பின்னர், சிவகந்தம் பரந்துநாறக் காசினிக்கே வந்த அருட் கதிரோனகிய பொய்கண்டகன்ற மெய்கண்ட நாதன் வழியில் வந்த சந்தானு சாரிய நான்காவது மூர்த்தியாய் சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்கில், எட்டுச் சாத்திரத்தை அருளியவரும், வடமொழி, தென்மொழியில் கரைகண்டுணர்ந்த சிவஞான பானுவாய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் இச்சரிதத்தை, ''மாறுபடு

பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயிரிழப்பத் தாங்கள் கூறிய சொல் பிழையாது துணிந்து செந்தீக் குழியிலெழுபது பேருமுழுகிக் கங்கை ஆறணி செஞ்சடைத் திருஆலங்காட்டப்பர் அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ் மெய்பேறு பெரும் வேளாளர் பெருமை'' என்று கூறியருளினர்கள். ஞான சம்பந்தருக்கு ஆலங்காட்டிறைவன், 'மாலையிடையாமத்துப் பள்ளி கொள்ளும் மறையவனூர் தம் முன்பு கனவிலே வந்து ஆலவனத் தமர்ந்தருளும், அப்பர் நம்மைப் பாடுதற்கு அயர்த்தனையோ'' என்று உணர்த்த விழித்தெழுந்து துஞ்ச வருவாரென்ற முதற் பாடலில் இச் சரிதத்தை தொகை நூலாக்கினர். பின்னர் சேக்கிழார் வகை நூலாக்கினர் அதன் பின்னர் உமாபதி சிவம் விரிவாக்கினர். இதற்கும், இறைவன் அடிபெடுத்துக் கொடுக்க நம்பியாரூரர் திருத்தொண்டைத் தொகையருள யெல்லாம் பிள்ளையாரருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி, அந்தாதியில் வழி நூல் செய்ய கூத்தப்பிரானருளால் சேக்கிழார் பெரிய புராணமாய் விரி நூலாக்கினமையால் இஃதும் அஃதும் இவ்வகையிலும் ஒப்புவமையுடையதே. சேக்கிழார், ''தம் உயிரையும்'' என்றபடி உமாபதி சிவமும், ''துணிந்து செந்தீக் குழியிலெழுபது பேருமுழுகி'' என்றமையால் உயிரை விடுவதற்குத் துணிவுண்டாகாதே, அப்படி உண்டாகாத துணிவு வண்டானதே என்று துணிந்து என்றருளிச் செய்தார், அப்பெருமக்கள் விழுப்பந்தரத்தக்க ஒழுக்கத்தை உயிரினும் ஓம்ப வேண்டுமென்ற பெருநோக்குப் பண்புடையாராகலின் தமதுயிர் பெரிதென்றெண்ணினரில்லை. ''முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு பிடி சாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னுமிந்தப்படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம் பலவன் அடிசார்ந்து நாமுய்யவேணு'' மென்று உணர்ந்த பெரியோராகலின், ''என்னிலாரு மெனக்கினியாரில்லை என்னிலும் இனியான் ஒருவன் உளன்'' ''என்னன்பு பாலிக்குமாறு கண்டின்பிற இன்மை பாலிக்குமோ இப்பிறவியே'' என்று அவன் உவப்ப நாம் வீட்டின்ப மடைவோம் என்ற அருள்வழி நின்றோர் ஆகவேதான், ''கேழல்வினை போகக் கேட்பிப்பார்'' என்றார் ஞானசம்பந்தர். உள்ளமடங்கி இறைவனோடு உடனுய உண்மையாளராகிய இப்பெரியார்களின் செயலை இறைவன் உலகறியச் செய்ய திருவுளங் கொண்டு நீலி எனும் பேய் மகளையும், வணிகனுரையும் அனுப்பச் செய்து அவர்கள் நின்றதோர் நேர்மையை வெளிப்படுத்தி ஞானசம்பந்தர், சேக்கிழார், உமாபதி சிவம் திருவாக்குகளினலே சிறப்பிக்கச் செய்தருளினர். திருவோட்டையும், கோவணத்தையும், ஆவணத்தையும், காட்டி அவரருஞ் செயலை உலகறியச் செய்தமை போல இப்பெரியார்கள் தருஞ் செயலை உலகறியச் செய்தார் என்பதே துணிபு

இச் சரிதத்தைப்பற்றி விளக்கும் அருள் நூல்கள்.

திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டு திருப்பதிகம் முதற் பாடல்.

> ''துஞ்சலருவாருந்......வஞ்சப்படுத்தொருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டஞ்சும் பழையனூர்''

சேக்கிழார் பெரிய புராணம் திருக்குறிப்புத் தொண்டர். 3-ம் பாடல்.

> ''நற்றிறம் புரிபழையனூர்......தம்முயிரையும்'';

திருஞானசம்பந்தர் புராணம் 1010-ம் பாடலில்.

> ''துஞ்சவருவாரென்றே......பழையனூராரியம்பு மொழிகாந்தகதை''

உமாபதி சிவம் சேக்கிழார் புராணத்துள் 15-ம் பாடல்.

> ''மாறுகொடு பழையனூர்.........துணிந்து செந்தீக்குழியிலெழுபதுபேருமுழுகி''

சேக்கிழார் திருநாவுக்கரசு நாயனர் புராணம் 341-ம் பாடல்.

"அம்மலர் சீர்ப்பதியை......மெய்ம்மை நிலை வழுவாத வேளாள வழுக் குடியைச் செம்மையினர் பழையனூர்"

பெருந்தொகை—சேரன்.

"யாவரே காராளர்......உண்மை நெருப்பால் அளித்தார்க்குநேர்"

சோழன்—

"எல்லைபல கடந்திட்டு......ஒருபேய் நின்று வஞ்சனையாற் செய்தகுழியில் எழுசெத்தீக்கொழுந்து"

பாண்டியன்—

"பிழைத்தாரோ......எரியகத்தே மூழ்கினர் எல்லோரும் இன்றும்உளர்"

இச் சிறப்பினதாய ஆலயம், மண்டபம் முடிவுற்று கும்பாபிஷேக விழாவில் மலர் வெளியிட வேண்டியதவசியம் என்று திருப்பணி விரைவில் முடிவுற்று பண்டைப் புகழ் சிரிக்க வேணுமென்று சிந்தித்துள்ள அறநிலைய ஆணையர் அவர்கள் கருதினதை தலைவர் அவர்களும், பொதுச்செயலாளர் அவர்களும் முன்னின்று முயற்சியோடு நடத்தும் பொருட்காப்பாளரும் உகந்தேற்று நெறுக்கமான நேரத்தில் பணப்பற்றுக் குறையிருந்தும் ஆணையர் ஆணையேற்று விழா மலரை வெளியிடத் துணிந்தார்கள். அப்போது சைவப் கபருந்தகை தலைவர் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும், எங்கே நினைக்கினும் அங்கே வந்து அறநெறியைப் புகட்டுவதோடு தமிழகத்திற்கும் சிறப்பாக சைவவுலகுக்கும் பொதுச் செயலாளராகும், இத்திருப்பணிப் பொதுச்செயலாளரும் ஆகிய பண்டித நடேசனரும் இம் மலரில் ஒரு கட்டுரை எழுதவேணுமென்று அடியேனை வற்புறுத்தினர்கள். இஃதோ பேரருளாளப் பெருந்தகையார்களின் சரிதம். இதைப் போற்றியவர்களோ புறச்சமய இருளகற்றி சைவந் தழைக்க அவதரித்த பேரருளாளர்கள். இம்மலரில் கட்டுரை வரைபவர்களோ தமிழகம் அறிந்த பெரும்புலமையாளர்கள். அடியேனே சொல்லறத்தில் ஒன்றேனும் இல்லாமையோடு இலக்கிய இலக்கணம் சுட்டெரித்தாலுந் தெரியாதவன். பேசுந் திறமையோ, கட்டுரை எழுதுந் திறமையோ கடுகளவு மில்லாதவனென்று மறுதளித்தும், பொதுச் செயலாளர் ஏதோ ஒன்று காவிரையோ கூவிரையோ என்று எழுதுங்களேன். என்று பணித்தார். "நம்மையுமோர் பொருட்படுத்தி நாய்ச்சிவிகை யேற்றுவித்த தன்மையைப் போல்" மேற்கண்ட இரு பெரியார்களும் கருதினர்கள். ஒன்றும் தெரியாத அடியேனை ஊக்குவிக்க இறைவனே இப் பெரியார்கள் வாக்கினின்று வருவித்தான் போலும். "பொய்யே செய்து புறம் புறமே திரிவேனும்" பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலை" யனகிய அடியேன் மெய்ம்மையினர் வரலாற்றை என்னறிவு சென்றளவில் யானின்றறிந்தபடி வரைந்து விட்டேன்.

இத்திருப்பணியின் வரலாறு:

திருப்பணியின் வரலாறுபற்றி முதலிருந்த ஊக்கமுடையோரில் அடியேனும் ஒருவனயும் நடந்தவற்றை சிறிதே உணர்ந்தவனதலின் முக்கியமானவற்றை இக்கட்டுரையில் விளக்குதல் நலமெனக் கருதுகின்றேன், திருப்பணிக் குழுவினர்கள் முழு விவரமும் மற்ருேரிடத்தில் குறித்துள்ளார்கள். சுமார் 35 ஆண்டின் போது இத்தலத்தே எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் சச்சிதானந்த இராஜயோகி சுவாமிகளெனும் பெரியாரிடம் அடியேன் சிறிதளவு சாத்திர, தோத்திர பாடங்களைக் கேட்டுக் கொண்டே பழையனூரில் திண்ணைப் பள்ளி ஆசிரியப் பணிபுரிந்து மாலை திரும்பி வரும்போது, வழியில் உள்ள இவ்விடிந்த கோயிலும், சாய்ந்த

பாறைகளின் பக்கலில் சற்று நேரமிருந்து பெரிய புராணத்தைச் சிந்தித்து இஃதென்று செம்மைநலமடையுமோ என்று சிந்திப்பதுண்டு. பழையனூர் பெருமக்களிடம் உரையாடியும், சில ஆண்டுகள் கழித்து அதாவது 1959 வருடம் தீப்பாய்ந்த குடிபிறந்தாரான திரு. சம்பந்த முதலியார் (கூழாண்டார் கோத்திரம்) அடியேனோடு உரையாடி இச்சரிதக் கோயிலை எப்படியேனும் முயற்சித்து எளிய முறையில் புதுப்பிக்க வேண்டுமே என்ன செய்வதென்று சொன்னபோது நாங்களிருவரும் பொருளற்ற வெறும் ஆட்கள். பத்திரிகை அச்சிட்டு பழையனூர் உதவியோடுகூட பத்திரிகைபோட்டு வசூலித்து செங்கற்களால் கட்டி முடிக்க வேண்டுகோள் எழுதி, அந்நேரம் இத்தலவழிபாட்டிற்கு வந்த பெருந்திருவாளர் தமிழவேள் இன்சொல் ஈர அன்பினர் திரு. P. T. இராசன் அவர்களிடம் தான் காட்டி சரித்தைக்கூறி இடிபட்ட இடத்தையும், பழையனூரையும் அழைத்துப் காட்டியதில் நம்மால் ஆவன செய்ய கடமைப்பட்டுள்ளேன் என்று அருளினர். பின்னர், ஏதோ நடந்து கொண்டிருந்தபடியால் அப்பெரியாரை அணுகிக் கேட்கவில்லை.

1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதியில் காரைக் காலம்மையார் முத்தி பெற்ற நாளில் சொற்பொழிவாற்றுகையில் 'முத்தமிழ்' ஆசிரியர், பண்டித நடேசனர் வெயிலாலுலர்ந்த தீப்பாய்ந்தோர் மேட்டையும் சிவலிங்கத்தையும் நிவிக்கல்லையும் பற்றிம் பேசி, இவற்றைச் செப்பஞ் செய்யச் "சொல்காத்து வேளாளரின் மரபினர் இன்று பழயனூரில் இல்லையே" என்றார். அம்மேடைப் பேச்சை செயலாக்கியது. பின்னர் பழையனூர் பெருமக்கள், திருவாலங்காட்டுப் பேரூராக்ஷித் தலைவராகிய திரு. ஷண்முக முதலியார் ஏனையவர்களும் உழைத்து முடிக்க உறுதி கூறினர்கள். பெரும் புகழுக்குக காரணமாய சரிதமாயிற்றே சிறிதளவாகப் பணியிருக்கக் கூடாதே என்ற ஆசை மீதூற அரசின் ஆதரவைப் பெறலாமென்றும் ஆந்திர அரசில் இச்செயல் கூடிவராது கமிட்டி அமைத்து அதன் மூலம் முடிக்கலாமென்று கருதினேம் அந்நேரத்தில் சைவப்பாதிரியாய் முதிர்ந்த வயதும் பொருட்படுத்தாமல் தமிழகமெங்கனும் நன்னெறி தழைக்க திட்டமிட்டுப் பணிபுரியும் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள் மூலமாக இத் தலத்தே காரைக்காலம்மையார் விழாவினை நடத்த அடியேனுக்கு ஒரு கடிதத்தோடு திருவருள் வயத்தராய அருட் சொல் புலமைமிக்க திருமதி சண்பகவல்லி மாசிலாமணியம்மையாரும் அவர்தம் அருங்குணக் கணவரும், திரு. சிவப்பிரகாச செட்டியாரும் வந்தார்கள் அப்போது அடியேன் இவ்வாலய இறைபணியாளனயிருந்தேன். அவர்களுடனும் அதன் பின்னர் ஆலவனத்தப்பாரை தரிசிக்க வந்தருளும் பேரருள் பெரியார்களிடமும் சரிதச் சிறப்பைக்கூறி நினைவூட்டியதோடு பிள்ளையவர்களைத் தலைவராகவும், சைவப்பற்றோடு வள்ளன்மையும் நன்னூலாராய்ச்சியுமுடைய திரு. A. சோமசுந்தரம் செட்டியார் அவர்களைத் துணைத் தலைவராகவும், அரன் நாமமே வையகமெலாம் சூழ ஓய்வின்றி உழைக்கும் உத்தமப் பண்பினர் முத்தமிழாசிரியர் பண்டித நடேசனரையும் நற்பணி யனுபவமிக்கவரும் திருவழியில் பொருட் செலவு செய்பவருமாய திரு. மேயர் R. மாசிலாமணி முதலியார், ஓதாமற் பல கலையு முணர்ந்த திருமதி சண்பகவல்லி மாசிலாமணியம்மையார் மற்றும் குழுவில்கண்ட ஏனைய பெருமக்களைக் கொண்டு குழு அமைக்கப்பட்டது.

தமிழகத் தலங்கள் தனிச்சிறப்புண்டாக ஒன்றுவிடாமல் பணி நடக்க ஆங்காங்கு குழு அமைத்து அரசாங்கத்திருந்து பொருளீந்தும், சைவநன்னூலில் உரைந்த பற்றும் ஆராய்ச்சியு முடைய முன்னாள் ஆணையர் திரு. A. உத்தண்ட ராமப் பிள்ளையவர்கள் 1957-ம் ஆண்டு பங்குனி உத்திரப் பெருவிழா கொடி ஏற்றத்தன்று இத் தலத்தை தரிசிக்க வந்தபோது அடியேன் உடனிருந்து இடிபட்ட இவ்வாலயத்தையும், சின்னத்தையும் காட்டி சரிதத்தை விளக்கினேன் முன்னரே முழுதுணர்ந்த அப் பெரியார் நகைத்து நீங்கள் ஆந்திர அரசிலிருந்து வந்த பின் கவனிப்போம் நமக்கு நல்லமைச்சர் பெருந்தகை (இப்போதைய தமிழக முத

லமைச்சர்) அறப்பெருந் துறையை ஏற்றுள்ளார்கள். அவர்கள் ஆதரவால் நான் பல நற்பணிகளை நடத்திவருகிறேன் உமதெண்ணம் விரைவில் ஈடேறுமென்றார்.

1950 ஏப்ரல் 1உ யன்று இப்பகுதி ஆந்திரத்திலிருந்து தமிழகத்தோடிணைந்த அன்றுதான் இத்தலத்தில் பங்குனிஉத்திரப் பெருவிழாவின் கொடியேற்றம். அன்று ஆளுந் திறத்தால் அருஞ் சிறப்புடையரும் இத்தலத்தினிடம் பற்றுடையோருமாய் இப்போதைய முதலமைச்சர் பெருமானும், முன்னாள் ஆணையரும், இப்போது தமிழகம் எங்கனும் திருப்பணியோடன்றி சாத்திர தோத்திர பாடசாலைகளும், அனாதை விடுதிகளும், தங்குமிடங்களும், கலியாண மண்டபங்களும், அறப்பகுதிக்கு ஆங்காங்கே ஊக்கந்தருவதோடு, அமைதியும் M.S. சாரங்கபாணி முதலியார் அவர்களும் கபடற்ற உள்ளமுடைய துணையாணையர் திரு. இராமலிங்க ரெட்டியாருமாக வந்தருளினார்கள் அப்போதும் இப் பழுதடைந்த ஆலயத்தினிடம் அழைத்துச்சென்று இப் பாடத்தைப் படித்துக் காண்பித்தோம் அமைச்சர் பெருமானுக்கு இச்சரிதம் பண்டே தெரிந்தும், சென்ற இடங்களில் இவ்வுண்மைச் சரிதத்தை உதாரணமாகக் கூறி பெருமிதமடையும் பண்புடையோர்களாகலின் எங்களுக்கு ஊக்கமும், ஆக்கமுந்தர மனமுவந்தார்கள். வழி பிறந்தது உடனே குழுத்தலைவர்களுடன் ஏனையோருமாக ஆணையரிடம் சென்றோம் செல்லும்போதே திரு. சுந்தர முதலியார் எங்களிடம் என்னாலானதை உழைக்கின்றேன் பொருள் உதவுகின்றேன், என் பெயரை அங்கு எதிலும் கூறவேண்டாமென்று உறுதி வாங்கிக் கொண்டு சென்னை வந்தார். நினைத்ததொன்று, நடந்ததொன்று கடைசி ஓரமாக அடக்கமாய் அமர்ந்திருந்த திரு. சுந்தர முதலியாரையே முன்னாள் ஆணையர் ஊர்க்காரராகிய நீர்தான் இப்பணிக்கு தருமகர்த்தராயிருக்க வேண்டுமென்று ஆணையிட்டு ஐந்தாயிரம் ரூபாயை அரசாங்கத்திருந்து வழங்கினார்கள் இப்பணியை ஆரம்பிக்க எப்பெரியாரைக் கூட்டிவந்தால் முட்டின்றி விரைவில் முடியுமென ஆய்ந்து இத் தினசபையில் நடந்த அருட்செயலானமையால் பெருமருத்துவ மேதை டாக்டர் திரு. இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் துவக்க அவர்தம் அருமைத் தமையனார் சென்னை மாநில மாஜிஸ்திரேட்டு திரு. இரத்தினவேலு சதாசிவம் அவர்கள் தலைமைதான் சிறந்ததெனக் கருதினோம். காரணம் நன்னீதிநடந்த இடமாகலின் நீதிபதிதான் தலைமை தாங்கத் தகுதியென்றும், பழுதுபட்ட உடல் பாங்கடைய மருத்துவர் வேண்டுமாபோல் பழுதடைந்த ஆலயம், மண்டபம் பாங்காய்க் கட்டிமுடிக்க மருத்துவ மேதைதான் வேண்டுமெனக்கருதி பண்டி நடேசனாருடன் குழுக்கூட்டம் இவ்விரு பெரியார்களை அணுகி விண்ணப்பித்து துவக்கினமையால் செவ்வனே விரைவில் முடிவுற்றது.

இப்போதைய திரு. ஆணையர் அவர்கள் பற்பலயிடங்களுக்குச் சொல்லி பணம் தரச்செய்ததோடு எங்களைக்கண்டால் பணிமுடிந்ததா? குடமுழுக்கெப்போது? என்பதே கேள்வி துணையாணையர் திரு. இராமலிங்க ரெட்டியார் இவ் வரலாற்றுச் சிறப்பை அழகுற ஆங்கில நாளிதழாகிய இந்துப்பத்திரிகை வாயிலாக உலகறியச் செய்தார்கள்.

அறநிலையத் துறையில் ரூபாய் 700 ம் திருத்தணி ஆலய அறங்காவலக் குழு ஆலய நிதியிலிருந்து ரூபாய் 100 ம் ஊண் கொடுத்து உயர் அறிவாளராக்குவதோடு பற்பல அறப்பணிகளுக்கு முதல்வராய கொடைவள்ளல் வழி திரு. மணலி, இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் ரூபாய் 700 ம் பற்பல அறங்களைச் செவ்வனே நடத்தும் திரு. A. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் ரூபாய் 1500 ம் மன நிறைவுள்ள மங்கல மனத்தராய மங்களாபேட் முதன்மையார் திரு. சம்பந்த முதலியார் அவர்கள் ரூபாய் 1000 ம் தருமையாதீனம் கயிலைக்குரு மகா சன்னிதானமவர்கள் ரூபாய் 1001 ம் ஓராயிரத்துக் குட்பட்ட ஏனைய அன்பர்கள் பலருமாக ரூபாய் 40000 வரை உதவி பணிமுடித்தார்கள் இப்போதைய குடமுழுக்குக்கு மருத்துவமேதை திரு. Dr. இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள் சில பெரியார்களிடம் சொல்லியும், முறிதந்தும், பணம்வர வகை செய்துள்ளார்கள். திரு.

அமைச்சர் பெருமான் பேராதரவாலும் ஆணையர் ஊக்கத்தாலும், குழுவினர் ஆக்கத்தாலும் குழுவினர் ஆதரவோடு திரு. சுந்தரமுதலியார் பெரு முயற்சியோடு இத்திருப்பணியை இறைவன் திருவருளால் முட்டின்றி முடித்தமைக்கு அடியேனும் கடமைப்பட்டவன்.

பணம்பற்றாக் குறைவினால் விழா மலர் வெளியிட முடியாமல் விழித்துக் கொண்டிருந்தபோது இறைவன் தோன்றாத் துணையாய் சிறந்த நற்குணப் பண்புடையோரைப் பார்க்க நேரிட்டது. அவர்களிடம் ஏதோ ஒரு தொகை பெறலாமென்று சென்றோம். எதற்கும் விண்ணப்பிக்கலாமென்று கும்பாபிஷேகப் பத்திரிகையும், விழாமலரையும், பற்றிக் கூறினோம். உடனே 'கடல் மடை திறந்தாற்போன்று அவ்வள்ளலின் வாக்கினின்று தங்குதடையின்றி அதற்கென்ன நானிருக்கப்பயமேன் யானே முழுதும் முடித்துத் தருகிறேன். அஞ்சேல் அஞ்சேல் என்று அருளினார் அப்பெரியார் பூங்கா கம்பெனி உரிமையாளர் திரு. அப்பாசாமி முதலியார் அவர்கள் என்று பேரானந்தத்தோடு மனம் பூரிப்போடு கூறுகின்றேன்.

முப்பத்தைந்தாண்டின்முன் அடியேன் சிந்தித்ததும் சம்பந்தரும், சுந்தரரும், கொண்ட ஊக்கமும் ஏக்கமும் குழுவினர்களின் ஆக்கமும், தமிழகப் பண்பாட்டின் சிறப்பும், நன்கு நிறைவுற ஆலங்காட்டில் அண்டமுற நிமிர்ந்தாடும் அப்பன் அருள் முன்னின்று முடித்தருளியது ''முன்னவனே முன்னின்றால் முடியாதபொருளுளதோ''

''நாயகன் கவிக்கும் குற்றம் காட்டிய கழகமிருந்த தமிழகம்'' இத்தமிழகத்தே மாந்தர் அன்றும் இன்றும் பேரறிஞப் பெருந்திருவாளர்கள் நிறைந்துள்ளார்கள் ''என் வெள்ளறி உரையிற் குற்றம் ஆயுமாறு அறிந்தன்றேனும் தூய தீமையில்போல் கொள்க'' தொண்டர்தம் பெருமை-அடியேனால் எழுதப்பட்ட இக்கட்டுரையில் பிழைகள் நிறைந்திருக்கும். அறிவோர் பொறுத்தருளவேண்டி விண்ணப்பிக்கின்றேன்.

நீலிகள் இருவர்

நாரண-துரைக்கண்ணன்

"நீலிக்கு இமையில் கண்ணீர்" என்பது நம் நாட்டில் வழங்கிவரும் பழமொழிகளில் ஒன்று. பாசாங்கு செய்யும் பெண்களைப் பார்த்துப் பரிசாங்கு செய்யும் பெண்களைப் பார்த்துப் பரிகாசமாகவும், பழிப்பாகவும் இப்படிப் பேசுவர் பலர் ஆனால், இப்பழமொழி **பழையனூர் நீலி** கதையைக் கருத்தில் கொண்டுதான், தொன்று தொட்டு வழங்கி வருகிறது என்ற உண்மையைப் பலர் அறிய மாட்டார்கள். பழையனூர் நீலி கதை பிரசித்தி பெற்றது. தொண்டை நன்னாட்டில் **நடராஜப் பெருமானுடைய ஐம் பெரும் சபைகளில் முதல் நடனமாடிய ரத்ன சபையை** உடையதும், அண்டம் அதிர, காளியோடு எண்தோள் வீசி **ஊர்த்துவதாண்டவம்** ஆடி உயரத்தூக்கிய திருவடியை **காரைக்கால் அம்மையார்** தலையால் நடந்து போற்றியதுமான **திருவாலங்காட்டுக்கு** அண்மையில் உள்ளது **பழையனூர்** இப்பெயரிலிருந்தே இது மிகப்பழமையான ஊர் என்று அறியலாம். இவ்வூரில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், வேளாண் குடியினர் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர். இவ்வூரில் வாணிபம் செய்யும் பொருட்டுவணிக இளைஞனொருவன் வரலானான் அவனைப் பின் தொடர்ந்தாள் **நீலி என்னும் ஒரு பெண் பேய்.** அவனைக் கண்டு பயந்த அந்த இளைஞன் அவ்வூர் வேளாளர்களிடம் தஞ்சம் புகுந்தான். நீலி அவர்களை நோக்கி,"இவர் என்னைக் கரம்பற்றிய கணவன். மனைவியாகிய என்னை உதறித்தள்ளிவிட்டுப் போகப் பார்க்கிறார். இவரை என்னோடு சேர்த்து வையுங்கள். இவரை விட்டால் எனக்கு வேறு கதியில்லை" என்று சாதுரியமாகச் சொன்னாள். இவளுடைய இம்மாய்மால் பேச்சை மெய்யென நம்பி விடுகின்றனர் அவ்வேளாளர்கள். ஆகவே, அவர்கள் வணிக இளைஞனைப் பார்த்து, "ஐய! நீ தாலி கட்டிய மனைவியை இப்படிக் கைவிடலாமா அவளைக் கண்டு பயப்படுவதற்கு என்ன இருக்கிறது?" என்று கேட்டனர். இளைஞன் இரங்கிய குரலில், "ஐயன்மீர்! உங்களுக்கு உண்மை தெரியாது. இவள் என் மனைவியல்லள். இவள் ஒரு பேய், என்னை வஞ்சகமாக வதைப்பதற்கே வழி மறித்து வருகிறாள். இவள் பேச்சை நீங்கள் நம்பாதீர்கள்" என்று உண்மை நிலையை எடுத்துக் கூறினான். வேளாளர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனாலும், நீலிக்காகப் பரிந்து பேசவே முற்பட்டனர். தம்பி நீ சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. உன் பெண்டாட்டியைப் பேய் என்கிறாயே! அவள் மீது இவ்வளவு வெறுப்பு என்? நீ சொல்கிறபடி அவளால் உனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பாளியாவோம். உன்னுடைய உயிருக்கு ஈடாக நாங்கள் எழுபது பேரும் எங்கள் உயிர்களை தயங்காது ஈவோம்" என்று உறுதியளித்தனர். இதற்குள் பொழுது சாய்ந்து விட்டதனால் அவர்கள் இருவரையும் தங்கள் இல்லம் ஒன்றில் தங்கியிருந்து, மறு நாள் புறப்பட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டார்கள். வேறு வழியின்றி, வணிக இளைஞன் நீலியுடன் அச்சத்தோடு தங்கியிருந்தான். நள்ளிரவு வந்ததும் நீலி தன் உண்மை சொரூபத்தைக் காட்டி விட்டாள். அவனை அஃறந்து கொன்று விட்டு மறைந்து விடலானாள். மறு நாள் காலை விடிந்ததும் வேளாளர்களுக்கு உண்மை தெரியலாயிற்று. உடனே அவர்கள் அந்த வணிக இளைஞனுக்கு வாக்குறுதி அளித்த வண்ணம் **சாட்சிநாத மூலலிங்கேசுவரர்** கோயில் குளக்கரை முன்பு தீ வளர்த்து அதில் ஒவ்வொருவராகப் பாய்ந்து தங்கள் இன்னுயிரை மாய்த்துக் கொள்ளலாயினர்.

இது உண்மை நிகழ்ச்சி என்பதற்கு சான்றாக சாட்சிநாத மூலலிங்கேசுவரரும் தீப்பாய்ந்த குளக்கரையில் எழுபது வேளாளப் பெருமக்களின் உருவச்சிலைகளும் இன்னும் இருந்து வருவதை நாம் காணலாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு பெரும் காப்பியங்களில் இடம் பெற்று நிலைத்துள்ள **நீலி** என்னும் பெண் ஒருத்தி மேற்குறித்த பழமொழிக்கு முற்றும் மாறுபட்ட இயல்புடையவள்.

சிலப்பதிகார காப்பியத்தில் **கோவலனின்** முற்பிறப்பைக் கூறும் கதையொன்று விவரிக்கப்பட்டிருக்கிறது. அது வருமாறு, நம்பரத கண்டத்தில் இன்று ஒரிஸ்ஸா என்று வழங்கப்

பட்டுவரும் மாநிலத்தை முற்காலத்தில் **கலிங்கநாடு** என்று அழைத்து வந்தனர். அந்நாட்டில் **சிங்கபுரம்** என்றும், **கபிலபுரம்** என்றும் இரு சிற்றரசுகள் இருந்தன. இவற்றின் அரசர்களாயிருந்த **வசு, குமரன்** என்ற இருவரிடையே போட்டி பொறாமை காரணமாக, பகைமை உண்டாயிற்று. இவர்கள் தருணம் பார்த்து ஒருவரை யொருவர் வஞ்சகமாக வெல்லக் கருதியிருந்தனர். சிங்கபுரத்து கடைவீதியில் **சங்கமன்** என்னும் வணிகன் அடிக்கடி வந்து பண்டங்கள் பல விற்றுக் கொண்டிருப்பது வழக்கம். மேற்குறித்த இருகுறுநிலமன்னர்களுக்கும் பூசல் முற்றியிருந்த இச்சமயத்தில், வழக்கம் போல் சிங்கபுரத்துச் சந்தைக்கு வந்து பண்டங்கள் விற்றுக் கொண்டிருந்த சங்கமனை அரசனிடம் ஏவலனாயிருந்த **பரதன்** என்பவன், "இவன், கபிலபுரத்து ஒற்றன்" என்று கூறிப் பிடித்துக் கொடுத்து மரண தண்டனை வாங்கித் தந்துவிடுகிறான். இதனை அறிந்த சங்கமன் மனைவியாகிய **நீலி** என்பாள் பெருந்துயரமடைந்து பதினான்கு நாட்கள் பல இடங்களிலும் அலைந்து கடைசியாக, ஒரு மலைமீதேறி கீழ் விழுந்து உயிர் விட்டு விண்ணுலகில் கணவனை அடைய முயல்கிறாள். இவ்விதம் அவள் இறக்கும் முன், "என் கணவனை அநியாகமாகக் கொலையுண்ணச் செய்து எனக்குப் பெருந்திங்கு புரிந்தவர்கள் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்கள்" என்று சாபம் இடுகிறாள்.

இச்சாபத்தின் படியே சங்கமனை அநியாகமாகக் கொலை செய்வித்த பரதன் கோவலனாகப் பிறந்து பொற்கொல்லன் ஒருவனால் சிலம்பு திருடிய கள்ளன் என பழி சுமத்தப் பட்டு அநியாயமாகக் கொலை செய்யப்படுகிறான். நீலியைப் போலவே **கண்ணகி**யும் மதுரையை நீங்கி வையை ஆற்றங்கரைவழியே மேற்றிசை நோக்கிச் சென்று ஒரு மலை நாட்டையடைந்து அதிலுள்ள திருச்செங்குன்று என்னும் மலைமீதேறி ஒரு வேங்கை மரத்தின் நீழலில் நின்று பதினாலாவது நாள் பகல் சென்றபின்பு அங்கே தெய்வவடிவத்தோடு வந்த கோவலனைக்கண்டு களித்து அவனுடன் விமானத்திலேறி, தேவர்கள் போற்றும்படி சொர்க்கம் அடைந்தாள்.

கண்ணகி மதுரைமாநகரைத் திக்கிரையாக்கிய போது இவ்வெப்பத்தைப் பொறுக்க முடியாத மதுராபதி தெய்வம் அவள் முன் தோன்றி, அவளுக்கு கோவலன் பொற்கொல்லன் ஒருவனால் கொலையுண்டதற்கு உரிய காரணத்தைக் கூறுமுகத்தால் அவன் முற்பிறப்பு வரலாற்றை மொழிந்து கண்ணகிக்கு ஆறுதல் உண்டாக்க முயலுகிறது.

மதுராபதி தெய்வம் தனக்குக் கூறிய கதையையே பின் கண்ணகி மணிமேகலைக்குக் கூறினாள் என்று மணிமேகலைக் காப்பியம் தெரிவிக்கிறது.

இந்நீலிக்கதை சிலப்பதிகாரம் கட்டுரை காதையில் இளங்கோவடிகளாலும், மணிமேகலை வஞ்சிமாநகர் புக்ககாதையில் சீத்தலை சாத்தனாராலும் விவரிக்கப் பட்டிருக்கிறது.

இது போல் இன்னும் எத்தனை நீலிப் பெண்கள் இலக்கியத்தில் வரலாற்றிலும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறார்களோ?




வேளிர் மண்டபத் திறப்பு விழா


1—5—66 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குச் சொல்லியவண்ணம் செய்யும் வழக்க முடைய ஜஸ்டிஸ், R. சதாசிவம், B.A.,M.L., அவர்கள் சென்னை உயர் நீதிமன்ற பிரதம நீதி பதி ஜஸ்டிஸ் M. அனந்தநாராயணன் I.C.S., அவர்களுடன், அகால மழையையும் புயலையும் பொருட்படுத்தாமல், திருவாலங்காடு வந்து சேர்ந்தார்; கோயில் மரியாதையுடன் வர வேற்பு அளிக்கப்பட்டது; ஸ்ரீ இரத்தினசபா பதியையும், காளிதேவியையும், வண்டார் குழலியம்மையையும் காரைக்காற் பேயாரை யும் முத்தி தீர்த்தத்தையும் அனைவரும் தரிசித் தார்கள்.

திருப்பணிக் கழகத் தலைவர், திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

2500 ஆண்டுகளாகவுள்ள எழுபது வேளாண் பெருமக்களின் திருவுருவங்களகத்தே பெற்ற வேளிர் தீப்பாய்ந்த மணிமண்டபத்தை (வள்ளல் மணலி திரு. இராமகிருஷ்ண முதலியார், B. A., அவர்கள் நன்கொடை ரூ. 7,000த்தில் கட்டி உதவியது) உயர்திரு பிரதம நீதிபதி M. அனந்தநாராயணன், I.C.S., அவர்கள் திறந்துவைத்துப் பேசுகையில் ''கவிஞர் கற்பனையிலுதித்தது பழையனூர் கதை என்று எண்ணினேன்; இன்று காலை இங்குள்ளனவற்றைக் கூர்ந்து கவனித்த பின்னர் ஒரு வணிகனுக்காக எழுபது வேளாளர் சொன்ன சொல்லைக் காக்கத் தீப்பாய்ந்தது உண்மையே என உணர்ந்தேன்; சொல்லே மெய்; மெய்யே கடவுள்: சொல்லைக் காப்பதே மனிதப் பண்பும் தெய்வீகமுமாகும். ஆணுக்கும், பெண்ணுக்கும் கற்பு பொதுவாகும். கற்பெனப்படுவது சொல் திறம்பாமையே ஆகும்' என்றார். தம் தலைமையுரையில் ஜஸ்டிஸ் R. சதாசிவம் அவர்கள், '' பண்டையில், சத்தியத் திற்குப் பயந்த மக்களின் சந்ததியில் மிகப் பலர் இன்று உண்மையை அலட்சியம் செய்தே வசிக்கின்றனர். பொய் சொல்லின் சிவன் எரித்துவிடுவான் என்பதைக் காட்டவே அவனை '' எரிச்சடையான் '' என்று பூசிக் கிறோம்'', என்றார். சென்னை மாகாண குற்ற விசாரணை பிரதம நீதிபதி ஸ்ரீ V. பலராமய்யா அவர்களும் வந்திருந்தார்கள். பொதுக் காரிய தரிசி, பண்டித நடேசனார் வந்தனோபசாரங் கூறுகையில் தம்மிடம் கனம் ஸ்ரீ V. பலராமய்யா 30-4-66 இரவு அகால மழையயைக் குறிப்பிட்டு ''உண்மையான கும்பாபிஷேகத்தின் பலன் இதுவே'' (மழை) எனக் குறிப்பிட்டதாகக் கூறினார்.




வேளிர் மண்டபத் திறப்பு விழா முடித்து பிரதம நீதிபதி, ஜஸ்டிஸ் M. அனந்தநாராயணன், அவர்கள் அவைத் தலைவர் ஜஸ்டிஸ் R. சதாசிவம் அவர்களுடனும் பிரதம மாஜிஸ்டிரேட் ஸ்ரீ V. பலராமய்யா அவர்களுடனும் நிற்கின்றார்கள்.



திறப்பு விழா காட்சிகள்

திருவாலங்காடு வண்டார் குழலியம்மை கோயிலின்முன் அடியார் கூட்டத்தில் சென்னை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி, ஜஸ்டிஸ் M. அனந்தநாராயணன், I.C.S. சென்னை மாகாண குற்றவிசாரணை பிரதம நீதிபதி V. பலராமய்யா, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஜஸ்டிஸ் R. சதாசிவம்.



யாகசாலை தரிசனம் செய்து திருப்பணிக் கழகத் தலைவர் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, ஜஸ்டிஸ் R. சதாசிவம், திருப்பணிக் கழக உபதலைவர் திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார், பிரதம மாஜிஸ்டிரேட் ஸ்ரீ V. பலராமய்யா, பிரதம நீதிபதி ஜஸ்டிஸ் M. அனந்தநாராயணன், I. C. S., திருப்பணிக் கழகப் பொருட் காப்பாளரும் திருவாலங்காட்டு பஞ்சாயத்து யூனியன் தலைவருமாகிய ஸ்ரீ P. S. சுந்தர முதலியார், திருப்பணிக் கழகப் பொதுச்செயலாளர் பண்டித நடேசனுர் முதலியோர் நிற்பவர்கள்

நன்றியுரை

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகு இல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்"

—சேக்கிழார்

உலகெலாம் உணரவே சத்தியத்தின் சின்னமாகிய எழுபது வேளாளர் தீப் பாய்ந்த மணி மண்டபத்தையும் அவர்களே தீயில் மூழ்கியதும் உண்மையெனக் காட்ட எழுந்தருளிய ஸ்ரீ சாக்ஷி பூதேஸ்வரர் கோயிலையும் செப்பனிட்டோம். இவ்வரிய திருப்பணிக்குக் கால்கோள் விழாவுக்குத் தலைமை வகித்தவர்கள் சைவ வேளாள மரபினைச்சார்ந்தவரும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியுமாகிய ஸ்ரீ ஜஸ்டிஸ் சதாசிவம் அவர்கள்; கால்கோளிட்டவர், மருத்துவ மேதையும் குஞ்சிதபாத சேகரருமாகிய டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியமாவர். வள்ளல் மணலி ராமகிருஷ்ண முதலியாரால் எழுபது வேளாளர் தீப்பாய்ந்த இடத்தில் மணி மண்டபம் கட்டுவிக்கப்பட்டது. இவ்வுத்தமர்களுக்கு எம் நன்றி உரியதாகும்.


கும்பாபிஷேக மலர் வெளியிடப் பல உதவிகள் புரிந்த டாக்டர் M. சிதம்பரம் அவர்களுக்கும், பூங்கா கம்பெனி பூரண உரிமையாளர் ஸ்ரீ K. B. அப்பாசாமி முதலியார்க்கும் அட்டை அச்சிட உதவிய திரு. G. சுப்பிரமணியம் அவர்கட்கும் எங்கள் வணக்கமும் வாழ்த்தும் உரியனவாகும். ஷை சிறப்புமலர் காலத்தில் வெளிவர உதவிய சாந்தி அச்சகம், ஆறுமுக நாவலர் அச்சகம், கலைமகள் அச்சகம், பாரி அச்சகம், ஆர்ஜி அச்சகம், திரு. C. M. ராஜா கந்தசாமி, B.A., சூரிய நாராயணன், P. சுப்பிரமணியன், D. ஆறுமுகம், M.A., முதலியோர்க்கும் ஏனைய அன்பர்களுக்கும், தொண்டர்களுக்கும் எம் நன்றி கலந்த வணக்கம். கும்பாபிஷேகம் சிறப்புற்று நடக்க உதவிய நன்கொடையாளர்களுக்கும், மலர்க்குக் கட்டுரை தந்த பேரறிஞர்களுக்கும் விளம்பரம் கொடுத்து உதவிய கம்பெனியாளர்களுக்கும் அன்று தீப்பாய்ந்த வேளாளர் மரபினைச் சேர்ந்தவரும் ஸ்ரீ **R. S. S. சம்பந்த முதலியார் ஸ்ரீ** ப. சு. சுந்தர முதலியார், ஸ்ரீ தி. மு. சபாபதி தேசிகருக்கும் கிராமமுனிசீப் சண்முக முதலியாருக்கும் எங்கள் நன்றி என்றும் உரியதாகும். அன்பும் தொண்டும் அணிந்த ஷை திருப்பணிக் கழகத்தாரும் பிறரும் நீடூழி வாழ இறைவனை இறைஞ்சுகிறோம்.

இங்ஙனம்,

தலைவர்:
ச. சச்சிதானந்தம் பிள்ளை

பண்டித நடேசனர்
பொதுச் செயலாளர்.

2—5—1966



திருவாலங்காட்டுப் பழையனூர் சாட்சிநாதேஸ்வரர் திருமுன் சொல்காத்தோர் தீப்பாய்ந்த ஞாபகச்சின்ன புனருத்தாரணக் கழகம்

❋

தலைவர் :

திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை, பி. ஏ., எல். டி.
175-A, லாயிட்ஸ் ரோடு, சென்னை-14

❖

துணைத்தலைவர்கள்:

திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.,
ருக்மணி குக்கர் உரிமையாளர், சென்னை-13.

திரு காட்டாவூர்-சுப்பரமணியம் செட்டியார்,
கந்தகோட்டம், சென்னை-3.

திரு. அய்யா. சுப்பிரமணிய முதலியார்,
சிந்தாதரிப்பேட்டை, சென்னை-2

திரு. T. மாணிக்கம் செட்டியார்,
மயிலாப்பூர், சென்னை—4.

திரு. ந. ஏகாம்பரமுதலியார், எம்.எல்.ஏ., கடம்பத்தூர்.

❖

பொதுச்செயலாளர் :

திரு. பண்டித நடேசனர், நடேச நகர், சென்னை-7.

❖

துணைச்செயலாளர்கள் :

திரு. ர. மாசிலாமணி முதலியார்,
மேயர் கம்பெனி உரிமையாளர்,
16, ஐயாபிள்ளை வீதி, சென்னை-3.
(போன் : 3757)

திரு. மு. திருமலைப் பிள்ளை, திருவாலங்காடு.
திரு. ரா. சு. சு. சம்பந்த முதலியார், பழையனூர்.
திரு. சே. கன்னியப்ப நாயகர், பழையனூர்.

❖


பொருட்காப்பாளர் :

திரு. ப சு. சுந்தர முதலியார், பழையனூர்.

❖


காரியக் குழுவினர்:

திரு. C. S. சிவப்பிரகாசம் செட்டியார், சென்னை-7.
திரு. N. K. தருமலிங்க முதலியார், சென்னை—7.
திரு. வை. தேவசிங்க முதலியார், பழையனூர்.
திரு. V. சுந்தரேச முதலியார், கொருக்கம்பேடு.
திரு. வ். சொக்கலிங்க முதலியார், குமாரச்சேரி.
திரு. V. M. பொன்னுசாமி ரெட்டியார், திருவாலங்காடு.
திரு. K. இராஜு முதலியார், கைவண்டூர்.
திரு. க. சொ. சண்முக முதலியார், பழையனூர்.
திருமதி. ம. சண்பகவல்லி மாசிலாமணி, சென்னை—2.




ஸ்ரீசாக்ஷிபூதேஸ்வரர் கும்பாபிஷேகம்

30-4-66 முதல் **2-5-66** வரை நடந்தன கும்பாபிஷேகச் சடங்குகள். வைதிக முறைப் படி வாழும் ஆதி சைவ அந்தணர்கள் பல ஊர் களிலிருந்து போந்தனர். பெருங்காற்றும். மழையும் கலந்து வீசியும் யாகாதிகள் சாக்ஷி நாதர் திருவருளால் முட்டின்றி முடிந்தன. வேதபாராயணமும் தமிழ்மறை ஓதலும் இடை விடாது நடந்தன. 2-5-66 காலை 9-30 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டனர். திருப்பணிக் கழகத் தலைவர், திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A.L.T., அவர்கள் தலைமையில் முன் னாள் இந்து அறநிலையப்பாதுகாப்பு ஆணையர், ஸ்ரீ A. உத்தண்டராமன், B.A.B.L., I. A. S. (Retd.) அவர்கள் ''கும்பாபிஷேகச் சிறப்பு மலரை''ப் புகழ்ந்து பேசி வெளியிட்டார்; பழையனூர் பெருமையைக் குறிக்கும் திருப்பதி கங்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டினைத் திறந்து வைத்து, ''இவ்வாலயத்தையும் மணி மண்டபத்தையும் புதுப்பித்துள்ள திருப்பணிக் கழகத்தார்க்குப் பக்தர்களாகிய நாம் நன்றியுள்ள வர்களாக இருக்க வேண்டும்'' என்றார் திரு. உத்தண்டராமன் அவர்கள். சைவப் பிரசங்கி யார், ஸ்ரீமதி மா. செண்பகவல்லியும், ஸ்ரீ தி. மு. சபாபதி தேசிகரும் பேசினார்கள். பொதுச் செயளாளர், பண்டித நடேசனார் வணக்கம் தெரிவித்தார். ஐயாயிரம் அடியார்களுக்குக் குட முழுக்குத் தினங்களில் அமுதளித்தார்கள் பழையனூர் வேளாண் பெருமக்கள். மகேஸ் வரப் பூஜையை மனமார வாழ்த்தினர் சிவனடி யார், கைம்மாறு கருதாக் கடமையினர் தொண்டு காலங் கடந்தது அன்றோ? மாலை 4 மணிக்கு மகா அபிஷேகம் நடந்தது. இறுதி நாளிரவு 7 மணிக்கு முத்தமிழ் ஆசிரியர், பண் டித நடேசனார், ''தீப்பாய்ந்தோரும் மூவேந் தரும்'' எனும் பொருட்பற்றிம் பேசினார், இரவு 8 மணி முதல் 11 மணி வரை பூங்கா கம்பெனி மானேஜர், குமாரி சத்யலட்சுமி சகோதரிகளால் பரதநாட்டியக் கலைநிகழ்ச்சி பண்டித நடேசனார், B.A. தலைமையில் நடந்தது.




கும்பாபிஷேகச் சிறப்பு மலரை வெளியிட்ட
ஸ்ரீ. A. உத்தண்டராமன் I.A.S. (Retd.) அவர்களுக்கும்,
பக்தகோடிகளுக்கும் பொதுச் செயலாளர் பண்டித
வி நடேசனார் B. A., அவர்கள் நன்றி நவிலல்.

கும்பாபிஷேகக் காட்சிகள்




பூங்கா கம்பெனி பூரண உரிமையாளர் ஸ்ரீ அப்பாசாமி முதலியார் திருவாலங்காட்டு தேவஸ்தானத்துக்குப் பெரிய கடிகாரத்தை ஷி கோவிலின் தலைமை தருமகர்த்தரிடம் வழங்குதல்,




திருப்பணிக் கழகத் தலைவர், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் கூடிய மகாசபையில் பூங்கா கம்பெனி மானேஜர் குமாரி சத்திய லக்ஷிமி பிரசங்கியாருக்கு மாலை சூட்டல்.

கும்பாபிஷேகக் காட்சிகள்



2-5-66 காலை 9-30 மணிக்குக் கும்பாபிஷேகமும் பிற்பகல் 3 மணிக்கு மகா அபிஷேகமும் நடந்த பின்னர் பக்தகோடிகள் திருப்பணிக் கழகத்தார்க்குக் கோயில் மரியாதை வழங்கல்.



2-5-66 இரவு 8 மணிக்கு நடந்தக் கலைநிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பூங்கா கம்பெனி பூரண உரிமையாளர் திரு. K. B. அப்பாசாமி முதலியாருக்கு திருப்பணிக் குழுவினர் சார்பில் பண்டித நடேசனுர், மாலையணிவித்து நன்றி கூறல்.

பழைய திருவாலங்காடு
ஸ்ரீ சாட்சிபூதேஸ்வரர் மண்டலாபிஷேக பூர்த்திவிழா

———:o:———

பழையனூரில் 25. 7. 66 காலை முதல் மாலை வரை ஸ்ரீ சாட்சிபூதேஸ்வரர்க்கு மண்டலாபிஷேகம் வெகு விமரிசையாகச் சென்னை ராஜ்ய முதலமைச்சர், கனம் ஸ்ரீ. M. பக்தவத்சலம் B. A, B. L., M. L. A., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கும்பாபிஷேகம் நடத்திய நாற்பதாம் நாள் மண்டலாபிஷேகம் நடத்த வேண்டும் என்பது மிகப் பழைய கொள்கை. திருப்பணிக்குழுத் தலைவர், ஸ்ரீ ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் முதல் மந்திரியையும் பிறரையும் வரவேற்றார். திருவாலங்காட்டுக் கோயில் தலைமைத் திருத்தொண்டராம் ஸ்ரீ தி. மு. சபாபதி தேசிகர் அவர்கள் ஸ்தலத் தேவாரத்தைப் பாடினார்.

முதல் மந்திரி வரவுக்குமுன் சென்னை, உயர் நீதி மன்ற நீதிபதி கனம் ஸ்ரீ ஜஸ்டிஸ் P. S. கைலாசம், அவர்தம் தர்மபத்தினி, ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம், அவர்கள் தம் புத்திரிகளுடனும் ஆலங்காட்டு அப்பரைத் தரிசித்தார்கள். உயர்நீதி மன்ற நீதிபதி கனம் ஸ்ரீ ஜஸ்டிஸ் R. சதாசிவம், அவர்கள் தம் தம்பி, டாக்டர் இரத்தினவேலு சுப்ரமணியம் அவர்களோடு ஸ்ரீ நடராஜரைத் தரிசித்தார். மேள தாளங்களுடனும் பூரண கும்பத்துடனும் கோயில் மரியாதையுடனும் மேற்கண்ட பிரமுகர்களைக் கோயிலதிகாரி ஸ்ரீ V. K. வேலுசாமி, B. A., வரவேற்றார். திருத்தணிகை - திருவாலங்காட்டுத் தர்மகர்த்தர் குழுவின் தலைவராகிய அம்மையார் குப்பம் ஸ்ரீ G. S. துரைசாமி முதலியாரும் பிறரும் புடை சூழ ஸ்ரீகாளி கோயிலையும் திருக் குளத்தையும் தரிசித்துப் பழையனூர் மண்டலாபிஷேக நாதரிடம் சேர்ந்தார்கள் அன்பர்கள்.

இரவு 8 மணிக்கு, வழியில் ஒரு கிராமத்தில் உயர்நிலைப்பள்ளியைத் திறந்து வைத்துவிட்டுத் தமிழ் நாட்டு முதல்வர், கனம் ஸ்ரீ M. பக்தவத்சலம் பழையனூர் ஸ்ரீ சாட்சி பூதேஸ்வரர் ஆலயத்தை யடைந்தார். செங்கற்பட்டுஜில்லா கலக்டரும், போலீஸ்சூப்பிரண்டென்டெண்டும் ஏனைய அதிகாரிகளும் முதல் மந்திரியைச் சந்தித்தார்கள். ஸ்ரீ சாட்சிபுரீஸ்வரரைத் தரிசித்து விட்டுச் சேரன், சோழன், பாண்டியன் அன்று பாடிய பாக்களும் இன்று (1-5-63 கும்பாபிஷேகத்தில்) சென்னை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி கனம் ஸ்ரீ ஜஸ்டிஸ் M. அனந்தநாராயணன் I.C S., அவர்கள் பாடிய ஒருவெண்பாவும் செதுக்கப்பட்ட கல்வெட்டினைத் திறந்து வைத்தார் முதலமைச்சர். சேரன், சோழன், பாண்டியனாகிய மூவேந்தரும் எழுபது வேளிரும் தீப்பாய்ந்த இடத்தில் தீ கொழுந்து விட்டு எரிந்து அணையாமலிருந்ததைக்கண்டு பாடிய பாக்கள் வேறொரு 19ம் பக்கத்திலுள்ளன. ஸ்ரீமான் அனந்தநாராயணன், I.C.S., அவர்கள் 1-5-66 ''வேளிர் மண்டபம்'' திறந்து வைத்தபோது ஆவேசமுற்று ஆனந்தக் களிப்பால் பாடிய வெண்பாவே கீழுள்ளது.


வெண்பா

''பொய்யா முலகில் புகலரிய சொற்காத்த
வெய்தாமிக் காராளர் வேள்விதனை—
அய்யாவோ !
என் னென்று ரைப்பேன் எழில் கூத்தர் கால் கழலின்
பொன்னென்றுரைப்பேனிப் போது.''


—சென்னைப் பிரதம நீதிபதி

திருவாலங்காட்டு வண்ணர் பெருமக்களில் சிற்சிலர் வேளிர் மண்டபத்துக்குப் பக்கத்திலுள்ள ''தீப்பாய்ந்த குட்டை'' (2500 வருடங்களாகவுள்ளது) யை வண்ணங்குட்டை எனப் புதுபெயர் வைத்து வண்ணரத்தொழிலுக்குப் பயன் படுத்த கலக்டர் துரைக்கு விண்ணப்பம் செய்துள்ளதாகத் தெரிந்து உண்மையை விளக்கும் மகஜரைத் தயாரித்துத் தமிழ்நாட்டு முதலமைச்சர்க்கும் செங்கல்பட்டு ஜில்லா கலக்டருக்கும் பண்டித நடேசனும் ராஜா கந்தசாமி முதலியாரும் கைவண்டூர் ராஜு முதலியாரும் சேர்ந்து சமர்ப்பித்தார்கள். முதன் மந்திரி மனுவை வாங்கி முழுதும் படித்து விட்டே தம் தலைமையுரையைத் தொடங்கினார்.

பழையனூர் ஸ்ரீ சாட்சிபூதேஸ்வரர் மண்டலாபிஷேக விழாவின் காட்சிகள் 25-7-66



சேரன், சோழன், பாண்டியன் பாடிய பாக்களும், அண்மையில் சென்னைப் பிரதம நீதிபதி, கனம் ஸ்ரீ ஜஸ்டிஸ் M. அனந்த நாராயணன், I. C. S., அவர்கள் யாத்த பாவும் அடங்கிய கல்வெட்டினை 25-7-66-ல் முதல் மந்திரி ஸ்ரீ M. பக்தவத்சலம் திறக்கும் காட்சி.



25-7-66 மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் சென்னை முதல்வர் ஸ்ரீ M. பக்தவத்சலம் தலைமையுரை ஆற்றுகிறார்.

முதல்வர் மூதுரையாம் தலைமையுரை

தமிழ் நாடு தவப்பயனாய்ப் பெற்றுள்ள முதலமைச்சர், கனம் ஸ்ரீ M. பக்தவத்சலம் தம் தலைமையுரையில் ''நீதிபதிகளையும் பெரியோர்களையும் காக்கவைத்துக் காலங்கடந்து வந்தமைக்கு மன்னிப்பும், பழையனூர் ஸ்ரீ சாட்சி பூதேஸ்வரர் கோயில் திருப்பணிக்கழகத்தார்க்கு எனது வாழ்த்தும் வணக்கமும் தெரிவிக்கிறேன். உலகில் பல அரிய நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம். ஆனால் பழையனூர் சம்பவம் தனிப்பட்டது; ஒப்பற்றது. இதனை யாவரும் போற்ற வேண்டும். சொன்ன சொல்லைக் காப்பது என்பது பெரிய வாதம்; மனிதப்பண்பு இப்படி நடப்பதே; நாம் சுவாமி தரிசனம் செய்த பலனைத் தரும். வேளிர் கதையைப் போல் உலகில் பல கதைகள் உண்டு; ஒரு சொல்லுக்காக எழுபது சத்திய சீலர்கள் உயிர்த்தியாகம் செய்தார்கள் என்பது சாமான்யமான காரியம் அன்று. சொன்ன சொல்லைக் காப்பதே மகாவிரதமாகும்; அறங்களில் பேரறமாம். இவ்வரிய படிப்பினையைச் சொல் காத்தோர் வரலாறும் பழையனூரும் நமக்குக் கற்பிக்கும். சென்னை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி ஸ்ரீ அனந்தநாராயணன் அவர்கள் வேளிரைப் பற்றிப் பாடிய பாட்டைப் போற்றுகிறேன். ஸ்ரீ சாட்சிபூதேஸ்வரர் கோயிலின் முன்னுள்ள ''நீர்நிலை''யை நான் சிறு வயதிலிருந்தே 'தீப்பாய்ந்த குட்டை' எனப் பலரும் அமைத்ததை அறிவேன். இன்றும் மக்கள் ''தீப்பாய்ந்தோர் குளம்'' என்றே சொல்லுவர். இது ஒரு புனிதமான இடம்; இதனைப் புதுக்கியாக்கிய திருப்பணிக்குழுவினர்க்கு நாம் எல்லோரும் நன்றி பாராட்டக் கடமை பட்டிருக்கின்றோம்'' என்றார்.

கனம்

ஸ்ரீஜஸ்டிஸ் R. சதாசிவம் அவர்களினுரை :

சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி கனம் ஸ்ரீ ஜஸ்டிஸ் R. சதாசிவம் பேசுகையில் ''அரிச்சந்திரன் நாடகம் நமது மகாத்மா காந்தியடிகளைச் சத்தியத்தின்மீது நாட்டம் கொள்ளச் செய்தது. உண்மையில, அவர் உண்மைக்காகவே வாழ்ந்து அதற்காகவே உயிரையும் விட்டார். உயிர்த்தியாகம் செய்வதை விட உயர்ந்தது வேறு எதுவுமில்லை. ஒரு வணிகனுக்குக் கொடுத்த வாக்குக்காக எழுபது பேரும், கேட்பாரற்றிருக்கையில், உயிர் விட்டனர்; இதுவே தமிழ் நாட்டின் பண்பிற்கு எடுத்துக் காட்டாகும். என் தலைமையில் என் தம்பி, டாக்டர் இரத்தினவேலு சுப்ரமணியம் இக்கோயிலுக்கு அடிக்கல் நாட்டும்போது இங்கு இன்றுள்ள வனப்பின்றி வனந்தரமாக இருந்ததைக் கண்டேன். இன்றுள்ள மாற்றத்தையும் பக்த கோடிகளின் திரளையும் பார்க்கும்போது ''உண்மை அழியாது'' என உணருகின்றேன். பெரும்பணி புரிந்துள்ள பழையனூர் திருப்பணிக் குழுவினரைப்போற்றி வாழ்த்துகிறேன்,'' என்றார்.

கனம்

ஸ்ரீ ஜஸ்டிஸ் P. S. கைலாசம் அவர்களினுரை


சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி, கனம் ஸ்ரீ ஜஸ்டிஸ் P. S. கைலாசம் பேசுகையில் ''நம் நாட்டிற்குப் பெருமைகள் பல இருந்தாலும் இச்சொல் காத்தோரளித்த பெருமை பெறலரியதாகும். இப்பண்பினை இன்றுள்ள வேளாளர்கள் போற்றி வாழ்ந்தாலே போதும் பழையனூர் வேளாளர்கள் நமக்கு நல்ல வழிகாட்டிகள். அவ்வழியே நாமும் நடப்போமாக! அதுவே பழையனூரிலுள்ள ஆண்டவனின் தரிசனம் கண்ட பெரும் பலனைத்தரும். திருவாலங்காடு மிகப் பழைய ஸ்தலம்; இது பஞ்ச சபைகளில் முதன்மையானது. இரத்தினசபை என்று, இதற்குப்பெயர். இங்கு வரும் பாக்கியம் நல்கிய திருப்பணிக் கூட்டத்தார்க்கு என் நன்றி உரியதாகும்.

'குஞ்சிதபாத சேகரர்'
டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம்
அவர்களுரை :

குஞ்சிதபாத சேகரரும் மருத்துவ மேதையுமாகிய டாக்டர் இரத்தினவேலு சுப்ரமணியம் பேசுகையில் ''என் தமையனார் (ஜஸ்டிஸ் R. சதாசிவம்) பேசிய பின்னர் யான் பேசுவது ஒன்றுமில்லை. அவர்கள் குறிப்பிட்டபடிச் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதே மனிதப் பண்பாகும்; சொல்லே ஆண்டவனின் வடிவம்,'' என்றார்.



மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் குஞ்சிதபாத சேகரர்,
டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிருர்.




''வேளிர் மண்டபம்'' கட்டியுதவிய
வள்ளல் ஸ்ரீ மணலி இராமகிருஷ்ண முதலியார், B.A., மண்டலாபிஷேக விழாவில்
பேசுகிருர் ; ஸ்ரீமதி சௌந்தரம் கைலாஸம் கோடியில் வீற்றிருக்கிருர்.


மணலி ஸ்ரீ இராமகிருஷ்ண முதலியார், B. A., 'ஜில்லா கெஜடியர்' துணையாசிரியர், ஸ்ரீ D. நடராஜ முதலியார், M.A. பேசினர்கள் ஸ்ரீமான் D. நடராஜன், M. A. அவர்கள் பழையனூர் பெருமையைக் குறிக்கும் தேவாரப் பண்களைத் துண்டு பிரசுரமாகத் தம் தந்தையின் ஞாப கார்த்தமாகப் படித்து வழங்கினர்; ஆவேச மாகவும் பேசினர். இவரும் 'சேக்கிழார் மர பினர்' என்பது விளங்கிற்று. தாம் ஆராய்ச்சிக் கட்டுரையாக வரைந்த ''திருவாலங்காடு'' எனும் சிறு நூலை முதன் மந்திரியிடம் காட்டி விளக்கினர். இறுதியில் திருப்பணிக்கழகப் பொதுச் செயலாளர், ஸ்ரீ பண்டித நடேசனர், B.A., J.P., வந்தனோபசாரம் சொல்லுகையில், தெய்வச் சேக்கிழார் பெருமான் பழையனூர் வேளிர் மரபினைச் சார்ந்தவர்; அச்சேக்கிழார் மரபினைச்சார்ந்த வராகிய தமிழ் நாட்டு முதல் மந்திரி கனம், ஸ்ரீ M. பக்தவத்சலம் அவர்கள் திருவாலங்காட்டுப் பெரிய கோவிலுக்கும் பழையனூர் ஸ்ரீ சாட்சிபூதேஸ்வரர் கோயிலுக் கும் அரசாங்கத்தின் மான்யம் கொடுத்ததற்கும் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் தலைமை தாங்கியதற்கும் பல்லாண்டு அவர் வாழ்க என வாழ்த்துகிறோம்; மண்டலாபிஷேகம் செய்ய நன்கொடை வழங்கிய ஸ்ரீ ஸ்ரீராமலு நாயுடு அவர்கள் நீடூழி வாழ இறைவனை வேண்டுகின் றேன். இன்று இரவு மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவிற்கு கலந்து கொண்டு அறிவுரையும் பாராட்டுரையும் வழங்கிய நீதிபதிகளுக்கும் டாக்டருக்கும் மணலி இராமகிருஷ்ண முதலி யாருக்கும் (''வேளிர் மண்டபம்'' கட்டி உதவி யவர்) வேண்டும் போதெல்லாம் அறநிலைய நிதியை உத்தரவிட்டு வழங்கிய அறநிலைய பாது காப்பு இலாகா கமிஷ்னர், ஸ்ரீ M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B L., அவர் களுக்கும் ஸ்ரீ D. நடராஜனுக்கும் திருப்பணிக் குழுவின் நல்ல தலைவரும் சைவப் பெரியாரு மாகிய ஸ்ரீ ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A.L.T., அவர்களுக்கும் இத்திருப்பணி முட்டின்றி முடிய பணத்தையும் பலத்தையும் கருத்தையும் வாரி வழங்கிய சிவனடியார்களுக்கும் பழையனூர் வேளிர் மரபினர்க்கும் திருப்பணிக்கழக அங்கத் தினர்களுக்கும் பல்லாண்டு வாழ்க எனப்பாடு வதை விட்டு வேறு என்ன செய்ய முடியும்'' எனச் சொல்லி முடித்தார். திருவாலங்காட்டுத் தேவாரம் ஸ்ரீ தி. மு. சபாபதிதேசிகர் அவர்கள் பாடினர். விழாக் கூட்டம் இனிது முடிந்து வந்தோர் அனைவரும் நல்விருந் துண்டே தத்தம் இல்லம் ஏகினர்.

வேண்டுகோள்

பழையனூர் ஸ்ரீ சாட்சிபூதேஸ்வரருக்குத் தினப்படி நடக்கவேண்டிய பூசைக்கும் குருக்கள் சம்பாவனைக்கும் தீப்பாய்ந்தோர்க் குடும்பம் ஒருபெரிய நிலத்தைத் திருவாலங்காட்டுப் பஞ் சாயத்து யூனியன் தலைவர், ஸ்ரீ ப. சு. சுந்தர முதலியார் மூலம் கொடுத்துள்ளது போல் பல அறம் புரி கொள்கையரும் வேளாண் பெரு மக்களும் ''பூமிதானம்'' செய்யும்படி வேண்டு கின்றோம்; 'அகில இந்திய சத்திய ஸ்தல' யாத் திரைக்காக மக்கள் வருகையில் அவர்கள் தங்கிப் பூசைமுடிக்க பல அறைகளைக் கட்டி யுதவ வள்ளல்களை வேண்டுகின்றோம். மதுரை யில் சித்திரை மாதத்தில் மங்கையர்கரசியார் திருநட்சத்திர விழாவும் திருவாலங்காட்டில் காரைக்காலம்மையார் முத்திபெற்றநாள் விழா வும் நடைபெறுவன போல் மே மாதம் முதல் தேதியன்று பழையனூரில் ''சத்திய விழா'' (சொல் காத்தோர் தீப்பாய்ந்த நாள்)வும். நடத்த ஏற்பாடு செய்தல் வேண்டும். (அன்று உயர்நீதி மன்ற நீதிபதிகளும் ஏனைய நியாதிபதி சத்திய வாக்குகளை ஞாபகப்படுத்திக் கொண்டு வழிபாடு செய்து செல்லவேண்டும். இம்முறையும் விழாவும் ஆங்கில நாட்டில் இன்றும் உள்ளது. (Judges' Day). தீப்பாய்ந்த குட்டையைத் திருக் குளமாக்கிப் படிக்கட்டுக்களும் சுற்றுப்புற நந்த னவனங்களும் அமைக்க அரசு உதவிபுரிய வேண்டுகின்றோம்.




சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி கனம் ஸ்ரீ ஜஸ்டிஸ் P. S. கைலாசம் அவர்கள் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் பேசுகிறார்.




பழையனூர் 25-7-66 மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவுக்கு நன்கொடை வழங்கிய கண்ட்ராக்டர் ஸ்ரீ ஸ்ரீராமலு நாயுடுகாரு அடியார்களுடன் நிற்கிறார்.

பழையனூர் ஆலங்காடு மண்டலாபிஷேக விழா 25-7-66



தமிழ் நாடு அரசாங்கத்தில் தமிழ் நாட்டு மாவட்ட விவரப் புத்தகங்களின் தொகுப்பாளராகப் பணியாற்றும் பல்கலை வல்லுநர் திரு. D. நடராஜன், M.A. அவர்கள் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் பேசுதல்.



திரு D. நடராஜன், M.A., பழையனூர் ஆலங்காட்டின் செப்பேடுகளும் கல்லெழுத்துக்களும் பற்றிய ஒரு சில முக்கிய அம்சங்களை முதல் அமைச்சரிடம் சொல்லுதல்.